# பகுதி III

## பகுதி III

# 2009 ஆம் ஆண்டில் நாணயச்சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும் அறிவித்தல்களும்


| | வங்கி மேற்பார்வைத் திணைக்களம் | தொடர்பு எண் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அரச துறை ஊழியர்கள் சொத்துடமைகளை வாங்குவதற்கான கடன்களை வழங்கும் பொருட்டு ஓர் மீள்சுழற்சி நிதியினை உருவாக்குதல் | 02/17/800/008/001 | (i) |
| 2. | சுற்றுலாத் துறைக்கான சலுகைகளை வழங்குதல் | 02/17/600/0002/001 | (i) |
| 3. | தேயிலைத் துறைக்கான நிவாரணப் பொதி | 02/17/600/0002/001 | (ii) |
| 4. | தனியார் துறைக்கு கடன் வசதிகளை வழங்குதல் | 02/17/800/007/001 | (iii) |
| 5. | ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள் | 02/17/800/0006/01 | (iii) |
| 6. | ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் | 02/17/800/0006/01 | (iv) |
| 7. | வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் | 02/17/800/0006/01 | (iv) |
| 8. | நிதி மற்றும் குத்தகைத் தொழில்துறைக்கான அரசாங்கத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட தூண்டல் பொதி | 02/17/800/007/001 | (v) |
| 9. | ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான மோட்டார் வாகன இறக்குமதிகள் | 02/17/800/0006/001 | (vi) |
| 10. | 2009ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான வாக்குரிமைகளைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | (vi) |
| 11. | 2009ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான வாக்குரிமைகளைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம் | | (vii) |
| 12. | வட்டி வீதங்களைக் குறைத்தல் | 02/17/600/0002/001 | (vii) |
| 13. | வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் | 02/17/800/0006/01 | (viii) |
| 14. | 2009ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தொடர்பான இடர்முகாமைத்துவ பணிப்புரைகள் | | (ix) |
| 15. | 2009ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம் | | (xvii) |
| 16. | 2009ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம் - உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம் | | (xviii) |
| 17. | 2009ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம் - எவரேனுமொரு பணிப்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் அல்லது பணிப்பாளரின் குறிப்பிடத்தக்களவு நலன்களைக் கொண்ட நிறுவனத்துக்கான கடன் வசதிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களாக குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்/ குத்தகை வருமதிகள் | | (xix) |
| 18. | 2009ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம் - எவரேனுமொரு பணிப்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் அல்லது பணிப்பாளரின் குறிப்பிடத்தக்களவு நலன்களைக் கொண்ட நிறுவனத்துக்கான கடன் வசதிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களாக குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்/ குத்தகை வருமதிகள் | | (xx) |
| 19. | 2009ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணுதல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் | | (xxi) |
| 20. | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பராமரிக்கப்படும் கணக்குகளுக்கிடையே நிதிய மாற்றல் செய்வதற்கு அனுமதி வழங்குதல் | 02/17/800/009/001 | (xxviii) |

21. 2009ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் கட்டளைச் சட்டம் - வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளைச் சட்டம் (xxix)
22. 2009ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - கடன்களையும் முற்பணங்களையும் வகைப்படுத்தல், வருமானங்களை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்ளுதல் பற்றிய இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுக்கான பணிப்புரைகள் மீதான திருத்தங்கள் (xxx)
23. 2009ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை - கடன்களையும் முற்பணங்களையும் வகைப்படுத்தல், வருமானங்களை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்ளுதல் பற்றிய இலங்கையிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பணிப்புரைகள் மீதான திருத்தங்கள் (xxxi)

**நாணயத் திணைக்களம்**

24. பாவிக்கத்தக்க நாணயத் தாள்களின் செய்முறைக்கான பணிக் கட்டணம் 12/02/004/0007/001 (xxxii)

**உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்**

25. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/21 (xxxiii)
26. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/22 (xxxiii)
27. ஒதுக்குத் தேவைப்பாடுகள் 35/01/005/0007/04 (xxxiv)
28. வங்கித்தொழில் முறையில் திரவத்தன்மை பற்றாக்குறையாக இருக்கும் பொழுது மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்துதல் (xxxiv)
29. கால நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி (xxxv)
30. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/23 (xxxv)
31. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/12 (xxxvi)
32. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/13 (xxxvi)
33. ஏலமுறையின் கீழ் கால நேர்மாற்றுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 35/01/005/0006/24 (xxxvii)
34. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் 35/01/005/0010/14 (xxxix)
35. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி 35/01/005/0006/25 (xl)
36. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் 35/01/005/0006/26 (xl)
37. ஏலமுறையின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 35/01/005/0006/27 (xli)
38. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பத்திரங்களற்ற வடிவத்தில் மத்திய வங்கிப் பிணையங்கள் வழங்குவதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 35/01/005/0006/28 (xliii)

**செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

39. வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களினதும் புலம்பெயர்ந்த தொழிற்படையினராலும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் செய்யப்பட்ட முதலீடுகள் 06/04/01/2009 (xlvi)
40. வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான வட்டியின் மீது ரூபாவில் மேலதிக வட்டிக் கொடுப்பனவு 06/04/02/2009 (xlvii)
41. வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் 06/04/03/2009 (l)
42. இலங்கை இரட்டைப் பிரசா உரிமையைப் பெறுதல் 06/04/04/2009 (l)
43. வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான வட்டியின் மீது ரூபாவில் மேலதிக வட்டியைக் கொடுப்பனவு செய்தல் 06/04/05/2009 (liii)
44. வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மீதான வட்டியின் மீது ரூபாவில் மேலதிக வட்டியைக் கொடுப்பனவு செய்தல் 06/04/07/2009 (liii)

**நிதியியல் உளவறிதல் பிரிவு**

45. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுதல் 037/01/023/0001/009 (lv)
46. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுதல் 037/01/023/0001/009 (lvi)
47. ஐக்கிய அமெரிக்காவில் பயங்காரவாத அமைப்புக்களின் பட்டியலில் தமிழர் நிதியமும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது 037/03/002/0018/009 (lvii)

| | | | |
|---|---|---|---|
| 48. | காப்புறுதி தொழில்துறையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றிற்கு இணங்கியொழுகும் தொழிற்பாடுகள் | 037/03/004/0004/008 | (lviii) |
| 49. | நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கிரமமான அறிக்கைகளை சமர்ப்பிக்கும் பொழுது வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை அறிக்கையிடுகின்ற முறைமை | 037/04/002/0001/009 | (lix) |
| 50. | நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கிரமமான அறிக்கைகளை சமர்ப்பிக்கும் பொழுது வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை அறிக்கையிடுகின்ற முறைமை | 037/04/002/0001/009 | (lx) |

**பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 51. | நிதியியல் பெறுதிச் சாதனங்களின் மீதான பணிப்புரைகள் | 33/03/001/0029/002 | (lxiii) |

**கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 52. | லங்கா செட்டில் முறைமையிலுள்ள ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ்எஸ் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் திருத்தம் | 34/07/029/0001/001 | (lxxii) |
| 53. | லங்கா செட்டில் முறைமை 2009 ஏப்பிறல் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து அதன் பின்புல அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் | 34/07/029/0001/001 | (lxxiii) |
| 54. | சிலிங்கோ சிறிராம் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் பெயரை மாற்றுதல் | 34/07/029/0001/001 | (lxxiii) |
| 55. | 2009 மே 15ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல் | 34/07/029/0001/001 | (lxxiv) |
| 56. | எச்என்பி செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் பெயரை மாற்றுதல் | 34/07/029/0001/001 | (lxxiv) |
| 57. | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை | இல. 1612/32 | (lxxv) |

**பொதுப்படுகடன் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 58. | 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளுக்கான திருத்தம் | எஸ்எஸ்எஸ்எஸ்/01/2009 | (lxxxii) |
| 59. | வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள் | | (lxxxii) |
| 60. | வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள் | | (lxxxvi) |
| 61. | 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளுக்கான திருத்தம் | எஸ்எஸ்எஸ்எஸ்/02/2009 | (xc) |
| 62. | அரச திறைசேரி முறிகளில் முதலீடு செய்தவர்களுக்கான இரட்டைப் பிரசா உரிமை | | (xci) |
| 63. | பங்கிலாபங்களை வெளிப்படுத்துவது தொடர்பான கட்டுப்பாடுகள் மீதான பணிப்புரை | 08/24/001/0001/009 | (xcii) |
| 64. | தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட வாடிக்கையாளர் மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பம் | 08/25/001/0062/001 | (xciii) |
| 65. | முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகளைப் பன்பமுகப்படுத்துவது மீதான பணிப்புரை | 08/24/001/0001/009 | (xciii) |
| 66. | 2009 மேயில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம் | | (xcvi) |
| 67. | 2009 மேயில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கான திருத்தங்கள் | எஸ்எஸ்எஸ்எஸ்/04/2009 | (xcvii) |

**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**

| | | | |
|---|---|---|---|
| 68. | 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை | | (xcviii) |
| 69. | 2009ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை | | (xcix) |
| 70. | 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) பணிப்புரை | | (c) |
| 71. | 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) பணிப்புரை | | (ciii) |
| 72. | 2009ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை | | (cv) |
| 73. | 2009ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கடன் வழங்கல்) பணிப்புரை | | (cvii) |
| 74. | 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்) பணிப்புரை | | (cx) |
| 75. | 2009ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை | | (cxi) |
| 76. | 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை | | (cxxii) |

**தொடர்பு எண்: 02/17/800/008/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 சனவரி 5

*அனைத்து அரச வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**அரச துறை ஊழியர்கள் சொத்துடமைகளை வாங்குவதற்கான கடன்களை வழங்கும் பொருட்டு ஓர் மீள்சுழற்சி நிதியினை உருவாக்குதல்**

மேன்மை தங்கிய சனாதிபதி, 2008 ஒத்தோபர் 21ஆம் நாளன்று அரச துறை ஊழியர் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சொத்துடமைகளை வாங்கும் பொருட்டு கடன் வழங்கும் நோக்கத்திற்காக ஓர் மீள்சுழற்சி நிதியினை உருவாக்குமாறு அனைத்து அரச வங்கிகளுக்கும் அறிவிக்குமாறு மத்திய வங்கியைப் பணித்துள்ளார். அதன் பிரகாரம், அனைத்து அரச துறை வங்கிகளும் மேற்குறிப்பிட்டவற்றிற்கு இணங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/600/0002/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 சனவரி 30

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சுற்றுலாத் துறைக்கான சலுகைகளை வழங்குதல்**

பன்னாட்டு பொருளாதார செயற்பாடுகளில் ஏற்பட்ட பாரிய பின்னடைவு மற்றும் சுற்றுலாத் துறையில் அவை கொண்டிருந்த தாக்கம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு, நாணயச் சபையானது அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பவை சுற்றுலாத் துறையிலுள்ள அத்தகைய சலுகைகளின் மூலம் தாமாகவே பயனடைய விரும்புகின்ற, அத்தகைய நிறுவனங்களுக்கு பின்வரும் சலுகைகளை வழங்குமாறு வேண்டுகின்றது.

(i) சுற்றுலா விடுதிக் கம்பனிகள் 2008 திசெம்பரில் உள்ளவாறான மட்டத்தில் தமது ஊழியர்களை கொண்டுள்ளார்கள் என்பதை கருத்தில் கொண்டு சுற்றுலா விடுதிக் கம்பனிகள் மற்றும் விடுதிக் கம்பனிகளின் உடமைக் கம்பனிகளின் வெளிநின்ற கொடுகடன் சொத்துத் தொடர்பில் 2009 சனவரி தொடக்கம் 2009 யூன் வரையான 6 மாதங்களுக்கு கடன் செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதமொன்றினை வழங்குதல்.

(ii) சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில் நிலுவையிலிருந்த மூலதனம் மற்றும் சேர வேண்டிய வட்டியினை 2010 சனவரி தொடக்கம் முப்பத்தாறு சம தவணைக் கட்டணங்களில் அறவிடுவதுடன் இவ் வசதிகளுக்காக ஓர் சலுகை வட்டி வீதத்தை அறவிடுதல்.

(iii) சுற்றுலா விடுதி கம்பனி மற்றும் அத்தகைய விடுதி கம்பனியின் உடமைக் கம்பனிகளால் பெறப்பட்டு செலுத்தாது விடப்பட்ட கொடுகடன் வசதிகளின் மீது விதிக்கப்பட்ட தண்ட வட்டியினை தள்ளுபடி செய்தல்.

(iv) ஆறு மாத சட்ட இசைவுத் தாமத காலப்பகுதியில், ஒதுக்கீடு செய்யும் நோக்கத்திற்காக ஏதாவது செயற்படாக் கடன்களை அதே வகைக்குள் தொடர்ந்தும் பேணுதல்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/600/0002/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மாச்சு 02

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**தேயிலைத் துறைக்கான நிவாரணப் பொதி**

நிதி, திட்டமிடல் அமைச்சு அதனுடைய 2009 சனவரி 12ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கைக் கடிதத்தினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேயிலைத் துறைக்கான நிவாரணப் பொதியினை அறிவித்திருந்தது. இது தொடர்பாக அத்தகைய கடன்கள், ஏற்கனவேயுள்ள ஈட்டுகளினால் பிணையிடப்பட்டிருக்கின்றது அல்லது தொடர்பான வங்கிகளில் வேறு பிணையங்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசாங்கம் 100 சதவீத திறைசேரி உத்தரவாதத்தை வழங்கும்.

உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, வங்கியின் பணிப்பாளருக்கு அல்லது பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினை கொண்டுள்ள நிறுவனமொன்றிற்கு கடன் வசதியினை வழங்கும் சந்தர்ப்பத்தில், வங்கித் தொழில் சட்டமானது நாணய சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பிணையங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை தேவைப்படுத்துகின்றது.

மேற்கூறியவற்றினை கருத்திற் கொண்டு, வங்கியின் பணிப்பாளருக்கு அல்லது பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது பணிப்பாளர் கணிசமான ஈடுபாட்டினைக் கொண்ட நிறுவனமொன்றிற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தேயிலைத் துறைக்கான நிவாரணப் பொதியின் கீழ் கடன் வசதியினை வழங்குகையில் அவை பெறவேண்டிய பிணையங்கள் தொடர்பாக நாணயச் சபை பின்வருவனவற்றிற்கு ஒப்புதலளித்தது.

*வங்கித்தொழில் சட்டத்தின் 47 (3), (4), (5) மற்றும் (6) ஆகிய பிரிவுகளின் நியதிகளில் 2005 பெப்புருவரி 11ஆம் நாளிடப்பட்ட தீர்மானத்தின் 1(ஏ)(ii) இன் பந்தியில் குறிப்பிடப்பட்ட இறையிலி அடிப்படையில் வைத்திருக்கப்படும் அசையாச் சொத்துக்களின் காலாவதியாகாத குத்தகைக் காலம் இந் நோக்கத்திற்காக குறைந்தபட்சம் 25 ஆண்டு கொண்ட காலப்பகுதிக்கு குறைக்கப்படும்.*

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/007/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மார்ச்சு 03

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**தனியார் துறைக்கு கடன் வசதிகளை வழங்குதல்**

தமது வாடிக்கையாளர்களுக்கான கடன்களை சுருக்குமாறு இலங்கை மத்திய வங்கி வங்கிகளை கோரியதாக, சில வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளமை பற்றி எமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தனியார் துறைக்கான கடன் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளதாக சமீபத்திய போக்கு காட்டுகின்றது. பணவீக்கம் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்பு ஆகியனவும் மிதமடைகின்றன. இம் முன்னேற்றங்களை கருத்திற் கொண்டும் உலக நிதியியல் கொந்தளிப்பின் எதிர்மறை விளைவுகளை குறைப்பதற்காகவும், இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு நிதிச் சந்தையின் நிலைமைகளை இலகுபடுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதற்கேற்ற வகையில், வாடிக்கையாளர்களின் கடன் இடர்நேர்வு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறைக்கான கடன் விரிவாக்கத்திற்கு பொருத்தமான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மார்ச்சு 18

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான இறக்குமதிகள்**

இது மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 05.12.2008, 04.11.2008 மற்றும் 31.10.2008 திகதிகளிடப்பட்ட எண் 02/17/800/0006/01 இன் கீழ் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 18.03.2009 இலிருந்து புறக்கீடு செய்யப்படுவது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

டி வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மார்ச்சு 18

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான உந்து ஊர்திகளின் இறக்குமதிகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் பற்றி 07.11.2008 மற்றும் 05.12.2008 திகதிகளிடப்பட்ட எண் 02/17/800/0006/01 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பானது.

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு 05.12.2008 திகதியிடப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க நியதிகள் மீதான இறக்குமதிகளுக்கெதிரான 200 சதவீத அளவுவைப்பு தேவைப்படுகின்ற விடயங்களின் பட்டியல் என்ற தலைப்பில் அட்டவணை ஷஅ' இல் தரப்பட்டுள்ள இறக்குமதிகளின் பொருள் பட்டியல் பெறுமதி மீதான அளவுவைப்புத் தேவைப்பாடு, 18.03.2009ஆம் நாளன்று தொடக்கம் 200 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு குறைக்கப்படுவது பற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

டி வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மார்ச்சு 19

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள்**

மேற்குறிப்பட்டது தொடர்பான 2008 ஒத்தோபர் 31ஆம் திகதியிடப்பட்ட எமது 02/17/800/0006/01 சுற்றறிக்கைக்கு மேலதிகமாக. வங்கிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கங்களைக் கருத்திற் கொண்டு, 2009.03.19 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 2008 ஒத்தோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் உள்வாங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளின் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் காலப்பகுதியை நீடிக்க அல்லது புதுப்பிக்க அதிகாரம் வழங்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) இது சம்பந்தப்பட்ட வகையில், கீழ் கண்டவற்றுக்கு கட்டுப்பட்டு, 2008 ஒத்தோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் உள்வாங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளின் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் காலப்பகுதியை நீடிக்க அல்லது புதுப்பிக்க வங்கிகள் தமது தீர்மானங்களையும், தற்றுணிபுகளையும் பயன்படுத்த முடியும்.

(i) முன்னோக்கிய ஒப்பந்தங்களின் புதுப்பித்தல்/ நீடித்தலுக்கான மிகக் கூடிய காலப்பகுதி 90 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) ஒட்டுமொத்தமாக, ஒப்பந்தக் காலப்பகுதி, ஏற்கனவே கழிந்து போன காலப்பகுதி உள்ளடங்கலாக, 360 நாட்கள் அல்லது அதற்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

(iii) தனியொரு முன்னோக்கிய ஒப்பந்தத்தின் புதுப்பித்தல்/ நீடித்தல் 2 தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(iv) வாடிக்கையாளரால் ரத்து செய்யப்படும் ஏதேனுமொரு முன்னோக்கிய ஒப்பந்தம், குறைந்தபட்சம் அதன் மூலம் வங்கிக்கு ஏற்படக்கூடிய நட்டத்தை முழுமையாக ஈடுசெய்யக் கூடிய வகையில் ஒரு தண்டப் பணத்திற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) எந்தவொரு நாளிலும் செய்யப்படும் முன்னோக்கிய ஒப்பந்தத்தை புதுப்பித்தல்/ நீடித்தல் தொடர்பான தகவல்களை, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு, 31.10.2008 வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்ட அறிக்கையிடல் மாதிரிக்கு அமைவாக நாள்தோறும் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

டி வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/007/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 ஏப்பிறல் 07

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**நிதி மற்றும் குத்தகைத் தொழில்துறைக்கான அரசாங்கத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட தூண்டல் பொதி**

அமைச்சரவை 2009.02.25இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகளினால் அனுபவிக்கப்படும் தற்போதைய நிதியியல் அழுத்தத்தினைக் கருத்திற் கொண்டு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகளினால் எதிர் கொள்ளப்பட்ட திரவத்தன்மை மற்றும் நிதியிடல் தடைகளை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு வழிமுறைகளை உள்ளடக்கிய தூண்டல் பொதிக்கு அனுமதியளித்திருந்தது. இத் தூண்டல் பொதியானது நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளில் மக்களின் நம்பிக்கையை மீள ஏற்படுத்துவதற்கும் இதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையை உறுதி செய்து கொள்வதற்குமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகளினால் எதிர் கொள்ளப்பட்ட தற்போதைய திரவத்தன்மை பிரச்சனைகள் சில வங்கித்தொழில் நிறுவனங்களினால் திடீரென புறக்கீடு செய்யப்பட்ட தொடர் கொடுகடன்களினால் மேலும் மோசமாக்கப்பட்டிருக்கின்றது. நிதியியல் முறைமை உறுதிப்பாடு மிக முக்கியமானதொன்றாக இருப்பதனால், அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி மற்றும் விசேட குத்தகைக் கம்பனிகளுடனான அவர்களின் வழமையான வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/0006/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 ஏப்பிறல் 16

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஏற்றுக் கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்கள் மீதான மோட்டார் வாகன இறக்குமதிகள்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2008/11/07, 2008/12/5 மற்றும் 2009/03/18 திகதிகளிடப்பட்ட, தொடர்பு எண்: 02/17/800/0006/01 கொண்ட அறிவுறுத்தல்கள், 2009/04/16 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளனவென அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

டி வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகள்**

டபிள்யு ஏ விஜேயவர்த்தன
மூத்த துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2009 ஏப்பிறல் 24

**பணிப்புரைகள்**

**2009ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான வாக்குரிமைகளைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகித்து, இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் வழங்கப்பட்ட 2007 சனவரி 19ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரையினை திருத்தும் விதத்தில் கீழ் வரும் பணிப்புரையினை நாணய சபை இத்தால் வெளியிடுகின்றது. இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாம்.

பின்வரும் புதிய பணிப்புரை, 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 5ஆம் இலக்க பணிப்புரைகளுக்குப் பதிலாக அமைதல் வேண்டும்.

**விலக்குகள்** 5. எவ்வாறிருப்பினும், உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று மூலதனப் போதுமாந்தன்மையற்ற நிலைமை, கடன் தீராற்றலற்ற நிலைமை, அல்லது உள்ளார்ந்த தன்மை பாதிக்கப்பட்டமை போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக, மீள் கட்டமைப்பினை வேண்டி நிற்கும் போது, மேற்போந்த பணிப்புரை 4இல் சொல்லப்பட்டவாறு அத்தகைய மேல் எல்லை விதிக்கப்படமாட்டாது என்பதுடன் நாணயச் சபையானது பிரிவு 12(1இ) மற்றும் 46(i)(ஈ)இல் குறித்துரைக்கப்பட்டவாறு எந்த வகைப் பங்கு உடமையாளர்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள வாக்களிக்கும் உரிமையைக் கொண்ட வழங்கப்பட்ட மூலதனத்தில் 15 சதவீதத்திற்கும் கூடுதலான பொருள் சார்ந்த நலவுரித்துக்களை கொள்வனவு செய்வதற்கு, அவ்வாறு ஈட்டப்படும் பொருள் சார்ந்த ஈடுபாடு நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு காலப்பகுதியினுள் 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஒவ்வொரு விடயமாக அனுமதியை வழங்கலாம்.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

டபிள்யு ஏ விஜேயவர்த்தன
மூத்த துணை ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2009 ஏப்பிறல் 24

**பணிப்புரைகள்**

**2009ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை**

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான வாக்குரிமைகளைக் கொண்டுள்ள வழங்கப்பட்ட மூலதன உடமைகள் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்**

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால், இறுதியாகத் திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகித்து, இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் வழங்கப்பட்ட 2007 சனவரி 19ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணிப்புரையினை திருத்தும் விதத்தில் கீழ் வரும் திருத்தப்பட்ட பணிப்புரையினை நாணயச் சபை இத்தால் வெளியிடுகின்றது. இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை என மேற்கோளாக எடுத்துக் காட்டப்படலாம்.

பின்வரும் புதிய பணிப்புரை, 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 4ஆம் இலக்க பணிப்புரைகளுக்குப் பதிலாக அமையும்.

**விலக்குகள்** 4. எவ்வாறிருப்பினும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று மூலதனப் போதுமாந்தன்மையற்ற நிலைமை, கடன் தீராற்றலற்ற நிலைமை, அல்லது உள்ளார்ந்த தன்மை பாதிக்கப்பட்டமை போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக, மீள் கட்டமைப்பினை வேண்டி நிற்கும் போது, மேற்போந்த பணிப்புரை 4இல் சொல்லப்பட்டவாறு அத்தகைய மேல் எல்லை விதிக்கப்படமாட்டாது என்பதுடன் நாணயச் சபையானது பிரிவு 76ஜே(1)கியூ இல் குறித்துரைக்கப்பட்டவாறு எந்த வகைப் பங்கு உடமையாளர்களும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள வாக்களிக்கும் உரிமையைக் கொண்ட வழங்கப்பட்ட மூலதனத்தில் 15 சதவீதத்திற்கும் கூடுதலான பொருள் சார்ந்த நலவுரித்துக்களை கொள்வனவு செய்வதற்கு, அவ்வாறு ஈட்டப்படும் பொருள் சார்ந்த ஈடுபாடு நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு காலப்பகுதியினுள் 15 சதவீதத்திற்கு குறைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஒவ்வொரு விடயமாக அனுமதியை வழங்கலாம்.

**தொடர்பு எண்: 02/17/600/0002/001** வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மே 05

*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும்*
*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அனைவருக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**வட்டி வீதங்களைக் குறைத்தல்**

தனியார் துறைக்கான கடன் வழங்கலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தினைத் தொடர்ந்து, கொள்கை வட்டி வீதங்கள், நியதி ஒதுக்குத் தேவை, நேர்மாற்று மீள்கொள்வனவு மீதான தண்ட வட்டி வீதம் என்பனவற்றைக் குறைத்தல் மூலம் நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை அண்மைக் காலத்தில் மத்திய வங்கி மேற்கொண்டு வந்தமை நீங்கள் அறிந்ததே. மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் பணச் சந்தை வீதங்களான அழைப்பு பணச் சந்தை வீதங்கள், திறைசேரி முறிகள் மற்றும்

பிணையங்கள் விளைவு வீதங்கள் என்பன குறைவடைவதற்கு ஏதுவானதாக அமைந்தன. ஆயினும் வங்கிகள் வாடிக்கையாளர்களின் கடன்களுக்கான வட்டி வீதங்களில் மிகச் சிறிதளவிலான குறைப்பினை அதுவும் தெரிந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் வழங்கப்பட்டமையினை நாம் அவதானித்துள்ளோம்.

மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தளர்த்துவதானது, கடன் வழங்கல் வீதங்களைக் குறைப்பதன் மூலம் தனியார் துறை கடன் வழங்கல்களை மேம்படுத்துவதையே நோக்காகக் கொண்டிருந்தது. எனவே, பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் வங்கிகள் வாடிக்கையாளர்களுக்குத் தேவையான நிதி வசதிகளை அளித்தல் முக்கியமானதாகும்.

பொதுவாக, வட்டி வீதங்களின் குறைப்பானது வாடிக்கையாளர்களிடம் வங்கிகள் அறவிடும் வட்டி வீதங்களில் இன்னும் போதுமானளவு பிரதிபலிக்கவில்லை என நாங்கள் கருதுகிறோம். எனவே, வங்கிகள் தமது வாடிக்கையாளர்களிடம் அறவிடும் வட்டி வீதங்களைக் குறைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**தொடர்பு எண்: 02/17/800/0006/01**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 மே 25

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அறிவுறுத்தல்கள்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

## வெளிநாட்டு செலாவணியின் முன்னோக்கிய கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள்

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 2008/10/31 மற்றும் 2009/03/19 திகதிகளிடப்பட்ட, தொடர்பு எண்: 02/17/800/0006/01 இன் கீழ் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2009/05/25 இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்படுகிறது என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

டி வசந்த
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பீ டி டபிள்யு ஏ சில்வா
வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின், பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 செத்தெம்பர் 01

## பணிப்புரைகள்

## 2009ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தொடர்பான இடர்முகாமைத்துவ பணிப்புரைகள்

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46, இனால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க நாணயச் சபையானது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தொடர்பான இடர்முகாமைத்துவப் பணிப்புரைகள் தொடர்பான சட்டத்தின் பிரிவு 46(1) இன் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் இப் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. **அறிமுகம்**

1.1 இந்த பணிப்புரைகளின் நோக்கம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலுள்ள வெளிநாட்டுச் செலாவணி இடர்முகாமைத்துவ முறைமைகளை நியமப்படுத்தி பலப்படுத்துவதும் அதன் மூலம் நிதியியல் முறைமையின் உறுதித் தன்மையை வலுப்படுத்துவதுமாகும்.

1.2 நிதியியல் பெறுதிகளைப் பொறுத்தவரையில், விபரமான தொழிற்பாட்டு வழிகாட்டல்களும் காத்திரமான வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளும் 2009 யூலை 19ஆம் நாள் பன்னாட்டு தொழிற்பாடுகளின் பணிப்பாளரினாலும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினாலும் விடுக்கப்பட்ட “நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரைகள்” என்பதில் ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஆகவே இப் பணிப்புரைகள், மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

1.3 இப் பணிப்புரைகள் 2009 செத்தெம்பர் 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1.4 சகல உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 2010 மாச்சு 31 அன்று அல்லது அதற்கு முன்னதாக 3ஆம் இலக்க பணிப்புரையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் முழுமையாக இணங்கி ஒழுக வேண்டும்.

2. **வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை**

2.1 வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை இனம் காணுதல், மதிப்பிடுதல், அவதானித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றிற்கென கொள்கைகள், நடைமுறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் வரையறைகள் உருவாக்கப்பட்டுள்ளதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வெளிநாட்டுச் செலாவணி இடர்முகாமைத்துவம் தொடர்பான இந்தக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள்:

(i) பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல்;

(ii) வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட வகையான சாதனங்கள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றை பரிசீலித்ததன் பின்னர் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு வரையப்பட்டிருத்தல்;

(iii) தொடர்புடைய சகல திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளின் ஊழியர்களுக்கிடையே சுற்றோட்டப்பட்டிருத்தல்;

(iv) இக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பன இப்பொழுதும் பொருத்தமானவையாகவும் உரிய நேரத்திற்கேற்ப சரியாக இருப்பதனையும் உறுதிப்படுத்தும் விதத்தில் பணிப்பாளர் சபையினால் கிரமமான முறையில் ஆகக் குறைந்தது ஆண்டிற்கு ஒரு முறையாவது மீளாய்வு செய்யப்பட்டிருத்தல்;

வேண்டும்.

2.2 வெளிநாட்டுச் செலாவணி இடர்முகாமைத்துவக் கொள்கைகள், நடைமுறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் எல்லைகள் ஆகியவற்றின் வடிவமைப்பு ஆகக் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்வாங்கியிருத்தல் வேண்டும்.

(i) சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் ஏனைய சகல தொடர்புபட்ட அலுவலர்களினதும் பொறுப்புக்கள்;

(ii) இடர்நேர்வு கண்காணிப்பு மற்றும்;

(iii) ஒப்புதலளிக்கப்பட்ட சாதனங்கள்;

(iv) கணனி முறைமை வாயிலான மற்றும் வியாபார வரையறைகள் உள்ளடங்கலான உள்ளக மற்றும் வெளியக வரையறைகள்;

(v) இடர்நேர்வு அளவீடுகளும் அறிக்கையிடலும்;

(vi) அழுத்தப்பரீட்சிப்பு பொறிமுறை;

(vii) வெளிநாட்டு நாணய நிலைமைகளின் மதிப்பீடு;

(viii) உள்ளகக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்;

(ix) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான தகுதி மற்றும் பொருத்தப் பிரமாணங்கள்;

(x) புதிய சாதனங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளினை அறிமுகப்படுத்துவதற்கான நடைமுறைகள்;

(xi) தடங்கலற்ற திட்டமிடல்.

2.3 வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளானவை, வெளிநாட்டுச் செலாவணி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்களினால் பின்பற்றப்படுவதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய ஒழுக்கக் கோவைகள் போன்ற ஒழுக்கவிதிகள் மற்றும் நியமங்களினால் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**3. சபை, மூத்த முகாமைத்துவம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சகல அலுவலர்களுக்குமான பொறுப்புக்கள்**

3.1 சபை மூத்த முகாமைத்துவம் வெளிநாட்டுச் செலாவணி இடர்முகாமைத்துவ முறைமைகளையும் அதன் ஆற்றலையும் பலப்படுத்தும் நடவடிக்கைகளை பின்வருவனவற்றினூடாக மேற்கொள்ள வேண்டும்.

(i) சபையால் அங்கீகரிக்கப்பட்ட முன்மதியுடைய வெளிநாட்டுச் செலாவணி இடர் முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் அதனுடன் நடைமுறைகளையும் நடைமுறைக்கிடுவதுடன் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களையும் மேற்பார்வை செய்தல்;

(ii) நடைமுறைக் கைநூல் வடிவில், தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் முழுமையாக ஆவணப்படுத்தல்;

(iii) பொருத்தமான முறையில், கிரமமான அடிப்படையில் ஆகக் குறைந்தது வருடாந்தமாவது கொள்கைகளை மீளாய்வு செய்தல்;

(iv) மற்றைய விடயங்களுடன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் அளவுகளுக்கு உட்பட்ட வகையில் வெளிநாட்டு நாணயத்திலான சொத்து மற்றும் பொறுப்புக்களை முகாமை செய்வதற்காக ஒரு சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவை நிறுவுதல்;

(v) மற்றைய விடயங்களுடன் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை அவ்வப்போது அவதானிப்பதற்காக நடுவப் பணியகம் போன்ற பொறிமுறையை நிறுவுவதுடன் அவற்றை சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடல்;

(vi) வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவத்தில், மூத்த முகாமைத்துவதற்கு அல்லது சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்கு பொருத்தமான இடர்நேர்வு அளவுகள் நிறுவப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தல்;

(vii) பல்வேறு அதிர்வுகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களினுடைய காலாந்தர அழுத்த பரீட்சிப்புப் பெறுபேறுகளை மீளாய்வு செய்தலும்; இலாபத்தன்மை, திரவத்தன்மை, மூலதனப்போதுமை அடிப்படையில் அழுத்த நிலைமையினை எதிர்த்து நிற்கக்கூடிய வங்கியின் இயலாற்றலை மதிப்பிடலும்;

(viii) விதிவிலக்கான நிதி கொடுக்கல்வாங்கல்களை சபைக்கு அல்லது மூத்த முகாமைத்துவத்திற்கு கொண்டு செல்லக்கூடிய வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை அறிக்கையிடக்கூடிய செயற்றிறனுடைய முகாமைத்துவத் தகவல் முறைமையை உருவாக்குதல்;

(ix) சேர்ந்துள்ள இடர்நேர்வுகள் பற்றி சபையும் மூத்த முகாமைத்துவமும் முழுமையாக அறிந்துள்ளமையை உறுதிப்படுத்துதல்;

(x) இது தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதற்காக, தேவை ஏற்படின் பணிப்பாளர் சபைக்கு உதவி வழங்குவதற்காக சுதந்திரமான நிபுணத்துவ ஆலோசனையைப் பெறுதல் தொடர்பான நடைமுறைகளை உருவாக்குதல்;

(xi) புதிய சாதனங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகளின் அறிமுகத்தினை அங்கீகரித்தல்.

3.2 "இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகை" மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பணிப்புரையில் எடுத்துக்காட்டப்பட்ட விதிகள் சபை மற்றும் மூத்த முகாமைத்துவம் என்பனவற்றின் பொறுப்புக்கள் தொடர்பாக பொதுவான பிரயோகங்களைக் கொண்டிருப்பதனால் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கு ஏற்புடைத்தான விதிகளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்பற்றுதல் வேண்டும்.

**4. இடர்நேர்வுக் கண்காணிப்பும் கட்டுப்பாடுகளும்**

4.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

(i) முன்னரங்க அலுவலகம், மத்திய அலுவலகம் மற்றும் பின்னரங்க அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட வெண்டிய நடைமுறைகளையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் ஆவணப்படுத்தல்;

(ii) தற்போதைய அடிப்படையில் அவர்களுடைய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை கண்காணிப்பதற்கு ஓர் முறைமையினை உருவாக்குதல்;

(iii) சொத்துக்களும் பொறுப்புக்களும் குழுவிற்கு தற்போதைய அடிப்படையில் இடர்நேர்வுகளை அறிக்கையிடுதல்;

(iv) வியாபாரம், இடர்முகாமைத்துவம், அளவீடு, கண்காணிப்பு, தீர்ப்பனவு, கணக்கீடு, கணக்காய்வு மற்றும் சட்டத் தொழிற்பாடுகளினூடாக கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் வினைதிறனான பிரிவாக்கத்தினை உறுதிப்படுத்தல்:

அ) முன்னரங்க அலுவலகம்/ வர்த்தக அறை மற்றும் மத்திய பின்னரங்க அலுவலகத்தின் தொழிற்பாடுகளினை பௌதீக மற்றும் தொழிற்பாடு ரீதியாக வேறாக்குதல்;

ஆ) செயற்பாட்டு ஊழியருக்கு அறிக்கையிடும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கான நிறுவனம்;

இ) வர்த்தக அறைக்குள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நபர் மட்டும் நுழையத்தக்க அடையாளப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தொழிற்பாட்டுப் பிரிவுகளிற்குள்ளும் நுழைதல் தொடர்பான கட்டுப்பாடுகள்;

ஈ) முன்னரங்க அலுவலகம் மத்திய/ பின்னரங்க அலுவலக செயற்பாடுகள் மீது காரணமின்றி செல்வாக்குச் செலுத்துவதனைத் தவிர்த்தல்;

(v) ஏற்றுக் கொள்ளத்தக்க கருவிகள், ஒப்புதலளிக்கப்பட்ட தரகர்கள் அதிகாரமளிக்கப்பட்ட இணைக்கிணைத்தரப்பினர் மற்றும் அவர்களது வரையறைகள் என்பனவற்றைக் கொண்ட பட்டியலுக்கு ஒப்புதலளித்தல் இணைத்தரப்பினருக்காக திறைசேரி வணிக வரையறைகளை நிறுவுதல், மற்றும் அத்தகைய வரையறைகளை கிரமமாக மீளாய்வு செய்தல் என்பனவற்றிற்காக பொருத்தமான முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல்;

(vi) வணிகர்களுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கான முறைமையை உருவாக்குதல்;

(vii) வழங்கப்பட்ட வரையறைகளுக்கு மேலதிகமான கொடுக்கல்வாங்கல்களுக்கான பணிப்பாளர் சபையின்/ மூத்த முகாமைத்துவத்தின் முன்கூட்டிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்;

(viii) பொதுப்பேரேட்டில் வணிக குறிப்புத் தாள்களை குறித்துவைத்தல் மற்றும் வர்த்தகர்கள்/ முன்னரங்க அலுவலகத்தின் கிரமமான சுதந்திரமான மீள் இணக்க நிலைமைகள் பேணப்படுவதனை உறுதிப்படுத்தல்;

(ix) சிறந்த தொழிற்பாடுகளைக் கொண்ட, இரத்துச் செய்யப்பட்ட வணிகம், நேர முத்திரை பொறிக்கப்பட்ட அனைத்து வணிகர்கள், அதேநேரம் மற்றும் பாதுகாப்பான குரல் ஒலிப் பதிவு முறைமை, குரல் ஊடான பதிவு, வணிக சபையில் இடம் பெற்ற அனைத்து சம்பா'ணைகளையும் உள்ளடக்கிய தனித்தனியான மற்றும் எல்லாவற்றையும் கொண்ட சம்பா'ணைகளுக்கான வணிக பட்டியலொன்றினை ஏற்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றினை நிறுவுதல்;

(x) இணைத் தரப்பினர்களுக்கான தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு முன்னர், பின்னரங்க அலுவலகம் அனைத்து வணிக கொடுக்கல்வாங்கல்களையும் உறுதிப்படுத்துவதனை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்;

(xi) அதேநேர அடிப்படையில், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வணிக மற்றும் வர்த்தகப்படுத்தல் பேரப் பேச்சுக்களின் சுதந்திரமான நிலைமைகள் விதி விலக்கானவை தவிர்ந்த உரிய நேரத்தில் அறிக்கையிடுவதற்கான பொறிமுறையினை நடைமுறைப்படுத்தல் சபை/ மூத்த முகாமையாளருக்கன வரையறைகளை மீறுதல் என்பனவற்றைக் கண்காணித்தல்;

(xii) அனைத்து கொடுக்கல்வாங்கல்களும் நடைமுறைச் சந்தை வீதங்களில் மேற்கொள்ளப்பட்டமையினையும் சந்தைக்கு வெளியேயான அல்லது பழைய விதத்தில் மீண்டும் மீண்டும் கொடுக்கல்வாங்கல்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதனையும் உறுதிப்படுத்துதல்;

(xiii) கொடுக்கல்வாங்கல்களில் சுதந்திரமான இடர்நேர்வு கண்காணிப்பு பிரிவுகளால் அடையாளங் காணப்பட்டவாறு பெரும் எண்ணிக்கையான எதிரீட்டு கொடுக்கல்வாங்கல்கள் காணப்படுகின்றமை தொங்கலிலுள்ள நிலுவைகள் நீண்டகாலம்

வெளிநின்றமை போன்ற ஒழுங்கீனமான கொடுக்கல்வாங்கல்கள் சபைக்கு/ மூத்த முகாமைத்துவத்தினருக்கு சரியான முறையில் அறிக்கையிடப்படுவதனை உறுதிப்படுத்துதல்;

(xiv) முன்னரங்க அலுவலகத்தின் சுதந்திரப் பிரிவினூடாக வெளிநாட்டுச் செலாவணியின் சந்தைப்படியான நிலைமைகளையும் அத்துடன் சுதந்திரமான முறையில் மீள்மதிப்பீடு மற்றும் விளைவு வளைகோடுகளையும் கிரமமாகக் குறித்தல்;

(xv) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கொள்கைகள் மற்றும் சந்தை வீதங்களுக்கு அமைவாக வர்த்தகர்களுக்கு இழப்பீடுகள் வழங்குவதனையும், மிகையான இடர்நேர்வுகளை மேற்கொள்ளுதல் அல்லது கவனமற்ற இடர்நேர்வுகளுக்கு ஊக்கமளிப்பதனை தவிர்க்கும் விதத்தில் இவை வடிவமைக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தல்;

(xvi) இடையூறு விளைவிக்காத விடுப்பு கொள்கையினை கடுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் விடுப்பிலுள்ள வர்த்தகர்கள் அக் காலப்பகுதியில் எந்தவொரு வர்த்தகத்தில் ஈடுபடுவதிலிருந்தும் அல்லது வேறு இடத்திலிருந்து கொண்டு அதில் ஈடுபடுவதனையும் தடை செய்தல்;

(xvii) நடவடிக்கையினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் பொருத்தமான திட்டத்தினை நிறுவுதல்;

(xviii) குறித்துரைக்கப்பட்ட வர்த்தகர்கள் வணிக நேரத்திற்குப் பின்னர் அல்லது கட்டடத்திற்கு வெளியே வணிகத்தில் ஈடுபடுவதனை தடுப்பதற்கு ஒழுங்குவிதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்தல்.

**5. வரையறைகளின் கட்டமைப்பு**

5.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வேறுபட்ட மூப்பின் மட்டங்களில் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவதற்கு நிறுவனம், வணிகர் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளிட்ட வெளிநாட்டுச் செலாவணியுடன் தொடர்பான வரையறைகளை நிர்ணயிக்கின்ற அனைத்தையும் உள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை நிறுவுதல் வேண்டும்.

5.2 இவ் வரையறைகள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:

(i) சரியான முறையில் ஆவணப்படுத்தப்பட்டு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டிருத்தல்;

(ii) நியாயமானதாகவும், நிதியிடலைப் பரிசீலனையில் கொண்டதன் பின்னரான தேவையினை அடிப்படையாகக் கொண்டதாகவும் வியாபாரத்தின் அளவு, இடர்நேர்வினைத் தாங்கிக் கொள்ளும் கொள்கை, சந்தைத் தகுதியின் அளவு மற்றும் வணிகர்களின் அனுபவம் மற்றும் நிலைமை;

(iii) பொதுவாக இடர்நேர்வுகளை தாங்கும் மட்டம் வெளிநாட்டு நாணயங்களில் ஒப்பீட்டு ரீதியில் மிகையான தளம்பல்கள் மற்றும் இணைத்தரப்பினரின் இடர்நேர்வு தரமிடல் அல்லது சந்தை நிலைமைகளை பரிசீலிக்கின்ற விதத்தில் பொருத்தமான விதத்தில் குறைந்தது ஆண்டுதோறும் அல்லது பெருமளவிற்கு அடிக்கடி மீளாய்வு செய்தல்.

5.3 வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளுக்காக விதந்துரைக்கப்பட்ட தொடர்பான வரையறைகளின் அமைப்பு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(i) ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓர் இரவு இரண்டினதும் அனைத்து நாணயங்களினதும் கூட்டுத்தொகை மீதான திறந்த சந்தை நிலைமை;

(ii) ஒரு நாளுக்குள்ளேயான மற்றும் ஓர் இரவிற்கான பொருள் சார்ந்த வெளிப்படுத்துகைகளைக் கொண்ட வங்கிகளுக்கான தனிப்பட்ட நாணயங்களுக்கான திறந்த நிலைமை வரையறைகள்;

(iii) தனிப்பட்டவர்களின் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுச் செலாவணி வணிகத்தில் அவர்களின் ஈடுபாட்டின் மீது வரையறைகள்;

(iv) தீர்ப்பனவு மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்ற விதத்தில் அனைத்து இணைத்தரப்பினர்களுக்குமான வரையறைகள்;

(v) இழப்புக்களை நிறுத்துதல் அத்துடன் அல்லது முகாமைத்துவ நடவடிக்கை இணைவு வரையறைகள்;

(vi) நாட்டின் வரையறைகள்;

(vii) முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி பொருத்தப்பாடின்மை வரையறைகள்;

(viii) உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகளுக்கும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளின் தொழிற்பாட்டிற்கும் வெவ்வேறான வரையறைகள்;

(ix) அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும், வெவ்வேறுபட்ட கால வகைகளின் கீழ் முதிர்ச்சிப் பொருத்தப்பாடின்மை இடைவெளி வரையறைகள்.

## 6. இடர்நேர்வு அளவிடலும் அறிக்கையிடலும்

6.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளின் அளவிடுதல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(i) அவசியமானவிடத்து, சபை/ மூத்த முகாமை/ குழுமம் அல்லது தாய்க் கம்பனிக்கு கிரமமாக அறிக்கையிடல்.

(ii) வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு அறிக்கையிடலில் மூத்த முகாமையாளர்கள் தீவிரமாக ஈடுபாடு கொள்கின்றமையினையும் பொறுப்புடன் இருக்கின்றமையினையும் உறுதிப்படுத்தல்.

(iii) வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு அறிக்கையிடல் முறைமையினை வங்கியின் மைய முறைமைகளுடன் இணைப்பதுடன் அதன் பின்னர் மையத் தரவுகளுடனான மீள் இலாபத்தினை உறுதிப்படுத்தல்.

(iv) அறிக்கைகள் தெளிவானவை என்பதனையும் ஐயப்பாட்டிற்கு இடமில்லாதவை என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் முக்கிய தகவல்களையும் குறிப்பாக சட்ட மீறல்கள் மற்றும் விதிவிலக்கல்களையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

6.2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இடர்நேர்வு அளவிடல் மற்றும் அறிக்கையிடல் முறைமைகள் பின்வருவனவற்றிற்கு தகைமையுடையனவாக இருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்:

(i) மத்திய அலுவலகத்தினால் பெரிதும் விரும்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வங்கள் உட்பட அனைத்துச் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஐந்தொகைக்கு வெளியிலான நிலைமைகளிலிருந்து தோன்றுகின்ற, மொத்த மற்றும் தேறிய அடிப்படை ஆகிய இரண்டின் மீதுமான முதிர்ச்சியின்படி அனைத்து வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளையும் சுதந்திரமாக மதிப்பீடு செய்தல் வேண்டும்;

(ii) இடர்நேர்வுகளை அளவிடுவதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியியல் மாதிரிகளை அல்லது முறைகளை பிரயோகிப்பதுடன் அழுத்தப் பரீட்சிப்புக்களையும் பகுப்பாய்வுகளையும் கிரமமாக நடத்துதல்;

(iii) தற்போதைய நிலைமை மீது துல்லியமானதும் சரியான நேரத்திலுமான தரவுகளைப் பேணுதல்;

(iv) வரையறைகள் விஞ்சப்படாததை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி இணைக்கிணைத் தரப்பு கொடுகடன் இடர்நேர்வினையும் தீர்ப்பனவு இடர்நேர்வினையும் அதேநேர அடிப்படையில் கண்காணித்தல்;

(v) அளவீட்டு முறைமைகளுக்கு அடிப்படையாக விளங்கிய எடுகோள்கள், தனித் தன்மைகள் மற்றும் வரையறைகளின் ஆவணப்படுத்தப்பட்ட எடுகோள்களில் ஏற்படும் ஏதாவது மாற்றங்கள் சபை/ மூத்த முகாமையாளர்களினால் ஆதரவளிக்கப்பட்டு ஒப்புதலளிக்கப்பட வேண்டும்;

(vi) சந்தை இடர்நேர்வுகள் மீதான குறிகாட்டிகளையும் அதேபோன்று வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற தொழிற்பாட்டு இடர்நேர்வுகளையும் உள்ளடக்குகின்ற துல்லியமான, நம்பகத்தன்மை கொண்ட, தகவல் நிறைந்த உரிய நேரத்திலான முகாமைத்துவ தகவல் முறையினைப் பேணுதல்.

## 7. அழுத்தப் பரீட்சிப்புக்கள்

7.1 கிரமமான அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதன் மூலம் வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாடுகளிலிருந்து எழுகின்ற இழப்புக்களினால் தாம் பாதிக்கப்படக்கூடிய தன்மையினை அளவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமாந்தன்மை ஆகிய நியதிகளில், சந்தை அல்லது குறித்துரைக்கப்பட்ட அழுத்த சூழ்நிலைகளை எதிர்த்து நிற்கக்கூடிய அவர்களது இயலாற்றலை வங்கிகள் மதிப்பிட்டுக் கொள்ளல் வேண்டும்.

7.2 அழுத்த பரீட்சிப்புக்கள் வங்கி வெளிப்படுத்திய முக்கிய நாணயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டியதுடன் சாத்தியமான பாரிய செலாவணி வீதம் அல்லது வட்டிவீத அசைவுகளின் தாக்கம் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

7.3 அழுத்த பரீட்சிப்புக்கள் வங்கிச் சொத்துப்பட்டியலின் தன்மை மற்றும் அவற்றுடன் இணைந்துள்ள இடர்நேர்வுகளுடன் சரியான விகிதத்தில் இருத்தல் வேண்டும்.

## 8. வெளிநாட்டு நாணய நிலமைகளின் மதிப்பீடு

8.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது வெளிநாட்டு நாணய நிலைமைகளை கிரமமான அடிப்படையில் சுதந்திரமாக மதிப்பிட்டுக் கொள்ளக்கூடிய முறைமையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். இது தொடர்பாக, பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

(i) வாடிக்கையாளர் மற்றும் ஏனைய வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து தோன்றுகின்ற தேறிய திறந்த நிலைமையானது தற்போது நடைபெற்று வரும் அடிப்படையில் கணிக்கப்படல் வேண்டும். தேறிய திறந்த நிலைமையினைக் கணிக்கும் பொழுது பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

- தீர்ப்பனவு செய்யப்படாத அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

- அனைத்து வெளிநிற்கும் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.
- நாணய நிலைமகள், எதிர்காலம் போன்ற ஏனைய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களிலுள்ள தேறிய வெளிநாட்டுச் செலாவணி நிலைமையும் தனியாக உள்ளடக்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு நாணயத்திற்கும் எதிராகக் காட்டப்பட்டுள்ள வெளிப்படுத்துகை, மொத்த வெளிப்படுத்துகைக்கு வருவதற்கான சமிக்ஞைகளை புறந்தள்ளுவதாக கருதப்படல் வேண்டும்.
- உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தெரில் பிரிவுகளின் தேறிய திறந்த சந்தை நிலைமைகள் வெவ்வேறாகக் கணிக்கப்படல் வேண்டும்.

(ii) அவற்றின் வெளிநாட்டுச் செலாவணி நிலைமை மீதான இலாபம் மற்றும் நட்ட மீள் மதிப்பீட்டிற்கான கணக்குகள் கிரமமான அடிப்படையில் அல்லது குறைந்தது மாதாந்த அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

(iii) மதிப்பீட்டிற்கான செலாவணி வீதங்களின் மீதான கொள்கை பற்றிய ஆவணம் பெரும்பாலும் நாளின் முடிவில் மூடப்படுகின்ற நடுச் சந்தை வீதங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். உண்மையில் இவ் வீதங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களிலும் பார்க்க அலுவலர்களினால் பேணப்படுவதே சரியாகும். அல்லது குறைந்தபட்சம் சுதந்திரமான முறையில் உறுதி செய்யப்படல் வேண்டும்.

(iv) தீர்ப்பனவிற்கான வெளிநின்ற காலப்பகுதிக்கு நிலவுகின்ற நடுச் சந்தை வீதங்களின் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மீள் மதிப்பீடு

(v) "சந்தைக்கான பெறுமதியிடல்" அடிப்படையில் மத்திய அலுவலகம்/ பின்னரங்க அலுவலகம் என்பனவற்றினூடாக ஏனைய பொருத்தமான வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான ஒப்பந்தங்களை மீள மதிப்பீடு செய்தல்

(vi) அவர்களின் இணைத் தரப்பினர்களினால் வழங்கப்படும் மதிப்பீடுகளில் தங்கியிருக்கக்கூடாது.

**9. உள்ளகக் கட்டுப்பாடுகளும் சுதந்திரமான கணக்காய்வும்**

9.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் நம்பகத்தன்மை, துல்லியம் மற்றும் நியாயமான தன்மை அதேபோன்று விபரிக்கப்பட்ட செயல்முறைகளுடன் இணைங்கியொழுகும் முறை என்பனவற்றினை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தின் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்ளகக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் காலாந்தர மீளாய்வுகளை குறைந்தது வருடாந்தமாவது மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல் வேண்டும். மீளாய்வானது, கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்வதின் துல்லியமான தன்மை பூரணமான முறை; கடமைகளைக் காத்திரமான முறையில் வெவ்வேறாக்குதல்; வரையறைகளை விஞ்சுகின்ற விடயங்கள் மற்றும் மற்றைய விதிவிலக்குகளை துல்லியமாக பதிவு செய்தல்; இழப்பீடு; அனைத்து தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் இடம்பெறுகின்றமை மற்றும் அனைத்து நிறுவப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றமை என்பனவற்றை உள்ளடக்கிய விடயங்கள் வெளிநாட்டுச் செலாவணி விடயங்கள் தொடர்பாகப் பின்பற்றப்படும் காத்திரமான கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

9.2 தொழிற்பாடுகளின் கணக்காய்வு, இடர்நேர்வுக் கணிப்பீடு/ மதிப்பீட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதிகளவு இடர்நேர்வுகளைக் கொண்ட அனைத்துத் துறைகளும் உள்ளகக் கணக்காய்வாளர்களினால் கிரமமான அடிப்படையில் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். தொழிற்பாட்டு நடைமுறைகள் தீர்ப்பனவு இடர்நேர்வினைக் குறைப்பதற்கு போதுமானவையாக உள்ளன என்பதனை கணக்காய்வு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.3 வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ தகவல் அறிக்கைகளின் போதுமாந்தன்மை மற்றும் துல்லியமான தன்மையினைக் கணக்காய்வு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.4 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நிறுவப்பட்ட நடைமுறைகள் மீறப்பட்டமை தொடர்பான ஏதாவது விடயங்கள் கண்டறியப்படின் அவை உடனடியாக எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் உள்ளக அல்லது வெளிக் கணக்காய்வாளர்களின் விதந்துரைப்புக்களை காத்திரமான முறையில் நடைமுறைக்கிடுவதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

9.5 உள்ளகக் கணக்காய்வு மற்றும் ஏனைய இடர்நேர்வுக் கட்டுப்பாட்டு பிரிவுகள் வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகப்படுத்தல் வியாபாரத்தினை மீளாய்வு செய்வதற்குத் தேவையான அலுவலர்களையும் போதுமான நிபுணத்துவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**10. வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதியினை மதிப்பிடுவதற்கான பிரமாணம்**

10.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் தொடர்பில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் முன்னரங்க அலுவலகம், நடு அலுவலகம் அல்லது பின்னரங்க அலுவலகத்தில் பணியாற்றும் ஆளொருவர் பொருத்தமானவராகவும் தகுதியானவராகவும் கருதப்படுவதற்கு பின்வரும் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இப் பணிப்புரையின் நோக்கத்திற்காக, அத்தகைய ஆட்கள், "வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள்"

என விபரிக்கப்படுகின்றனர். இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ள பிரமாணங்களில் எந்த ஒன்றிற்கும் இணங்கி ஒழுகாதவிடத்து அந்த ஆள் நியமிக்கப்படுவதிலிருந்தும்/ ஒப்படைக்கப்படுவதிலிருந்தும் அல்லது எந்தவித தகுதியிலேனும் வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தினை தொடர்வதிலிருந்தும் தகுதியற்றவராக்கப்படல் வேண்டும்.

10.2 பொருத்தத்தன்மை மற்றும் தகுதி என்பனவற்றினை தீர்மானிப்பதற்கு பின்வரும் பிரமாணங்களைப் பிரயோகிக்கலாம்.

(i) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) வணிகரைப் பொறுத்தவரையில்

(அஅ) நிதியியல் சந்தை அமைப்பினால் வழங்கப்பட்ட வணிகம் செய்வதற்கான சான்றிதழ், அல்லது;

(ஆஆ) இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிக பாடநெறி தொடர்பான சான்றிதழ், அல்லது;

(இஇ) நாணயச் சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க, வெளிநாட்டுச் செலாவணி வணிகம் தொடர்பாகப் பெற்றுள்ள அல்லது வைத்திருக்கும் மற்றைய தொழில்சார் தகைமையொன்று, நாணயச் சபை அத்தகைய ஒப்புதலை ஒன்றன் பின் ஒன்றாக வழங்கும்.

(ஆ) நடு/ பின்னரங்க அலுவலக வேலைகளில் ஈடுபட்டுள்ள மற்றவர்களைப் பொறுத்தவரை;

(அஅ) நிதியியல் சந்தை அமைப்பினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டுச் சான்றிதழ், அல்லது;

(ஆஆ) இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்தினால் நடத்தப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகப்படுத்தல்/ தொழிற்பாடுகள் தொடர்பான சான்றிதழ், அல்லது;

(இஇ) நாணயச் சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க, வெளிநாட்டுச் செலாவணி வணிகம் தொடர்பாகப் பெற்றுள்ள அல்லது வைத்திருக்கும் மற்றைய தொழில்சார் தகைமையொன்று, நாணயச் சபை அத்தகைய ஒப்புதலை ஒன்றன்பின் ஒன்றாக வழங்கும்.

(ii) 2009 செத்தெம்பர் 1ஆம் திகதியிலிருந்து (இப் பணிப்புரை நடைமுறைக்கு வரும் நாள்) வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் மேற்போந்த 10(2)(1) இல் குறித்துரைக்கப்பட்டவாறான தொடர்பான தகைமைகளை 2012 ஓகத்து 31ஆம் நாளுக்கு முன்னதாக பெற்றுக்கொள்ள வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றார்.

(iii) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஆளொருவர் அவர்கள் ஈடுபட்டிருக்கும்/ ஈடுபட எதிர்பார்த்திருக்கும் தொழிற்பாடுகள் அல்லது நடவடிக்கைகளுக்குப் பொருத்தமானதும் போதுமானதுமான பொருத்தமான தொழில்சார் நிபணர், கல்விக் கழகம் அல்லது கல்வி நிறுவனங்களில் நடத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதனூடாக தொடர்ச்சியான பயிற்சிகளைப் பெற்று வருதல் வேண்டும்.

(iv) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர், எந்தவொரு ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபையினாலோ அல்லது மேற்பார்வையிடும் அதிகார சபை, தொழில்சார் அமைப்பு ஏதேனும் விசாரணை ஆணைக்குழு, தொழில் நீதிமன்றம் அல்லது இலங்கை அல்லது வெளிநாடுகளின் சட்டத்தினால் நிறுவப்பட்ட வேறு சபைகளினாலோ அத்தகைய ஆள் மோசடி, ஏமாற்றல் நேர்மையற்ற தன்மை அல்லது வேறு ஏதேனும் தவறான நடத்தை என்பனவற்றுடன் தொடர்பான நடத்தைகளுடன் தொடர்பான குற்றங்களை இழைத்தவர் என குற்றம் சாட்டப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(v) மோசடி, ஏமாற்றுதல், நேர்மையற்ற தன்மை அல்லது அதையொத்த குற்ற நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதேனும் தவறான நடத்தை போன்றவற்றுடன் தொடர்புபட்டவர் என குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவர் ஏதேனும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபையினாலோ அல்லது மேற்பார்வையிடும் அதிகாரசபை, தொழில்சார் அமைப்பு, ஏதேனும் விசாரணை ஆணைக்குழு, தொழில் நீதிமன்றம் அல்லது இலங்கை அல்லது வெளிநாடுகளின் சட்டத்தினால் நிறுவப்பட்ட வேறு சபைகளினாலோ நடாத்தப்பட்ட புலன்விசாரணைகள் அல்லது விசாரணைகளின் பின்னர் குற்றமற்றவராகக் காணப்பட்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(vi) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் நிதியியல் முகாமைத்துவத்துடன் தொடர்பான அல்லது ஒழுக்கமற்ற நடத்தைகளுடன் தொடர்பான குற்றங்களை புரிந்திருக்கின்றார் என இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றம் சுமத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(vii) வெளிநாட்டு செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ கடன் தீராற்றல் அற்றவர் என குற்றம் சாட்டப்பட்டோ அல்லது வங்குரோத்து அடைந்தவர் என்று பிரகடனப்படுத்தப்பட்டவராகவோ இருத்தல் ஆகாது.

(viii) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளாருவர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எந்தவொரு நீதிமன்றத் தீர்ப்பினையும் அல்லது எந்தவொரு நீதிமன்றத்தின் கட்டளையினையும் திருப்திப்படுத்தத் தவறாதவராகவும் அல்லது கடன்களை மீளச் செலுத்தத் தவறாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ix) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் புத்திசுவாதீனமற்றவர் என பிரகடனப்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(x) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆளொருவர் ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபையின் கட்டளையொன்றிற்கிணங்க இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள உரிமம் பெற்ற வங்கியொன்றின் அல்லது ஏதேனுமொரு நிதியியல் நிறுவனமொன்றின் பணியிலிருந்து நீக்கப்பட்டவராகவோ அல்லது இடைநிறுத்தப்பட்டவராகவோ இருத்தலாகாது.

10.3 வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள் எல்லோரும் மேற்போந்த 10.2 இல் குறிப்பிடப்பட்ட பிரமாணத்தினை பூர்த்தி செய்துள்ளமையினை உறுதிப்படுத்துகின்ற பிரகடனமொன்றினை தொடர்பான வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினூடாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**11. புதிய சாதனங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகளின் அறிமுகம்**

11.1 புதிய வெளிநாட்டுச் செலாவணிச் சாதனங்கள், பணிகள் மற்றும் நடவடிக்கைகளின் அறிமுகம் தொடர்பாக நடைமுறையிலிருக்கும் தெளிவான கொள்கைகளை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

11.2 புதிய சாதனங்கள்/ பணிகள்/ நடவடிக்கைகளின் அறிமுகமானது சொத்துப் பொறுப்புக்கள் குழுவினால் விதந்துரைக்கப்பட்டு சபையினால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும்.

11.3 புதிய சாதனங்கள் மற்றும் பணிகளை அறிமுகப்படுத்துகின்ற நடைமுறைகள் எழுத்து மூலமாக வரையப்பட்டு சபையின் ஒப்புதலை பெற்றிருத்தல் வேண்டும். சபையின் ஒப்புதலை எதிர்பார்க்கின்ற வியாபார செய்முறைகளை தெளிவாக குறித்துரைத்து அடையாளம் காண்கின்ற இயல்பாகவே இணைந்து காணப்படும் இடர்நேர்வுகளையும், வருமானங்களையும் மதிப்பிடுகின்ற, மதிப்பீடு, சட்ட தாக்கங்கள், படிவங்களை பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல் என்பனவற்றை தெளிவாகக் காட்டும் மீளாய்வுக் குறிப்புக்கள், திறைசேரி, முன்னரங்க அலுவலகம், நடுஅலுவலகம், பின்னரங்க அலுவலகம், சட்டம் மற்றும் கணக்கீடுகள் தொடர்பான அலுவலர்களினால் சரியான முறையில் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். புதிய பணிகள்/ சாதனங்கள் வங்கியின் மைய நடவடிக்கைகள், தோற்றப்பாடு மற்றும் நிபுணத்துவம் என்பனவற்றுடன் இசைந்து செல்வது பற்றி சிறப்புக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**12. தடங்கலற்ற நடவடிக்கைக்கு திட்டமிடல்**

12.1 பிரதான வேலைத்தலம் உறுதியற்ற நிலைக்கு மாறுகின்ற சந்தர்ப்பமொன்றில், வங்கியின் பொதுவான வியாபாரம் தடங்கலற்ற முறையில் நடைபெறுவதன் ஒரு பகுதியாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணி தீர்ப்பனவு தொழிற்பாடுகள் தடங்கலற்ற முறையில் நடைபெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தடங்கலற்ற திட்டமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

12.2 அத்தகைய தடங்கலற்ற திட்டமானது

(i) இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட 2006ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க தடங்கலற்ற வியாபாரத் திட்டத்திற்கு இசைவானதாகவும்;

(ii) ஆவணப்படுத்தப்பட்டு சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டதாகவும்;

(iii) குறைந்தது வருடாந்தமாவது பரீட்சிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டதாகவும்;

(iv) செய்யப்பட்ட, பெறப்பட்ட கொடுப்பனவுகள் அல்லது தொழிற்பாட்டிலுள்ள கொடுப்பனவுகள் மீதான முக்கியமான தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையினை உறுதிப்படுத்தும் விதத்தில் முறைமைகள் இடம்பெற்றிருப்பதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்துவதாகவும்;

இருத்தல் வேண்டும்.

**13. ஏனைய தேவைப்பாடுகள்**

13.1 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் ஒவ்வொரு வணிகரினாலும் அவரின் மேலாளரினாலும் சரியாக கையொப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வேலை விபரங்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளமையினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

13.2 அனைத்து வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களும் கம்பிஸ்ற் இன்ரனைசனாலே அமைப்பின் மாதிரி ஒழுக்கக்கோவையை ஏற்றுக் கொண்டு அதன் வழிகாட்டலின்படி நடத்தல் வேண்டும். இதன் போது தெளிவற்றதன்மை அல்லது முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் இப் பணிப்புரைகளின் நியதிகளே கம்பிஸ்ற் இன்ரனைசனாலே அமைப்பின் மாதிரி ஒழுக்கக்கோவையினைவிட மேலோங்கி நிற்றல் வேண்டும்.

13.3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இப் பணிப்புரை விடுக்கப்பட்ட நாளான 2009 செத்தெம்பர் 1ஆம் நாளன்று அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் தொழிலுக்கமர்த்தப்பட்டு வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்களின் விபரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்திலுள்ளவாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். ஆளணியினரின் அல்லது வழங்கப்பட்ட விபரங்களில் ஏதும் மாற்றங்கள் இருப்பின் அத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்ததிலிருந்து ஒரு வாரத்தினை விஞ்சாத காலப்பகுதிக்குள் அது பற்றி வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

13.4 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இப் பணிப்புரைகளுக்கு இணங்க, வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகள் தொடர்பான அவற்றின் கொள்கைகளையும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் மதிப்பீடு செய்து கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. இப்பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவதற்கான திகதிகள் விசேடமாகக் குறிப்பிடப்பட்டு நீடிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் தவிர இப் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுவது தொடர்பாக ஏதும் இடைவெளி இருக்குமாயின் அவை முன்னுரிமையின் அடிப்படையில் 2010 மாச்சு 31ஆம் திகதியளவில் சீர்செய்யப்படுதல் வேண்டும்.

**வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள்**

| பெயர் | பிறந்த திகதி | கல்விக்கழக/ கல்வித்துறை தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் | வங்கியில் இணைந்த நாள் | வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்தில் அனுபவம் (திகதியும் வகித்த பதவியும் | இலங்கை வெளிநாட்டுச் செலாவணி அமைப்பின் உறுப்புரிமை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவின் 8 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட நிர்ணயங்கள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 செத்தெம்பர் 02

**நிர்ணயங்கள்**

**2009ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம்**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்**

**எடுத்துக்காட்டு**

1 இந் நிர்ணயமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2009ஆம் ஆண்டு, 1ஆம் இலக்க நிர்ணயம் என எடுத்துக்காட்டப்படலாம். இந் நிர்ணயத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழான அதிகாரமளிப்பு**

2 (1) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1) இன் நியதிகளின்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒவ்வொன்றும் நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான ஆண்டு உரிமக் கட்டணத்தினை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டியதுடன், நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வேறுபட்ட வகைகளுக்கேற்ப வேறுபட்ட உரிமக் கட்டணங்களையும் நிர்ணயிக்கும்.

(2) வங்கித்தொழில் சட்டம் பிரிவு 8(2)இன் நியதிகளுக்கிணங்க அத்தகைய ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் செலுத்த வேண்டிய உரிமத் தொகையையும், அவை செலுத்தப்பட வேண்டிய வழிமுறையையும் நாணயச் சபை அறிவிக்கும்.

(3) வங்கித்தொழில் சட்டம் பிரிவு 8(3) இன் நியதிகளுக்கிணங்க உரிமக் கட்டணம் வங்கித்தொழில் வியாபார வகைகளுக்கமைய தீர்மானிக்கப்படுமிடத்து அத்தகைய உரிமக் கட்டணமானது, அதே வகையான வியாபாரத்தில் ஈடுபடும் சகல வங்கிகளுக்கும் ஏற்புடைத்தாகும்.

3 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 8(1) இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கிணங்க, 2010ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணமாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் செலுத்த வேண்டிய உரிமக் கட்டணங்கள் பின்வருமாறு இருக்குமென நாணயச் சபை நிர்ணயித்திருக்கிறது.

**2010 இற்கான வருடாந்த உரிமக் கட்டணம்**

(i) வெளிநாட்டுச் செலாவணி வியாபாரம் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் உள்ளடங்கலாக உள்நாட்டு வங்கித்தொழில் நடவடிக்கைகள் ரூ. 1,000,000.00;

(ii) கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகள் மட்டும் ரூ. 600,000.00.

**உரிமக் கட்டணம் செலுத்துகை**

4 (1) ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் அதற்குரிய உரிமக் கட்டணத்தினை 2010 சனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டும்.

(2) 2010இல் உரிமம் பெறும் ஒவ்வொரு உரிமமுடைய வர்த்தக வங்கியும் உரிமம் பெறுவதற்கு முன்னதாக 2010 இற்குரிய உரிமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**எதிர்வரும் கலண்டர் ஆண்டுகளிற்கான உரிமக் கட்டணம்**

5 எதிர்வரும் கலண்டர் ஆண்டுகளுக்கு ஏற்புடைத்தான ஆண்டு உரிமக் கட்டணம் வங்கிகளுக்கு உரியவாறு அறியத் தரப்படும்.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஈ(6) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட நிர்ணயங்கள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 செத்தெம்பர் 02

## நிர்ணயங்கள்

## 2009ஆம் ஆண்டு 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வருடாந்த உரிமக் கட்டணம்

**எடுத்துக்காட்டு**

1 இந் நிர்ணயமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2009ஆம் ஆண்டு, 2ஆம் இலக்க நிர்ணயம் என எடுத்துக்காட்டப்படலாம். இந் நிர்ணயத்தில் குறிப்பிடப்படும் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்ட 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவுகளாக இருக்கும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஈ(6) இன் கீழான அதிகாரமளிப்பு**

2 (1) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஈ)(6) இன் நியதிகளின்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒவ்வொன்றும் நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான ஆண்டு உரிமக் கட்டணத்தினை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டியதுடன், நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் வேறுபட்ட வகைகளுக்கேற்ப வேறுபட்ட உரிமக் கட்டணங்களையும் நிர்ணயிக்கிறது.

**2010 இற்கான வருடாந்த உரிமக் கட்டணம்**

3 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஈ(6) இனால் அளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கிணங்க, 2010ஆம் ஆண்டிற்கான உரிமக் கட்டணமாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ரூ. 300,000.00 இனை உரிமக் கட்டணமாக மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டும்.

**உரிமக் கட்டணம் செலுத்துகை**

4 (1) ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் அதற்குரிய உரிமக் கட்டணத்தினை 2010 சனவரி 31ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டும்.

(2) 2010இல் உரிமம் பெறும் ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் உரிமம் பெறுவதற்கு முன்னதாக 2010 இற்குரிய உரிமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**எதிர்வரும் கலண்டர் ஆண்டுகளிற்கான உரிமக் கட்டணம்**

5 எதிர்வரும் கலண்டர் ஆண்டுகளுக்கு ஏற்புடைத்தான ஆண்டு உரிமக் கட்டணம் வங்கிகளுக்கு உரியவாறு அறியத் தரப்படும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47(3), (4), (5) மற்றும் (6) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான நிர்ணயங்கள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 செத்தெம்பர் 02

## 2009ஆம் ஆண்டு 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம்

## எவரேனுமொரு பணிப்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் அல்லது பணிப்பாளரின் குறிப்பிடத்தக்களவு நலன்களைக் கொண்ட நிறுவனத்துக்கான கடன் வசதிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களாக குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்/ குத்தகை வருமதிகள்

**எடுத்துக்காட்டு**

1 இந் நிர்ணயமானது, வங்கித்தொழில் சட்டத்தின் 2009ஆம் ஆண்டு, 3ஆம் இலக்க நிர்ணயம் என எடுத்துக்காட்டப்படலாம். இந் நிர்ணயத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள் 2006 ஆண்டு 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பகுதிகளாகக் கருதப்படும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47(3), (4), (5) மற்றும் (6)இன் கீழான அதிகாரமளிப்புக்கள்**

2 எவரேனுமொரு பணிப்பாளருக்கு அல்லது அவரது நெருங்கிய உறவினருக்கு அல்லது பணிப்பாளரின் குறிப்பிடத்தக்களவு நலன்களைக் கொண்ட நிறுவனத்திற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் கடன் வசதிகள் வழங்கப்படும் போது, அவற்றிற்கான பிணையங்களை வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47(3), (4), (5) மற்றும் (6)இன் படி நாணயச் சபையானது அங்கீகரிக்கும்.

**அங்கீகரிக்கப்பட்ட பிணையம்**

3 பின்வரும் புதிய நிர்ணயமானது, 2005ஆம் ஆண்டு பெப்புருவரி 11ஆம் திகதி வெளியிடப்பட்ட நியதிகள் 47(3), (4), (5) மற்றும் (6) இற்கமைவாக விடுக்கப்பட்ட 1(ஐ) இற்கு உடனடுத்து புகுத்தப்படும்.

1(எம்) குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகள் தொடர்பில் பின்வருவனவற்றிற்கு உட்பட்டிருக்கும்.

(i) குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகள் மீது வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதிகள் அத்தகைய குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளின் மொத்தப் பெறுமதியில் 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ii) குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளுக்கு எதிராக வழங்கப்படும் கடன் வசதிகளின் தொகையானது, தனிப்பட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டு வெளிநிற்கும் மொத்தக் கடன் வசதிகளின் 50 சதவீதத்திற்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது.

(iii) குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளானவை சுமையேற்படுத்தாத (தொழிற்பாட்டு) குத்தகை சொத்துப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகள் என்பன கடன் வழங்கும் வங்கியில் ஈடு வைக்கப்படலாம்.

(v) கடன் வழங்கும் வங்கியானது, 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இருக்கவேண்டும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தியமைக்கப்பட்டவாறான நிர்ணயங்கள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 செத்தெம்பர் 02

## 2009ஆம் ஆண்டு 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட நிர்ணயம்

## எவரேனுமொரு பணிப்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் அல்லது பணிப்பாளரின் குறிப்பிடத்தக்களவு நலன்களைக் கொண்ட நிறுவனத்துக்கான கடன் வசதிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களாக குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்/ குத்தகை வருமதிகள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76(ஜ)(i) இனால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கேற்ப நாணயச் சபை உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு இத்தால் பணிப்புரைகளை விடுக்கிறது.

**எடுத்துக்காட்டு**

1 இந் நிர்ணயமானது வங்கித்தொழில் சட்டத்தின் 2009ஆம் ஆண்டு, 4ஆம் இலக்க நிர்ணயம் என எடுத்துக்காட்டப்படலாம். இந் நிர்ணயத்தினால் குறிப்பிடப்படும் பிரிவுகள் 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பகுதிகளாகக் கருதப்படும்.

**வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழான அதிகாரமளிப்புக்கள்**

2 வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1)இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் எந்தவொரு வியாபார நடவடிக்கைகளும் நடாத்தப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பிலான பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபை அதிகாரமுடையது.

**அங்கீகரிக்கப்பட்ட பிணையம்**

3 பின்வரும் புதிய பணிப்புரை வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஜே)(i)இன் நியதிகளில் பணிப்பாளர்கள் மற்றும் தொடர்பான கம்பனிகளுக்கான கடன்வழங்கல் மீது 1997 நவெம்பர் 21ஆம் திகதி விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் 7.12 பணிப்புரைகளுக்கு பின் உடனடுத்து உட்புகுத்தப்பட வேண்டும்.

7.13 குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகள் பின்வருவனவற்றிற்கு உட்பட்டிருக்கும்.

7.13.1 குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளுக்கு எதிராக வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதிகள் அத்தகைய குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளின் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவையாக இருக்கக்கூடாது.

7.13.2 குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளுக்கு எதிராக வழங்கப்படும் மொத்தக் கடன் வசதிகளின் தொகையானது, தனிப்பட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டு வெளிநின்ற மொத்தக் கடன் வசதிகளின் 50 சதவீதத்திற்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது.

7.13.3 குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகளானவை சுமையேற்படுத்தாத (தொழிற்பாட்டு) குத்தகை சொத்துப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

7.13.4 குத்தகை உத்தரவாத நம்பிக்கைச் சான்றிதழ்கள்/ குத்தகை வருமதிகள் என்பன கடன் வழங்கும் வங்கியில் ஈடு வைக்கப்படலாம்.

7.13.5 கடன் வழங்கும் வங்கியானது, 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட ஒரு நிறுவனமாக இருக்கவேண்டும்.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 செத்தெம்பர் 02

**பணிப்புரைகள்**

**2009ஆம் ஆண்டு 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள்**

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணுதல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல்**

2006ஆம் ஆண்டு 46ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 72 இலிருந்து 76 வரையான பிரிவுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, நாணயச் சபையானது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காணுதல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் இப் பணிப்புரைகளை விடுக்கின்றது.

**எடுத்துக்காட்டு**

1 இப்பணிப்புரைகள் 2009ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம். இப்பணிப்புரைகள் தொடர்பான பிரிவுகள், 2006ஆம் ஆண்டின் வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாகும்.

**கைவிடப்பட்ட சொத்துக்களை நாணயச் சபைக்கு அறிக்கையிடல்**

2 (1) பிரிவு 73(1)இன் நியதிகளின்படி, வங்கித்தொழில் சட்டத்தின் 72ஆம் பிரிவில் கைவிடப்பட்ட சொத்துக்கள் என விரைவிலக்கணம் செய்யப்பட்ட ஏதாவது பொருட்களைத் தம் வசம் வைத்திருக்கும் அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் ஒவ்வொரு நிதியியல் ஆண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்கிடையில், வருடாந்த அடிப்படையில், நாணயச் சபைக்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்க கைவிடப்பட்ட சொத்துக்களை அறிக்கையிடல் வேண்டும்.

2 (2) நிதியியல் ஆண்டுப்பகுதியில், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் கைவிடப்பட்ட சொத்துக்கள் எதுவும் அடையாளம் காணப்படாவிடின், தொடர்பான உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, இலங்கை மத்திய வங்கிக்கு இது பற்றி முறையாக அறிவித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் "எதுவுமில்லை" என்ற அறிக்கையாகக் கருதப்படும்.

2 (3) கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான அறிக்கையினை கோவைப்படுத்தும் பொழுது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை நிரூபிப்பதற்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து குறைந்தது பத்து ஆண்டு காலத்திற்காவது பேணல் வேண்டும்.

**கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான அறிவித்தலினை பிரசுரித்தல்**

3 (1) வங்கித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவின் நியதிகளின்படி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் மேலே பணிப்பு 2(1) இன் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையினை 30 நாட்களுக்கிடையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) குறிப்பிட்ட சொத்தின் சொந்தக்காரரின் பெயர் மற்றும் விபரங்களைக் குறிப்பிட்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலச் செய்தித்தாள்களில் அறிவித்தலொன்றினை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அத்தகைய சொத்தின் விபரங்களடங்கிய அறிவித்தலொன்றினை சொந்தக்காரரின் இறுதியாகத் தெரிந்த முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

3 (2) அத்தகைய அறிவித்தல்களை வெளியிட்டு கடிதம் அனுப்பி வைத்த திகதியிலிருந்து ஏழு வேலை நாட்களுக்கிடையில், அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியமை பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு எழுத்து மூலமாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

**கைவிடப்பட்ட சொத்துக்களை "கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கு" மாற்றல் செய்தல்**

4 (1) அனைத்து வர்த்தக வங்கிகளும் கைவிடப்பட்ட சொத்துக்களுக்காக, நாணயத்தின் அடிப்படையில், வங்கி ஏடுகளில் "கட்டுப்பாட்டுக் கணக்குகளை" உருவாக்கிக் கொள்ள வேண்டியதுடன், மேற்போந்த பணிப்பு

(2) இற்கிணங்க நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்ட அனைத்துப் பணங்களையும் இந்த கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

4 (2) 2006ஆம் ஆண்டின் மே 2ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கிணங்க, கைவிடப்பட்ட சொத்தாக நாணயச் சபைக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள பணத்தினை மேற்போந்த பணிப்புரை 4(1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு இப் பணிப்புரைத் திகதியிலிருந்து ஏழு வேலையாட்களுக்கிடையில் மாற்றல் செய்தல் வேண்டும்.

**மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கிற்கு நிதிகளை மாற்றல் செய்தல்**

5 (1) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 73(2)இன் நியதிகளின்படி, கைவிடப்பட்ட சொத்தாக அறிவிக்கப்பட்டு, கட்டுப்பாட்டுக் கணக்கில் இலங்கை ரூபாவில் பேணப்படும் பணத்தில் தொண்ணூறு சதவீதத்தினை, இலங்கை மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கிற்கு, ஒவ்வொரு ஆண்டும் கைவிடப்பட்ட சொத்து அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குள் வர்த்தக வங்கிகள் மாற்றல் செய்ய வேண்டுமென மத்திய வங்கி தீர்மானித்திருக்கின்றது.

5 (2) 2006 மே 2ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க கைவிடப்பட்ட சொத்தாக ஏற்கனவே, அறிவிக்கப்பட்ட பணத்தில் தொண்ணூறு சதவீதத்தினை இலங்கை ரூபாவில் பேணப்படும் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மாற்றல் செய்ய வேண்டியதுடன் அப் பணத்தின் மீது மாற்றல் செய்யப்படும் நாள் வரைக்கும் கணிக்கப்பட்ட வட்டியினை இலங்கை மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கிற்கு இப் பணிப்புரையின் திகதியிலிருந்து முப்பது கலண்டர் நாட்களுக்கிடையில் மாற்றல் செய்ய வேண்டும்.

5 (3) மேற்போந்த பணிப்புரைகள் 5(1) மற்றும் 5(2)இல் கைவிடப்பட்ட சொத்துக்களாகக் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தினை உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியிலுள்ள பின்வரும் கணக்கிற்கு மாற்றம் செய்ய வேண்டியதுடன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பணிப்பாளருக்கான ஒரு படியுடன் மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அறிவித்தல் வேண்டும்.

கணக்கின் பெயர் : உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட சொத்துக்கள்

கணக்கு இலக்கம் : 4679

**கோரல்களின் மீள்கொடுப்பனவு**

6 (1) கைவிடப்பட்ட சொத்தாக அறிவிக்கப்பட்டு பணிப்பு 5(1) இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு மாற்றல் செய்யப்பட்ட பின்னர் இலங்கை ரூபாவில் பேணப்படும் பணத்தின் பத்து சதவீதமும் வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படும் கைவிடப்பட்ட சொத்தும் மேற்போந்த 4(1) பணிப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் "கட்டுப்பாட்டுக் கணக்கில்" பேணப்பட வேண்டும். இப் பணமானது, கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான கோரல்கள் ஏதும் காணப்படுமிடத்து, கோரலாளானி அடையாளத்தினையிட்டு உரிமம் பெற்ற வர்த்த வங்கிகள் தாமாகவே திருப்திப்படுமிடத்து அவற்றினை பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்படலாம்.

6 (2) மேற்போந்த பணிப்புரை 6(1)இன் நியதிகளில் கொடுப்பனவு செய்யப்பட்டதும், அத்தகைய கொடுப்பனவுகள் செய்யப்பட்ட நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் தொடர்பான தகவல்களுடன், அதாவது சொந்தக்காரரின் விபரங்கள், சொத்துக்களின் விபரம், அத்தகைய கைவிடப்பட்ட சொத்துக்கள் அறிவிறிக்கப்பட்ட திகதி, கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி என்பனவற்றுடன் சேர்ந்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும். அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் அத்தகைய மீள்கொடுப்பனவுகள் பற்றிய அறிக்கையினை ஆண்டு அடிப்படையில் தயாரித்து இணைப்பு II இல் உள்ள அறிக்கையிடுகின்ற படிவத்திற்கு இணங்க மேற்போந்த பணிப்பு 2(1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து ஆறு மாதங்களுக்கிடையில் அதனைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

6 (3) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கில் வைத்திருக்கப்படும் நிதியத்தின் பத்து சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் செய்யப்படுமிடம் கோரல்கள் எதுவும் வங்கித்தொழில் சட்டத்தின் 75 ஆவது பிரிவின் ஏற்பாட்டு நியதிகளின்படி இலங்கை மத்திய வங்கியினால் மீளச் செலுத்தப்படும். அத்தகைய கோரல்கள் எதுவும் செய்யப்படும் பொழுது அதனை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அத்தகைய கைவிடப்பட்ட சொத்தின் சொந்தக்காரது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களைத் திறத்தல்**

7 (1) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் திறக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களின் விபரங்களை பதிவு செய்வதற்காக பாதுகாப்பு வைப்பு பொருள்பட்டியல் தாளொன்றினைத் தயாரித்தல் வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களைத் திறப்பது, ஏனைய விடயங்களுடன் குறிப்பாக இத்தகைய பணி ஒப்படைக்கப்பட்ட இரண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் முன்னிலையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவர்களில் ஒருவர் குறைந்தது மூத்த நிறைவேற்று தரத்திலுள்ளவராக இருத்தல் வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்தில்

காணப்பட்ட அனைத்துப் பொருட்களும் கைவிடப்பட்டவைகளாக கருதப்பட்டு விதிவிலக்கெதுவுமின்றி பொருள்பட்டியல் தாளில் உள்ளடக்கப்படல் வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் திறக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களில் காணப்பட்ட அனைத்து விடயங்களும் வகைப்படுத்தப்பட்டு கட்டுக்காப்பில் வைக்கப்படல் வேண்டும். எந்தவொரு பொருளையும் விற்கவோ, அழிக்கவோ அல்லது அகற்றவோகூடாது.

7 (2) பொருள்பட்டியல் தாளானது மேற்போந்த பணிப்புரை 7(1)இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்களினால் கையொப்பமிடப்பட வேண்டும். பாதுகாப்பு வைப்பு பொருள்பட்டியல் தாள் இப் பணிப்புரைகளின் அறிவுறுத்தல்களுக்கிணங்கவும் இணைப்பு IIஇல் உள்ள அறிக்கையிடும் படிவத்திற்கு ஏற்பவும் தயாரிக்கப்பட்டு மேற்போந்த பணிப்புரை 2(1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட கைவிடப்பட்ட சொத்துக்களின் மீதான அறிக்கையுடன் சேர்த்து ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் ஆறு மாதங்களுக்கிடையில் நாணயச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**நீக்குதல்**

8. இப் பணிப்புரை அறிமுகப்படுத்தப்படுவதன் பொருட்டு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஏற்புடைத்தான "கைவிடப்பட்ட சொத்துக்கள் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 72 இலிருந்து 76 வரையறை பிரிவுகளின் ஏற்பாடுகளை நடைமுறைக்கிடல்" என்ற தலைப்பினைக் கொண்ட 2006 மே 2ஆம் திகதியிடப்பட்ட எண் 02/17/402/0079/001 சுற்றறிக்கைக் கடிதம், அத்தகைய சுற்றறிக்கை கடிதத்தின் கீழ் அல்லது அதன் நியதிகளின்படி முறையாக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

இணைப்பு I

**ஆண்டு நிதியியல் கூற்று (இல. ரூ ஷ000)**

**வ.மே.தி. - ஆ.நி. - 18 - கை.சொ.-1- கைவிடப்பட்ட சொத்துக்களின் அறிக்கை - காலப்பகுதியில் மேலதிகமாக சேர்ந்தவை**

**வங்கியின் பெயர் :**

**அறிக்கையிடும் காலம் :**

| (18.1.0.0.0.0) | (18.2.0.0.0.0) | (18.3.0.0.0.0) | (18.4.0.0.0.0) | (18.5.0.0.0.0) | (18.6.0.0.0.0) | (18.7.0.0.0.0) | (18.8.0.0.0.0) | (18.9.0.0.0.0) | (18.10.0.0.0.0) | (18.11.0.0.0.0) | (18.12.0.0.0.0) | (18.13.0.0.0.0) | (18.14.0.0.0.0): (18.11.0.0.0.0)- (18.12.0.0.0.0) | (18.15.0.0.0.0) | (18.16.0.0.0.0): (18.14.0.0.0.0)* (18.15.0.0.0.0) | (18.17.0.0.0.0) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிளையின் பெயர் | மற்றைய பெயர்களுடன் சொந்தக்காரரின் இறுதிப் பெயர் | கடைசியாக தெரிந்த முழுமையான விலாசம் | சொந்தக்காரரின் அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச் சீட்டு இலக்கம், பிறந்த திகதி | சொத்துக்களின் விபரம் | சொத்துக்களின் அடையாள இலக்கம் * | உழைக்கும் வட்டி ** | இறுதியாக நடவடிக்கை காணப்பட்ட நாள் | நடவடிக்கையின் தன்மை | நாணயம் *** | வரவேண்டிய தொகை | கழிக்கப்பட்ட தொகை | கழிப்பின் விபரம் | தேறிய தொகை | செலாவணி வீதம் | இலங்கை ரூபாவில் தேறிய தொகை | ஒப்பந்தத்தின் நியதிகள் மற்றும் சொந்தக்காரரின் அறிவுறுத்தல்கள் |
| | மொத்த தொகை (18.18.0.0.0.0) | | | | | | | | | | | | 0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0 | | 0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0 | |

............................ ஆகிய நான் சான்று பகரப்பட்ட விதத்தில் முறையாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்காக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கைவிடப்பட்டது என முடிவு செய்யப்படாதிருக்கும் அத்தகைய சொத்துக்கள் நீங்கலாக கைவிடப்பட்டது எனக் கருதப்படும் மொத்தமாக ரூ. .................... பெறுமதி கொண்ட சொத்துக்கள் தொடர்பாக ............. பக்கங்களை உள்ளடக்குகின்ற அறிக்கையினைப் பரீட்சித்து, சரியான முறையில் தயாரித்துள்ளேன் என்பதனையும் இவ்வறிக்கையினை நிறைவேற்றுவதற்கு ........ வங்கியினால் (வங்கியின் பெயர்) முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளேன் எனவும் எனது சிறந்த அறிவின்படியும் நம்பிக்கையின்படியும் இவ்வறிக்கையானது உண்மையானது எனவும் மேலேயுள்ள திகதியிலுள்ளவாறு பூரணப்படுத்தியிருக்கின்றேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையொப்பம் : ........................................... பெயர் : ................................................................. பதவி : ..................................................

......... நாள் ...... மாதம் .............. ஆண்டு அன்று அவரது/ அவளது கையொப்பம் எனக்கு முன்னால் வைக்கப்பட்டது என உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் : ........................................... பெயர் : .......................................................................................

*** சொத்துக்களின் விபரம்**
1. நடைமுறைக் கணக்கு
2. சேமிப்பு கணக்கு
3. நிலையான வைப்பு
4. அழைப்பு வைப்பு
5. வைப்புச் சான்றிதழ்கள்
6. நானாவித வைப்பு
7. சிறுவர் கணக்கு
8. காசோலைகள்
9. வங்கி வரைவு
10. கொடுப்பனவு கட்டளை/ காசு கட்டளை
11. சேமிப்புச் சான்றிதழ்
12. ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)

**** வட்டி உழைக்கும்**
1. ஆம்
2. இல்லை

***** நாணயங்கள்**
1. இலங்கை ரூபா

**குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்**
1. அவுத்திரேலியா டொலர்
2. கனடியன் டொலர்
3. டியூச் மார்க்
4. யூரோ
5. பிரான்சிய பிறாங்
6. கொங்கொங் டொலர்
7. யப்பானிய டொலர்
8. பவுண் இசுடேர்லிங்
9. சிங்கப்பூர் டொலர்
10. சுவிஸ் பிராங்
12. ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)

இணைப்பு II

**ஆண்டு நிதியியல் கூற்று (இல. ரூ ஷ000)**

**வ.மே.தி. - ஆ.நி. - 18 - கை.சொ.-1- கைவிடப்பட்ட சொத்துக்களின் அறிக்கை - காலப்பகுதியில் மேலதிகமாக சேர்ந்தவை**

**வங்கியின் பெயர் :**

**அறிக்கையிடும் காலம் :**

| (18.1.0.0.0.0) | (18.2.0.0.0.0) | (18.3.0.0.0.0) | (18.4.0.0.0.0) | (18.5.0.0.0.0) | (18.6.0.0.0.0) | (18.7.0.0.0.0) | (18.8.0.0.0.0) | (18.9.0.0.0.0) | (18.10.0.0.0.0) | (18.11.0.0.0.0) | (18.12.0.0.0.0) | (18.13.0.0.0.0) | (18.14.0.0.0.0): (18.11.0.0.0.0)- (18.12.0.0.0.0) | (18.15.0.0.0.0) | (18.16.0.0.0.0): (18.14.0.0.0.0)* (18.15.0.0.0.0) | (18.19.0.0.0.0) | (18.20.0.0.0.0) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கிளையின் பெயர் | மற்றைய பெயர்களுடன் சொந்தக்காரரின் இறுதிப் பெயர் | கடைசியாக தெரிந்த முழுமையான விலாசம் | சொந்தக்காரரின் அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச் சீட்டு இலக்கம், பிறந்த திகதி | சொத்துக்களின் விபரம் | சொத்துக்களின் அடையாள இலக்கம் * | உழைக்கும் வட்டி ** | இறுதியாக நடவடிக்கை காணப்பட்ட நாள் | நடவடிக்கையின் தன்மை | நாணயம் *** | வரவேண்டிய தொகை | கழிக்கப்பட்ட தொகை | கழிப்பின் விபரம் | தேறிய தொகை | செலாவணி வீதம் | இலங்கை ரூபாவில் தேறிய தொகை | கைவிடப்பட்ட சொத்தாக அடையாளம் காணப்பட்ட திகதி | கோரல்களின் தீர்ப்பனவு நாள் |
| | | | | | | | | | | | | | | 0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0 | | 0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0<br>0 | |
| | மொத்த தொகை (18.18.0.0.0.0) | | | | | | | | | | | | | | | | |

............................ ஆகிய நான் சான்று பகரப்பட்ட விதத்தில் முறையாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டு மேற்குறிப்பிட்ட காலப்பகுதிக்காக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கைவிடப்பட்டது என முடிவு செய்யப்படாதிருக்கும் அத்தகைய சொத்துக்கள் நீங்கலாக கைவிடப்பட்டது எனக் கருதப்படும் மொத்தமாக ரூ. .................... பெறுமதி கொண்ட சொத்துக்கள் தொடர்பாக ............. பக்கங்களை உள்ளடக்குகின்ற அறிக்கையினைப் பரீட்சித்து, சரியான முறையில் தயாரித்துள்ளேன் என்பதனையும் இவ்வறிக்கையினை நிறைவேற்றுவதற்கு ........ வங்கியினால் (வங்கியின் பெயர்) முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளேன் எனவும் எனது சிறந்த அறிவின்படியும் நம்பிக்கையின்படியும் இவ்வறிக்கையானது உண்மையானது எனவும் மேலேயுள்ள திகதியிலுள்ளவாறு பூரணப்படுத்தியிருக்கின்றேன் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கையொப்பம் : ........................................... பெயர் : ...................................................................................... பதவி : .............................

............ நாள் ...... மாதம் .............. ஆண்டு அன்று அவரது/ அவளது கையொப்பம் எனக்கு முன்னால் வைக்கப்பட்டது என உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் : ........................................... பெயர் : ......................................................................................

*** சொத்துக்களின் விபரம்**
1. நடைமுறைக் கணக்கு
2. சேமிப்பு கணக்கு
3. நிலையான வைப்பு
4. அழைப்பு வைப்பு
5. வைப்புச் சான்றிதழ்கள்
6. நானாவித வைப்பு
7. சிறுவர் கணக்கு
8. காசோலைகள்
9. வங்கி வரைவு
10. கொடுப்பனவு கட்டளை/ காசு கட்டளை
11. சேமிப்புச் சான்றிதழ்
12. ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)

**** வட்டி உழைக்கும்**
1. ஆம்
2. இல்லை

***** நாணயங்கள்**
1. இலங்கை ரூபா

**குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்**
1. அவுத்திரேலியா டொலர்
2. கனடியன் டொலர்
3. டியூச் மார்க்
4. யூரோ
5. பிரான்சிய பிறாங்
6. கொங்கொங் டொலர்
7. யப்பானிய டொலர்
8. பவுண் இசுடேர்லிங்
9. சிங்கப்பூர் டொலர்
10. சுவிஸ் பிராங்
12. ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)

**இணைப்பு** III

## பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்தின் பொருட்பட்டியல் தாள்

**வங்கியின் பெயர் :**

**நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறு நிலைமை :**

| (18.1.0.0.0.0) கிளையின் பெயர் | (18.21.0.0.0.0) பெட்டகச் சொந்தக்காரரின் இறுதிப் பெயர் | (18.22.0.0.0.0) பெட்டகத்தின் இலக்கம் | (18.23.0.0.0.0) நிலவறை அமைந்துள்ள இடம் | (18.24.0.0.0.0) துளையிடப்பட்ட திகதி | (18.25.0.0.0.0) அளவு | (18.26.0.0.0.0) உள்ளே இருந்த பொருட்களின் விபரங்கள் | (18.27.0.0.0.0) வேறு ஏதாவது தொடர்பான தகவல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

மேலேயுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் எந்தவொரு பொருளும் அகற்றப்படவோ அழிக்கப்படவோ இல்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

**பொருட்பட்டியல் திகதி :**

.................................................. .................................................. ..................................................

வங்கி அலுவலரின் ஒப்பம் அலுவலரின் பெயர் பதவி

.................................................. .................................................. ..................................................

வங்கி அலுவலரின் ஒப்பம் அலுவலரின் பெயர் பதவி

## வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 73(1)இன் நியதிகளில் கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய இணைப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 72இன் நியதிகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, சொத்துக்களின் விபரங்கள் சாத்தியமானளவிற்கு சொந்தக்காரரின் இறுதிப் பெயரின் அகர வரிசைப்படியும் கிளைகள் மற்றும் நாணய வகைப்படியும் பதிவு செய்யப்பட வேண்டும்.

**வங்கியின் பெயர்** : அறிக்கையிடும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் பெயரைப் பதியவும்

**அறிக்கையிடும் நாள்**: அறிக்கை எப்பொழுது மேற்கொள்ளப்பட்டதோ அந்த நாளைப் பதியவும் (நிதியியல் ஆண்டின் இறுதிக் கலண்டர்கள்)

| | |
|---|---|
| **(18.1.0.0.0.0)** | வாடிக்கையாளர் கணக்கு வைத்திருக்கும் கிளையின் பெயரைப் பதியவும். |
| **(18.2.0.0.0.0)** | சொந்தக்காரரின் இறுதிப்பெயரையும் அதனைத் தொடர்ந்து முதற் பெயர் மற்றும் நடுப் பெயரையும் முழுமையாகப் பதியவும். நடுப்பெயரின் பின்னர் செல்வி, திரு, திருமதி போன்ற அடையாளம் காண்பதற்கு உதவும் தகவல்களைப் பதியவும். |
| | ஒரு பொருளுக்கு இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான சொந்தக்காரர்கள் காணப்படுமிடத்து அத்தகைய சொந்தக்காரர்களின் பெயர்கள் உறவுமுறைகளுடன் பதியப்படல் வேண்டும் |
| | உங்களது பதிவேடுகள் பொருளினது சொந்தக்காரரின் பெயரினைக் காட்டாவிட்டால் சொந்தக்காரரின் பெயர் “தெரியவில்லை” எனப் பதியவும். |
| **(18.3.0.0.0.0)** | உங்கள் பதிவேடுகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள முகவரியினை முழுமையாக எழுதவும். முகவரி கிடைக்கவில்லையெனில் கிடைக்கவில்லையென எழுதவும். சொந்தக்காரர்கள் பலராக இருந்து முகவரி ஒன்றாக இருக்குமாயின் ஒருவரின் முகவரியினை எழுதி மற்றவர்களின் முகவரியும் இதுதான் எனக் குறிப்பிடவும். |
| **(18.4.0.0.0.0)** | சொந்தக்காரரை அடையாளங்காண உதவும் விதத்தில் சொந்தக்காரரின் தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம், பிறந்த திகதி அல்லது வேறு ஏதாவது தகவல்களைக் குறிப்பிடவும். இவை கோரல்களைக் கொடுப்பனவு செய்வதற்கு இன்றியமையாததாகையால் அவை அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| **(18.5.0.0.0.0)** | பட்டியலிலிருந்து பொருளின் விபரத்தினை தெரிவு செய்யலாம் அல்லது அது கிடைக்காதவிடத்து போதுமான விபரங்களுடன் விபரணத்தினைப் பதியவும். |
| **(18.6.0.0.0.0)** | கணக்கு இலக்கம் போன்ற ஒவ்வொரு பொருளுக்கும் உங்கள் அடையாள இலக்கத்தினை எழுதவும். |
| **(18.7.0.0.0.0)** | இப் பொருள் வட்டி உழைக்கின்றதா இல்லையா என்பதனைக் குறிப்பிடவும். |
| **(18.8.0.0.0.0)** | சொந்தக்காரர் இறுதி வைப்பினை, எடுப்பனவினை அல்லது தொடர்பினை மேற்கொண்ட திகதியைக் குறிப்பிடவும். இவை பங்கிலாபம் கொடுப்பனவு செய்யக்கூடியதாக மாறுகின்ற, காசோலை அல்லது வரைவு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளாகக் கூட இருக்கலாம். |
| **(18.9.0.0.0.0)** | இறுதி நடவடிக்கையின் தன்மையினைக் குறிப்பிடவும். உ-ம் எடுப்பனவு, கணக்கிற்கான வைப்பு போன்றன. |
| **(18.10.0.0.0.0)** | கணக்கு பேணப்பட்ட நாணயத்தினைப் பட்டியலிலிருந்து தெரிவு செய்யவும். அல்லது அது கிடைக்காவிட்டால் தொடர்பான நாணயத்தினை எழுதவும். |
| **(18.11.0.0.0.0)** | அறிக்கையிடும் திகதி வரை உழைக்கப்பட்ட அனைத்து வட்டிகள், பங்கிலாபங்கள் போன்றன உட்பட சொந்தக்காரருக்கு வரவேண்டிய மொத்தத் தொகையினை பணிக் கட்டணம் எதனையும் கழிக்காமல் குறிப்பிடவும். பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்கள் அல்லது பாதுகாப்பிற்காக வைத்திருக்கப்படும் ஏனைய விடயங்களைப் பொறுத்தவரை உள்ளேயுள்ள பொருட்களை இனங்கண்டு பெறுமதியான எந்தவொரு பொருளினையும் உள்ளடக்கவும். இணைப்பு IIIஇல் உள்ளவாறு அனைத்து பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களையும் பொருட்பட்டியல் தாளில் உள்ளடக்கவும். |
| **(18.12.0.0.0.0)** | செய்யப்பட்ட கழிவுகளின் தொகையினைக் குறிப்பிடவும். இவை சட்ட ரீதியான விதிப்புக்களை மட்டும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். |
| **(18.13.0.0.0.0)** | பணிக் கட்டணம், வரி போன்ற அத்தகைய கழிவுகளின் தன்மையினைக் குறிக்கவும். உ-ம் வரிகள் போன்றன. |
| **(18.14.0.0.0.0)** | குறிப்பிடப்பட்ட கழிவுகளின் பின்னர் வரவேண்டிய தேறிய தொகையினைக் குறிப்பிடவும். |

| | |
|---|---|
| **(18.15.0.0.0.0)** | இலங்கை நாணயம் தவிர்ந்த மற்றைய எந்த நாணயத்திற்கும் ஏற்புடைத்தான செலாவணி வீதத்தினை அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிநாளில் உள்ளவாறு குறிப்பிடவும். |
| **(18.16.0.0.0.0)** | இலங்கை ரூபாவில் சேர வேண்டிய தேறிய தொகையினைக் குறிப்பிடவும். |
| **(18.17.0.0.0.0)** | வட்டி வீதம், கொடுப்பனவு அறிவுறுத்தல்கள் போன்ற சொந்தக்காரருடன் உடன்பட்டுக் கொண்ட நியதிகளைக் குறிப்பிடவும். அவை கோரல்களின் கொடுப்பனவினைப் பொறுத்தவரை இன்றியமையாததாக இருக்கும். அத்தகைய சொத்துக்களுடன் தொடர்பான ஏதும் சிறப்பான பரிசீலனைகள் இருக்குமாயின், அவற்றையும் தவணை வைப்புக்களைப் பொறுத்தவரை முதிர்ச்சித் திகதியையும் குறிப்பிடவும். |
| **(18.18.0.0.0.0)** | இலங்கை ரூபாவில் சேர வேண்டிய தேறிய வகையின் மொத்தம். (18.16.0.0.0.0) |
| **(18.19.0.0.0.0)** | இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடலில் கைவிடப்பட்ட சொத்தாக குறிப்பிடப்பட்ட சொத்து அறிக்கையிடப்பட்ட/ அடையாளம் காணப்பட்ட ஆண்டினை குறிப்பிடவும். |
| **(18.20.0.0.0.0)** | வாடிக்கையாளருக்கு கோரல்களைத் தீர்ப்பனவு செய்த நாளினைக் குறிப்பிடவும். |
| **(18.21.0.0.0.0)** | சொந்தக்காரரை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய தகவல்கள் உட்பட சொந்தக்காரரின் முழுப் பெயரையும் குறிப்பிடவும். |
| **(18.22.0.0.0.0)** | பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்தின் இலக்கத்தினைக் குறிப்பிடவும். |
| **(18.23.0.0.0.0)** | பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் வைக்கப்பட்டுள்ள நிலவறை அமைந்துள்ள இடத்தினைக் குறிப்பிடவும். |
| **(18.24.0.0.0.0)** | பாதுகாப்பு வைப்புப் பெட்டகம் திறக்கப்பட்ட நாளினைக் குறிப்பிடவும். |
| **(18.25.0.0.0.0)** | பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்திலுள்ள விடயங்களின் அளவினைக் குறிப்பிடவும். |
| **(18.26.0.0.0.0)** | பாதுகாப்பு வைப்புப் பெட்டகத்திலுள்ள ஒவ்வொரு பொருட்களினதும் தன்மையினைக் குறிப்பிடவும். |
| **(18.27.0.0.0.0)** | வேறு ஏதாவது தொடர்பான தகவல்கள் இருப்பின் குறிப்பிடவும் |

**தொடர்பு எண்: 02/17/800/009/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2009 ஒத்தோபா 23

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினது*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

அன்புள்ள ஐயா/ அம்மணி

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பராமரிக்கப்படும் கணக்குகளுக்கிடையே நிதிய மாற்றல் செய்வதற்கு அனுமதி வழங்குதல்

அரச பிணைச் சந்தையினை ஆழமாக்கி பன்முகப்படுத்தும் நோக்கத்துடன், நாணயச்சபை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலும் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலும் பராமரிக்கப்படும் திறைசேரி உண்டியல்/ முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாய் கணக்குகள், பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாய் கணக்குகள் மற்றும் சிறப்பு வெளிநாட்டு முதலீட்ட வைப்புக் கணக்குகள் போன்றவற்றிற்கிடையில் நிதியமாற்றல் செய்வதற்கு அதிகாரமளித்திருந்தது.

அதன்படி 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2000 ஏப்பிறல் 7 திகதியிடப்பட்ட வங்கித்தொழில் கட்டளை (கரைகடந்த வங்கித்தொழில் திட்டம்) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் பராமரிக்கப்படும் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த பிரிவுகளுக்கிடையில் மாற்றல் செய்வதனை வசதிப்படுத்தப்படுத்தும் விதத்தில் திருத்தப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட திருத்தங்களை கூட்டிணைக்கின்ற 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் கட்டளைச் சட்டம் இதனுடன் இணைக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
வங்கி மேற்பார்வைப் பதில் பணிப்பாளர்

**அமைச்சருடைய அனுமதியுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 23, 25 மற்றும் 26ஆம் பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உத்தரவாதங்கள்.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 ஒத்தோபர் 23

## உத்தரவுகள்

## 2009ஆம் ஆண்டு 1ஆம் இலக்க வங்கித்தொழில் கட்டளைச் சட்டம்

## வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளைச் சட்டம்

**எடுத்துக்காட்டு**

1 இக் கட்டளையானது 2009ஆம் ஆண்டில் 1ஆம் இலக்க வங்கித்தொழில் கட்டளைச் சட்டம் என எடுக்கப்படலாம். இக் கட்டளையில் குறிப்பிடப்படுகின்ற பிரிவுகள் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகளாக விளங்கும்.

**2000 ஏப்பிறல் 7இல் வெளியிடப்பட்ட வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம்) உத்தரவு 2000இல் புதிய ஒழுங்குவிதி 5அ உட்புகுத்தல்**

2 பின்வரும் புதிய கிளைவாசகமானது, 5ஆம் கிளை வாசகத்தினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் 7ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2000ஆம் ஆண்டில் வங்கித்தொழில் (கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத் திட்டம்) கட்டளையின் கிளைவாசகம் ஒழுங்குவிதி 5அ என நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

5அ **உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுடனான அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

திறைசேரி உண்டியல்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள், பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகள் மற்றும் வதியாதோர் விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்பு கணக்குகள் மற்றும் இலங்கையில் உள்ள கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் வதியாதோரால் பேணப்படும் கணக்குகள் என்பவற்றுக்கிடையிலான ஏதாயினும் நிதிய மாற்றல்கள் அனுமதியளிக்கப்படலாம்.

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 திசெம்பர் 30

## பணிப்புரைகள்

## 2009ஆம் ஆண்டு 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## கடன்களையும் முற்பணங்களையும் வகைப்படுத்தல், வருமானங்களை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்ளுதல் பற்றிய இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுக்கான பணிப்புரைகள் மீதான திருத்தங்கள்

நாணயச் சபையானது, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினுடைய 46(1) மற்றும் 46(அ) பிரிவுகளினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி, இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையால் 2008 மே 8ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பணிப்புரையில் பின்வரும் திருத்தங்கள் செய்து இத்தால் பின்வரும் திருத்தங்களை வெளியிடுகின்றது. இப் பணிப்புரையானது 2009ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 4(5)(1)ஆம் இலக்க பணிப்புரையை பிரதியீடு செய்கிறது.

   (i) கடன்படுநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒன்றோ அல்லது அதற்குமேற்பட்ட கொடுகடன் வசதிகள், பணிப்புரை 3(5)இன் பிரகாரம் செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டதுடன் அத்தகைய செயற்படாக் கடன்களின் வெளிநின்ற தொகையானது கடன்படுநருக்கு வழங்கப்பட்ட ஒட்டு மொத்த வசதிகளில் 30 சதவீதத்தினை விஞ்சியிருப்பின், வங்கிகள் அத்தகைய கடன்படுநர்களினது அனைத்து கொடுகடன் வசதிகளையும் செயற்படாக் கடனாக வகைப்படுத்துதல் வேண்டும். 2011 சனவரி 1 தொடக்கம் இப் பணிப்புரைக்கமைய செயற்படுமாறு வங்கிகள் வேண்டப்படுகின்றன.

2. பின்வரும் புதிய பணிப்புரையானது 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 4(7)(I)ஆம் இலக்க பணிப்புரையை பிரதியீடு செய்கிறது. இப் பணிப்புரையானது 31 திசெம்பர் 2010 வரை நடைமுறையிலுள்ளது.

   4(7)(I) செயற்படாக் கடன்களை செயற்படும் கடன்களாக மீளவகைப்படுத்தல்:

   வங்கிகள் பின்வரும் வகையில் ஓர் செயற்படாக் கடன்களை செயற்படும் கடனாக மீள வகைப்படுத்தலாம்.

| வசதியின் வகை | செயற்படாக் கொடுகடனை செயற்படு கொடுகடனாக மீள வகைப்படுத்தலுக்கான பிரமாணங்கள் |
|---|---|
| (i) மேலதிகப் பற்றில்: | |
| விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 60 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| குறைந்த தர வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 70 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| ஐயத்திற்குரிய வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 80 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| இழப்பு வகை | ஒப்புதலளிக்கப்பட்ட அளவில் 90 சதவீதத்திற்கும் கூடுதலான தொகை கடன்பாட்டாளரினால் செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| (ii) மேலதிகப் பற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறை காலாவதியாகியுள்ளவிடத்து அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது வரையறையெதுவும் இல்லாதவிடத்து | மீள வகைப்படுத்தல் எழாது. |
| (iii) கடன் வசதிகள் மாதாந்த தவணைகளில் மீளச் செலுத்தக் கூடிய கடன் வசதிகள் | தவணைக்கட்டணம், முதலும் அத்துடன் அல்லது வட்டியும் மூன்றுக்கு குறைவாக செலுத்தாது இருக்கும் போது |
| (iv) ஏனைய அனைத்துக் கொடுகடன் வசதிகள் | கடன்பெறுநரினால் நிலுவையிலுள்ள வட்டி மற்றும் முதல் செலுத்தப்படின் |

**திருத்தியமைக்கப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
நாணயச் சபையின் தலைவர் மற்றும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்

கொழும்பு
2009 திசெம்பர் 30

## பணிப்புரைகள்

## 2009ஆம் ஆண்டு 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை

## கடன்களையும் முற்பணங்களையும் வகைப்படுத்தல், வருமானங்களை அங்கீகரித்தல் மற்றும் ஒதுக்கங்களை மேற்கொள்ளுதல் பற்றிய இலங்கையிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பணிப்புரைகள் மீதான திருத்தங்கள்

நாணயச் சபையானது, 2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினுடைய 76ஜே(1) மற்றும் 46(அ) பிரிவுகளினால் அளிக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி, இலங்கை மத்திய வங்கி நாணயச் சபையால் 2008 மே 8ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரையில் பின்வரும் திருத்தங்கள் செய்து இத்தால் பின்வரும் திருத்தங்களை வெளியிடுகின்றது. இப் பணிப்புரையானது 2009ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரை எடுத்துக்காட்டப்படலாம்.

1. பின்வரும் புதிய பணிப்புரை 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 4(5)(1)ஆம் இலக்க பணிப்புரையை பிரதியீடு செய்கிறது.

   (i) கடன்படுநர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒன்றோ அல்லது அதற்குமேற்பட்ட கொடுகடன் வசதிகள், பணிப்புரை 3(5)இன் பிரகாரம் செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டதுடன் அத்தகைய செயற்படாக் கடன்களின் வெளிநின்ற தொகையானது கடன்படுநருக்கு வழங்கப்பட்ட ஒட்டு மொத்த வசதிகளில் 30 சதவீதத்தினை விஞ்சியிருப்பின், வங்கிகள் அத்தகைய கடன்படுநர்களினது அனைத்து கொடுகடன் வசதிகளையும் செயற்படாக் கடனாக வகைப்படுத்துதல் வேண்டும். 2011 சனவரி 1 தொடக்கம் இப் பணிப்புரைக்கமைய செயற்படுமாறு வங்கிகள் வேண்டப்படுகின்றன.

2. பின்வரும் புதிய பணிப்புரையானது 2008ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் 4(7)(I)ஆம் இலக்க பணிப்புரையை பிரதியீடு செய்கிறது. இப் பணிப்புரையானது 31 திசெம்பர் 2010 வரை நடைமுறையிலுள்ளது.

   4(7)(I) செயற்படாக் கடன்களை செயற்படும் கடன்களாக மீளவகைப்படுத்தல்:

   வங்கிகள் பின்வரும் வகையில் ஓர் செயற்படாக் கடன்களை செயற்படும் கடனாக மீள வகைப்படுத்தலாம்.

| வசதியின் வகை | செயற்படாக் கடனை செயற்படு கடனாக மீள வகைப்படுத்தலுக்கான பிரமாணங்கள் |
|---|---|
| (i) மாதாந்த தவணைகளில் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | முதற்தொகை அத்துடன் வட்டி என்பனவற்றைக் கொண்ட தவணைப் பணம் மூன்றிற்கும் குறைவாக செலுத்தப்பட்டிருக்கும் பொழுது |
| (ii) மற்றைய அனைத்து கடன் வசதிகளும் | வட்டியும் முதலும் கடன் பெற்றவரினால் செலுத்தப்பட்டிருக்குமிடத்து |

**தொடர்பு எண்: 12/02/004/0007/001**

நாணயத் திணைக்களம்
2009 பெப்புருவரி 26

*அனைத்து வர்த்தக வங்கிகளின் காசு முகாமையாளர்களுக்கும்*

## பாவிக்கத்தக்க நாணயத் தாள்களின் செய்முறைக்கான பணிக் கட்டணம்

நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, நாணயத் திணைக்களம், நாணயத் தாள் கட்டுக்களின் செய்முறைப்படுத்தலுக்காக வர்த்தக வங்கிகளிடமிருந்து பணிக் கட்டணமொன்று சேகரிக்கப்படும். இப் பணிக் கட்டணம் பாவிக்கத்தக்க தாள்கள் என வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்களுக்கு மட்டுமே ஏற்புடைத்தாக இருப்பதுடன் பாவிக்கத்தக்கதற்றது என வைப்புச் செய்யப்பட்ட தாள்களுக்கு எவ்வித கட்டணமும் விதிக்கப்படமாட்டாது. கட்டணங்கள் பின்வருமாறு:

1. ரூ.500/- இற்கும் அதற்குமேற்பட்டதுமான இன நாணயத் தாள் கட்டுக்கள் ஒவ்வொன்றிற்கும் - ரூ. 200/-
2. ரூ.500/- இற்கு குறைவான இன நாணயத் தாள் கட்டுக்கள் ஒவ்வொன்றிற்கும் - ரூ. 100/-

வர்ததக வங்கிகள் பாவிக்கத்தக்க தாள்கள், பாவிக்க முடியாத தாள்கள், உருச்சிதைக்கப்பட்டவை மற்றும் சேதமாக்கப்பட்டவை என்ற வகைகளின் கீழ் நாணயத் தாள்களைப் பிரிக்கும் பொழுது வர்தததக வங்கிகள் நாணயத் திணைக்களத்தின் தரம் பிரிக்கும் நியமங்களை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

பதில் நாணயக் கண்காணிப்பாளர்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/21**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 சனவரி 13

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

### நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இலங்கை மத்திய வங்கியுடனான ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீதான தண்ட வட்டி வீதம் 2009 சனவரி 13 நாள் தொடக்கம் **ஆண்டொன்றிற்கு பதினேழு (17) சதவீதமாக** விளங்கும் என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/22**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 பெப்புருவரி 11

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

### நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

இலங்கை மத்திய வங்கியுடனான ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீதான தண்ட வட்டி வீதம் 2009 பெப்புருவரி 11ஆம் நாளிலிருந்து **ஆண்டொன்றிற்கு பதினாறு புள்ளி ஐந்து (16.5) சதவீதமாக** விளங்கும் என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**தொழிற்பாட்டு அறிவித்தல்கள் எண்: 35/01/005/0007/04**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 பெப்புருவரி 26

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**ஒதுக்குத் தேவைப்பாடுகள்**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக, 2002 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நாணய விதி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 2009 பெப்புருவரி 26ஆம் நாளிடப்பட்ட இல. 1590/14 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கங்களின் 422ஆம் அத்தியாயம்) பிரிவுகள் 10(இ) 93, 94, 96 மற்றும் 97 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட அறிவித்தலின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

2. மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கமைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான அத்தகைய மொத்த வைப்புப் பொறுப்புக்களில் ஏழு சதவீதத்திற்குச் (7.00 சதவீதம்) சமமான தொகையினை ஒதுக்காக பேணவேண்டும் என அவை இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. மேற்குறிப்பிட்ட திருத்தம் 2009 பெப்புருவரி 27ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். 2003 மாச்சு 20ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல. 35/01/005/0007/01 இல் உள்ளக்கப்பட்டுள்ள மற்றைய அனைத்து அறிவுறுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடைத்தாகும்.

ஒப்பம்

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மாச்சு 4

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

**வங்கித்தொழில் முறையில் திரவத்தன்மை பற்றாக்குறையாக இருக்கும் பொழுது மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்துதல்**

இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை மத்திய வங்கி வழங்குகின்ற நாட்களில் பங்கேற்கும் நிறுவனமொன்றிற்கு நாளொன்றிற்கான **மீள்கொள்வனவு வசதியை** 2009 மாச்சு 6ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் ரூ.100.0 மில்லியனுக்கு மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளமை பற்றி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மாச்சு 4

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

**கால நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி**

துணைநில் வசதியின் கீழ், ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு தண்ட வீதத்தின் மீதான வட்டியின் வருடாந்த கூட்டு வீதத்தின் ஒப்பிடத்தக்க வீதத்தில், ஒரு மாதம் வரையிலான முதிர்ச்சியைக் கொண்ட கால நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் கிடைக்கும்.

மேலதிக தகவல்களுக்கு உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாடுகள் முன்னரங்க அலுவலகத்தின் முதன்மை விற்பனையாளர்/ விற்பனையாளர்களைத் தொடர்பு கொள்ளவும்.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/23**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மாச்சு 18

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

**நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி**

இலங்கை மத்திய வங்கியுடனான ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீதான தண்ட வட்டி வீதம் இன்று தொடக்கம் **ஆண்டிற்கு பதினான்கு புள்ளி ஏழு ஐந்து (14.75) சதவீதமாக** விளங்கும் என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/12**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மாச்சு 18

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்

இது, நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான எமது 31.10.2008 மற்றும் 05.12.2008 நாளிடப்பட்ட முறையே எண்கள் 35/01/005/0010/08 மற்றும் 35/01/005/0010/11 கொண்ட சுற்றறிக்கைகள் தொடர்பானது.

எமது 05.12.2008 நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 35/01/005/0010/11 இல் இணைக்கப்பட்ட அட்டவணை ஷஅ' இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களை திறக்கும் நேரத்தில் பொருட்பட்டியலின் பெறுமதியில் **100 சதவீதமாக** இருக்க வேண்டுமென்ற அளவு வைப்புத் தேவைப்பாடு இந்நாளி**லிருந்து** (18.03.2009) **புறக்கீடு செய்யப்படுகின்றது** என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/13**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மாச்சு 18

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்

இது, நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான எமது 22.10.2004இ 31.10.2008 மற்றும் 05.12.2008 நாளிடப்பட்ட முறையே எண்கள் 35/01/005/0010/01, 35/01/005/0010/07 மற்றும் 35/01/005/0010/11 கொண்ட சுற்றறிக்கைகள் தொடர்பானது.

எமது 05.12.2008 நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் 35/01/005/0010/11 இல் இணைக்கப்பட்ட அட்டவணை ஷஅ' இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவு வைப்புத் தேவைப்பாடுகள் இன்று தொடக்கம் (18.03.2009) 200 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு **குறைக்கப்படுகின்றது** என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/24**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மாச்சு 19

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

**ஏலமுறையின் கீழ் கால நேர்மாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தை தொழிற்பாடுகள் மீதானதும் குறிப்பாக அதிலுள்ள பந்தி ஷஆ(1)' பற்றியதுமான 2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட எண் 35/01/005/006/04 கொண்ட எமது சுற்றிக்கை பற்றி குறிப்பிடுகின்றோம். ஒரு நாள் (ஓரிரவு) மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்குப் புறம்பாக, ஏலங்களின் கீழ் மத்திய வங்கியானது பங்கேற்கும் நிறுவனங்களுடன் கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கும் தீர்மானித்திருக்கிறது.

இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்படும் அனைத்து நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களும், அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்குமிடையில் செய்யப்பட்ட முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாக இருக்கும். இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட நியதிகள் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் நியதிகளின் அதே கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்குமிடையில் ஏதாவது ஒவ்வாமை அல்லது முரண்பாடு காணப்படும் சந்தர்ப்பத்தில் தொழிற்பாட்டு அறிவுறுத்தலே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கு பிரயோகிக்கத்தக்க நியதிகளும் நிபந்தனைகளும் நடைமுறைகளும் கீழே தரப்படுகின்றன.

1. சந்தை தொழிற்பாடுகள் குழு கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏலம் எப்பொழுது அவசியமானது என்பது பற்றி அதேநேர இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அறிவிக்கும். இவ்வறிவித்தலானது வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகை, முதிர்ச்சித் திகதி (காலம்) ஏலமிடும் திகதி மற்றும் தீர்ப்பனவுத் திகதி என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

2. ஏலமிடும் நாளன்று அல்லது ஏலமிடும் நாளுக்கு முன்னுள்ள ஒரு வேலை நாளன்று ஏல அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் தொகை மற்றும் வட்டி வீதம் என்பனவற்றைக் கொண்ட விலைக்கோரலை ஏலமிடும் நாளன்று 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. தீர்ப்பனவு நாள் அதனை அடுத்து வரும் வேலை நாளாக இருக்கும்.

3. விலைக்கோரல்கள் இந்நோக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ள அதேநேர இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதேநேர விலைக்கோரல் முறைமை பழுதடைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே விலைக்கோரல்கள் தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளப்படும். தொலைபேசி மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கோரல்கள் 15 நிமிடங்களுக்கிடையில் இரண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் கையெழுத்துக்களுடன் கூடிய தொலைநகல் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொலைநகலின் மூலப்பிரதி, அதேநாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு விலைக்குறிப்பீட்டிற்கும் ஆகக் கூடியது ஆறு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கலாம். ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை ஒரு மில்லியனாகவும் விலைக்கோரல்கள் ரூபாய் ஒரு மில்லியனின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. ஏலங்களின் பெறுபேறுகள் அதேநேர இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அத்துடன்/ அல்லது வேறு ஏதேனும் தொடர்பூட்டல் வழிமுறைகளினூடாக ஏலமிடப்பட்ட நாளன்று 1430 மணியளவில் வெற்றி பெற்ற விலைக்கோரல்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் என்பனவற்றைத் தருகின்ற ஏலங்களின் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

6. வெற்றிபெற்ற ஒவ்வொரு விலைக்கோரலாளர்களுக்கும் அவர்களின் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் ஒதுக்கப்பட்ட தொகை பற்றியும் இலத்திரனியல் விலைக்கோரல் முறைமையினூடாக 1430 மணிக்கு அறிவிக்கப்படும். ஒதுக்கீடுகள் வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங்களில் மேற்கொள்ளப்படும்.

7. வெற்றி பெற்ற ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் கால நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் உறுதிப்பாடொன்று, பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்குள் இலத்திரனியல் விலைக்கோரல் முறைமையினூடாக இலத்திரனியல் ரீதியாக வழங்கப்படும். உறுதிப்படுத்தல் பெரும்பாலும் இணைப்பு 1இல் உள்ள படிவத்தினை பெருமளவிற்கு ஒத்ததாக இருக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தலைச் சரியான முறையில் அவதானித்துக் கொள்ளுமாறும் உறுதிப்படுத்தல் தொடர்பான பத்திரமொன்றினை தமது பதிவேட்டில் வைத்துக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றன. இலத்திரனியல் விலைக்கோரல் முறைமையில் ஏற்படும் தொலைநுட்ப தவறுகள் காரணமாக உறுதிப்படுத்தலை அவதானிக்க அல்லது அதன் அச்சிடப்பட்ட பத்திரமொன்றினை வைத்திருப்பதற்கு பங்கேற்கும் நிறுவனங்களுக்கு முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம், பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளுமிடத்தும் அத்தகைய உறுதிப்படுத்தலின் பிரதியொன்றினை தொலைநகலில் அனுப்பும்.

8. தீர்ப்பனவு நாளன்று கொடுக்கல் வாங்கல்கள் வழங்கல் எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியினூடாக தீர்ப்பனவ செய்யப்படும். பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை, தீர்ப்பனவு நாளன்று 11.45 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ லங்கா செட்டிலுக்கு சமர்ப்பிக்கப்படும். இதனடிப்படையில் முறைமையானது இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான நிதிப் பெறுகைகளுக்கு (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) எதிராக லங்கா செகுயரிலுள்ள வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்யப்படும். இது தொடர்பாக, முறைமைக்கு எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் தேவைப்படுத்தப்படவில்லை.

9. இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்/ முறிகளின் கொள்வனவு விலைகள், இலங்கை மத்திய வங்கியினால் அத்தகைய நோக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட அலுவல்சார் விலைகளின் அடிப்படையில் கணிக்கப்படும். திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் அலுவல்சார் விலைகள், சந்தை அபிவிருத்திகளை பரிசீலனையில் எடுத்துக் கொண்டு நடைமுறைச் சந்தை விலைகளினை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயரில் பதிவு செய்யப்படுகின்றன.

10. மீள்விற்பனை நாளன்று (மீள்கொள்வனவுத் திகதி) லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் வழங்கலுக்கெதிராக மேலேயுள்ள கிளை வாசகம் 8இல் காட்டப்பட்டுள்ள அதே முறையினைப் பின்பற்றி பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை, பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பிணையங்களின் மீள்கொள்வனவு பெறுமதியினை (மீள்கொள்வனவு விலை) கொடுப்பனவு செய்வதற்காக 11.00 மணிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

11. மீள் விற்பனைப் பெறுமதி (மீள்கொள்வனவு விலை) கொள்வனவு விலையினையும் பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் கணிக்கப்படும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருக்கும்.

12. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்கள் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை அந் நிறுவனங்கள் கௌரவிக்கத் தவறுமிடத்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையின் மீது பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் கணிக்கப்பட்ட ஒரு நாளுக்கான வட்டி வீதத்திற்குச் சமமானதொரு தொகையினை நட்ட ஈடாகச் செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும்.

13. மீள்கொள்வனவு நாளன்று மீள்கொள்வனவு விலை முழுவதையும் செலுத்துவதற்கு தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேணுவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் தவறும் சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கி கால நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை மத்திய வங்கியின் உடனடி கொள்வனவாகக் கருதப்படுவதற்கும் மேலே 12 ஆவது கிளை வாசகத்தில் தெரிவிக்கப்பட்டவாறு பங்கேற்கும் நிறுவனத்திடமிருந்து நட்ட ஈட்டினை அறவிடுவதற்கும் மத்திய வங்கி உரித்துடையதாகும்.

14. கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களை கௌரவிப்பதற்கு பங்கேற்கும் நிறுவனமொன்று தவறும் சந்தர்ப்பத்தில், மத்திய வங்கி அத்தகைய பங்கேற்கும் நிறுவனத்தினை கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்தும் இடைநிறுத்திக் கொள்ளமுடியும்.

15. விலைக்கோரல்கள் குறிப்பிட்டதொரு வீதத்தில் வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையினை விஞ்சும் சந்தர்ப்பத்தில், கிடைக்கத்தக்க தொகை அத்தகைய விலைக்கோரலாளர்களிடையே “விகிதசம” அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கமைய வெட்டிக் குறைக்கப்பட்ட வீதத்திலான விலைக்கோரல்கள் பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடும்.

16. எந்தவொரு கால நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுடனும் தொடர்பான மீள்கொள்வனவு நாள் வங்கி விடுமுறைகளாக இருக்குமிடத்து, அத்தகைய நாளன்று வரும் அத்தகைய நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களினது தரப்பினரின் கடப்பாடுகளை அந்நாளினை தொடர்ந்து வரும் வியாபார நாளன்று மேற்கொள்ள முடியும்.

17. இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிறுவனத்தின் விலைக்கோரலை ஏற்றுக் கொள்வதற்கான அல்லது நிராகரிப்பதற்கான உரிமைகளை தன் வசம் கொண்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன் அறிவித்தலுடன் இத்தொழிற்பாட்டு அறிவுத்தல்களினை திருத்தவோ மாற்றவோ அல்லது அதன் எந்தவொரு நியதியையும் அத்துடன் அல்லது நிபந்தனைகளையும் மாற்றுவதற்கோ உரிய உரிமைகளைத் தன் வசம் கொண்டுள்ளது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

இணைப்பு 1

**இலங்கை மத்திய வங்கி - திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்**

**திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கொடுக்கல்வாங்கல் நிலைமை**

**பங்கேற்கும் நிறுவனம்** :

**ஏலமிடும் நாள்** :

**ஏலத்தின் இலக்கம்** :

| ப.நி. | விலைக் கோரல் | ஏற்றுக் கொள்ளப் பட்ட வகை | சமர்ப்பிக்கப் பட்ட திகதி | ஐஎஸ்ஐஎன் | ஏற்றுக்கொள்ளப் பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி | விளைவு | பிணையங்களின் முகப்புப் பெறுமதி | மீள்கொள் வனவுப் பெறுமதி | முதிர்ச்சித் திகதி | நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0010/14**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 ஏப்பிறல் 8

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் மீதான 2004 ஒத்தோபர் 22ஆம் நாளிலும் மற்றும் 2008 திசெம்பர் 05ஆம் நாளிலும் 2009 மாச்சு 18ஆம் நாளிலும் வெளியிடப்பட்ட முறையே எமது சுற்றறிக்கை எண்கள் 35/01/005/0010/01, 35/01/005/0010/11 மற்றும் 35/01/005/0010/03 தொடர்பானது.

2009 மாச்சு 18ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0010/13 இல் குறிப்பிடப்பட்ட **அட்டவணை ஷஅ' இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்காக** நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வேளையில் பொருள் பட்டியலின் பெறுமதியில் 100 சதவீதமாக இருக்க வேண்டும் என்ற அளவு வைப்புத் தேவைப்பாடு **இன்றிலிருந்து (08.04.2009) உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில்** புறக்கீடு செய்யப்படுகின்றமை பற்றி அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/25**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 ஏப்பிறல் 22

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

### நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

மத்திய வங்கியுடனான ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீதான தண்ட வட்டி வீதம் இன்றிலிருந்து (2009 ஏப்பிறல் 22) **ஆண்டொன்றிற்கு பதின்மூன்று சதவீதமாக (13.00 சதவீதம்) இருக்கும்** என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

ஒப்பம்

பதில் பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/26**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 மே 21

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

### இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

தண்ட வீதத்திலான நேர்மாற்று மீள்கொடுப்பனவு வசதிகளும், துணைநில் வசதியின் கீழான ஓரிரவு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பன மீதான கட்டுப்பாடுகளும் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் அகற்றப்படுகின்றது என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

பத்திரங்களற்ற அரச பிணையங்கள் ஏல முறையின் கீழான கால மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலக்கள் மற்றும் ஏல முறையின் கீழான கால நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தொடர்பான சுற்றிக்கைகள் எண் 35/01/005/0006/04, 35/01/005/0006/18 மற்றும் 35/01/005/0006/24 என்பனவற்றிற்கிணங்க அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், வங்கி முறையே பின்வரும் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும்.

i) இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வீதங்களில் துணைநில் வசதி

ii) ஓரிரவு மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

iii) ஏல முறைகளின் கீழ் கால மீள்கொள்வனவு மற்றும் கால நேர்மாற்று மீள்கொள்வனவு

ஒப்பம்

பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/27**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 ஒத்தோபர் 30

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு*

## ஏலமுறையின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இலங்கை மத்திய வங்கி, நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளின் கருவியொன்றாக, ஆரம்பத் திகதியொன்றில் ஒரு நாணயத்தினை இன்னொரு நாணயத்திற்கெதிராக, கொள்வனவு செய்தல் மற்றும் அக் கொடுக்கல்வாங்கல்களை எதிர்காலத் திகதியொன்றில் சிறப்பு வீதத்திற்கு மாற்றிக் கொள்ளுதல் என்பனவற்றுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் (வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு தீர்மானித்திருக்கிறது. வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள் என்பது மீள்கொள்வனவுகளை ஒத்ததாக இருப்பினும் பிணையங்கள், அரச பிணையங்களுக்குப் பதிலாக வெளிநாட்டு நாணயங்களாக விளங்கும்.

அனைத்து வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களும் வர்த்தக வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இரு வகை வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்களில் ஈடுபடும்.

அ. மிகையான சந்தைத் திரவத்தன்மையினை ஈர்த்துக் கொள்வதற்காக; விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள்

ஆ. சந்தைக்கு திரவத்தன்மையினை விடுவிப்பதற்காக; வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள்

அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்குப் பொருந்தத்தக்க நியதிகள், நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் கீழே தரப்படுகின்றன.

1. விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள்/ வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்களின் காலம் ஆகக் கூடியது 365 நாட்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கும்.

2. சந்தைத் தொழிற்பாட்டுக் குழு நாணயச் சந்தையின் நாளாந்த திரவத்தன்மையினை மதிப்பீடு செய்த பின்னர், தேவையானவிடத்து உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்/ வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களுக்கான ஏலத்தினை அறிவிக்கும். அறிவித்தலானது வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகை, ஏலங்கள் மற்றும் முதலாவது மற்றும் இரண்டாவது பிரிவுகளின் தீர்ப்பனவு திகதிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

3. ஏலம் தொடர்பான அறிவித்தல் ஏல நாளுக்கு முதல் நாள் அறிவிக்கப்படுவதுடன் வர்த்தக வங்கிகள் அவர்களது விலைக்கோரல்களையும் தொகையினையும் பரிமாற்றல் புள்ளியினையும் (மாறி வீத விலைக்கோரல்) அதே நாளன்று 1300 மணிக்கும் 140 மணிக்குமிடையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

4. விலைக் கோரல்கள், இந் நோக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ள உடனடி இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். உடனடி இலத்திரனியல் முறை பழுதடைந்துள்ள நிலைமையில் மட்டுமே தொலைபேசி ஊடாக விலைக் கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தொகைபேசியூடாக சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கோரல்கள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் இருவரினால் கையொப்பமிடப்பட்ட தொலைநகல் மூலம் 15 நிமிடங்களுக்கிடையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொலைநகலின் மூலப்பிரதி அதே நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5. மறுஅறிவித்தல் வரை, விலைக்கோரல்கள் ஐ.அ.டொலர்களிலேயே ஏற்றுக் கொள்ளப்படும்.

6. வர்த்தக வங்கியொன்று ஒவ்வொரு விலைக் குறிப்பீட்டிற்கும் ஆகக் கூடியது ஆறு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கலாம். குறைந்தபட்ச விலைக்கோரல் தொகை ஐ.அ.டொலர் 1,000,000 ஆகும். குறைந்தபட்ச தொகையினை விஞ்சும் எந்தவொரு விலைக்கோரலும் ஐ.அ.டொலரின் 100,000 பெருக்கங்களாக இருத்தல் வேண்டும்.

7. பரிமாற்றல் புள்ளகளிலுள்ள விலைக்கோரல்கள் இரண்டு தசம புள்ளிகளில் ரூபா நியதிகளில் இலத்திரனியல் விலைக்கோரல் முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். உ-ம் 0.20 = இருபது சதம்.

8. விலைக்கோரல்கள் குறிப்பிட்ட ஒரு வீதத்தில் வழங்குவதற்கு முன் வைக்கப்பட்ட தொகையினை விஞ்சும் சந்தர்ப்பத்தில் விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்/ வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்களின்

கிடைக்கத்தக்கதாகவுள்ள அளவு அத்தகைய விலைக்கோரலாளர்களிடையே “விகிதசம” அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

9. ஏலங்களின் பெறுபேறுகள் உடனடி விலைக்கோரல் முறையினூடாக அத்துடன்/ அல்லது வேறு ஏதேனும் தொடர்பூட்டல் வழிமுறைகளினூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை மற்றும் பரிமாற்றல் புள்ளிகள் என்பனவற்றைக் கொண்ட விபரங்களுடன் ஏல நாளன்று 1430 மணிக்கு அறிவிக்கப்படும்.

10. வெற்றி பெற்ற ஒவ்வொரு விலைக்கோரலாளர்களுக்கும் அவர்களின் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் ஒதுக்கப்பட்ட தொகை பற்றியும் இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக 1430 மணிக்கு அறிவிக்கப்படும். ஒதுக்கீடுகள் வெற்றி பெற்ற விலைக்கோரலாளர்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட பரிமாற்றல் புள்ளிகளில் மேற்கொள்ளப்படும்.

11. வெற்றி பெற்ற ஒவ்வொரு விலைக்கோரலாளர் விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள்/ வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்கள் தொடர்பான உறுதிப்பாடொன்று பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்குள் இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக இலத்திரனியல் ரீதியாக வழங்கப்படும். உறுதிப்படுத்தல் பெரும்பாலும் **இணைப்பு 1இல்** உள்ள படிவத்தினை ஒத்திருக்கும். வங்கிகள் உறுதிப்படுத்தலைச் சரியான முறையில் அவதானித்துக் கொள்ளுமாறும் உறுதிப்படுத்தல் தொடர்பான பத்திரமொன்றினை தமது பதிவேட்டில் வைத்துக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றன. இலத்திரனியல் விலைக்கோரல் முறையினை அணுகுவதில் ஏற்படும் தொழில்நுட்ப தவறுகள் காரணமாக உறுதிப்படுத்தலை அவதானிக்க அல்லது அதன் அச்சிடப்பட்ட பத்திரத்தினை வங்கிகள் பெறமுடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், வங்கிகள் கேட்டுக் கொள்ளுமிடத்து அத்தகைய உறுதிப்படுத்தலின் பிரதியொன்றினை தொலைநகலில் அனுப்பும்.

12. உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்/ வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்களை ஆவண அடிப்படையில் மேற்கொள்வதற்காகவும் வெற்றி பெற்ற விலைக்கோருநர்கள் ஒவ்வொருவருக்கும் வர்த்தக உறுதிப்படுத்தல்கள் அனுப்பப்படுவதனை வசதிப்படுத்துவதற்காகவும் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு வெற்றி பெற்ற விலைக்கோரல்கள், ஒதுக்கீடுகள் மற்றும் பரிமாற்றல் புள்ளிகள் பற்றி அறிவிக்கும்.

13. விற்றல் - வாங்கல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்/ வாங்கல் - விற்றல் வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றல்களுக்கான தீர்ப்பனவு நடைமுறை, இதே போன்ற மற்றைய வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல் தீர்ப்பனவுகளை போன்றதாக இருக்கும்.

14. வங்கியொன்றின் விலைக்கோரலை ஏற்றுக்கொள்கின்ற அல்லது நிராகரிக்கின்ற உரிமையினை மத்திய வங்கி கொண்டிருக்கிறது.

15. வங்கிகளுக்கான முன் அறிவிப்புடன் இலங்கை மத்திய வங்கி இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை திருத்துவதற்கான, மாற்றுவதற்கான அல்லது எந்தவொரு நியதியையும் அத்துடன் அல்லது நிபந்தனைகளை அல்லது அதன் ஏதாவது பகுதியை மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கும்.

ஒப்பம்

டி. ஏ. ஜி. கே. விஜயதுங்க
மேலதிகப் பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**இணைப்பு 1**

**வங்கியின் பெயர் :** **திகதி :**

**நடவடிக்கை : பரிமாற்றல் விற்பனை ஐ.அ.டொலர் - வாங்குதல் இலங்கை ரூபா ஏலத்தின் இலக்கம் :**

| விலைக்குறிப்பீட்டு இல. | கோரப்பட்ட தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை | பரிமாற்றல் புள்ளிகள் |
|---|---|---|---|
| | | | |

**தொகுப்பு**

**ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக்குறிப்பீடுகளின் எண்ணிக்கை :**

**ஏற்றுக் கொள்ளப்படட விலைக்குறிப்பீடுகளிலன் மொத்தப் பெறுமதி :**

**சமர்ப்பிக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகளின் எண்ணிக்கை :**

**சமர்ப்பிக்கப்பட்ட விலைக்குறிப்பீடுகளின் மொத்தப் பெறுமதி :**

---

**சந்தைத் தகவல்**

**நிறையேற்றப்பட்ட சராசரி :**

**ஏற்றுக்கொள்ளப்பட்ட சராசரி :**

**ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் :**

**மொத்த உதவுதொகை :**

**சுற்றறிக்கை எண்: 35/01/005/0006/28**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 நவெம்பர் 06

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*
*முதனிலை வணிகர்களுக்கும்*

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் பத்திரங்களற்ற வடிவத்தில் மத்திய வங்கிப் பிணையங்களை வழங்குவதன் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இது, மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீதான 2008 மாச்சு 12ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை எண் 35/01/005/0006/17 தொடர்பானது.

பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றிற்கு திரவத்தன்மைத் தேர்வை ஏற்படுமிடத்து, அவர்கள் வசமுள்ள மத்திய வங்கிப் பிணையங்களை இலங்கை மத்திய வங்கிக்கு மீண்டும் விற்பனை செய்வதற்கான வசதிகளை வழங்குவதற்கு மத்திய வங்கி தீர்மானித்திருக்கிறது.

பங்கேற்கும் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை மீள விற்பனை செய்வதற்கு ஏற்புடைத்தான நியதிகள், நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் வசமுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களை அவற்றின் முதிர்ச்சி நாளுக்கு முன்னதாக, முதிர்ச்சியின் எஞ்சிய காலப்பகுதிக்காக இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்துடன் ஒப்பிடத்தக்க வட்டி வீதத்தில் அமைந்த கழிவு வீதத்தில் மீண்டும் விற்பனை செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன.

2. முதிர்ச்சி நாளுக்கு முன்னதாக அத்தகைய பிணையங்களை மத்திய வங்கி மீண்டும் வாங்கிக் கொள்வதற்கு பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படும்:

   2.1 மத்திய வங்கியின் பிணையங்களை மீண்டும் விற்க விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் மீண்டும் விற்பதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையினை குறிப்பிட்டு தொலைபேசி/ தொலைநகல் செய்தி மூலம் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தை தொழிற்பாடுகள் பிரிவிற்கு 1500 மணிக்குப் பிந்தாமல் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

   2.2 பங்கேற்கும் நிறுவனங்கள் விற்பதற்குத் தேவையான தொகையினை இலத்திரனியல் விலைக்கோரல் முறைக்கு அதே நாளன்று 1500 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ (துணைநில் வசதி உடனடி கொள்வனவுத் தேர்வின் கீழ்) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

   2.3 கொடுக்கல்வாங்கல்களுக்கான ஆகக் குறைந்த தொகை ஒரு மில்லியன் ரூபாவாகவும் வணிகம் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கமாகவும் இருத்தல் வேண்டும்.

3. தீர்ப்பனவு நாளும் வணிகம் செய்யும் நாளாகவே இருக்கும்.

4. மத்திய வங்கியின் பிணையங்களை மீள விற்பனை செய்யும் கொடுக்கல்வாங்கல்கள் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இலத்திரனியல் முறையில் இலத்திரனியல் விலைக்கோரல் முறையினூடாக அதே நாளன்று 1615 மணியளவில் உறுதிப்படுத்தப்படும். இவ்வுறுதிப்படுத்தல் இணைப்பு 1இல் உள்ள படிவத்தின்படி மேற்கொள்ளப்படும். அத்தகைய உறுதிப்படுத்தலை சரியான முறையில் பார்வையிடுமாறும் அவ்வுறுதிப்படுத்தலின் பிரதியொன்றினை பங்கேற்கும் நிறுவனங்கள் தமது பதிவேட்டில் வைத்திருக்குமாறும் அறிவுத்தப்படுகின்றன. விலைக்கோரல் முறையினை அணுகுவதில் ஏற்படக்கூடிய தொழில்நுட்ப தவறுகைகளின் காரணமாக பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தலை பார்வையிடுவதற்கு அல்லது அச்சிடுவதற்கு முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கையின் மீது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் உறுதிப்படுத்தலின் ஒரு பிரதியை தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கும்.

5. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, வழங்கல் எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் லங்கா கிளியரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியினூடாக மேற்கொள்ளப்படும். லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான கணக்கிற்கு பெறப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களுக்கெதிராக பிணையங்களின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிக்காக பங்கேற்கும் நிறுவனங்களின் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்கிற்கு வங்கி முறையானது வரவு வைப்பதன் அடிப்படையில், பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக, வழங்கல் கோவை லங்கா செகுயருக்கு தீர்ப்பனவு நாளன்று 1615 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக கணனி முறைக்கு பங்கேற்கும் நிறுவனங்கள் எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை.

6. கொள்வனவுப் பெறுமதியானது (விலை), பிணையத்தின் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்கான நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்துடன் ஒப்பிடத்தக்கதொரு பெறுமதியில் மத்திய வங்கிப் பிணையங்களின் முகப்புப் பெறுமதியினைக் கழிவு செய்வதன் மூலம் கணிக்கப்படும்.

7. நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்களை விற்பனை செய்வதற்கான பங்கேற்கும் நிறுவனமொன்றின் முடிவு மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அது பங்கேற்கும் நிறுவனங்களை கட்டுப்படுத்துகின்றதுடன், தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் கொடுக்கல்வாங்கல்களைக் கௌரவிக்கத் தவறுமிடத்து (பங்கேற்கும் நிறுவனங்களின் விற்பனை) பங்கேற்கும் நிறுவனங்கள் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் எஞ்சிய முதிர்ச்சிக் காலப்பகுதிக்கான விற்பனைப் பெறுமதியின் மீதான கூட்டு வட்டிக்குச் சமமான தொகையினை இலங்கை மத்திய வங்கிக்கு நட்ட ஈடாகச் செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும். அத்தகைய தொகையானது, தீர்ப்பனவு நாளைத் தொடர்ந்து வரும் அடுத்த வியாபார நாளன்று இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் பங்கேற்பு நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

ஒப்பம்

ஆர். ஏ. ஏ. ஜெயலத்
பணிப்பாளர்/ உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

**இணைப்பு 1**

## திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் நிலை

பங்கேற்கின்ற நிறுவனங்கள் :

ஏலமிடும் திகதி :

ஏல இலக்கம் :

| விலைக்கோரல் ஏல வகை | சமர்ப்பிக்கப்பட்ட திகதி தொடர்பு | ஐஎஸ்ஐஎன் | ஏற்றுக்கொள்ளப்பட்ட/ கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி | விளைவு | பிணையங்களின் முகப்புப் பெறுமதி | மீள்கொள்வனவுப் பெறுமதி | முதிர்ச்சித் திகதி | வரி | நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | உறுதிப்படுத்தப் பட்டது |

**தொடர்பு எண்: 06/04/01/2009**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2009 சனவரி 07

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களினதும் புலம்பெயர்ந்த தொழிற்படையினராலும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் செய்யப்பட்ட முதலீடுகள்**

புலம்பெயர்ந்த வேலையாட்கள்/ வர்த்தகம் செய்வோரை உள்ளடக்கிய வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள்; வெளிநாட்டுச் செலாவணியினை உழைக்கின்ற இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற இலங்கைத் தொழில்சார் நிபுணர்கள்; வதியும் நாட்டினை கருத்திற் கொள்ளாது இரட்டை பிரசா உரிமையினை வைத்திருக்கும் இலங்கையர்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட வகையினரின் சார்பில் நம்பகத் தகைமையின் பேரில் செயற்படுகின்ற வங்கிகள் என்பனவற்றிற்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் கொள்வனவு செய்யவும், உடமையில் வைத்திருக்கவும், விற்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் மொத்த முதலீடு எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் வெளிநிற்கின்ற திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாது. மேற்குறிப்பிட்ட வகைகளின் முதலீட்டாளர்களும் இத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் பிணையங்களாகப் பயன்படுத்தி மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். எனினும், இத்திட்டத்தின் கீழ் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ள அல்லது வேறு ஏதாவது வெளிநாட்டு கணக்குகளிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி திறைசேரி முறிகளை/ திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கக்கூடாது.

**1. கொடுப்பனவு முறை**

மேற்குறிப்பிட்ட முதலீட்டு வகையின் திறைசேரி முறிகள் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளை வங்கித்தொழில் முறையினூடான உள்வரும் பணவனுப்பல்கள் மூலமும் மற்றும் முதலீட்டாளரின் பெயரில் திறக்கப்பட்டுள்ள **"திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசமானி"** என்ற பெயரிலமைந்த சிறப்பு ரூபாக் கணக்கினூடாக வழிப்படுத்துவதன் மூலமும் கொள்வனவு செய்யலாம். இக்கணக்குகளை தகைமையுடைய முதலீட்டாளர்கள் தனிப்பட்ட கணக்காகவும் இரண்டு அல்லது மூன்று தகைமையுடைய முதலீட்டாளர்கள் சேர்ந்து கூட்டாகவும் வைத்திருக்கலாம்.

**2. திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசாபிமானி - இக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகள்**

அ) வங்கித்தொழில் முறையினூடாகப் பெறப்பட்ட உள்வரும் பணவனுப்பல்கள்;

ஆ) திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்களின் விற்பனை அல்லது முதிர்ச்சிப் பெறுகையிலிருந்து கிடைத்த விற்பனை பெறுகைகள் மற்றும் மூலதன இலாபம் வாயிலாக பெறப்படும் எந்தவொரு வருமானமும்;

இ) திறைசேரி முறிகளிலிருந்து பெறப்பட்ட வட்டி.

**3. திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசாபிமானி - இக் கணக்கிற்கு அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்**

அ) திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கான கொடுப்பனவுகள்;

ஆ) இந் நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட தலைமை முகாமையாளருக்கான கொடுப்பனவுகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள்;

இ) கணக்காளரினால் பேணப்படும் வெளிநாட்டு நாணயங்களிலான அல்லது இலங்கை ரூபாவிலமைந்த எந்தவொரு கணக்கிற்குமான மாற்றல்கள்;

ஈ) கணக்காளரின் உள்;ர்ச் செலவுகளுக்கான கொடுப்பனவுகள்;

உ) திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்களின் விற்பனைப் பெறுகைகள், முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் வட்டிகள் அல்லது அவற்றின் மூலதன இலாபங்கள் வாயிலாகப் பெறப்படும் எந்தவொரு வருமானத்தினதும் வெளிச்செல்லும் பணவனுப்பல்கள்.

**4. அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் "திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானி பற்றிய விபரங்களை, நாளாந்த அடிப்படையில் குறிப்பிட்டு, இல: 3இன் கீழ் கிடைக்கத்தக்கதாகவுள்ள கணனி முறையிலான அதேநேர அடிப்படையில் இத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**தொடர்பு எண்: 06/04/02/2009**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2009 சனவரி 27

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான வட்டியின் மீது ரூபாவில் மேலதிக வட்டிக் கொடுப்பனவு**

உள்முகப் பணவனுப்பல்களை ஊக்குவிக்கும் பொருட்டு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டுக் கணக்குகள் என்பனவற்றின் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் செலுத்தப்படும் வட்டியின் மீது இலங்கை ரூபாவில் மேலதிக வட்டிக் கொடுப்பனவொன்றினை, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு 2009 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து இலங்கை அரசாங்கம் கொடுப்பனவு செய்யும்.

1. மேலதிக வட்டிக் கணிப்பானது 01.02.2009இலிருந்து வைப்புக்களின் மீது ஒன்று சேருகின்ற வெளிநாட்டு நாணய வட்டியை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

2. மேலதிக வட்டியானது, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தங்களது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் மீது ஐ.அ.டொலர்கள் அல்லது மற்றைய குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் செலுத்தப்பட்டு 01.01.2009இன் பின்னர் ஒன்று சேரும் அவ் வெளிநாட்டு நாணய வட்டியில் 20 சதவீதத்திற்கு சமமானதாக இருத்தல் வேண்டும். அத்தகைய மேலதிக வட்டி இலங்கை ரூபாவில் செலுத்தப்படல் வேண்டும்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலதிக வட்டியைக் கணிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் (www. cbsl.gov.lk) கிடைக்கத்தக்கதாகவுள்ள முன்னைய மாதத்தின் மாதாந்த சராசரி செலாவணி வீதத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. மேலே குறிப்பிடப்பட்டவாறு கணிக்கப்பட்ட மேலதிக வட்டியினை வெளிநாட்டு நாணய வட்டி செலுத்தப்படுகின்ற அதே நாளன்று வாடிக்கையாளர்களுக்கு செலுத்துதல் வேண்டும்.

5. இலங்கை ரூபாவில் கணிக்கப்பட்ட மேலதிக வட்டியினை, கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் திறக்கப்பட்ட ரூபாக் கணக்கில் அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் நியமனம் செய்யப்பட்ட வேறு ஏதும் கணக்கில் வரவு வைக்கலாம்.

6. இலங்கை ரூபாவில் செலுத்தப்பட்ட மேலதிக வட்டிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

7. இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் விளைவாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு உடமையாளர்களுக்கு வழங்கிய தற்போதைய வட்டி வீதங்களைக் குறைக்கக்கூடாது.

8. ஒவ்வொரு மாதமும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பன மீது செலுத்தப்படும் மேலதிக வட்டியை, இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ளவாறு மேலதிக வட்டி விபரங்களை சமர்ப்பிப்பதன் மூலம் கோரலாம். அதிகாரம் அளிக்கப்பட்ட வணிகர்கள் அனைத்துக் கிளைகளினதும் ஒன்று திரட்டப்பட்ட கூற்றாக அத்தகைய விபரங்களை செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கான ஒரு பிரதியுடன் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்போ அனுப்பி வைத்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு கணக்கு இலக்கங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இக்கணக்கிற்கு இலங்கை மத்திய வங்கி இலங்கை ரூபாவில் பணத்தினை அனுப்பி வைக்கும்.

9. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அனைத்து வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் உடமையாளர்களுக்கு இத்திட்டத்தின் தொழிற்பாடுகள் பற்றி உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன் மேலதிக வட்டியை வரவு வைக்க வேண்டிய ரூபாக் கணக்கின் விபரங்களையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10. மேலதிக வட்டிக் கொடுப்பனவு தொடர்பான விபரங்களை எந்த நேரத்திலும், இலங்கை மத்திய வங்கியின் பரீட்சிப்புக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

முதன்மைக் கணக்காளர்
நிதித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1

**வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் செலுத்தப்பட்ட மேலதிக வட்டிக் கொடுப்பனவின் ஒன்று திரண்ட கூற்று**

**வங்கியின் பெயர்** : ..........................................................................................

**அறிக்கையிடும் மாதம்** : ..........................................................................................

| **வெளிநாட்டு நாணயத்தின் வகை** | வதியாதோர் வெ.நா. கணக்கின் மீது வெ. நாணயத்தில் செலுத்தப்பட்ட வட்டி (1) | வதிவோர் வெ.நா. கணக்கின் மீது வெ. நாணயத்தில் செலுத்தப்பட்ட வட்டி (2) | (1) மற்றும் (2) இன் மொத்தம் (3) | முன்னைய மாதத்தின் மாதாந்த சராசரி செலாவணி வீதம் (4) | வாடிக்கையாளர்களுக்கு ரூபாவில் செலுத்தப்பட்ட மேலதிக வட்டி (3) x (4) x 0.2 |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

நான் தொடர்பான ஆவணங்களை பரீட்சித்திருக்கின்றேன் என்பதனையும் மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையென்பதனையும் சரியானவை என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் மேற்குறிப்பிட்ட மேலதிக கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .........................................................
நாள்/ மாதம்/ ஆண்டு

............................................................
அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின்
கையொப்பமும் முத்திரையும்

படி: செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**மேலதிக வட்டியைக் கணிப்பது தொடர்பாக 27.01.2009 திகதியிடப்பட்ட எண் 06/04/02/2009 கொண்ட பணிப்புக்கள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான வழிகாட்டல்கள்**

**உதாரணம்** 1

| | | |
|---|---|---|
| 28.02.2009இல் உள்ளவாறு சேமிப்பு கணக்குகளிலுள்ள மீதி | - | ஐ.அ.டொலர் 1000 |
| வட்டி வீதம் | - | 5 சதவீதம் |
| கொடுப்பனவு திகதி | - | ஒவ்வொரு மாதத்தினதும் 15ஆம் திகதி |
| முன்னைய மாதத்தின் சராசரி மாதாந்த செலாவணி வீதம் | - | 112.50 |
| ரூபா மேலதிக வட்டியின் சதவீதம் | - | 20 சதவீதம் |

2009 பெப்புருவரிக்கான மேலதிக வட்டியின் கணிப்பு - $1000 \times 112.50 \times \frac{15}{365} \times \frac{5 \times 20}{100 \times 100}$

= **ரூ. 46.23**

**உதாரணம்** 2

| | | |
|---|---|---|
| 15.03.2009இல் முதிர்ச்சியடைகின்ற ஓராண்டு நிலையான வைப்புக் கணக்குகளிலுள்ள மீதி | - | ஐ.அ.டொலர் 5000 |
| வட்டி வீதம் | - | 6 சதவீதம் |
| கொடுப்பனவு திகதி | - | 15.03.2009 |
| முன்னைய மாதத்தின் சராசரி மாதாந்த செலாவணி வீதம் | - | 112.50 |
| ரூபா மேலதிக வட்டியின் சதவீதம் | - | 20 சதவீதம் |

மேலதிக வட்டியின் கணிப்பு - $1000 \times 112.50 \times \frac{43}{365} \times \frac{6 \times 20}{100 \times 100}$

= **ரூ. 795.20**

**தொடர்பு எண்: 06/04/03/2009**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2009 பெப்புருவரி 24

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

எனது 1998.11.12ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/03/98(டீ) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கு மேலதிகமாக, வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களின் பட்டியலில் நியூசிலாந்து டொலர் உள்ளடக்கப்பட்டுள்ளமை பற்றியும் டியூச் மார்க், பிரான்சிய பிராங் மற்றும் நெதர்லாந்து கில்டர் என்பன பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**தொடர்பு எண்: 06/04/04/2009**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2009 மே 04

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**இலங்கை இரட்டைப் பிரசா உரிமையைப் பெறுதல்**

இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பத்திற்காக வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள், வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகளைத் திறந்துள்ள அல்லது திறப்பதற்கு விரும்புகின்ற வெளிநாட்டு பிரசா உரிமையினை வைத்திருக்கும் இலங்கையர்களுக்கும் அரச திறைசேரி முறிகளில் முதலீடு செய்துள்ள அல்லது முதலீடு செய்ய விரும்புகின்ற வெளிநாட்டு பிரசா உரிமையை வைத்திருக்கும் முன்னாள் இலங்கையர்களுக்கும் இரட்டைப் பிரசா உரிமை அந்தஸ்தினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் மற்றும் இரட்டைப் பிரசா உரிமைக் கணக்குகளைக் கொண்ட அத்தகைய நிதியங்கள் இரட்டைப் பிரசா உரிமைக்கான தகைமைப் பிரமாணங்களை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, இத்தால் பொதுவான அனுமதி வழங்கப்படுகின்றது.

1. இவ் வசதியானது, இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பதாரிகளுக்கான வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் என்பனவற்றின் நிதிகளுக்கெதிராக

வழங்கப்படும் குறைந்தபட்ச வைப்புத் தேவைப்பாடுகள், வைப்புக்கள் வைத்திருக்கப்பட வேண்டிய காலம் இரட்டைப் பிரசா உரிமை வழங்கப்படுவதற்காக விதிக்கப்படும் கட்டணம் பின்வருமாறு:

| குறைந்தபட்ச வைப்புத் தேவைப்பாடு | வைத்திருக்க வேண்டிய காலம் | விதிக்கப்படவுள்ள கட்டணம் |
|---|---|---|
| ஐ.அ.டொலர் 25,000 அல்லது அதற்குச் சமனான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | 3 ஆண்டுகள் | இலங்கை ரூ. 200,000 |
| ஐ.அ.டொலர் 25,000 அல்லது அதற்குச் சமனான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | 5 ஆண்டுகள் | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| ஐ.அ.டொலர் 50,000 அல்லது அதற்குச் சமனான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | 3 ஆண்டுகள் | விலக்களிக்கப்பட்டுள்ளது |

2. பிரதான விண்ணப்பதாரி, விடயம் 1இல் உள்ளவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் முன் சொல்லப்பட்ட வைப்புக்களை மேற்கொண்டிருப்பாராயின் அவரது குடும்ப அலகும் இரட்டைப் பிரசா உரிமை வழங்குவதன் மீது விதிக்கப்படுகின்ற எந்தவொரு கட்டணக் கொடுப்பனவுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

3. வைப்புக்களின்/ முதலீடுகளின் மொத்த தொகையும் குறைந்தபட்சக் காலமும் குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட தகைமைப் பிரமாணத்தினை திருப்திப்படுத்துமிடத்து இரட்டைப் பிரசா உரிமைக்குரிய தகைமைப் பிரமாணத்தினை வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு இரட்டைப் பிரசா உரிமைக் கணக்கு மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு என்பனவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் பூர்த்தி செய்ய முடியும்.

4. கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், கூட்டுக் கணக்கு உடமையாளர்களில் ஒருவர் மாத்திரம் தகைமைப் பிரமாணத்தினைப் பூர்த்தி செய்வதற்காக கணக்கு மீதியைப் பயன்படுத்த உரித்துடையவராவர் மற்றைய கூட்டுக் கணக்கு உடமையாளர் இதே நன்மையினை அனுபவிக்க விரும்பின் ஒன்றில் முதலீட்டுக் காலப்பகுதியினை அல்லது முதலீட்டுத் தொகையினை விகிதாசார அடிப்படையில் அதிகரித்தல் வேண்டும். இந்நிபந்தனை, கூட்டாகக் கணக்கினைப் பேணும் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்புடைத்தாகாது.

5. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் இரட்டைப் பிரசா உரிமை வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படும் திகதியிலிருந்து, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இது தொடர்பான நிதிகளை தடுத்து வைத்தல் வேண்டும்.

6. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட நிதிகளின் மீது ஒன்று சேரும் வட்டியை எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளியில் அனுப்பலாம் அல்லது கணக்கு வைத்திருப்பவரின் உள்;ர் செலவுகளுக்காக இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்ளலாம்.

7. செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் ஒப்புதலைப் பெறாமல் வைப்புக்களின் முதிர்ச்சி காலத்திற்கு முன்னர் தடுத்து வைக்கப்பட்ட நிதியினையோ அல்லது அதன் ஒரு பகுதியினையோ மீளப் பெற்றுக்கொள்ளக் கூடியது.

8. நிதியம் தடுத்து வைக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், ஒவ்வொரு, வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பாகவும் இங்கே இணைக்கப்பட்டுள்ள படிவத்தில், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாணயத்திற்கான பிரதியொன்றுடன் இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கும் தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள

ஈ ஏ எட்டியாராச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

செலாவணிக் கட்டுப்பாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

**திரண்ட கூற்று - முன்னாள் இலங்கையர்களுக்கான இலங்கை இரட்டைப் பிரசா உரிமை**

வங்கியின் பெயர் : ..........................................................................................................................................................

வங்கிக் கிளை : ..........................................................................................................................................................

| தேவையான விபரங்கள் | அதிகாரமளிக்கப்பட்ட வணிகரால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது |
|---|---|
| 1. வெளிநாட்டு நாணயக் கணக்கின் வகை | |
| 2. கணக்கின் இலக்கம் | |
| 3. கணக்கிற்குரியவரின் பெயர் | |
| 4. கணக்கிற்குரியவரின் உள்நாட்டு முகவரி | |
| 5. கணக்கிற்குரியவரின் வெளிநாட்டு முகவரி | |
| 6. தடுத்து வைக்கப்பட்ட நிதியின் தொகை | |
| 7. வைத்திருக்கப்பட்ட காலம் | |

தொடர்பான ஆவணங்களை நான் பரீட்சித்துள்ளேன் எனவும் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி: .........................................................
நாள்/ மாதம்/ ஆண்டு

...........................................................
அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின்
கையொப்பமும் முத்திரையும்

படி: கட்டுப்பாட்டாளர் நாயகம்
குடிவரவு குடியகல்வு திணைக்களம்
41, ஆனந்த ராஜகருணா மாவத்தை
கொழும்பு 10

**தொடர்பு எண்: 06/04/05/2009**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2009 ஒத்தோபர் 01

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீதான வட்டியின் மீது ரூபாவில் மேலதிக வட்டியைக் கொடுப்பனவு செய்தல்**

மேலேயுள்ள விடயம் தொடர்பாக 2009.01.27ஆம் திகதியிடப்பட்ட எண் 06/04/02/2009 கொண்ட எமது பணிப்புரையின்பால் ஆட்களின் கவனம் ஈர்க்கப்படுவதுடன் மேற்குறிப்பிட்ட பணிப்புரைகள் இன்றிலிருந்து அதாவது 2009 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனையும் இத்தால் அறிவித்துக் கொள்கிறோம். மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், குறிப்பிட்ட பணிப்புரையில் எடுத்துரைக்கப்பட்ட நடைமுறை நியதிகளுக்கிணங்க 2009 செத்தெம்பர் 30ஆம் நாள் வரை மேலதிக வட்டிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டமைக்கான விண்ணப்பங்களை தொடர்ந்து அனுப்பி வைக்கலாம்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**தொடர்பு எண்: 06/04/07/2009**

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ. 590
கொழும்பு 01
2009 நவெம்பர் 12

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரை*

அன்புள்ள ஐயா

**வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு/ வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மீதான வட்டியின் மீது ரூபாவில் மேலதிக வட்டியைக் கொடுப்பனவு செய்தல்**

எனது 2009.10.01ஆம் திகதியிடப்பட்ட 06/04/05/2009 எண் கொண்ட பணிப்புரைகளுக்கு மேலதிகமாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கீழே குறித்துரைக்கப்பட்டவாறு வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வைப்புக்கள் மீதான மேலதிக வட்டி மீதான அவர்களின் கோரல்களை 2009 நவெம்பர் 30ஆம் நாளுக்கு முன்னதாக சமா்ப்பிக்கமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

i) மேலதிக வட்டிக் கொடுப்பனவுத் திட்டம் தொடங்கப்பட்ட 2009 பெப்புருவரி 1ஆம் நாளன்று பேணப்பட்டு 2009 செத்தெம்பர் 30ஆம் நாளுக்குப் பின்னர் முதிர்ச்சியடைந்த நிலையான வைப்புக் கணக்குகளுக்கு தகுதி பெற்ற மேலதிக வட்டிகள்.

ii) 2009 பெப்புருவரி 1ஆம் திகதிக்கும் 2009 செத்தெம்பர் 30ஆம் திகதிக்குமிடையில் திறக்கப்பட்டு 2009 செத்தெம்பர் 30ஆம் நாளுக்குப் பின்னர் முதிர்ச்சியடைந்த நிலையான வைப்புக்களுக்கு தகுதியுடைய மேலதிக வட்டிகள்.

iii) 2009 செத்தெம்பருக்குப் பின்னர் வட்டி செலுத்தப்பட்ட சேமிப்பு வைப்புக்களுக்கு தகுதியுடைய மேலதிக வட்டி.

வதியாதோர் வெளிநாட்டு நாணய வதிவோர் வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக்கள் முதிர்ச்சிக்கு முன்னரே மீளப் பெறப்பட்டமையின் காரணமாக மேலதிக வட்டிகள் தொடர்பாக ஏதும் கூடுதலான கொடுப்பனவுகள் இருப்பின் அவற்றை மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்புமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

பி எச் ஓ சந்திரவன்ச
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**தொடர்பு எண்: 037/01/023/0001/009**

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2009 சனவரி 12

*பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகளினதும்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுதல்**

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் உடனடிக் கவனம் நிறுவனங்களின் கடமைகள் மீதான சட்டத் தேவைப்பாடுகளின் மீது - நிறுவனங்களின் வியாபாரங்களைக் கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாத தன்மைகளை அடையாளம் காணுதல் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 2(1)ஆம் பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> "கணக்கு வைத்திருப்பவரை அடையாளம் காண முடியாதவிடத்து, ஏதேனும் அநாமதேயக் கணக்கு அல்லது இலக்கத்தினால் மாத்திரம் இனம் காணப்படும் கணக்கு அல்லது நிறுவனத்தின் அறிவுக்கு எட்டிய வரை புனைப் பெயரொன்றில் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் கணக்கு உள்ளடங்கலாக, நிறுவனம் எதுவும் கணக்கொன்றை ஆரம்பித்தலோ தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது."

மேற்குறிப்பிடப்பட்ட நியதி ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு நீங்கள் இத்தால் நினைவூட்டப்படுகின்றீர்கள்.

மேற்குறிப்பிட்ட தேவைப்பாட்டினை உறுதிப்படுத்தத் தவறுவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளில் விபரிக்கப்பட்டவாறு தண்டனைக்குரியதொரு குற்றமாகும்.

தயவு செய்து இது கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படிகள்: பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும்

**தொடர்பு எண்: 037/01/023/0001/009**

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2009 சனவரி 12

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுதல்**

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உடனடிக் கவனம் நிறுவனங்களின் கடமைகள் மீதான சட்டத் தேவைப்பாடுகளின் மீது - நிறுவனங்களின் வியாபாரங்களைக் கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாத தன்மைகளை அடையாளம் காணுதல் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 2(1)ஆம் பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> "கணக்கு வைத்திருப்பவரை அடையாளம் காண முடியாதவிடத்து, ஏதேனும் அநாமதேயக் கணக்கு அல்லது இலக்கத்தினால் மாத்திரம் இனம் காணப்படும் கணக்கு அல்லது நிறுவனத்தின் அறிவுக்கு எட்டிய வரை புனைப் பெயரொன்றில் தொழிற்படுத்தப்படும் ஏதேனும் கணக்கு உள்ளடங்கலாக, நிறுவனம் எதுவும் கணக்கொன்றை ஆரம்பித்தலோ தொழிற்படுத்துதலோ அல்லது பேணுதலோ ஆகாது."

மேற்குறிப்பிடப்பட்ட நியதி ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு நீங்கள் இத்தால் நினைவூட்டப்படுகின்றீர்கள்.

மேற்குறிப்பிட்ட தேவைப்பாட்டினை உறுதிப்படுத்தத் தவறுவது நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் தொடர்பான ஏற்பாடுகளில் விபரிக்கப்பட்டவாறு தண்டனைக்குரியதொரு குற்றமாகும்.

தயவு செய்து இது கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படிகள்: உரிமம் பெற்ற வங்கிகளின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும்
திரு. உபாலி த சில்வா, செயலாளர் நாயகம், இலங்கை வங்கியாளர் சங்கம்

**தொடர்பு எண்: 037/03/002/0018/009**

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2009 பெப்புருவரி 12

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**ஐக்கிய அமெரிக்காவில் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தமிழர் நிதியமும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது**

ஐ.அமெரிக்காவின் திறைசேரித் திணைக்களம் "தமிழர் நிதியம்" என்பதனை நிறைவேற்றுக் கட்டளை 13224இன் கீழ் தமிமீழ விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்பொன்றாக குறித்துரைத்திருக்கிறது. இதற்கமைய, தமிழர் நிதிய எந்தவொரு சொத்தும் ஐ. அமெரிக்காவின் நியாயாதிக்கத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளதுடன் ஐ.அமெரிக்காவின் ஆட்கள் தமிழர் நிதியத்துடன் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களிலும் ஈடுபடுவதிலிருந்தும் தடை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஐ.அமெரிக்காவின் திறைசேரித் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட பத்திரிகை வெளியீட்டின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழர் நிதியத்தினால் உங்களின் வங்கியூடாக அனுப்பப்பட்ட/ அனுப்பிடப்படவிருக்கும் பணவனுப்பல்களைக் கண்காணித்து அவை தொடர்பான திகதி, பணம் பெறுபவர், தொடர்புபட்ட தொகை போன்றன உள்ளிட்ட விபரங்களை எமக்கு உடனடியாக அறிவிக்கமாறு இத்தால் அறியத் தருகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படிகள்: உரிமம் பெற்ற வங்கிகளின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும்

**தொடர்பு எண்: 037/03/004/0004/008**

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2009 மார்சு 06

திருமதி. லசினி சேரசிங்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கை காப்புறுதிச் சபை
11ஆவது மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக நிலையம்
கொழும்பு 01

அன்புள்ள அம்மணி

**காப்புறுதி தொழில்துறையின் பணம் துாயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றிற்கு இணங்கியொழுகும் தொழிற்பாடுகள்**

பணம் துாயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பன தொடர்பாக காப்புறுதிக் கம்பனிகளினால் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதி கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதி ஏற்பாடுகளை போதுமான அளவிற்கு பூர்த்தி செய்யவில்லை என்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. பணம் துாயதாக்கலுக்கெதிரான இணங்குவிப்பு அலுவலர்களின் நியமனம், அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் சுதந்திரமான கணக்காய்வு நடவடிக்கைகள் என்பன குறைபாடுகளுள்ள துறைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும், நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் நியதிகளில், மேற்பார்வை அதிகாரசபை அதன் அதிகாரத்தின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களினதும் இணங்கியொழுகும் தன்மையினை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 23ஆம் பிரிவு "நிறுவனமொன்றின் தொடர்பான அதிகாரசபை -

(அ) கிரமமான பரிசோதனைகளின் ஊடாக நிறுவனமொன்று இச் சட்டத்துடன் இணங்கியொழுகுவதை சரிபார்த்தல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் இணங்கியொழுகாமை பற்றி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தலும் வேண்டும்;

(ஆ) சட்டவிரோத செயற்பாடொன்றாக அமையும் ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் புலனாய்வில், குற்ற வழக்குத்தொடுப்பில் அல்லது வழக்கு நடவடிக்கைகளில் சட்டத்தினை வலுவுக்கிடும் முகவராண்மைகளுடன் நிதிசார் உளவறிதற் பிரிவுடன் ஒத்துழைத்தல் வேண்டும்"

அவசர அடிப்படையில், பணம் துாயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றிற்கு காப்புறுதிக் கம்பனிகள் இணங்கி ஒழுகுவதனை நீங்கள் ஒழுங்குமுறைப்படுத்த முடியுமாயின் நான் மிகவும் நன்றியுடையனவாக இருப்பேன்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
எச் ஏ கருணரத்ன
பணிப்பாளர்

**தொடர்பு எண்: 037/04/002/0001/009**

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2009 யூன் 23

*அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கிரமமான அறிக்கைகளை சமர்ப்பிக்கும் பொழுது வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்டு தகவல்களை அறிக்கையிடுகின்ற முறைமை**

1. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளின் ஏற்பாட்டு நியதிகள், 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் 2008 யூன் 25ஆம் நாள் விடுக்கப்பட்ட கட்டளை என்பனவற்றின் நியதிகளின்படி, காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், இலத்திரனியல் நிதிய மாற்றல் அறிக்கைகள் மற்றும் ஐயத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் என்பனவற்றை அறிவிப்பது மீதான 2006ஆம் ஆண்டு செத்தெம்பர் 15ஆம் நாளிடப்பட்ட எண் 4 கொண்ட எமது சுற்றறிக்கை மற்றும் 2008 யூன் 30ஆம் நாளிடப்பட்ட பணிப்புரை என்பனவற்றின்பால் ஆட்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

2. இதற்கமைய, அனைத்து அறிக்கையிடுகின்ற நிறுவனங்களும் ரூ.1,000,000 அல்லது அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களை விஞ்சுகின்ற காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. மென்பொருள் பிரதிகளுடன் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற தற்போதைய செயல்முறைகளுக்குப் பதிலாக, வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட இடைமுகத்தினைப் பயன்படுத்தி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடல் நிறுவனங்களினால் இலத்திரனியல் ரீதியாக அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்தப்படுவதற்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு, தற்பொழுது புதிய தகவல் தொழில்நுட்ப கருவியான "லங்காவின்" இனை விருத்தி செய்திருக்கிறது. ஆகவே, பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகளும் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி **2009 யூலை 1ஆம் நாளிலிருந்து** இணையத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி, நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், இலத்திரனியல் நிதியமாற்றல் அறிக்கைகள், ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் என்பனவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

4. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் சட்ட ரீதியான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, அறிக்கையிடல் நிறுவனங்கள் ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. "லங்காவின்" முறைமையை பயன்படுத்துவதனை இயலச் செய்யும் விதத்தில் அனைத்துப் பங்கேற்கும் பயன்படுத்துநர்களும் தேவையான பயன்படுத்துநர் பெயர் மற்றும் கணனி இரகசியக் குறியீடு என்பனவற்றை நிதியியல் உளவறிதல் பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கணனி இரகசியக் குறியீட்டிற்கான கோரிக்கைப் படிவம் லங்காவின் வெப்தளத்தில் (httap:/lankafin.cbsl.lk) கிடைக்கும்.

6. இணையத்தளத்தினூடாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடும் தகவல் அறிக்கையிடல் முறைமை 2009 யூலை 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படி: இணங்குவிப்பு அலுவலர்

**தொடர்பு எண்: 037/04/002/0001/009**

நிதியியல் உளவறிதல் பிரிவு
தொலைபேசி எண். 2477125
தொலைநகல் எண். 2477692
மின்னஞ்சல் : hkaru@cbsl.lk
2009 திசெம்பர் 17

*பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகளினதும்*
*முதன்மை அலுவலர்களுக்கும்*

அன்புள்ள ஐயா/ அம்மணி

**நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கிரமமாக அறிக்கைகளை சமர்ப்பிக்கும்பொழுது வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை அறிக்கையிடுகின்ற முறைமை**

1. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளின் ஏற்பாட்டு நியதிகள், 2008ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் 2008 யூன் 25ஆம் நாள் விடுக்கப்பட்ட கட்டளை என்பனவற்றின் நியதிகளின்படி, காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், இலத்திரனியல் நிதிய மாற்றல் அறிக்கைகள் மற்றும் ஐயத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் என்பனவற்றை அறிவிப்பது மீதான 2006ஆம் ஆண்டு செத்தெம்பர் 15ஆம் நாளிடப்பட்ட எண் 4 கொண்ட எமது சுற்றறிக்கை மற்றும் 2008 யூன் 30ஆம் நாளிடப்பட்ட பணிப்புரையின்பால் ஆட்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

2. இதற்கமைய, அனைத்து அறிக்கையிடுகின்ற நிறுவனங்களும் ரூ.1,000,000 அல்லது அதற்குச் சமமான ஏதேனும் வெளிநாட்டு நாணயங்களை விஞ்சுகின்ற காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல் அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

3. மென்பொருள் பிரதிகளுடன் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற தற்போதைய செயல்முறைகளுக்குப் பதிலாக, வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட இடைமுகத்தினைப் பயன்படுத்தி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடல் நிறுவனங்களினால் இலத்திரனியல் ரீதியாக அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு பயன்படுத்தப்படுவதற்காக, நிதியியல் உளவறிதல் பிரிவு, தற்பொழுது புதிய தகவல் தொழில்நுட்ப கருவியான **"லங்காவின்"** இனை விருத்தி செய்திருக்கிறது. ஆகவே, பதிவு செய்யப்பட்ட அனைத்து நிதிக் கம்பனிகளும் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி **2009 திசெம்பர் 1ஆம் நாளிலிருந்து** இணையத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட நடைமுறைகளைப் பயன்படுத்தி, நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு காசுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், இலத்திரனியல் நிதியமாற்றல் அறிக்கைகள், ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள் என்பனவற்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

4. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் சட்ட ரீதியான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, அறிக்கையிடல் நிறுவனங்கள் ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

5. "லங்காவின்" முறைமையை பயன்படுத்துவதனை இயலச் செய்யும் விதத்தில் அனைத்தும் பங்கேற்கும் பயன்படுத்துநர்களும் தேவையான பயன்படுத்துநர் பெயர் மற்றும் கணனி இரகசியக் குறியீடு என்பனவற்றை நிதியியல் உளவறிதல் பிரிவிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கணனி இரகசியக் குறியீட்டிற்கான கோரிக்கைப் படிவம் "லங்காவின்" வெப்தளத்தில் (httap:/lankafin.cbsl.lk) கிடைக்கும்.

6. இணையத்தளத்தினூடாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிக்கையிடும் தகவல் அறிக்கையிடல் முறைமை 2009 திசெம்பர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப்பம்
பணிப்பாளர்/ நிதியியல் உளவறிதல் பிரிவு

படி: இணங்குவிப்பு அலுவலர்

இணங்குவிப்பு 1

## "லங்காவின்" இனைப் பயன்படுத்துபவர்களுக்கான நியதிகளும் நிபந்தனைகளும்

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவின் வெப்தளம் (இதனகத்துப் பின்னர் "லங்காவின்" என அழைக்கப்படும்) நிதியியல் உளவறிதல் பிரிவு பற்றிய தகவல்களையும் நிதியியல் உளவறிதல் பிரிவுடன் தொடர்பான செய்திகளையும் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகளையும் தரவினை அறிக்கையிடுகின்ற படிவங்களையும் வழங்குகின்றது. தரவு அறிக்கையிடுகின்ற படிவங்கள் ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், காசு கொடுக்கல்வாங்கல் அறிக்கையின் இலத்திரனியல் கோவைகள் மற்றும் இலத்திரனியல் நிதியமாற்றல்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

லங்காவின்னின் முன்பக்கத்தினை பின்வரும் வெப்தள முகவரியான https://lankafin.cbsl.lk என்பதன் மூலம் அடையலாம். அறிக்கையிடுகின்ற அலுவலர்கள் தொடர்பான இணைப்புக்களுக்கு புகுபதிகை செய்ய வேண்டியதுடன், வெப்தளத்தில் அதேநேரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பயன்படுத்துநர் கைநூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு அறிக்கைகளையும் அனுப்பி வைத்தல் வேண்டும். இக் குறித்துரைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கருவி பல்வேறு தரவு பாதுகாப்புப் பண்புகளையும் ஏனைய குறிமுறையாக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. பயன்படுத்துநர்கள் காலத்திற்குக் காலம் திருத்தப்படுகின்றவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் தொடர்பான சட்டவாக்கங்களின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு உட்பட்டவர்களாவர்.

### பயன்படுத்துபவர்களின் பொறுப்புக்கள்

1. பயன்படுத்துநர்கள், பயன்படுத்துநர் பெயரைப் பெற்றுக் கொள்வதற்கு "லங்காவின்" புகுபதிகைப் பக்கத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இத் தேவைப்பாட்டினை உரிய உறுதிப்படுத்தல்களுடன் நிதியியல் உளவறிதல் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. பயன்படுத்துநர்கள் குறைபாடுகளைக் கொண்ட அல்லது பாதுகாப்பற்ற மென்பொருட்களை/ கருவிகளைப் பயன்படுத்தி அல்லது "லங்காவின்" இனை மோசமாகப் பாதிக்கக்கூடிய ஏதேனும் முறையில் "லங்காவின்" இனை அணுகக்கூடாது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3. பயன்படுத்துநர்கள் முதன் முறையாக "லங்காவின்" இனை பயன்படுத்திய பின்னர் உடனடியாகவும் அதன் பின்னர் ஒழுங்கான கால இடைவெளிகளிலும் அவருக்கு/ அவளுக்கு ஒப்படைக்கப்பட்ட இரகசியக் கணனிக் குறியீட்டினை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

4. பயன்படுத்துநர்களுக்கு ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத அணுதல்கள் அல்லது "பயன்படுத்துநர்களின் பெயர்" மற்றும் "கணனி இரகசியக் குறியீடு" போன்றவற்றை அதிகாரமளிக்கப்படாத ஆள் பயன்படுத்துவது தெரியவரின் அவர்/ அவள் அது பற்றி "லங்காவின்" இற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். அவரின்/ அவளின் பயன்படுத்துநர் பெயரையும் கணனி இரகசிக் குறியீட்டினையும் அதிகாரமளிக்கப்படாத முறையில் பயன்படுத்துவதன் காரணமாக அவருக்கு/ அவளுக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு நிதியியல் உளவறிதல் பிரிவு பொறுப்பாகமாட்டாது என்பதனையும் அறிவித்துக் கொள்கிறோம்.

5. பயன்படுத்துநர் அவரின்/ அவளின் பயன்படுத்துநர் பெயரையும் கணனி இரகசியக் குறியீட்டினையும் மிகவும் இரகசியமான முறையில் வைத்திருக்க வேண்டியதுடன் அவற்றை எந்தவொரு ஆளுக்கும் எந்தவொரு நேரத்திலும் அல்லது எந்தவொரு சூழ்நிலையிலும் தெரியப்படுத்தவும் கூடாது.

6. நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 14ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட இணங்குவிப்பு அலுவலர் தற்காலிகமாக அவசரத்தில் பணியாற்ற முடியாமல் இருப்பின், அவருக்கு பதிலாகப் பணியாற்றும் இணங்குவிப்பு அலுவலர் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்து புதிய பயன்படுத்துநர் பெயரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

7. "லங்காவின்" உடன் தொடர்பான அனைத்துத் தகவல்கள், தொழில்நுட்பங்கள், தரவு மற்றும் வடிவமைப்புக்கள் பற்றிய அனைத்தையும் பயன்படுத்துநர் முழுமையாகவே இரகசியமானதாக வைத்திருத்தல் வேண்டும். பயன்படுத்துநர் அவற்றில் எதையேனும் எந்தவொரு தரப்பினருக்கும் தெரியப்படுத்தக்கூடாது.

8. இரகசியம் பற்றிய பயன்படுத்துநரின் கடப்பாடுகள், காலவரையறையின்றித் தொடரும் என்பதுடன் "லங்காவின்" பயன்படுத்துநர் வசதிகள் காலாவதியாவதுடன் அல்லது முடிவுறுத்தப்படுவதுடன் முடிவடைந்தும்விடாது.

### தரவுகளைச் சமர்ப்பித்தல்

நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு தரவுகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தகவல் தொழில்நுட்பக் கருவிகள் வடிவமைக்கப்பட்டு தேவையான பரீட்சிப்புக்களுக்காக இணைக்கப்பட வேண்டும். பரீட்சிப்புக்கள் இடம்பெறாத விடயங்களைப் பொறுத்தவரை அறிக்கைகள் நிதியியல் புலனாய்வுப் பிரிவினை போய்ச் சேராது. ஆகவே பயன்படுத்துநர்கள் படிவங்களை "லங்காவின்" கைநூலில் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்களை தயாரித்து அவற்றை அதன்படி சமர்ப்பிக்கும்படி ஆலோசனை வழங்கப்படுகின்றனர். தேவையான தரங்களுக்கு இசைய தரவுப் படிவங்கள் தயாரிக்கப்பட்டிருக்காது அல்லது ஏதாவது கட்டாயமான துறைகள் தவறவிடப்பட்டிருக்குமாயின் அறிக்கைகள்

மீண்டும் பயன்படுத்துநருக்கே திருப்பி அனுப்பப்படுவதுடன் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லையென்றும் கருதப்படும். அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பது நியதி ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகவில்லை என்று பொருள்படும்.

நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, எழுத்து மூலமான ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது சட்ட ரீதியான தேவைப்பாடு என்பதனால் அனைத்து அறிக்கையிடும் நிறுவனங்களும் "லங்காவின்" ஊடாக ஐயத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை சமர்ப்பித்த பின்னர் உடனடியாக, உறுதிப்படுத்தப்பட்ட காலத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

நிதியியல் உளவறிதல் பிரிவு, 2009 யூலை 15ஆம் நாள் வரை புதிய முறைக்குச் சமாந்தரமாக முன்னைய முறையின் கீழும் அறிக்கைகள் பெறப்படுவதனை சமர்ப்பிக்கப்படுவதனை விரும்புகின்றது. ஆகவே, அனைத்து அறிக்கையிடும் நிறுவனங்களும் தேவையான அனைத்து தொழில்நுட்பக் கருவிகளைப் பொருத்திக் கொள்ளுமாறும் தேவைப்பாடுகளை நிறைவு செய்யும் விதத்தில் மற்றைய நிருவாக ஒழுங்குகளைச் செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**தொடர்பு எண்: 33/03/001/0029/002**

பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 யூலை 31

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரைகள்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட "நிதியியல் பெறுதிச் சாதனங்கள்" மீதான இணைக்கப்பட்டுள்ள பணிப்புரைகள் 2009.08.01 இலிருந்து நடைமுறைக்கு வர வேண்டியதுடன் இது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகச் செயற்படுவதற்கு நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் பெறுதிகளினது கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நடைமுறையிலிருக்கும்.

"நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரை (திருத்தப்பட்டது)" மற்றும் "இலங்கை ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வங்கள் மீதான வர்த்தக வங்கிகளுக்கான பணிப்புரைகள்" என்பன தொடர்பாக முறையே 21.12.2005 மற்றும் 28.11.2006 ஆம் திகதிகளில் மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகளை புதிய பணிப்புரைகள் திருத்தியுள்ளதுடன் நீக்கியும் விடுகின்றன.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் பணிப்பாளர் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

**தொடர்பு எண்: 33/03/001/0029/002**

பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
2009 ஓகத்து 01

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட அனைத்து*
*உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரைகள்

1. **பொதுவானவை**

1.1 இப் பணிப்புரைகள் 2009 ஓகத்து 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வர இருப்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக செயற்படுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்ட வெளிநாட்டுச் செலாவணியினையும் உள்ளடக்கியிருக்கும். இப் பணிப்புரைகளின் நோக்கத்திற்காக "அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்" என்ற பதம் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட அதே கருத்தினையே கொண்டிருக்கும்.

1.2 இப் பணிப்புரைகள் 2005 திசம்பர் 21ஆம் நாளிடப்பட்ட நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான முன்னைய பணிப்புரைகளையும் 2006ஆம் ஆண்டு நவெம்பர் 28ஆம் நாளிடப்படட வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வத்தினை அடிப்படையாகக் கொண்ட இலங்கை ரூபா தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்த வங்கிகளுக்கான பணிப்புரைகளையும் நீக்கி விடுகின்றது.

1.3 பெறுதிகளின் வரைவிலக்கணம் இணைப்பு 1இல் குறிப்பிடப்படுகின்றது.

1.4 இப் பணிப்புரைகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள் ஆகிய இரண்டிற்கும் ஏற்புடைத்தனவாகும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெறுதி ஒப்பந்தங்களில் ஈடுபட அல்லது அவற்றை வழங்கத் தகுதியுடையனவாகும்.

1.5 அதிகாரம் பெற்ற வணிகர்கள், பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொழுது தொடர்பான நியதிச் சட்டங்கள், சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அதேபோன்று வெளிநாட்டு செலாவணி ஒழுங்குவிதிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் விடுக்கப்பட்டு வரும் ஏனைய ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அனுமதிக்கப்பட்ட சாதனங்களை நடைமுறைக்கணக்குக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மட்டுமே பயன்படுத்த முடியும். எனினும், மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட தற்போதைய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் நியதிகளின் கீழே அனுமதிக்கப்பட்டவற்றினை மேற்கொள்ள முடியும். பெறுதிச் சாதனங்களில் ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான சாதனங்களை இணைத்த சாதனங்களை வழங்குதல் அல்லது ஏனைய கிரமமான செலாவணி நாணய வங்கித்தொழில் சாதனங்களுடன் கூடிய இணைத்த சாதனங்களை ஏனைய வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் சாதனங்கள் போன்றவற்றிற்கு ஏற்புடைத்தான நிபந்தனைகள் மற்றும் பணிப்புரைகளுக்குட்பட்டு மேற்கொள்ள முடியும்.

1.6 இப் பணிப்புரைகளின் 4.1இன் கீழ் தகைமை பெற்ற பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடையவர்களும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு தமக்குள்ள ஈடுபாடுகளை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் தாம் கவனத்தில் கொண்டுள்ள துறைகளுடன் தொடர்புபட்ட தமது கருத்துக்கள் பற்றி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் சேர்த்து 2009 ஓகத்து 31ஆம் நாளுக்கு முன்னதாக வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கான ஒரு பிரதியுடன் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். இக் கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைக்கும் ஆழ்ந்த கவனிப்பிற்கும் உட்பட்டதாகும்.

1.7 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் திறந்த வெளிப்படுத்துகைகளைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் அத்தகைய வெளிப்படுத்துகைகள் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகை வரையறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். அத்தகைய திறந்த வெளிப்படுத்துகைகளினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் நாளாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற தேறிய திறந்த நிலமையானது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.8 அனுமதிக்கப்பட்ட பெறுதிச் சாதனங்களை பின்வருவனவற்றிற்கு மட்டும் பயன்படுத்த முடியும்.

அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் சொந்தச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாக்கின்ற நோக்கம்; அல்லது

ஆ) இதன் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை மாற்றியமைத்தல்; அல்லது

(இ) அத்தகைய சாதனங்களுக்கான சந்தைகளை ஏற்படுத்துதல்.

எனினும், அத்தகை சாதனங்கள் பின்வருவனவற்றின் காரணமாக பயன்படுத்தப்படமாட்டா:

(அ) இப் பணிப்புரைகளில் பெறுதிச் சந்தை உருவாக்க வணிகத்திற்காக அனுமதிக்கப்பட்ட காரணங்கள் தவிர்ந்த ஊக நோக்கங்களுக்காக; அல்லது

(ஆ) அதிகாரமளிக்கப்படட வணிகர்களின் சொந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலிருந்து அவற்றின் செலுத்தப்பட்ட மூலதனம்/ ஒப்படைக்கப்பட்ட மூலதனம் மற்றும் வைத்திருக்கப்பட்ட இலாபம் என்பன வரையிலானவற்றிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளுக்கான பாதுகாப்பு.

1.9 அதிகாரமளிக்கப்பட்ட வாடிக்கையாளர் விடயத்தினைப் பொறுத்தமட்டில், அத்தகைய வாடிக்கையாளர்களின் சொந்த சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகளின் பாதுகாப்பின் பொருட்டு அல்லது இடர்நேர்வு தோற்றப்பாட்டினை மாற்றியமைப்பதற்கான நோக்கத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட பெறுதிச் சாதனங்கள் பயன்படுத்தப்படுவதனையும் ஊக நோக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்பதனையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**2. அனுமதிக்கப்பட்ட சாதனங்கள்**

2.1 இப் பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பெறுதிச் சாதனங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: சாதனங்கள் பற்றிய வரைவிலக்கணத்திற்கு இணைப்பு II இனைப் பார்க்கவும்.

(அ) வட்டிவீத பரிமாற்றல்கள்

(ஆ) வட்டிவீத விருப்பார்வங்கள்

(இ) முன்னோக்கிய வட்டி வீத உடன்படிக்கைகள்

(ஈ) குறுக்கு நாணய பரிமாற்றல்கள்

(உ) பண்ட பரிமாற்றல்கள்

(ஊ) நாணய விருப்பார்வங்கிகள்

(எ) பண்ட விருப்பார்வங்கள் (தங்கம், செம்பு, எண்ணெய் என்பன பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பொருத்தமான பண்டங்களாக இனம் காணப்பட்டுள்ளன); அல்லது

(ஏ) இப் பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்குட்பட்ட ஏதேனும் சேர்ந்த பொருட்கள் அல்லது மேற்குறிப்பிட்ட சாதனங்களின் பெறுமதிகள்

**3. அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் வகைகள்**

3.1 மேலே குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்டுள்ள சாதனங்களின் வகைகள் பின்வரும் மூன்று முக்கிய வடிவங்களுக்குள் வரும்.

(அ) முடிவுப் பயன்படுத்துநர் வணிகம்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் சொந்த சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் (செலுத்தப்பட்ட மூலதனம்/ ஒப்படைக்கப்பட்ட மூலதனம் மற்றும் வைத்திருக்கப்படும் இலாபங்கள் தவிர) பாதுகாப்பிற்காக அவற்றின் இடர்நேர்வு தோற்றப்பாடுகளை மாற்றியமைக்கின்ற நோக்கங்களுக்காகவன்றி, ஊக நோக்கங்களுக்கல்லாத கொடுக்கல்வாங்கல்கள்

(ஆ) சந்தை உருவாக்க வணிகம் அல்லாதவை கொடுக்கல்வாங்கல்களை பரவச் செய்யும் நோக்குடன் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களின் வாடிக்கையாளர்களுடன் நிறைவேற்றிய கொடுக்கல்வாங்கல்கள். இக் கொடுக்கல்வாங்கல்களில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது கணக்கேடுகளில் எந்தவித சந்தை இடர்நேர்வுகளையும் பதியாததுடன் கொடுக்கல்வாங்கல்களை அதே நாளன்று ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில் உள்ளடக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) பெறுதிச் சந்தை உருவாக்க வணிகம்

வாடிக்கையாளர்களுடனும் தேவைப்பட்ட மற்றைய நிதியியல் நிறுவனங்களுடனும் பெறுதிகளின் வர்த்தகப்படுத்தல் பணிகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் ஏனைய வாடிக்கையாளர்/ நிறுவனங்களுக்கு விலைகளைக் குறிப்பீடு செய்கின்ற வேளையில் சந்தை இடர்நேர்வுகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் சொந்தக் கணக்குகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

**4. தகைமையும் அனுமதிக்கத்தக்க நடவடிக்கையும்**

4.1 பெறுதிகள் சந்தை உருவாக்க வணிகம் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு உரித்துப் பெறுவதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் 11 சதவீதத்திற்கும் கூடுதலான மூலதனப் போதுமை விகிதத்தினை கொண்டிருத்தல் வேண்டும். மூலதனப் போதுமை விகிதத்தினை தீர்மானிக்கையில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனம் தொடர்பாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

4.2 அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிர்களும் இறுதிப் பயன்படுத்துநர் வணிகம் மற்றும் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களின் சந்தையை உருவாக்காத வகை வணிகங்களில் ஈடுபட உரித்துடையனவராவர்.

4.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர், வெளிநாட்டு பங்காளர் ஒருவரின் சார்பில் உள்நாட்டு வாடிக்கையாளரொருவருக்கு பெறுதிகள் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் பொழுது, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் சொந்தக் கொடுக்கல்வாங்கல்களாக அவர்களின் கணக்கேடுகளில் சரியான முறையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தால் ஒழிய, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடக்கூடாது.

4.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலே 2ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பெறுதிகளை (அ) ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் (ஆ) இலங்கை முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் அல்லது (இ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதாவது தரப்பினர்களுக்கு வழங்குவதற்கான, கொடுக்கல்வாங்கல்கள் அல்லது பெறுகைகளின் ஒப்பந்தங்களை வசதிப்படுத்துவதில் ஈடுபடத் தகுதியுடையவராவர்.

4.5 கோட்பாட்டு ரீதியான முதல் தொகையும் பாதுகாப்பின் முதிர்ச்சித் தொகையும் வெளிநின்ற தொகையினை அத்துடன்/ அல்லது முக்கிய கொடுக்கல்வாங்கல்கள் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் அல்லது வெளிப்படுத்துகைகளின் காலாவதியாகாத முதிர்ச்சித் தொகைகளை விஞ்சக்கூடாது.

4.6 வாடிக்கையாளரொருவர், பெறுதிகளின் சந்தை உருவாக்கக் கணக்கில் வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா என்பதனை கருத்திற் கொள்ளாது எந்தவொரு பெறுதிகளின் சந்தை உருவாக்கத்துடனான பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடமுடியும்.

4.7 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டுச் செலாவணி விலைக்கோரலை சமர்ப்பிப்பதன் காரணமாக ஏற்படக்கூடிய பாதிக்கப்படக் கூடிய தன்மை அல்லது உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்துகை காரணமாக ஏற்படக்கூடிய அத்தகை

இடர்நேர்வுகளின் அளவுகளுக்கு மாத்திரமே எதிர்பாராத அல்லது பெறுதிகளின் வெளிப்படுத்துகைப் பாதுகாப்புகளுக்கு தகுதியடையவராவர்.

4.8 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் ஒவ்வொரு பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களும் அனுமதிக்கப்பட்ட முக்கியமான கொடுக்கல்வாங்கல்களுக்கான இடர்நேர்வுகள் அல்லது வெளிப்படுத்துகைகள் அல்லது (அ) வர்த்தகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியிலான கொடுப்பனவு அல்லது பெறுகை (ஆ) வெளிநாட்டு நாணயம் மற்றும் இலங்கை ரூபாக் கடன்பாடுகளில் செய்யப்பட்ட முதலீடு போன்ற அனுமதிக்கப்பட்ட மூலதன கொடுக்கல்வாங்கல்கள் (இ) அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய மற்றும் இலங்கை ரூபா வைப்புக்கள் மற்றும் (ஈ) உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்துகைகளுக்கு எதிரான பாதுகாப்பு என்பனவற்றின் பொருட்டு செய்யப்பட்டன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

4.9 எந்தவொரு சூழ்நிலையின் கீழும் எந்தவொரு வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைகள் அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் அல்லது இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்படும் வருவாய்கள் தொடர்பாக பிரிவு 2இல் குறிப்பிடப்பட்ட சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் அனுமதிக்கப்படக்கூடாது.

4.10 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தம் மற்றும் இப் பணிப்புரைகளின் ஏனைய ஏற்பாடுகளின்படி அனுமதிக்கப்பட்டவாறு உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்துகை மற்றும் எதிர்பாரா வெளிப்படுத்துகைகளிலிருந்து தோன்றுகின்ற அத்தகைய இடர்நேர்வுகளுக்கான பாதுகாப்பு என்பனவற்றிற்கு வழமையாக தகுதி பெறுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மட்டுமே பெறுதிகளின் ஒப்பந்தங்களை வழங்குதல் வேண்டும்.

4.11 பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் தனிப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தமாக இருக்கக்கூடாது.

4.12 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் தமது வெளிநாட்டு வெளிப்படுத்துகைப் பாதிப்புக்களை, வெளிநாட்டிலுள்ள அவர்களின் தொடர்பான வங்கிகளுடன் அல்லது வேறு ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுடன் எவர் பொருத்தமானவரோ அவருடன் சேர்ந்து பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.13 முன்னோக்கிய ஒப்பந்தங்களின் மாறிச் செல்லுதல் இரத்துச் செய்தல் மற்றும் மீள பதிவு செய்தல் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தான அனைத்து நிபந்தனைகளும் பெறுதிகளின் ஒப்பந்தங்களுக்கும் ஏற்புடைத்தனவாக இருத்தல் வேண்டும்.

4.14 இலங்கை ரூபாவின் முகப்புக் கொடுப்பனவு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதாவது வடிவத்திலமைந்தமை மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கான முடுக்கி பரிமாற்றல்கள் என்பனவற்றுடன் தொடர்பான பரிமாற்றல் கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படமாட்டாது.

4.15 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் அவர்களது செலவினங்களை (தற்போதுள்ள பாதுகாப்புக்கள் உட்பட) காப்பிடுவதற்கு இறக்குமதிகள்/ ஏற்றுமதிகளின் மொத்தப் புரள்வுகளை அடிப்படையாகக் கொண்டு முன்னைய மூன்றாண்டுகளின் அல்லது முன்னைய ஆண்டின் சராசரியினை (எது கூடுதலானதோ) அடிப்படையாகக் கொண்ட செலவுகளின் தொடர்பான பிரகடனங்களின் அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க புகழ்பெற்ற கணக்காய்வாளர் நிறுவனத்தினால் சான்றுபடுத்தப்பட்ட மேற்சொன்ன விடயங்களுக்குட்பட்டு அனுமதிக்கப்படும்.

4.16 வதிவற்றோர் தொடர்பான பாதுகாப்பிடல் செலவுகள் மீளவனுப்பத்தக்க நிதியங்கள் அத்துடன் அல்லது வழமையான வங்கித்தொழில் வழிப்படுத்தல்க;டாகப் பெறப்படும் உள்வரும் பணவனுப்பல்களிலிருந்து பெறப்படும்.

4.17 வதிவற்றோர் அனைத்து வெளிநாட்டுச் செலாவணி பெறுதிகளைக் கொண்ட ஒப்பந்தங்கள் ஒரு முறை இரத்துச் செய்யப்பட்டால் அவற்றை மீள நடைமுறைப்படுத்த தகுதியுடையனவாகா.

4.18 வதிவற்றோரினால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பிற்கான வெளிச்செல்லும் பணவனுப்பலானது ஏற்புடைத்தான வரிகளைக் கழித்ததாக இருத்தல் வேண்டும்.

**5. தகைமையுடைய வெளிநாட்டு நாணயங்கள்**

வாடிக்கையாளரின் கோரிக்கை மற்றும் வங்கியின் முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகள் என்பனவற்றிற்கிணங்க, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களுக்கு தமது விருப்பத்திற்கேற்ப எந்தவொரு நாணயத்தினையும் தெரிவு செய்வதற்கு சுதந்திரமுடையவர்களாவர்.

**6. காலம்**

பெறுதிச் சாதனங்களின் முதிர்ச்சிக் காலம் பத்து (10) ஆண்டுகளை அல்லது அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் எஞ்சியுள்ள காலம் இதில் எது குறைவானதோ அதனை விஞ்சக்கூடாது.

7. தொடர்பு/ மதிப்பீட்டு அடித்தள அளவுக் குறியீடு

தொடர்பான தரப்பினர்கள் பரஸ்பர உடன்படிக்கைகள் தொடர்பாக எந்தவொரு அடித்தள அளவுக்குறியீட்டினையும் பயன்படுத்த சுதந்திரமுடையராவர். எனினும், உரிய தரப்பினர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அடித்தள அளவுக்குறியீட்டினை தெரிவு செய்வதில் போதுமான வெளிப்படைத் தன்மையினைப் பேண முயற்சித்தல் வேண்டும்.

8. இடர்நேர்வு முகாமைத்துவம்

8.1 கம்பனி ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட எண் 112007 இனால் தேவைப்படுத்தப்பட்டவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் பணிப்பாளர் சபையானது பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக ஆற்றல் வாய்ந்த கொள்கைகளை உருவாக்கி, முன்மதியுடைய இடர்நேர்வு முகாமைத்துவ முறைமையினை பேணி வருதல் வேண்டும். அதிகாரம் அளிக்கப்பட்ட வணிகர்கள் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புபட்டதான ஆகக் குறைந்த மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தேவையான வழிமுறைகள் போதுமானளவில் மேற்கொள்ளப்பட்டிருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொருத்தமான கொள்கை வரையறைகளும் நடைமுறைக்கிடப்படல் வேண்டும்.

8.2 பரிவர்த்தன செய்யப்பட வேண்டிய அனைத்துக் கொடுப்பனவுகளும் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும் அதாவது இரு தரப்பினருக்குமிடையிலான மூல ஒப்பந்தத்தினை நியதிகளைப் பொறுத்து, செலுத்தப்படுவதற்கும் பெறப்படுவதற்குமிடையிலான வேறுபாட்டுத் தொகை மட்டும் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும் அல்லது பணமாக தீர்ப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

8.3 கடன் தீராற்றலற்ற விடயத்தினைப் பொறுத்தவரை, இணைத் தரப்பினரின் கோரலானது கடன் தீராற்றலற்ற தரப்பினர் மற்றும் கடன் வழங்குநர்களுக்குகிடையிலான பரஸ்பர கொடுக்கல்வாங்கல்களுக்கான வேறுபாட்டைத் தருமாயின், ஒரு தரப்பினரால் செலுத்தத்தக்க தொகையினை மற்றைய தரப்பினரால் செலுத்தப்பட வேண்டிய தொகைக்கெதிராக எதிரீடு செய்யப்பட முடிவதுடன் தேறிய மீதியை மட்டும் செலுத்தப்பட வேண்டும், அல்லது, பெறப்பட வேண்டும்.

8.4 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வாடிக்கையாளர்களிடமிருந்து அவர்களது காப்பிடல்களின் மொத்தப் பெறுமதியானது வெளிப்படுத்தல்களை அல்லது அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களை விஞ்சவில்லை என்பதற்கு உறுதிமொழியொன்றினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

8.5 சந்தை உருவாக்கமில்லாத வணிகம் மற்றும் பெறுதிச் சந்தையினை உருவாக்கும் வணிகம் ஆகியனவற்றின் கொடுக்கல்வாங்கல்கள், அவற்றின் அனுமதிக்கப்பட்ட வெளிப்படுத்துகை வரையறைக்கு அப்பால் திறந்த வெளிப்படுத்துகையினை கொண்டு செல்வதற்கு அவற்றை அனுமதிக்காமல், ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில், அதே நாளன்று உள்ளடக்கப்படுதல் வேண்டும். பெறுதிகள் சந்தை உருவாக்க வணிகம் பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றும் இதன் வெளிநாட்டுச் செலாவணி வெளிப்படுத்துகையினை உள்ளடக்கும் விதத்தில், பொதுவாக, வெளிநாட்டுச் செலாவணி விருப்பார்வங்களை பயன்படுத்த முடியும். ஒன்றுக்கொன்று துணையான கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய நிலைகளை (அ) இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கியொன்று அல்லது (ஆ) பன்னாட்டு ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விருப்பார்வ பரிவர்த்தனையொன்று அல்லது (இ) இலங்கையிலுள்ள மற்றுமொரு பெறுதிகள் சந்தை உருவாக்கமொன்று பொறுப்பேற்றக் கொள்ள முடியும்.

8.6 விருப்பார்வங்களின் மீதான அனைத்து வெளிப்படுத்துகைகளும் தேறிய வெளிநாட்டு செலாவணி வெளிப்படுத்துகை நிலைமை அறிக்கையிடலில் நிறையேற்றப்பட்ட தேறிய டெல்டா அடிப்படையில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் வங்கிகளுக்காக குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைக்குள்ளும் இருத்தல் வேண்டும்.

8.7 இப் பணிப்புரைகள் ஏற்புடைத்தாயிருக்கும் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் நாளாந்த அடிப்படையில் சொத்துப்பட்டியலின் “சந்தைப்படியான பெறுமதிகளுக்காக” அவசியமான முறைமைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். வாக்களித்துச் சுட்டப்பட்ட அடிக்கடி மாறுபடும் மதிப்பீடுகளின் நாளாந்த கணிப்பு, தட்டப்பட்ட பூஜ்ஜியம், முன்னோக்கிய மற்றும் பரிமாற்றல் வீதங்கள் என்பனவற்றை வெளியிடுவதற்காக இலங்கை வெளிநாட்டுச் செலாவணி அமைப்பு போன்ற பொதுவான தொழில் துறை ரீதியான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த வங்கிகள் உடன்பட வேண்டும். இவற்றினை சந்தைப் பங்கேற்பாளர்கள் அவர்களின் சொத்துப்பட்டியலின் “சந்தைப்படியான பெறுமதிகளுக்காக” பயன்படுத்த முடியும்.

8.8 இப் பணிப்புரைகளுக்கு ஏற்புடைத்தான அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் இப் பெறுதிகளின் எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களையும் மேற்கொள்வதற்கு முன்னர் தமது அலுவலர்களுக்கு போதுமான பயிற்சியளித்து இடர்முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டு முறைகள் போன்ற அவசியமான இடங்களில் பணிக்கமர்த்த வேண்டும்.

8.9 அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் தமது வாடிக்கையாளர்கள் சாதனங்களின் இடர்நேர்வுகள் பற்றி தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கிறார்களென்பதனையும் எத்தகைய வாடிக்கையாளர்கள் அவர்கள் மேற்கொள்ளவிருக்கும் சாத்தியமான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு போதுமான வழிமுறைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் வழங்கப்படுகின்ற பெறுதிகளின் சாதனங்களில் ஈடுபடுவதற்கு முன்னர் அத்தகைய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு முன்னதாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அளவைகள், மீளாய்வுகள், ஒப்புதல் செயற்பாடுகள், நிதியியல் பலம், நிறுவன ரீதியான

இயலாற்றல் அதேபோன்று வாடிக்கையாளர்களின் ஒட்டு மொத்த பொருத்தத் தன்மை என்பன உள்ளிட்ட கிடைக்கத்தக்கதாகவுள்ள இடர்முகாமைத்துவ முறைமைகளுடன் கூடிய தொழில்சார் நிபுணத்துவ பகுப்பாய்வுகள் பற்றி தாங்களே திருப்திப்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

8.10 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களிடமிருந்து அவர்கள் சாதனங்களின் தன்மை பற்றியும் அவற்றுடன் இயல்பாகவே பின்னிப் பிணைந்திருக்கும் இடர்நேர்வுகள் பற்றியும் தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கான உறுதிப்பாடொன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8.11 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கல் பற்றி போதுமான தகவல்களை, குறிப்பாக சாதனங்களில் கூட்டிணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் கிளை வாசகங்கள் தொடர்பாக போதுமான தகவல்களை வழங்க வேண்டும்.

(அ) தீர்மானிக்கப்பட்ட அடித்தள அளவுக்குறியீடு

(ஆ) வட்டி வீதம்

(இ) திடீரென ஏற்படும் நிலை

(ஈ) வட்டம் ஏதும் இருப்பின் அது அத்துடன்

(உ) தொடர்புபட்டுள்ள இடர்நேர்வுகள்

மேற்குறிப்பிடப்பட்டவற்றை அவர்களது வாடிக்கையாளர்களுக்கு எடுத்துக்காட்டுவதன் மூலம் உயர்ந்தமட்ட வெளிப்படைத் தன்மைகளை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

8.12 செலவுச் சிக்கனமான இடர்நேர்வுக் குறைப்பு அமைப்பான வழங்கப்பட்ட அல்லது வடிவமைக்கப்பட்ட விருப்பார்வ ஒப்பந்தங்களிலுள்ள வட்டம் செலவிலோ அல்லது பொதியாக்கப்பட்ட ஒப்பந்தங்களிலோ இடர்நேர்வுகளில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தாது.

8.13 வாடிக்கையாளர்கள் காப்பீடுகள் இனித் தேவையில்லை எனக் கருதுமிடத்து அத்தகைய காப்பிடல் அவர்கள் முடிவுறுத்தலாம் அல்லது மீண்டும் வந்து விடலாம்.

8.14 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் விலை இடர்நேர்வுகளுக்கு காப்பிடும் விதத்திலும், பன்னாட்டு ஒப்பந்தங்கள், செலாவணிகள் அல்லது சந்தைகளில் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் அத்தகைய இடர்நேர்வு காப்பிடல் வசதிகளை வழங்கும் விதத்திலும் பெறுதிகளின் ஒப்பந்தங்களைப் பயன்படுத்தலாம்.

8.15 வெளிநாட்டு வங்கிகள் இலங்கை ரூபா மீது ஊக ரீதியான நோக்குகளையோ அல்லது நிலையினையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வதிவற்ற வங்கிகளின் கணக்குகளிலுள்ள கொடுக்கல்வாங்கல்களை தொடர்ச்சியான கண்காணித்தல் வேண்டும். அத்தகைய சம்பவங்கள் ஏதும் காணப்படின் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அது பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

## 9. அறிக்கையிடல்

9.1 (அ) ஒப்பந்தம் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் (ஆ) அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் திட்டமிடப்பட்ட நோக்கங்களுக்கான அவற்றின் பொருந்தத்தன்மை (இ) தொடர்பான அனைத்துச் சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் என்பனவற்றிற்கான பொறுப்புக்களை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். இப் பணிப்புரைகளின் கீழான அறிக்கையிடுவதானது துல்லியமான தன்மை அத்துடன்/ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பொருத்தத்தன்மை இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று பொருள் கொள்ளப்படவோ, கருதப்படவோ கூடாது.

9.2 அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் ஒரு மாதத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை மாதாந்த அடிப்படையில் சாதனங்களின் வகை, தொகை, வட்டி வீதம், முதிர்ச்சி, நாணயம், இணைத்தரப்பினரின் விபரங்கள் மற்றும் அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் வெளிப்படுத்துகைகளின் விபரங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டும் கூற்றினை இணைப்பு II இல் தரப்பட்டுள்ள படிவத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான படிவத்தில் பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9.3 இப் பணிப்புரைகளுக்கு ஏற்புடைத்தான அனைத்து அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்களும் குறைந்தது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் அல்லது பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களில் தேவைப்படுத்தப்பட்ட அளவிற்கு மீளாய்விற்குரிய நிதியியல் ஆண்டுப் பகுதியில் அவை மேற்கொண்ட பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு செய்யப்பட்ட அவற்றின் ஆண்டுக் கணக்குகளை போதுமானளவிற்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.

## 10. கணக்கீட்டு முறையும் மதிப்பீடும்

இப் பணிப்புரைகளுக்கு ஏற்புடைத்தான அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் கொடுக்கல்வாங்கல்களுக்கான கணக்கீடுகளை ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி மேற்கொள்ள வேண்டியதுடன் "சந்தைப் பெறுமதிப்படியான மதிப்பிடல்" மதிப்பீடுகளையும் நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**11. ஆவணப்படுத்தல்**

இப் பணிப்புரைகள் ஏற்புடைத்தான அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இரு தரப்பினரினதும் நன்மைகளுக்காக இணைத் தரப்பினருடன் பன்னாட்டு ஒன்றுக்கொன்று பரிமாற்றல் மற்றும் பெறுதிகள் சங்கத்தின் உடன்படிக்கையினைப் பின்பற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கொடுக்கல்வாங்கல்களைக் குறித்துரைக்கும் உடன்படிக்கைகளையும் பதிவேடுகளையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பேணுதல் வேண்டும்.

திருமதி பி லியனகே
பணிப்பாளர் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்

ஈ ஏ எட்டியாராச்சி
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**இணைப்பு I**

**பெறுதிகள்**

**பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 39இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு:**

பெறுதி ஒரு நிதியியல் கருவியாகும் அல்லது பின்வரும் அனைத்து மூன்று பண்புகளுடனும் தொடர்புபட்டதாகும்:

(அ) இதன் பெறுமதி மாற்றங்கள், குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதங்கள், நிதியியல் கருவிகளின் விலை, பண்ட விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைகள் அல்லது வீதங்களின் சுட்டெண், கொடுகடன் தரமிடல் அல்லது கொடுகடன் அட்டைகள் அல்லது வேறு மாறிகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவிதத்தில் மாற்றமடையும். நிதியல்லா மாறிகளின் விடயத்தினைப் பொறுத்தவரை, மாறிகள் ஒரு தரப்பினருக்கு, ஒரு ஒப்பந்தத்திற்கு என (சில சமயங்களில் ஷஅடிப்படையானது' என அழைக்கப்படுகிறது) குறித்துரைக்கப்படவில்லை.

(ஆ) இது ஆரம்ப தேறிய முதலீடுகளை அல்லது ஒப்பந்தங்களின் வேறு வளங்களுக்குத் தேவைப்படக்கூடியவற்றிலும் பார்க்க சிறிதான ஆரம்ப தேறிய முதலீடுகளாக இருப்பதுடன் இது சந்தைக் காரணிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு சிறியளவில் பதிலிறித்துவதாகவும் இருக்கும்; அத்துடன்

(இ) இது எதிர்கால திகதியொன்றில் தீர்ப்பனவு செய்யப்படும்

**பன்னாட்டு பரிமாற்றல் மற்றும் பெறுதிகள் அமைப்பில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு:**

பெறுதி என்பது இடர்நேர்வு மாற்றல் உடன்படிக்கையொன்றாகும். இதன் பெறுமதி முக்கிய சொத்துக்களின் பெறுமதியிலிருந்து பெறப்படுகின்றது. அடிப்படைச் சொத்துக்கள் பௌதீக சொத்துக்களாக, வட்டி வீதமொன்றாக, கம்பனியொன்றின் இருப்பாக, இருப்புச் சுட்டெண்ணாக, நாணயமொன்றாக அல்லது இரண்டு தரப்பினர் உடன்படக்கூடியவாறான வேறு ஏதேனும் வர்த்தகப்படுத்தக்கூடிய கருவியாக இருத்தல் வேண்டும்.

**இணைப்பு II**

**அனுமதிக்கப்பட்ட பெறுதிச் சாதனங்கள்**

இப் பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வரும் சாதனங்கள் அல்லது வேறு ஏதேனும் கூட்டாக அல்லது இதன் பெறுதியாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**1. வட்டி வீத பரிமாற்றல்கள்**

வட்டி வீத பரிமாற்றல் என்பது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறித்துரைக்கப்பட்ட கோட்பாட்டு ரீதியான முதல் தொகையினை அடிப்படையாகக் கொண்ட வட்டிக் கொடுப்பனவுப் பிரிவுகளை பரிமாறிக் கொள்வதற்கான இரு தரப்பினருக்குமிடையிலானதொரு உடன்படிக்கையாகும். வட்டி வீத பரிமாற்றமொன்றில், உடன்படிக்கையினைப் பேணுவதற்காக

குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினருக்கு நிலையான வட்டிக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு உடன்படுகின்ற வேளையில், மற்றைய தரப்பினர் தொடர்பான வீதத்துடன் மிதக்கின்ற வட்டி வீதங்களைச் செலுத்துவதற்கு உடன்படுகின்றனர். முதல் தொகையில் எவ்வித பரிமாற்றமுமில்லை.

**2. வட்டி வீத விருப்பார்வங்கள்**

வட்டி வீத விருப்பார்வம் என்பது அடிப்படை சொத்தொன்றாகவன்றி வட்டி வீதமாக இருக்குமிடத்து அது வட்டி வீத விருப்பார்வம் எனப்படும். வட்டி வீத விருப்பார்வம் விலை நடவடிக்கையொன்றிற்குப் பதிலாக வட்டி வீத நடவடிக்கையொன்றினைக் கொண்டிருக்கின்றது. காலாவதியாகையில், விருப்பார்வ கொடுப்பனவு முழுவதும் சந்தையிலுள்ள அடிப்படை வட்டி வீதத்திற்கும் நடவடிக்கை வீதத்திற்குமிடையிலான வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. வட்டி வீத அழைப்பு மற்றும் வட்டி வீத நிறுத்தல்களும் காணப்படுகின்றன. வட்டி வீத அழைப்பு விருப்பார்வமென்பது உடமையாளர் நிர்ணயிப்பு ஒன்றைச் செய்வதற்கான அல்லது வட்டி கொடுப்பனவினைத் தெரிந்து கொள்வதற்கும் தெரியாத வட்டிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் வழங்குகின்றது. வட்டி வீத விருப்பார்வம் என்பது வைத்திருப்பவருக்கு வேறுபட்ட அல்லது தெரியாத வட்டிக்கொடுப்பனவுகளைச் செய்வதற்கான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அல்லது தெரிந்து வட்டிக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமைகளை வழங்குகின்றது. உதாரணமாக உச்ச வட்டி வீதமொன்றில் உடன்படிக்கையின் செல்லுபடிக் காலத்தில் தொடர்ச்சியான திகதிகளின் மீதான குறித்துரைக்கப்பட்ட வீதத்தினை பொறுப்பேற்கப்பட்ட குறுங்கால வீதங்கள் விஞ்சும் தொகையினை விற்பனையாளர் வாங்குநருக்கு இழப்பீடு வழங்குவதற்கு இணங்குகின்றார். கீழ் மட்ட வட்டி வீதமொன்றில் விற்பனையாளர் ஒப்பந்தக் காலப்பகுதியின் வட்டி வீதங்கள் குறித்துரைக்கப்பட்ட வீதங்களுக்கும் கீழே வீழ்ச்சியடைவதற்காக வாங்குநருக்கு இழப்பீடு வழங்க இணங்குகிறார். உயர்ந்த வட்டி வீதமென்பது நீண்ட உச்சம் மற்றும் குறுகிய கீழ் மட்டம் அல்லது குறுகிய உச்சம் மற்றும் நீண்ட கீழ் மட்டம் என்பனவற்றின் இணைப்பொன்றாகும்.

**3. முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள்**

முன்னோக்கிய வீத உடன்படிக்கை என்பது இரு தரப்பினருக்கிடையிலான வட்டி வீத ஒப்பந்தமாகும். இது வட்டி வீத சந்தையில் நுழைவதற்கான தகுதியினை வழங்குகின்றது. முன்னோக்கிய வட்டி வீத ஒப்பந்தமென்பது நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீத கொடுப்பனவுகளைச் செய்வதற்காக ஒரு தரப்பினரை அழைக்கையில் மற்றைய தரப்பினர் கோட்பாடு ரீதியான முதல் தொகையினை அடிப்படையாகக்கொண்ட ஒப்பந்தம் காலாவதியாகுகையில் நிர்ணயிக்கப்படுவதற்கான வட்டியில், வட்டி வீத கொடுப்பனவுகளைச் செய்கிறார்கள். தீர்ப்பனவு நாளன்று, கொடுக்கல்வாங்கல்கள் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன.

**4. குறுக்கு நாணய பரிமாற்றல்கள்**

குறுக்கு நாணய பரிமாற்றல் என்பது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் இரு வேறுபட்ட நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளை மாற்றிக் கொள்வதற்காக இரு தரப்பினரிடையே மேற்கொள்ளப்பட்டதொரு ஒப்பந்தமாகும். வட்டிக் கொடுப்பனவுகள் ஒன்றில் நிர்ணயிக்கப்பட்டனவாக அல்லது மிதக்கும் வட்டி வீதங்களாக இருக்க முடியும். குறுக்கு நாணய பரிமாற்றல் கோட்பாட்டு ரீதியான முதல் தொகையுடன் செலாவணி வீதங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

**5. பண்டப் பரிமாற்றல்கள்**

பண்டப் பரிமாற்றல்களில் ஒரு தரப்பினர் கிரமமாக அட்டவணைப்படுத்தப்பட்ட திகதிகளில் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளை செய்வதுடன் அடிப்படைப் பண்டமொன்றின் விலையினால் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளைப் பெறுகின்றன.

**6. நாணய விருப்பார்வம்**

நாணய விருப்பார்வம் என்பது முன்னோக்கிய குறித்துரைக்கப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உள்ள குறித்துரைக்கப்பட்ட விலையில் இன்னொருவருக்காக ஒரு தொகை நாணயத்தினை பரிமாற்றல் செய்வதற்கு (வாங்கல்/ விற்றல்) வாங்குநருக்கு கடன்பாட்டினையன்றி, உரிமையினை வழங்குவதாகும். இவ்வுரிமைக்காக வாங்குநர் வட்டத்தினைச் செலுத்துகின்றார். வாங்குவதற்கான உரிமை அழைப்பு விருப்பார்வம் என அறியப்படுகின்ற வேளையில் விற்பதற்கான உரிமை விருப்பினை தெரிவிப்பது என அறியப்படுகின்றது.

**7. பண்ட விருப்பார்வம்**

பண்ட விருப்பார்வம் நாணய விருப்பத்தினை ஒத்ததாக இருக்கின்றது. எனினும், இச் சந்தர்ப்பத்தில் அடிப்படைச் சொத்து என்பது பண்டம் அல்லது ஏனையதொரு இணைந்த தன்மை அல்லது சாதனங்களின் பெறுதிகளாவுள்ளது.

இணைப்பு III

அட்டவணை 1: மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

மாதம் : சாதனங்களின் வகை - பரிமாற்றல்கள்

| வணிகத் திகதி | சாதனம் | இணைத்தரப்பு | கோட்பாட்டு முதற்தொகை | | முதிர்ச்சி நாள் | அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | ஒன்றுக்கொன்று அடிப்படையான கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | பாதுகாப்பற்ற வெளிப் படுத்துகை | தொடர்பான அடித்தள அளவுக் குறியீடு | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | | | | | | |
| | | | | | | | | | | |

அட்டவணை 2: கொடுக்கல்வாங்கல்கள் இரத்துச் செய்யப்பட்டு

மாதம் : முதிர்ச்சிக்கு முன்பே முடிவிற்கு கொண்டு வரப்பட்டவை

| வணிகத் திகதி | இ.ம.வங்கிக்கு அறிவிக்கப் பட்டவாறு சாதனம் | வாடிக்கையாளர்/ இணைத்தரப்பு | கோட்பாட்டு ரீதியான முதற் தொகை | இ.ம.வங்கிக் ஏற்கனவே அறிக்கை யிடப்பட்ட ஆரம்பக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பானது | முதிர்ச்சியின் ஆரம்பத் திகதி | இரத்துச் செய்யப்பட்ட அல்லது முடிவுறுத்தப் பட்ட திகதி | ஒன்றுக்கொன்று அடிப்படையான கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | தொடர்பான அடித்தள அளவுக் குறியீடு | இரத்துச் செய்வதற்கான குறிப்பு/ காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

அட்டவணை 3: மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

மாதம் : சாதனங்களின் வகை - நாணய விருப்பார்வம்

| வணிகத் திகதி | இணைத் தரப்பு | விருப்பார்வம் நடைமுறைக் கிடப்படும் திகதி | வங்கி அழைப்பு | | வங்கி வைப்பு | | குறிப்பிட்ட விலை | ஒன்றுக் கொன்று அடிப்படையான வணிகம் ஆம்/ இல்லை | ஒன்றுக்கொன்று அடிப்படையான இணைத்தரப்பு | அடிப்படைக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | குறுக்கு நாணம் | தொகை | குறுக்கு நாணம் | தொகை | | | | | |
| | | | | | | | | | | | |

அட்டவணை 4: மாதாந்த பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்கள்

மாதம் : நாணயங்களின் - விருப்பார்வம்

| வணிகத் திகதி | இணைத்தரப்பு/ வாடிக்கையாளர் | சாதனம் | முதிர்ச்சித் திகதி | குறுக்கு நாணயம் | தொகை | வணிக வீதம் | ஒன்றுக்கொன்று அடிப்படையான வணிகம் ஆம்/ இல்லை | ஒன்றுக்கொன்று அடிப்படையான இணைத்தரப்பு | அடிப்படை கொடுக்கல் வாங்கல்கள் | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2009 சனவரி 7

**சுற்றறிக்கை எண்: லங்கா செட்டில்/01/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறைமையிலுள்ள ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ்எஸ் கட்டணங்கள் மற்றும் விதிப்புக்களின் திருத்தம்**

லங்கா செட்டில் முறைமையின் அனைத்தும் பங்கேற்பாளர்களுக்கும், 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளின் தொகுதி 4இல் உள்ள 8ஆம் விதியிலுள்ளவாறும் (திருத்தப்பட்டது) விஞ்ஞாபன உடன்படிக்கையின் 4ஆம் பிரிவின் படியும் ஆர்ரிஜிஎஸ்/ எஸ்எஸ்எஸ்எஸ் கொடுக்கல்வாங்கல்கள் மீதான கட்டணங்களும் விதிப்புக்களும் இணைப்பு I இன் அட்டவணையிலுள்ளவாறு 2009.02.01 இலிருந்து திருத்தப்படவுள்ளமை பற்றி இத்தால் அறியத் தரப்படுகின்றது.

திருமதி ஜே பி மாம்பிட்டிய
பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

சி ஜே பி சிறிவர்த்தன
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

இணைக்கப்பட்டுள்ளவை: இணைப்பு I - லங்கா செட்டிலின் கட்டணம் மற்றும் விதிப்பின் அட்டவணை

இணைப்பு I

**லங்கா செட்டில் கட்டணம் மற்றும் விதிப்புக்களின் அட்டவணை**

இலங்கை மத்திய வங்கி, 2009 பெப்புருவரி 1ஆம் நாளிலிருந்து அனைத்து லங்கா செட்டில் பங்கேற்பாளர்களிடமிருந்தும் கொடுக்கல்வாங்கலொன்றிற்கு அனைத்துமுட்பட கட்டணமாக இலங்கை ரூ.400 இனை விதிக்கும்.

கட்டணம் மற்றும் விதிப்புக்களின் நோக்கத்திற்காக “கொடுக்கல்வாங்கல்” என்பது பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

(1) பின்வரும் செய்திகளைப் பயன்படுத்துவதன் மூலமாக லங்கா செட்டிலிலுள்ள பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் அவர்களது சொந்த கணக்குகளுக்கு தீர்ப்பனவு செய்யப்படும் எந்த ஒன்றிற்கும்

அ) எம்ரி 102 - பல் வாடிக்கையாளர் வரவு மாற்றல்

ஆ) எம்ரி 103 - தனியொரு வாடிக்கையாளர் வரவு மாற்றல்

இ) எம்ரி 202 - பொதுவான நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்

ஈ) எம்ரி 205 - நிதியியல் நிறுவனங்களின் மாற்றல்களை நிறைவேற்றுதல்

உ) எம்ரி 541 - கொடுப்பனவிற்கு எதிராக பெறப்பட்டது

(2) எம்ரி 540 - இலவசமாக செய்திகளைப் பேணுதல் - இதனைப் பயன்படுத்துவதனூடாக லங்கா செட்டிலில் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தீர்ப்பனவு செய்யப்பட்ட பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் கட்டணங்களுக்குப் புறம்பாக, பங்கேற்பாளர்கள் சுவிப்ற் தகவல் அனுப்புவதுடன் தொடர்பான கட்டணங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும். இவை சுவிப்றினால் தனியான முறையில் பட்டியற்படுத்தப்படவுள்ளதுடன் பங்கேற்பாளர்களினால் சுவிப்ற்கு நேரடியாகச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2009 மார்ச் 27

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/02/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்கா செட்டில் முறைமை 2009 ஏப்பிறல் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து அதன் பின்புல அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, லங்கா செட்டில் (ஆர்ரிஜிஎஸ் மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான முறைமைகள் தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளை பரீட்சிக்கின்ற நோக்கத்திற்காக அவற்றின் தொழிற்பாடுகளை 2009 ஏப்பிறல் 03 வெள்ளிக்கிழமை தொடக்கம் அதன் பின்புல அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளவிருப்பதாக இதன் மூலம் அறிவிக்கின்றது. தேவையான தொழில்நுட்ப மற்றும் தொடர்பு விபரங்கள், மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தினால் எதிர்வரும் காலப்பகுதியில் ஒவ்வொரு பங்கேற்பாளர்களுக்கும் நேரடியாக அறிவிக்கப்படும்.

சி ஜே பி சிறிவர்த்தன
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

திருமதி ஜே பி மாம்பிட்டிய
பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2009 மார்ச் 30

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**சிலிங்கோ சிறிராம் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் பெயரை மாற்றுதல்**

சிலிங்கோ சிறிராம் செக்குறிட்டீஸ் லிமிடெட் அதன் பெயரை என்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் என மாற்றம் செய்திருப்பதன் காரணமாக லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2009 மார்ச் 31 ஆம் நாளிலிருந்து கீழேகாட்டப்பட்டவாறு மாற்றப்படும்.

(i) சிலிங்கோ சிறிராம் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் பங்கேற்பாளர் அமைப்பின் பெயர் என்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் என மாற்றப்படுகின்றது.

(ii) சிலிங்கோ சிறிராம் செக்குறிட்டீஸ் லிமிடெட்டினது கணக்கின் பெயர் சிலிங்கோ சிறிராம் செக்குறிட்டீஸ் லிமிடெட் தீர்ப்பனவுக் கணக்கு என்பதிலிருந்து என்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் தீர்ப்பனவுக் கணக்கு என மாற்றப்ப்படுகின்றது.

பங்கேற்பாளரின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடு மாற்றமின்றி அப்படியே இருக்கும்.

சி ஜே பி சிறிவர்த்தன
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

கே பீ திஸ்ஸாகருணா
மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2009 மே 11

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/04/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2009 மே 15 ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

2009 மே 15ஆம் நாளன்று (2009 மே மாதம் 9ஆம் நாளன்று சட்ட ரீதியான விடுமுறை சனிக்கிழமையில் வருவதனால் அதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது) லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலக நேரம் கட்டுப்படுத்தப்படுவதனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கி 2009 மே 15 ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றது. இதற்கமைய 2009 மே 15 ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் பி.ப. 1.00 மணிக்கு பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்பட்டன.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள், சீராக்க தீர்ப்பனவுகள் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாம் தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிதியியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீள்கொடுப்பனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு (நிதியியல் வசதி) தீர்ப்பனவு | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

சி ஜே பி சிறிவர்த்தன
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

திருமதி ஜே பி மாம்பிட்டிய
பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

**தொடர்பு எண்: 34/07/029/0001/001**

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்
2009 யூன் 29

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/05/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**எச்என்பி செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் பெயரை மாற்றுதல்**

எச்என்பி செக்குறிட்டீஸ் லிமிடெட் அதன் பெயரை என்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் என மாற்றிக் கொண்டமையால் லங்கா செட்டில் முறைமையின் நிலையான தரவு 2009 யூலை 01 ஆம் நாளிலிருந்து கீழேகாட்டப்பட்டவாறு மாற்றப்படும்.

(i) எச்என்பி செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் பங்கேற்பாளர் அமைப்பின் பெயர் எகுயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் என மாற்றப்படுகின்றது.

(ii) எச்என்பி செக்குறிட்டீஸ் லிமிடெட்டினது கணக்கின் பெயர் செக்குறிட்டீஸ் லிமிடெட் செட்டில்மன்ட் கணக்கு என்பதிலிருந்து எகுயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் செட்டில்மன்ட் கணக்கு என மாற்றப்படுகின்றது.

பங்கேற்பாளரின் சுவிப்ற் வங்கி அடையாளக் குறியீடு மாற்றமின்றி அப்படியே இருக்கும்.

சி ஜே பி சிறிவர்த்தன
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

கே பீ திஸ்ஸாகருணா
மேலதிக பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேடமானது

இல. 1612/32 வெள்ளிக்கிழமை 2009 யூலை 31

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

## பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைச் சட்டம்

அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 11 ஆம், 17 ஆம் மற்றும் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

சனாதிபதி

கொழும்பு
2009 யூலை 30

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (அ) இலங்கை மத்திய வங்கி (இதனகத்துப்பின்னர் “அதிகாரசபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மேற்பார்வை அதிகாரசபையாக செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரின் ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்புக்குப் பொறுப்பாதலும் வேண்டும்.

(ஆ) ஆளெவரும் அதிகாரசபையினால் வழங்கப்படும் அதிகாரத்திற்குக் கீழன்றியும் உரிமமொன்றின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கவன்றியும் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரொருவராக ஈடுபடுதலோ அல்லது செயலாற்றுதலோ அல்லது இன்னொரு ஆளை ஈடுபடச் செய்தலோ அல்லது செயலாற்றச் செய்தலோ ஆகாது.

3. உரிமமொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

4. (இதனகத்துப்பின்னர் “பணிப்பாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் திணைக்களப் பணிப்பாளர் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அதிகாரசபையின் பணிகளைக் கொண்டுநடாத்தப் பெயர்குறிக்கப்படுதல் வேண்டும்.

5. (அ) கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரொருவராக செயலாற்ற அல்லது சேவை வழங்குவதில் ஈடுபடுவதற்குப் பின்வரும் ஆட்கள் தகுதியுடையவராவர்:-

(i) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ii) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(iii) ஏதேனும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பெனி;

(iv) ஆகக்குறைந்தது எழுபத்தைந்து (75) மில்லியன் ரூபாவினை தேறாத மூலதனமொன்றாகக் கொண்டுள்ள ஏதேனும் பகிரங்கக் கம்பெனியொன்று;

(ஆ) கொடுப்பனவு அட்டைகளின் வழங்குநரொருவராக சேவையொன்று வழங்குவதில் செயற்படுகின்ற அல்லது ஈடுபடுகின்ற எவரேனும் தகுதியான ஆள் அல்லது இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த திகதியன்று அல்லது அதன்பின்னர் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர் ஒருவரின் தகைமையில் ஏதேனும் அலுவல்களைக் கொண்டு நடாத்த உத்தேசிக்கின்ற எவரேனும் தகுதியான ஆள் விடயத்திற்கேற்ப இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஆறு (06) மாத காலப்பகுதியொன்றினுள் அல்லது அதனது நடைமுறைக்கு வருவது தொடங்குவதற்கு அறுபது நாட்களுள் பணிப்பாளருக்கு உரிமமொன்றிற்காக இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பம் பணிப்பாளரால் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஆவணங்கள், தகவல் அல்லது வேறு விவரங்களுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் இதற்கான இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஆண்டு உரிமக்கட்டணம், அத்தகைய விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட வேண்டியவாறான அத்தகைய ஆவணங்கள் மற்றும் பணிப்பாளர் தேவைப்படுத்தக் கூடியவாறான ஏதேனும் வேறு தகவலுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

6. பணிப்பாளர் பின்வருவன தொடர்பில் திருப்திப்பட்டதன்மேல், இதற்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் படிவத்தில் உரிமமொன்றை வழங்கலாம்:-

(அ) இதற்கான இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்படும் ஆண்டு உரிமக் கட்டணத்தின் கொடுப்பனவு;

(ஆ) விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் பணிப்பாளரால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய ஆவணங்கள்;

(இ) பணிப்பாளரால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் மேலும் தகவல்;

7. (அ) பணிப்பாளர் ஒன்றில் உரிமமொன்றை வழங்கலாம் அல்லது அவரால் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்கென உரிமமொன்றை வழங்க மறுக்கலாம்.

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (அ) ஆம் பந்தியின் கீழ் வழங்கப்படும் உரிமம் -

(i) அத்தகைய உரிமத்தின் வழங்கல் திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வலிதாகவிருத்தல் வேண்டும்;

(ii) இதற்கான மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் படிவத்திலிருத்தல் வேண்டும்;

(iii) உரிமத்தின் பின்புறத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவானதாக இருத்தல் வேண்டும்;

8. கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர் ஒவ்வொருவரும் காலத்திற்குக்காலம், அத்தகைய சேவை வழங்குநரினால் நடாத்தப்படும் தொழில்களின் வேறுபட்ட வகைகளைக் கருத்திற்கொண்டு, இவ்வொழுங்குவிதிகளுக்கான இரண்டாம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்படும் முறையில் கணிக்கப்படும் ஆண்டு உரிமக் கட்டணமொன்றை அதிகாரசபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

9. 7 ஆம் ஒழுங்குவிதியின் (அ) ஆம் பந்தியின் கீழ் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும் அத்தகைய உரிமத்தின் வழங்கல் திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு வலிதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமத்தின் வலிதாந்தன்மையின் காலாவதிக்கு இரண்டு மாதங்கள் முன்னதாகக் கொடுப்பனவு அட்டையொன்றின் சேவை வழங்குநர் உரிமத்தின் பின்புறத்தில் எடுத்துக்காட்டப்படும் நிபந்தனைகளுக்கமைவாக பணிப்பாளருக்கு இதற்கான நான்காம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்படும் படிவத்தில் புதுப்பித்தலுக்கென விண்ணப்பிக்கலாம்.

10. அத்தகைய சேவை வழங்குநர் -

(i) பொய்யான அல்லது சரியற்ற தகவலைக் கொடுத்துதவியுள்ளார் அல்லது ஏதேனும் முக்கியமான தகவலைக் கொடுக்காது விட்டுள்ளார் என்றும்; அல்லது

(ii) தொழில்களைத் தடங்கல் செய்யக்கூடிய தனது நிதிசார் பொறுப்புக்களில் ஸ்திரமற்ற தன்மையை உணர்கின்றார் என்றும்; அல்லது

(iii) வலிமை குன்றிய நட்டவச்ச முகாமைக்கு அமைவாக உள்ளார் அது பணிப்பாளரின் அபிப்பிராயத்தில் அட்டை வைத்திருப்பவர்கள், வணிகர்கள் அல்லது இலங்கையின் கொடுப்பனவு அட்டை கைத்தொழிலுக்கு பங்கமாகவுள்ள சாத்தியம் கொண்டுள்ளதென்றும்;

(iv) பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படும் காலப்பகுதியினுள் பணிப்பாளரினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக திருத்த நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறியுள்ளார் என்றும்;

(v) உரிமம் வழங்கல் திகதியிலிருந்து ஆறு மாதங்களுள் கொடுப்பனவு அட்டைகள் தொடர்பிலான தனது தொழில்களைத் தொடங்கத் தவறியுள்ளார் என்றும்;

(vi) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு, இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒழுங்குவிதி, பணிப்புரை, விதி, நிபந்தனை, சுற்றுநிருபம் அல்லது வழிகாட்டி நெறிகளுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளார் என்றும்;

(vii) நீதிமன்றத்தினால் ஏதேனும் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்றும்,

பணிப்பாளர் திருப்திக்கு நிரூபிக்கப்படின், பணிப்பாளர் -

(அ) எவரேனும் ஆளுக்கு உரிமத்தை வழங்க மறுக்கலாம்; அல்லது

(ஆ) கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரொருவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமத்தை இரத்துச் செய்யலாம் அல்லது மீளப்பெறலாம்; அல்லது

(இ) 26 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறாக இணங்கியொழுகாமை அறவீட்டை விதிக்கலாம்;

11. பணிப்பாளர் 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் தனது முடிபை கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநருக்கு அத்தகைய முடிவுக்கான காரணங்களுடன் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

12. (அ) 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் பணிப்பாளரின் முடிபினால் பாதிப்புறும் எவரேனும் ஆள் அல்லது சேவை வழங்குநர் 11 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்படும் அத்தகைய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து முப்பது நாட்கள் காலாவதியாக முன்னர் ஏன் பணிப்பாளரின் அத்தகைய முடிபு அவரால் மாற்றப்பட்டது, திருத்தப்பட்டது அல்லது திருத்தியமைக்கப்பட்டதற்காக காரணங்களைக் குறிப்பிட்டு அதிகாரசபைக்கு அல்லது அந்நோக்கத்திற்கென அதிகாரசபைக்கு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு மேன்முறையீட்டைச் செய்யலாம்.

(ஆ) அதிகாரசபை அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய ஆள் அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து அறுபது நாட்களுள் அத்தகைய ஆளுக்கு அல்லது சேவை வழங்குநருக்கு அதனது அல்லது அவரது முடிபை அறிவிக்கலாமென்பதுடன் இச்சட்டத்தின் அல்லது ஒழுங்குவிதியின் அத்தகைய ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புகள், பணிப்புரைகள், வழிகாட்டிநெறிகள், விதிகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கமைவாக அவசியமானவாறான ஏதேனும் நடவடிக்கையை எடுக்கலாம்;

(இ) பணிப்பாளர், சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எந்தவொரு ஒழுங்குவிதிப் பணிப்புகள், வழிகாட்டி நெறிகள், விதி நிபந்தனை மற்றும் சுற்று நிரூபங்களுக்கமைவாக அதிகார சபையால் அல்லது அத்தகைய ஆனால் எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்கியொழுகவேண்டுமென்பதுடன் பந்தி (ஆ) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பெறப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் தீர்மானத்தை அத்தகைய ஆளுக்கு அல்லது சேவை வழங்குநருக்கு அறிவிக்க வேண்டும்.

13. உரிமமொன்று மீளப்பெறப்பட்டுள்ளவிடத்து அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளரின் அத்தகைய சேவை வழங்குநரை தொழில்களை நடாத்துவதிலிருந்து உடனடுத்து நிறுத்துவதற்கும் தடுப்பதற்கும் பணித்தல் வேண்டும். பணிப்பாளர் இச்சட்டத்தின் அல்லது இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அதிகாரசபையின் அல்லது அதிகாரசபையினால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்படும் ஆளொருவரின் அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்ற அவசியமான ஏதேனும் நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

14. பணிப்பாளர் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர் எவரையும் அமைவிடத்திலான மற்றும் அமைவிடத்திற்கு வெளியிலான சோதனை மற்றும் மேற்பார்வையை நிறைவேற்றலாம். எந்த ஒரு பொருத்தமான பிரமாணத்தின் அத்தகைய மேற்பார்வையின் போது கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரால் வேண்டப்படும் அத்தகைய சோதனை நடைமுறை மற்றும் நிறைவேற்றும் விதம், மேற்பார்வை எண்ணிக்கை மற்றும் தகவல் தொடர்பாக பணிப்பாளர் காலத்திற்குக்காலம் பணிப்புகள், பணிப்புரைகள், வழிகாட்டிநெறிகள், விதிகள், நிபந்தனைகள் அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றுநிருபங்களை வழங்கலாம்.

15. மேற்பார்வை அல்லது பெறப்பட்ட ஏதேனும் தகவல் மீது நடாத்தப்பட்ட சோதனைகளைத் தொடர்ந்து -

(அ) கொடுப்பனவு அட்டைகளின் எவரேனும் சேவை வழங்குநர் வகையற்றவராக அல்லது வகையற்றவராகக்கூடிய சாத்தியமுள்ளவராக உள்ளார் என; அல்லது

(ஆ) கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர் எவரேனும் கொடுப்பனவு அட்டைகள் தொடர்பில் அலுவல்களை நிறைவேற்ற இயலாதுள்ளவராக உள்ளார் என; அல்லது

(இ) சேவை வழங்குநரொருவரின் அலுவல்கள் தொடருகின்றமை நிதிசார் முறைமை உறுதிப்பாட்டைப் பாதிக்கும் சாத்தியமுள்ளதென; அல்லது

(ஈ) அத்தகைய முறையில் சேவை வழங்குநரொருவரின் அலுவலின் தொடருகின்றமை வாடிக்கையாளரின் பாதுகாப்புக்கும் இலங்கையில் கொடுப்பனவு முறைமைகளின் ஒருமைப்பாடு மற்றும் அபிவிருத்திக்குப் பங்கமாகவிருக்கக்கூடியதென;

வெளிப்படுத்தப்படின், பணிப்பாளர் அத்தகைய சேவை வழங்குநரைக் கொடுப்பனவு அட்டை தொடர்பிலான தனது அலுவலை உடனடுத்து இடைநிறுத்துவதற்கும் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறை மற்றும் நிபந்தனைகளில் திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும் பணித்தல் வேண்டும்.

### அலுவலைத் தன்னிச்சையாக முடிவுறுத்தல்

16. எவரேனும் சேவை வழங்குநரின் பணிப்பாளர் சபை 7 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் முடிவுறாத நிலையின்போது கொடுப்பனவு அட்டையின் அத்தகைய சேவை வழங்குநரின் அலுவலை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கின்றவிடத்து, கொடுப்பனவு அட்டையின் அத்தகைய சேவை வழங்குநர் அத்தகைய தீர்மானத்தின் திகதியிலிருந்து ஏழு நாட்களுள் பின்வருவனவற்றைப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(அ) அலுவலின் முடிவுறுத்தலுக்கான காரணங்கள் அல்லது கொடுப்பனவு அட்டை தொழிலைத் தொடருவதற்கு இயலாமைக்கான காரணங்கள் அத்துடன்;

(ஆ) உளதாம் வாடிக்கையாளர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை கையாளுதல் முறையின் விவரமான முன்மொழிவு அல்லது உடன்பட்ட சேவைகளை வழங்குவதற்கான மாற்றீடான முறை.

17. தன்னிச்சையான முடிவுறுத்தல் அதிகாரசபையிலான அங்கீகாரத்தின் மேல் அத்துடன் அதிகாரசபையினால் எடுத்துக்காட்டப்படும் நிபந்தனைகள் அல்லது வழங்கப்படும் ஏதேனும் பணிப்புகளுடன் இசைவாக மட்டுமே சேவை வழங்குநரொருவரால் நடாத்தப்படுதல் வேண்டும்.

18. சேவை வழங்குநரின் சேவைகளின் முடிவுறுத்தலுக்கான தீர்மானத்தின் அறிவிப்பின் மேல், பணிப்பாளர் முடிவுறுத்தலின் முறை மற்றும் அத்தகைய முடிவுறுத்தல் எந்த நிபந்தனைகளுக்கமைய இடம்பெறவேண்டுமோ அந்த நிபந்தனைகள் பற்றி பணிப்புகளை வழங்குதல் வேண்டும்.

19. இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் கொடுப்பனவு அட்டைகள் தொடர்பில் ஏதேனும் அலுவலில் ஈடுபட்டுள்ள அல்லது இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க உரிமத்தைப் பெறாது அத்தகைய அலுவலை நிறைவேற்றுவதற்குத் தொடருகின்ற எவரேனும் ஆள் அத்தகைய அலுவலைக் கொண்டுநடாத்துவதை நிறுத்த வேண்டுமென்பதுடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய முறையிலும் நிபந்தனைகளிலும் அத்தகைய அலுவலைத் தன்னிச்சையாக முடிவுறுத்துவதைத் தொடருதலும் வேண்டும்.

20. 19 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக சேவை வழங்குநரொருவரால் கொண்டு நடாத்தப்படும் அத்தகைய ஆளொருவரின் அலுவலொன்று தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைக்கப்பெற்றதன் மேல், அதிகாரசபை சேவை வழங்குநராகச் செயற்படுகின்ற அல்லது சேவையில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆளுக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்று அளிக்கப்படுகின்ற விசாரணையொன்று நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் இவ்வொழுங்குவிதிகளால் அல்லது 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்படும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

### பொதுவான ஏற்பாடுகள்

21. அதிகாரசபையானது பின்வருவன தொடர்பில் பணிப்பாளர் ஊடாக பணிப்புகள், பணிப்புரைகள், வழிகாட்டிநெறிகள், நிபந்தனைகள், சுற்றுநிருபங்கள், விதிகள் மற்றும் அறிவுறுத்தல்களைக் காலத்திற்குக்காலம் வழங்கலாம்:-

(அ) ஏதேனும் கொடுப்பனவு அட்டை மற்றும் வரையறைகள் அத்துடன் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான சேவைகளின் நிருவாகம்;

(ஆ) கடன் அட்டை அல்லது விதிப்பனவு அட்டை தொடர்பிலான தொழில்களின் தொழிற்பாடுகள்;

(இ) பற்று அட்டை அல்லது உள்ளடக்கப்பட்ட பெறுமதி அட்டை தொடர்பிலான தொழில்களின் தொழிற்பாடுகள்;

(ஈ) பந்திகள் (ஆ) மற்றும் (இ) வில் குறித்துரைக்கப்படும் கொடுப்பனவு அட்டைகள் தவிர்ந்த ஏதேனும் கொடுப்பனவு அட்டை தொடர்பிலான தொழில்களின் தொழிற்பாடுகள்;

(உ) கொடுப்பனவு அட்டைகள் தொடர்பிலான பாதுகாப்பு அம்சங்கள் அல்லது தொழில்நுட்பவியலின் அதிகரிப்பு;

(ஊ) கொடுப்பனவு அட்டைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி மற்றும் தகவலின் செயற்பாடு;

(எ) கொடுப்பனவு அட்டையின் சேவை வழங்குநர்கள் தொடர்பிலான விவேகமான தேவைப்பாடுகள்;

(ஏ) கொடுப்பனவு அட்டையின் தொழில் தொடர்பிலான முகவர்கள், துணையாயவர்கள் மற்றும் ஏதேனும் வெளியாட்களின் பணி ஒழுங்குபடுத்தல்;

(ஐ) கூட்டிணைப்புக் கருமங்கள் மீதான தேவைப்பாடுகள், தரங்கள் மற்றும் வழிகாட்டி நெறிகள், கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர் தொடர்பிலான ஆட்சி, நட்டவச்ச முகாமைத்துவம், கட்டுப்பாடு, மூலதன போதுமாந்தன்மை மற்றும் வேறு மூலதன தேவைப்பாடுகள் அத்துடன் தொழில் மற்றும் முதலீட்டுத் தத்துவங்கள்; அத்துடன்

(ஒ) வாடிக்கையாளர்கள் மற்றும் கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர்களின் பாதுகாப்பிற்கான அவசியமான நடவடிக்கைகள்.

22. உரிமமொன்றிற்கான விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்படும் தொழில்களின் வகை தவிர்ந்த கொடுப்பனவு அட்டை தொடர்பிலான ஏதேனும் அலுவலைக் கொண்டு நடாத்த எண்ணுகின்ற கொடுப்பனவு அட்டையின் எவரேனும் சேவை வழங்குநர் அதிகாரசபையிடமிருந்து முன்னதான அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். அத்தகைய சேவை வழங்குநர் இதற்கான ஐந்தாம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் முன்னதான அங்கீகாரத்திற்கென விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேவை வழங்குநர் மேலதிக உரிமக் கட்டணம் அல்லது உரிமக் கட்டணத்தின் அதிகரிப்பு மற்றும் வழங்கப்படவேண்டிய சேவையைப் பொறுத்து அதிகார சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக ஏதேனும் நிபந்தனைக்கு அமைவாகலாம்.

23. சேவை வழங்குநர் கிளை அலுவலகமொன்றைத் தாபிக்க விரும்புமிடத்து, அத்தகைய சேவை வழங்குநர் அதிகாரசபையின் முன்னதான எழுத்திலான அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

24. உரிமமொன்றின் வழங்கல் அல்லது உரிமமொன்றின் புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்று அல்லது இதில் குறித்துரைக்கப்பட்டவாறான முன்னதான அதிகாரவளிப்புக்கான ஏதேனும் வேண்டுகோள் அத்தகைய நோக்கத்திற்கென இவ்வொழுங்குவிதிகளில் முறையே முதலாம், நான்காம், மற்றும் ஐந்தாம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

25. கொடுப்பனவு அட்டையின் எவரேனும் சேவை வழங்குநர் எல்லா நேரத்திலும் இவ்வொழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புகள், பணிப்புரைகள், வழிகாட்டி நெறிகள், விதிகள் அறிவுறுத்தல்கள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்களுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

26. (அ) எவரேனும் ஆள் ஏதேனும் ஒழுங்குவிதியுடன் அல்லது இச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புகள், பணிப்புரைகள், வழிகாட்டுநெறிகள், விதிகள், அறிவுறுத்தல்கள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்களுடன் இணங்கியொழுகத் தவறுமிடத்து, கொடுப்பனவு அட்டையின் அத்தகைய சேவை வழங்குநர் 29 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைவாக பணிப்பாளரினால் இணங்கியொழுகாமை விதிப்பனவு விதிக்கப்பட அமைவானவராதல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்:-

(i) இணங்கியொழுகாமையின் 1 ஆவது தடவை - பணிமுறைக் கண்டனக் கடிதம்

(ii) இணங்கியொழுகாமையின் 2 ஆவது தடவை - இணங்கியொழுகாமை விதிப்பனவு 50,000 ரூபா

(iii) இணங்கியொழுகாமையின் 3 ஆவது தடவை - இணங்கியொழுகாமை விதிப்பனவு 100,000 ரூபா

(iv) தொடர்ச்சியான இணங்கியொழுகாமை அல்லது 3 ஆவது தடவைக்குப் பின்னரும் மேலும் இணங்கியொழுகாமை விடயத்தில், அதிகாரசபை, 500,000 ரூபாவுக்கு விஞ்சாது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான தொடருகின்ற இணங்கியொழுகாமை விதிப்பனவொன்றை விதிக்கலாம்;

அல்லது

அதிகாரசபை அதனால் தீர்மானிக்கப்படும் காலமொன்றிற்கான கொடுப்பனவு அட்டையின் சேவை வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை உடனடியாக இடைநிறுத்தலாமென்பதுடன் அத்தகைய இடைநிறுத்தம் ஆகக்குறைந்தது ஒரு சிங்கள மற்றும் தமிழ் புதினப்பத்திரிகையில் அறிவித்தலொன்றைப் பிரசுரிப்பதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) இவ்வொழுங்குவிதியின் (அ) ஆம் பந்தியின் கீழ் அறவிடப்பட்ட தொகைகள் மத்திய வங்கியின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

27. விளம்பரம் எதுவும் இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு அல்லது இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணிப்புகள், வழிகாட்டிநெறிகள், விதிகள், அறிவுறுத்தல்கள், நிபந்தனைகள் அல்லது சுற்றுநிருபங்களுக்கு முரணாகக் கொடுப்பனவு அட்டைகளின் எவரேனும் சேவை வழங்குநரால் வெளியிடுதலோ, பரப்புதலோ, ஒலிபரப்புச் செய்தலோ அல்லது வெளிக்காட்டுதலோ ஆகாது.

28. பணிப்பாளர் 27 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் விளம்பரம் வெளியிடப்பட்டது, பரப்பப்பட்டது அல்லது பொதுமக்களைத் தவறாக இட்டுச்செல்லும் சாத்தியமுள்ளது என அபிப்பிராயப்படுமிடத்து, பணிப்பாளர்

அத்தகைய விளம்பரத்தை, பிரசுரிப்பு, பரப்புதல், ஒலிபரப்பு அல்லது வெளிக்காட்டலிலிருந்து அகற்றுவதற்கு அல்லது நியாயமான காலத்தினுள் அத்தகைய விளம்பரத்தைத் திருத்துவதற்கு கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

29. 27 ஆம் மற்றும் 28 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்ற கொடுப்பனவு அட்டையின் எவரேனும் சேவை வழங்குநர் 26 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க இணங்கியொழுகாமையின் விதிப்பனவொவ்வொன்றுக்குப் பொறுப்பாதல் வேண்டுமென்பதுடன் பணிப்பாளர் அத்தகைய இணங்கியொழுகாமை தொடர்பில் ஒரு சிங்கள மற்றும் தமிழ் புதினப் பத்திரிகையில் அறிவித்தலை வெளியிடலாம்.

30. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டம் எனப் பொருளாகும்;

"அட்டை வைத்திருப்பவர்" என்பது, வழங்குநரொருவரால் வழங்கப்படும் கொடுப்பனவு அட்டையொன்றைப் பயன்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"இலங்கை மத்திய வங்கி" என்பது, 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க (422 ஆம் அத்தியாயமான) பணச்சபைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

"விதிப்பனவு அட்டை" என்பது, அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் நீடித்த கடன் இன்றி, வழங்குநரால் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகச் செலுத்தவேண்டியுள்ளவிடத்து அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குநரால் அனுமதிக்கப்பட்ட கட்டணமொன்று சம்பந்தப்படுகின்ற கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;

"கடன் அட்டை" என்பது, அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குநரால் அளிக்கப்படும் தொடர் கடனை தெரியப்படுத்தும் கொடுப்பனவு அட்டையொன்று என்பதுடன் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்தப்பட்ட கடனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொடுத்துத் தீர்க்கலாம். பயன்படுத்துநரால் உபயோகிக்கப்பட்ட கடனின் ஏதேனும் தொகை குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்காவிடத்து வட்டி, இலாபம் அல்லது வேறு விதிப்பனவுகளுக்கு அமைவானதாகலாம்;

"நாள்" என்பது, பஞ்சாங்க நாள் என்று பொருளாகும்;

"பற்று அட்டை" என்பது, பண்டங்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு மற்றும் காசு மீளப்பெறல் உட்பட ஒழுங்குபடுத்தப்பட்ட மூன்றாம் தரப்பினருடன் உறப்பட்ட கடப்பாடொன்றின் கொடுப்பனவை நிறைவேற்றப் பயன்படுத்தப்படக்கூடியது. அதில் அட்டை வைத்திருப்பவரின் கடப்பாடு அட்டை வைத்திருப்பவரின் கடப்பாடு கணக்கிலிருந்து நேரடியாக பற்று வைக்கப்பட்டு மீதி அத்தகைய வழங்குநருடன் பேணப்படும் கொடுப்பனவு அட்டையொன்று என்று பொருளாகும்;

"நிதிசார் கொள்வனவு" என்பது, வாடிக்கையாளரின் கொடுப்பனவு அட்டைகளை ஏற்பதற்கு வணிகருடன் ஒழுங்குகளைச் செய்வதுடன் வாடிக்கையாளரால் கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் பெறுமதிக்கு வணிகருக்கு பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு வணிகருடன் ஒழுங்குகளைச் செய்கின்ற அல்லது அட்டை வைத்திருப்பவராலான காசு மீளப்பெறலுக்கென கொடுப்பனவை முற்பணமளிக்கின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"வழங்குநர்" என்பது, கொடுப்பனவு அட்டையொன்றை வழங்குகின்றதும் அதனால் அட்டை வைத்திருப்பவருடன் ஒப்பந்தசார் உறவில் ஈடுபடுகின்ற நிறுவனம் என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, இலங்கையில் வங்கித்தொழில் தொழில்களைக் கொண்டுநடாத்த 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் பாகம் I இன் கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனியொன்று அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி" என்பது, வைப்புப் பணத்தை ஏற்றல் மற்றும் அத்தகைய பணத்தை முதலீடு செய்தல் அத்துடன் கடன் கொடுத்தல் தொழில்களைக் கொண்டுநடாத்துவதற்கு 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் IX அ பாகத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் கம்பெனி அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று என்று பொருளாகும்;

"வணிகர்" என்பது, பண்டங்கள் மற்றும் சேவைகளை விற்க அல்லது கொடுப்பனவொன்றின் ஏற்பின் மீது காசினைக் கொடுப்பதற்கு அல்லது உள்ளடக்கப் பெறுமதியை விற்க அல்லது மீட்க நிதிசார் கொள்வனவாளருடன் உடன்படிக்கையொன்றைச் செய்துள்ள ஆளொருவர் என்று பொருளாகும்;

"பணப்பெறுமதி" என்பது, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவுகள் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் சட்டத்தின் 18 ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டதாகும்;

"தொழிற்படுத்துநர்" என்பது, கொடுப்பனவு அட்டை தொடர்பிலான அல்லது அதிலிருந்து எழுகின்ற ஏதேனும் முறைமையைத் தொழிற்படுத்துகின்ற ஆளொருவர் என்று பொருளாகும்;

“கொடுப்பனவு அட்டை” என்பது, காலத்திற்குக்காலம் பணத்தைப் பெறுவதற்கு அல்லது கொடுப்பனவைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய கணக்கு, உள்ளடக்கப் பெறுமதி அல்லது கூற்றொன்றை அணுகுவதற்கான குறியீடு ஒன்று அல்லது வேறு ஏதேனும் வழிவகைகள் உட்பட ஏதேனும் அட்டை, தகடு, கூப்பன் புத்தகம் அல்லது வேறு உபாயம் என்ற பொருளாகும் என்பதுடன் பற்று, விதிப்பனவு, கடன் மற்றும் உள்ளடக்கப்பெறுமதி அட்டையையும் உள்ளடக்கும்;

“முன்செலுத்தப்பட்ட அட்டை” என்பது, நேரடியாகவோ அல்லது வழங்குநரின் முகவர் ஊடாகவோ வழங்குநருக்கு முன்பதாக நிதிகளின் குறித்த சில தொகையைச் செலுத்துவதன் மூலம் அட்டை வைத்திருப்பவரால் கொள்ளப்படுவதும் அத்துடன் நிதிகளின் பெறுமதி உள்ளடக்கப் பெறுமதியாக கொடுப்பனவு அட்டையில் ஏற்படுத்தப்படுவதுடன் கொடுப்பனவு அட்டையில் நிதிகளின் பெறுமதியிலிருந்து கழிப்பதற்கும் கொடுக்கல்வாங்கல்களின் தனித்த பெறுமதியொன்றில் அல்லது கொடுக்கல் வாங்கலில் பல்வேறுபட்ட வகைகளில் உறப்பட்ட கொடுப்பனவு கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு அட்டையொன்று என்று பொருளாகும்;

“பொதுக் கம்பனி” என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் அல்லது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட எந்தவொரு கம்பனி;

“பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பெனி” என்பது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் கீழ் நிதிக் கம்பெனியொன்றாகப் பதிவு செய்யப்பட்ட கம்பெனியொன்று என்று பொருளாகும்;

“கொடுப்பனவு அட்டைகளின் சேவை வழங்குநர்” என்பது, கொடுப்பனவு ஒன்று தொடர்பில், கொடுப்பனவொன்றின் வழங்குநரொருவராக அல்லது கொடுப்பனவு அட்டையொன்றின் நிதிசார் கொள்ளுதலாளராக அல்லது கொடுப்பனவு முறைமையின், நீக்கல் முறைமைகளின் அல்லது கொடுத்துத்தீர்த்தல் முறைமையின் தொழிற்பாட்டாளரொருவராக செயலாற்றுகின்ற அல்லது அத்தகைய சேவைகளின் ஏதேனும் இணைப்பில் தொழிற்படுகின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

“உள்ளடக்கப் பெறுமதி அட்டை” என்பது,-

(i) தனியொரு நோக்கத்தினைக்கொண்ட முன் செலுத்தப்பட்ட அட்டை, அதன் வழங்குநர் வணிகரொருவர் அத்துடன் பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஒன்றுக்கு மேற்பட்ட வணிகரிடம் பயன்படுத்தப்படலாம் (தனியொரு நோக்கத்தினைக்கொண்ட பல வணிகர்);

(ii) பலநோக்கு முன்செலுத்தப்பட்ட அட்டை, அதன் வழங்குநர் வணிகரொருவர் அத்துடன் பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஒன்றுக்கு மேற்பட்ட வணிகரிடம் கொடுப்பனவை மேற்கொள்ளப் பயன்படுத்தப்படலாம் (பல - நோக்கு பல - வணிகர்கள்); அல்லது

(iii) தனியொரு நோக்கத்தினைக்கொண்ட அல்லது பல - நோக்க முன்செலுத்தப்பட்ட அட்டை, அதன் வழங்குநர் பண்டங்கள் மற்றும் சேவைகளின் வணிகரொருவர் அல்ல (வணிகரல்லாத),

என்று பொருளாகும்.

“உள்ளடக்கப் பெறுமதி” என்பது, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18 ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளதாகும்;

“கேடுறா மூலதனம்” என்பது, எந்த மூலதனம் மீது சோந்தை அல்லது வேறு விதிப்பனவுகள் இல்லையோ அந்த மூலதனம் என்று பொருளாகும்.

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 சனவரி 6

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/01/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளுக்கான திருத்தம்**

2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளின் தொகுதி 3இல் உள்ள பிரிவு 4.2 ஊ.சே. நிதியம் மற்றும் வெளிநாடுகளில் வதியும் வாடிக்கையாளர் கணக்குகளை பின்வருமாறு புகுத்துவதன் மூலம் 2009 சனவரி 6ஆம் நாளிலிருந்து திருத்தப்படுகின்றது என்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

"**ஊ.சே. நிதியக் கணக்கு:** ஓய்வு பெறும் வேளையில் உறுப்பினர்களுக்கான அரச பிணைங்களை வழங்குவதற்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு ஊழியர் சேம நிதியத்தின் ஓய்வு பெற்ற உறுப்பினர்களுக்குச் சொந்தமான பிணை உடமைகள்.

**வெளிநாடுகளில் வதியும் வாடிக்கையாளர்களின் கணக்கு**: வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பிணையங்களின் உடமைகள்"

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 சனவரி 6

*தலைமை முகாமையாளர்களின் அனைத்து முதன்மை
நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

**வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள்**

**இவ்வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் 2009 சனவரி 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்**

**தலைமை முகாமையாளர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்**

வெளிநாட்டில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம் பெயர்ந்த வேலையாட்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் விற்பனை மற்றும் கொள்வனவிற்கு பொருந்தத்தக்க வழிகாட்டல்களும் நடைமுறைகளும் கீழே காட்டப்பட்டுள்ளன. இத் தொழிற்பாடுகள் தொடர்பாக ஏதும் குறிப்பிட்ட வழிகாட்டல்கள் இல்லாதவிடத்து, இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட தலைமை முகாமையாளர்கள், அதாவது, தெரிந்தெடுக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், தெரிந்தெடுக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட முதனிலை வணிகர்கள் ஆகியோர் உள்;ர் முதலீட்டாளர்களுக்கு திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளை வழங்குவது தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட தற்பொழுது பிரயோகிக்கத்தக்க தொழிற்பாட்டு வழிகாட்டல்கள், நடைமுறைகள், முறைமை ஒழுங்குவிதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகைய ஏற்புடைத்தான விதிகள் இல்லையாயின் கீழே கையொப்பமிட்டுள்ளவர்களிடமிருந்து அவை தொடர்பான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தலைமை முகாமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இவ் வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் 2009 சனவரி 6ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

## 1. பொதுவானது

### 1.1 தகுதியுடைய முதலீட்டாளர்கள்

பின்வரும் வகை ஆட்கள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கு தகுதியுடையவராவர்.

(அ) வெளிநாடுகளில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டுள்ள இலங்கையர்கள் (வதிவற்றோர்);

(ஆ) வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ள/ வெளிநாடுகளில் வியாபாரத்தினை நிறுவியுள்ள இலங்கைப் பிரசைகள்;

(இ) இலங்கையிலும் மற்றொரு நாட்டிலுமாக இரட்டைப் பிரசா உரிமையினைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள்;

(ஈ) வெளிநாட்டு நாணயத்தில் வருமானத்தினை உழைக்கின்ற, இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வதிகின்ற இலங்கை தொழில்சார் நிபுணர்கள்;

(உ) மேற்குறிப்பிட்ட வகையினரின் சார்பாக நம்பகத்தன்மை கொண்டவர் என்ற ரீதியில் செயற்படும் வங்கிகள்.

முதலீட்டிற்கான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கின்ற வேளையில் அனைத்து தலைமை முகாமையாளர்களும் “உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்ற நியமத்தினைச் சரிபார்க்கும் நடைமுறைகளை சரிபார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

### 1.2 திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் காலம்

தகுதியுடை முதலீட்டாளர் எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்யவோ அல்லது விற்கவோ அனுமதிக்கப்படுவர்.

### 1.3 திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் முதலீடு மீதான வரையறை

அனைத்து வெளிநாட்டு முதலீட்டாளர்களும் உட்பட தகுதியுடை முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்ட மொத்த முதலீடு எந்தவொரு நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்தினை (கீழேயுள்ள கிளை வாசகம் 2.3 இற்கு உட்பட்டு) விஞ்சக்கூடாது.

### 1.4 பதிவு செய்தல்

தலைமை முகாமையாளர்கள், இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் லங்கா செகுயரின் மத்திய வைப்பக முறைமையில் அவர்களின் தகுதியுடைய முதலீட்டாளர்களின் விபரங்களை பதிவு செய்கின்றமைக்குப் பொறுப்புடையவர்களாவர். தகுதியுடைய முதலீட்டாளர்களுடனான அனைத்து திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் கொடுக்கல்வாங்கல்களும் மத்திய வைப்பக முறைமையின் வெளிநாடுகளில் வதியும் வாடிக்கையாளர் கணக்கு வகையின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.

மத்திய வைப்பக முறைமை முதலீட்டாளர்களுக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை வழங்கும்.

அ) மாத காலப்பகுதியில் இடம் பெற்ற கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று.

ஆ) ஒவ்வொரு முதலீட்டாளர் வசமுமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று.

இ) முதிர்ச்சிப் பெறுகைகள் அத்துடன்/ அல்லது வட்டிக் கொடுப்பனவுகள் எப்பொழுது மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவற்றை எடுத்துக்காட்டுகின்ற கூற்றொன்று.

இக் கூற்றுக்கள், மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட்டுள்ள முதலீட்டாளர்களின் பெயர் மற்றும் முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

## 2. முதலீட்டு நடைமுறைகள்

2.1 மேலேயுள்ள கிளை வாசகம் 1.1இன் தகுதி பெற்ற முதலீட்டாளர்கள், இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை முதலாந்தர ஏலங்களிலிருந்து/ தலைமை முகாமையாளர்களினூடாக மாத்திரம் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க, கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு தலைமை முகாமையாளர்கள் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்பவும், லங்கா செட்டில் முகாமைக்கு ஏற்புடைத்தான முறைமை விதிகளையும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களங்களினால் விடுக்கப்பட்ட மற்றைய வழிகாட்டல்களை மீறாமலும் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2.2 திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் கொள்வனவிற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் விற்பனை/ முதிர்ச்சியின் மீது பெறப்பட்ட பெறுகைகளும் மூலதன இலாபம் அல்லது வேறு ஏதாவது வட்டி வருமானத்தின் மூலமாக பெறப்பட்ட ஏதும் வருமானங்களும் முதலீட்டாளரின் பெயரில் தலைமை

முகாமையாளரினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் திறக்கப்பட்ட சிறப்பு ரூபாக் கணக்கான திறைசேரி உண்டியல்/ முறிகளின் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானியின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, இக் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கெனப் பிரத்தியேகமாக வாடிக்கையாளரின் சார்பில் சிறப்புக் கணக்கினைத் திறப்பது தலைமை முகாமையாளரின் கடமையாகும். 06.01.2009 அன்று செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இதற்கு ஏற்புடைத்தாகும்.

2.3 விற்பனையினை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கு தகுதியுடைய முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின்/ திறைசேரி முறிகளின் வரையறையில் (வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் 10 சதவீதம்) கிடைக்கத்தக்கதாகவுள்ள தன்மை பற்றி இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து விசாரித்துக் கொள்வது தலைமை முகாமையாளரின் பொறுப்பாகும். விற்பனை உறுதிப்படுத்தப்பட்டதும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு தொலைநகல்/ மின்னஞ்சல் மூலம் அறிவித்தல் வேண்டும்.

2.4 தலைமை முதலீட்டாளர்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பக முறையில் தமது முதலீட்டாளர்களுக்காக, வாடிக்கையாளர்களுக்குச் சொந்தமான முதலீட்டாளர் கணக்குகளை உரிய முறையில் திறப்பதற்குப் பொறுப்பாக இருப்பதுடன் கொடுக்கல்வாங்கல்கள் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் வாடிக்கையாளர் கணக்கு வகைகளின் கீழ் பதிவு செய்யப்படுத்தல் வேண்டும்.

2.5 இத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை பிணையங்களாகப் பயன்படுத்தி மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு தகுதியுடைய முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

### 3 நிதிய மாற்றல்கள்

3.1 தகுதியுடைய முதலீட்டாளர்கள் முதலாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை வாங்கும் பொழுது தொடர்பான தலைமை முகாமையாளர் உண்டியல்/ முறிகளின் பெறுகைகளை மத்திய வங்கியிலுள்ள தொடர்பான கணக்கிற்கு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். தகுதியுடைய முதலீட்டாளர் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை இரண்டாந்தரச் சந்தையில் விற்பனை செய்யும் வேளையில் திறைசேரி உண்டியல்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானி கணக்கினைப் பேணுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி (கட்டுக் காப்பு வங்கி) தொடர்பான ரூபாத் தொகையினை முதலீட்டாளரின் திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு- தேசாபிமானிக் கணக்கிற்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

எனினும், தகுதியுடைய முதலீட்டாளர்கள் இத் திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி திறைசேரி உண்டியல்கள்/ முறிகளைக் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3.2 தகுதியுடைய முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்கள்/ முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளினூடாக பெறப்பட்ட மொத்தத் தொகையில் 50 சதவீதம் வரையிலான தொகையினை கொடுக்கல்வாங்கல் செய்யும் நேரத்தில் சந்தை விலைகளில் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.

### 4. முதிர்ச்சியின் போது வட்டி மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவு

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள் மீது கொடுபடத்தக்க வட்டி மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகள் (முகப்புப் பெறுமதி) இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினூடாக தொடர்பான தலைமை முகாமையாளர்களுக்கு தொடர்பான முதிர்ச்சித் திகதியன்று செலுத்தப்படும். அத்தகைய தலைமை முகாமையாளர்கள், தொடர்பான கொடுப்பனவுகளை தகுதியுடைய முதலீட்டாளர்களினால் குறித்துரைக்கப்பட்ட கணக்கிற்கு அல்லது வேறு ஏதாவது கணக்கிற்கு அதே நாளன்று பெறுகைகளின் பெறுமதி சேரும் விதத்தில் மாற்றல் செய்வதற்கு பொறுப்புடையவராவர்.

### 5. கூட்டு உடமைகள்

மத்திய வைப்பக முறையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதிகளுடன் (தற்பொழுது மூன்றுவரை) திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை கூட்டாக வைத்திருக்கலாம். முதிர்ச்சிகளின் கொடுப்பனவு தலைமை முகாமையாளர்களுக்கும் கூட்டு உடமையாளர்களுக்குமிடையிலான ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருக்கும்.

### 6. வரிச் சலுகை

திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளின் சந்தையில் முதலீடு செய்துள்ள தகுதியுடைய முதலீட்டாளர்கள் அத்தகைய உண்டியல்கள்/ திறைசேரி முறிகள் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்துவைத்தல் வரி நீங்கலாக அத்தகைய திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதுவும் செலுத்தத் தேவையில்லை.

### 7. முத்திரைத் தீர்வை

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் வழங்கல் அல்லது மீட்பின் மீது பயன்படுத்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இலங்கையில் முத்திரைத் தீர்வையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

### 8. முதலீட்டு நிலையினை கணனி வழியாக அதேநேர முறையில் பார்க்கும் வசதி

முதலீட்டு நிலையினை லங்கா செகுயர் வலையமைப்பினூடாக இணையத்தளத்தில் பார்வையிட முடியும் (http://www.cbsl.lk/lankasec/). கணனி இரகசியக் குறியீட்டின் மூலம் பாதுகாப்பிடப்பட்ட முறையில் பார்வையிடுவதற்கான முறையினைப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை தலைமை முகாமையாளரிடம் சமர்ப்பிக்க முடியும்.

### 9. நியாயாதிக்கம்

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகள் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் பிரத்தியேக நியாயாதிக்கங்களைக் கொண்டுள்ளன.

### 10. ஏனையவை

தகுதியுடைய முதலீட்டாளர்கள் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசாபிமானிக் கணக்கிலிருந்து இலங்கை ரூபாவில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படும் மற்றைய கணக்கிற்கு நிதிகளை மாற்றல் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடயத்தைப் பொறுத்துக் காலத்திற்குக் காலம் விடுக்கப்படும்.

இவ் வழிகாட்டல்கள் தொடர்பான எந்தவொரு தெளிவுபடுத்தல்களையும் பின்வரும் தொலைபேசி மற்றும் தொலைநகல்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| தொலைபேசி | : + 94 11 2477316/ 076/ 291 |
| உடன் தொடர்புகளுக்கு | : + 94 11 2477777 |
| தொலைநகல் | : + 94 11 2477718/ 719/ 759 |
| மின்னஞ்சல் | : siriwardena@cbsl.lk, chandra@cbsl.lk |

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

தலைமை முகாமையாளர்களின் விபரங்கள்

1. திரு பீ ஏ சி பர்னாந்து
பொது முகாமையாளர்
இலங்கை வங்கி, மாடி 29, தலைமை அலுவலகம், 4, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 2348878/ + 94 11 2449401
தொலைநகல் எண்: + 94 11 2544324/ + 94 11 2449401
மின்னஞ்சல்: gm@boc.lk
வெப்தளம்: http://www.boc.lk

2. திரு ஏ எல் குணரத்தன
முகாமைப் பணிப்பாளர்
இலங்கை வர்த்தக வங்கி பிஎல்சி
தலைமை காரியாலயம் - கொமர்'ல் கவுஸ், அ.பெ. 856, 21 பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 2328193-5
தொலைநகல் எண்: + 94 11 2449889
மின்னஞ்சல்: email@combank.net
வெப்தளம்: http://www.combank.net

3. திரு எஸ் பி ஆர் பெரேரா
தலைமை நிறைவேற்று அலுவலகர்/ பொது முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி, சேவிங்ஸ் கவுஸ், 255 காலி வீதி கொழும்பு 3, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 2573179
தொலைநகல் எண்: + 94 11 2370740/ + 94 11 2467618
மின்னஞ்சல்: gm.nsb@nsb.lk
வெப்தளம்: http://www.nsb.lk

4. திரு சந்திரா ஜே டயஸ்
தலைமை நிறைவேற்று அலுவலகர்
நட்வேல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட், 17ஏ பான்ஸ் பிளேஸ், கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 4703000
தொலைநகல் எண்: + 94 11 4716275
மின்னஞ்சல்: info@natwealth.com
வெப்தளம்: http://ww.natwealth.com

5. திரு எம் விக்ரமசிங்க
முதன்மை நிறைவேற்று அலுவலகர்/ பொது முகாமையாளர்
மக்கள் வங்கி, 75 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினியர் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 2334041
தொலைநகல் எண்: + 94 11 2446411
மின்னஞ்சல்: wickrama@peoplesbank.lk
வெப்தளம்: http://www.peoplesbank.lk

6. திரு கரிஸ் பிரேமரட்ன
தலைமை நிறைவேற்று அலுவலகர்
சம்பத் வங்கி பிஎல்சி, 110 சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 4730630/ + 94 11 2300260
தொலைநகல் எண்: + 94 11 2300142
மின்னஞ்சல்: oper.mgr@sampath.lk
வெப்தளம்: http://www.sampth.lk

7. ஆசிறி இடமல்கொட
முதன்மைத் தலைவர், செல்வ முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டு வங்கித்துறை
எச்எஸ்பீசி பிறீமியர், 31 சேர் ஏனஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி எண்: + 94 11 24472272
தொலைநகல் எண்: + 94 11 2690177
மின்னஞ்சல்: wealthmanagementdeskcbh@hsbc.com.lk/
aasiriiddamalgoda@hsbc.com.lk
வெப்தளம்: http://www.hsbc.lk

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 சனவரி 6

*வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களின் மற்றும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்*

## வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்களுக்கும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள்

**இவ்வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் 2009 சனவரி 06ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்**

### 1. தகுதியுடைய முதலீட்டாளர்கள்

பின்வரும் வகை ஆட்கள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளில் முதலீடு செய்யத் தகுதியுடையவராவர்.

(அ) வெளிநாடுகளில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டுள்ள இலங்கையர் (வதியாதோர்).

(ஆ) வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ள/ வெளிநாடுகளில் வியாபாரத்தினை நிறுவியுள்ள இலங்கைப் பிரசைகள்

(இ) இலங்கையிலும் மற்றொரு நாட்டிலுமாக இரட்டைப் பிரசா உரிமையினைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகள்

(ஈ) வெளிநாட்டு நாணயத்தில் வருமானத்தினை உழைக்கின்ற இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வதிகின்ற இலங்கை தொழில்சார் நிபுணர்கள்

(உ) மேற்குறிப்பிட்ட வகையினரின் சார்பாக நம்பகத்தன்மை கொண்டவர் என்ற ரீதியில் செயற்படும் வங்கிகள்

மேலேயுள்ள கிளை வாசகம் 1இன் கீழுள்ள தகுதியுடைய முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை தலைமை முகாமையாளர்களினூடாக முதலாந்தர ஏலங்களிலிருந்து/ நேரடியாக கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (இச் சுற்றறிக்கையின் இறுதியில் அத்தகைய நிறுவனங்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது).

முதலீட்டாளர்கள் தாம் வதியும் நாடுகளின் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மனதில் கொண்டிருப்பது அவர்களின் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் இது விடயத்தில் முதலீட்டாளர்களினால் இழைக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் அல்லது தவறுக்கும் வழங்குநர் பொறுப்பாகமாட்டார்.

### 2. பதிவு செய்தல்

இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட தலைமை முகாமையாளர் அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் ஆகியோர், இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் லங்கா செகுயரின் மத்திய வைப்பக முறைமையில் தமது தகுதியுடைய முதலீட்டாளர்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்கு பொறுப்புடையவர்களாவர்.

மத்திய வைப்பக முறைமை பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றினை முதலீட்டாளர்களுக்கு வழங்கும்.

(அ) குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற ஒரு மாதாந்த கூற்று

(ஆ) அரையாண்டிற்கொரு முறை ஒவ்வொரு முதலீட்டாளர் வசமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற கூற்றொன்று

(இ) முதிர்ச்சிப் பெறுகைகளையும் அத்துடன்/ அல்லது வட்டிக் கொடுப்பனவுகளையும் அவை செலுத்தப்பட வேண்டிய திகதிகளையும் காட்டுகின்ற கூற்றொன்று

மத்திய வைப்பக முறையில் பதிவு செய்யப்பட்டவாறு முதலீட்டாளரின் பெயர் முகவரிக்கு இக் கூற்றுக்கள் நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

### 3. தகு நிலைமை

திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளின் முதிர்ச்சிப் பெறுகைகள் அதன் மீது வரவேண்டிய வட்டி என்பன இலங்கை அரசாங்கத்தின் நேரடியான, நிபந்தனைகளற்ற, பொதுவான, பிணையிடப்படாத கடப்பாடுகளாக இருப்பதுடன் தற்பொழுதும் எதிர்காலத்திலும் அவர்களிடையேயான நிலையும் அந் நிலைக்கு இணையானவையும் அவற்றிற்கிடையேயான எவ்வித முன்னிரிமைகளுமின்றி இலங்கை அராசங்கத்தின் அனைத்து வெளிநிற்கும் பிணையிடப்படாத மற்றும் கீழ் நிலைப்படாத கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

### 4. காலம்

தகுதியுடைய முதலீட்டாளர்கள் எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை் கொள்வனவு செய்யவும், விற்க அல்லது மாற்றல் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

### 5. திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளுக்கான கொடுப்பனவுகள்

மேலேயுள்ள கிளை வாசகம் 1இன் கீழ் தகுதியுடைய முதலீட்டாளர்கள் "திறைசேரி உண்டியல்/ முறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசாபிமானி என்றழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கொன்றினை" உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் (இதனகத்துப் பின்னர் நிதிகளின் பணத்தின் மாற்றலுடன் தொடர்பான தொழிற்பாடுகளுக்காக "கட்டுக்காப்பு வங்கி" என அழைக்கப்படுகின்றவாறு) திறந்த ரூபாவில் அக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம் திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறியினை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். கட்டுக்காப்பு வங்கி, அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையூடாக மத்திய வங்கியிலுள்ள தொடர்பான கணக்கிற்கு உரிய ரூபாத் தொகையினை மாற்றல் செய்வதற்குத் தேவையான ஒழுங்குகளை செய்தல் வேண்டும். எனினும், இலங்கையிலுள்ள வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளை திறைசேரி உண்டியல்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டுக் கணக்கு-தேசாபிமானிக் கணக்கிற்கு மாற்றல் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

### 6. திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளை வழங்கலும் விநியோகித்தலும்

மேலே கிளைவாசகம் 2இல் குறித்துரைக்கப்பட்டவாறு, மத்திய வைப்பக முறையில் பதிவு செய்தமையின் மூலம் கிளை வாசகம் 5இல் குறித்துரைக்கப்பட்டவாறு உரிய முறையில் கொடுப்பனவுகளைச் செய்த முதலீட்டாளர்களுக்கு பத்திரங்களற்ற வடிவத்தில் திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகள் வழங்கப்படும்.

### 7. மீள்கொள்வனவுச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள்

இத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை பிணையாகக் கொண்டு மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு தகுதியுடைய முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

### 8. வட்டி/ முதிர்ச்சி பெறுகைகளின் கொடுப்பனவு

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகள் மீது செலுத்தப்படத்தக்க முதிர்ச்சிப் பெறுகைகள்/ வட்டி வருமானம் தொடர்பான முதிர்ச்சி நாளன்று அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினூடாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் தொடர்பான தலைமை முகாமையாளருக்கு ரூபாவில் செலுத்தப்படும். அத்தகைய தலைமை முகாமையாளர் தொடர்பான கொடுப்பனவுகளை திறைசேரி உண்டியல்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபா கணக்கு-தேசாபிமானி கணக்கிற்கு அல்லது தகுதியுடைய முதலீட்டாளர்களினால் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதாவது கணக்கிற்கு அதே நாளன்று மாற்றல் செய்ய பொறுப்புடையவராவர்.

### 9. வெளிநாட்டிற்கு அனுப்புதல்

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் விற்பனை அல்லது முதிர்ச்சியின் மூலம் கிடைத்த அனைத்துப் பெறுகைகளையும் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானத்தினையும் முழுமையாக வெளிநாட்டிற்கு அனுப்பமுடியும். எனினும் அத்தகைய பணவனுப்பல்கள் திறைசேரி உண்டியல்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானி கணக்கு பேணப்பட்டு வரும் கட்டுக்காப்பு வங்கியினூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 10. கூட்டு உடமைகள்

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளை கிடைக்கத்தக்க வசதிகளுடன் கூட்டாகவும் வைத்திருக்கலாம். முதிர்ச்சிப்பெறுகைகளின் கொடுப்பனவும் வட்டிக் கொடுப்பனவுகளும் தலைமை முகாமையாளருக்கும் கூட்டு உடமையாளர்களுக்குமிடையிலான உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

### 11. வரித் தீர்வை

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் சந்தையில் முதலீடு செய்துள்ள தகுதியுடைய முதலீட்டாளர்கள், திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் ஆரம்ப வழங்கலின் போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்துவைத்தல் வரியைத் தவிர அத்தகைய திறைசேரி முறிகள்/ திறைசேரி உண்டியல்களின் வருவாய்களின் மீது மேலும் வரி விதிக்கப்படமாட்டாது.

### 12. முத்திரைத் தீர்வை

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் வழங்கல் அல்லது மீட்பு மீது பயன்படுத்தப்படுகின்ற அனைத்து ஆவணங்களும் இலங்கையில் முத்திரைத் தீர்வை அற்றவையாகும்.

### 13. முதலீட்டு நிலையினை கணனி வழியாக அதேநேர முறையில் பார்க்கும் வசதி

முதலீட்டு நிலையினை லங்கா செகுயர் வலையமைப்பினூடாக இணையத்தளத்தில் பார்வையிட முடியும் (http://www.cbsl.lk/lankasec/). கணனி இரகசியக் குறியீட்டின் மூலம் பாதுகாப்பிடப்பட்ட முறையில் பார்வையிடுவதற்கான முறையினைப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை தலைமை முகாமையாளரிடம் சமர்ப்பிக்க முடியும்.

### 14. நியாயாதிக்கம்

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகள் தொடர்பான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் பிரத்தியேக நியாயாதிக்கங்களைக் கொண்டுள்ளன.

### 15. ஆளுகைச் சட்டம்

திறைசேரி உண்டியல்கள்/ திறைசேரி முறிகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கைச் சட்டத்தினால் ஆளப்பட்டு பொருள் கோடப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் தேவையினைப் பொறுத்து, செலாவணிக் கட்டுபாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்படும்.

| | |
|---|---|
| தொலைபேசி | : + 94 11 2477316/ 076/ 291 |
| உடன் தொடர்புகளுக்கு | : + 94 11 2477777 |
| தொலைநகல் | : + 94 11 2477718/ 719/ 759 |
| மின்னஞ்சல் | : siriwardena@cbsl.lk, chandra@cbsl.lk |

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**தலைமை முகாமையாளரின் ஒப்பந்த விபரங்கள்**

| தலைமை முகாமையாளர் | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் |
|---|---|
| இலங்கை வங்கி | பெயர்: திரு எஸ் எம் எஸ் சி ஜெயசூரியா<br>பதவி: முதன்மை முகாமையாளர் - திறைசேரி<br>முகவரி: இலங்கை வங்கி, திறைசேரி பிரிவு, மாடி 7, தலைமை காரியாலயம், கொழும்பு 1, இலங்கை<br>தொலைபேசி எண்: + 94 11 2471605/ + 94 11 2395804<br>தொலைநகல் எண்: + 94 11 2445788<br>மின்னஞ்சல்: cmt@boc.lk/ alm@boc.lk<br>வெப்தளம்: www.boc.lk |
| இலங்கை வர்த்தக வங்கி பிஎல்சி | பெயர்: திரு துலா வீரதுங்க<br>பதவி: முதன்மை முகாமையாளர் - திறைசேரி<br>முகவரி: இலங்கை வர்த்தக வங்கி பிஎல்சி, 21 பிறிஸ்டல் வீதி, கொழும்பு 1, இலங்கை<br>தொலைபேசி எண்: + 94 11 2432116<br>தொலைநகல் எண்: + 94 11 2384650<br>மின்னஞ்சல்: Dula_Weerathunga@combank.net<br>வெப்தளம்: www.combank.net |
| தேசிய சேமிப்பு வங்கி | பெயர்: திரு என் கே தகநாயக்க<br>பதவி: உதவி பொது முகாமையாளர் - திறைசேரி<br>முகவரி: தேசிய சேமிப்பு வங்கி, என்எஸ்பீ தலைமை காரியாலயம், 255 காலி வீதி கொழும்பு 3, இலங்கை<br>தொலைபேசி எண்: + 94 11 2467431/ + 94 11 2467731<br>தொலைநகல் எண்: + 94 11 2564706<br>மின்னஞ்சல்: ceo.nsbfm@nsb.lk<br>வெப்தளம்: www.nsb.lk |
| நட்வேல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் | பெயர்: திரு சந்திரா ஜே டயஸ்<br>பதவி: தலைமை நிறைவேற்று அலுவலகர்<br>முகவரி: நட்வேல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட், 17ஏ பான்ஸ் பிளேஸ், கொழும்பு 7, இலங்கை<br>தொலைபேசி எண்: 94 11 24716274/ + 94 11 712779867<br>தொலைநகல் எண்: + 94 11 4716275<br>மின்னஞ்சல்: chandra@natwealth.com<br>வெப்தளம்: www.natwealth.com |
| மக்கள் வங்கி | பெயர்: திரு என் வசந்த குமார்<br>பதவி: மூத்த பிரத பொது முகாமையாளர் - திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கித்தொழில்<br>முகவரி: மக்கள் வங்கி, 34 சேர் முகமட் மாக்கன் மாக்கர் மாவத்தை, கொழும்பு 3, இலங்கை<br>தொலைபேசி எண்: + 94 11 2308782<br>தொலைநகல் எண்: + 94 11 2304491<br>மின்னஞ்சல்: kumarnv@peoplesbank.lk<br>வெப்தளம்: www.peoplesbank.lk |
| சம்பத் வங்கி பிஎல்சி | பெயர்: திரு விஜே தம்பவென்னி<br>பதவி: உதவி பொது முகாமையாளர் - திறைசேரி<br>முகவரி: சம்பத் வங்கி பிஎல்சி, 110 சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2, இலங்கை |

| | |
|---|---|
| | தொலைபேசி எண்: + 94 11 2300145/ + 94 11 4730347<br>தொலைநகல் எண்: + 94 11 2300144<br>மின்னஞ்சல்: dambawinne@sampath.lk<br>வெப்தளம்: www.sampth.lk |
| த கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் | பெயர்: அயந்தி சமரசிங்க<br>பதவி: முகாமையாளர், செல்வ முகாமைத்துவம்<br>முகவரி: எச்எஸ்பீசி பிறீமியர், 31 சேர் ஏனஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7, இலங்கை<br>தொலைபேசி எண்: 94 11 24472272/ + 94 11 4739496<br>தொலைநகல் எண்: + 94 11 2690177<br>மின்னஞ்சல்: wealthmanagementdeskcbh@hsbc.com.lk/<br>ayanthisamarasinghe@hsbc.com.lk<br>வெப்தளம்: www.hsbc.lk |

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 யூன் 15

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/02/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

**2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் விதிகளுக்கான திருத்தம்**

லங்கா செட்டில் முறைமையின் ஒழுங்குவிதிகளின் தொகுதி 3இல் உள்ள பிரிவு 4.2 இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பதாரியின் கணக்கினை பின்வருமாறு உட்புகுத்துவதன் மூலம் 2009 யூன் 11ஆம் நாளிலிருந்து திருத்தப்படுவது பற்றி தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

> **"இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பதாரர் கணக்கு:** திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு மற்றும் திறைசேரி முறிகள்/ உண்டியல்கள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - தேசாபிமானி என்பனவற்றின் கீழ் இரட்டைப் பிராசா உரிமை விண்ணப்பதாரிகளுக்குச் சொந்தமான பிணைய உடமைகள்"

இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பதாரர் கணக்கிற்கான வரவுகள் அனைத்து லங்கா செட்டில் பங்கேற்பாளர்களினாலும் அனுமதிக்கப்படுகின்றதெனினும், குறிப்பிட்ட முதலீட்டாளருக்கு பொதுப் படுகடன் கண்காணிப்பாளர் அனுமதியினை வழங்கினாலொழிய பற்றுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 யூன் 15

*அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்,*
*முதனிலை வணிகர்கள், திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு*
*ரூபாக் கணக்கு - தேசபிமானி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட கூட்டு தலைமை முகாமையாளர்களுக்கு*

அன்புள்ள ஐயா

## அரச திறைசேரி முறிகளில் முதலீடு செய்தவர்களுக்கான இரட்டைப் பிரசா உரிமை

பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரச திறைசேரி முறிகளில் முதலீடு செய்துள்ள/ முதலீடு செய்ய விரும்புகின்ற வெளிநாட்டுப் பிரசா உரிமையைக் கொண்டுள்ள முன்னாள் இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரசா உரிமையினை வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள், வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகளைத் திறந்துள்ள அல்லது திறப்பதற்கு விரும்புகின்ற வெளிநாட்டு பிரசா உரிமையினை வைத்திருக்கும் இலங்கையர்களும் இரட்டைப் பிரசா உரிமைக்கு தகுதியுடையவராவர்.

இரட்டைப் பிரசா உரிமைக்கான தகைமைப் பிரமாணங்களை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக, இத் தீர்மானத்திற்கு வலுவளிக்கும் பொருட்டு திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு மற்றும் திறைசேரி உண்டியல்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசாபிமானி என்பனவற்றின் கீழ் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளையும் முதலீட்டாளர்கள் பயன்படுத்தலாம்.

**நியதிகளும் நிபந்தனைகளும்**

1. இரட்டைப் பிரசா உரிமையினை வழங்குவதற்காக திறைசேரி முறிகளின் குறைந்தபட்ச முதலீட்டுத் தொகை, முதிர்ச்சிக்காலம் விதிக்கப்படவுள்ள கட்டணம் என்பன பின்வருமாறு:

| குறைந்தபட்ச திறைசேரி முதலீட்டுத் தேவைப்பாடு | முதிர்ச்சிக் காலம் | விதிக்கப்படவுள்ள கட்டணம் |
|---|---|---|
| ஐ.அ.டொலர் 25,000 அல்லது அதற்குச் சமனான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | 3 ஆண்டுகள் | இலங்கை ரூ. 200,000 |
| ஐ.அ.டொலர் 25,000 அல்லது அதற்குச் சமனான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | 5 ஆண்டுகள் | விலக்களிக்கப்பட்டுள்ளது |
| ஐ.அ.டொலர் 50,000 அல்லது அதற்குச் சமனான வேறு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் | 3 ஆண்டுகள் | விலக்களிக்கப்பட்டுள்ளது |

2. பிரதான விண்ணப்பதாரி, விடயம் 1இல் உள்ளவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் அல்லது உரிமை பெற்ற வர்த்த வங்கிகளுடன் முன் சொல்லப்பட்ட முதலீடுகளை மேற்கொண்டிருப்பாராயின் அவரது குடும்ப அலகும் இரட்டைப் பிரசா உரிமை வழங்குவதன் மீது விதிக்கப்படுகின்ற எந்தவொரு கட்டணக் கொடுப்பனவுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

3. வைப்புக்களின்/ முதலீடுகளின் மொத்த தொகையும் குறைந்தபட்சக் காலமும் குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட தகைமைப் பிரமாணத்தினை திருப்திப்படுத்துமிடத்து இரட்டைப் பிரசா உரிமைக்குரிய தகைமைப் பிரமாணத்தினை வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு இரட்டைப் பிரசா உரிமைக் கணக்கு மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்படும் முதலீடு என்பனவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் பூர்த்தி செய்ய முடியும்.

4. கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், கூட்டுக் கணக்கு உடைமையாளர்களில் ஒருவர் மாத்திரம் தகைமைப் பிரமாணத்தினைப் பூர்த்தி செய்வதற்காக கணக்கு மீதியைப் பயன்படுத்த உரித்துடையவராவர் மற்றைய கூட்டுக் கணக்கு உடமையாளர் இதே நன்மையினை அனுபவிக்க விரும்பின் ஒன்றில் முதலீட்டுக் காலப்பகுதியினை அல்லது முதலீட்டுத் தொகையினை விகிதாசார அடிப்படையில் அதிகரித்தல் வேண்டும். இந்நிபந்தனை, கூட்டாகக் கணக்கினைப் பேணும் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்புடைத்தாகாது.

5. இரட்டைப் பிரசா உரிமை விண்ணப்பம் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட முதலீட்டுடன் தொடர்புடையதாயின், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டு நாயகத்தின் கோரிக்கையின்படி விண்ணப்பதாரியின் எழுத்து மூலமான சம்மதத்துடன் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் அம் முதலீடு தடுத்து வைக்கப்படல் வேண்டும்.

6. அத்தகைய திறைசேரி முறிகளின் முதலீடு மீது ஒன்று சேரும் வட்டியை திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் வெளிநாட்டு ரூபாக் கணக்கு மற்றும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு-தேசாபிமானி ஆகிய திட்டங்களின் கீழ் எவ்வித கட்டுப்பாடுமின்றி வெளியில் அனுப்பலாம்.

7. பொதுப் படுகடன் கண்காணிப்பாளரின் முன் ஒப்புதலை பெறாமல் முதிர்ச்சிக்கு முன்னர் தடுத்து வைக்கப்பட்ட முதலீட்டினையோ அல்லது அதன் ஒரு பகுதியினையோ மீளப் பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இது தொடர்பாக லங்கா செட்டிலின் அனைத்தும் பங்கேற்பாளர்களுக்கும் 2009 யூன் 15மும் நாள் வெளியிடப்பட்ட தொடர்பு எண் எஸ்எஸ்எஸ்எஸ்/05/2009 கொண்ட சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

8. இவ் வசதி தொடர்பான தகவல்களும் வழிகாட்டல்களும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் வெப்தளமான www.immigration.gov.lk இல் கிடைக்கும்.

உங்கள் உண்மையுள்ள

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**தொடர்பு: 08/24/001/0001/009**

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 யூன் 22

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

## பங்கிலாபங்களை வெளிப்படுத்துவது தொடர்பான கட்டுப்பாடுகள் மீதான பணிப்புரை

முதனிலை வணிகர்களின் முறைமையின் பாதுகாப்பு, ஆற்றல் வாய்ந்த தன்மை உறுதிப்பாடு என்பனவற்றை மேம்படுத்துவதனையும் முதனிலை வணிகர்களின் மூலதனத் தளத்தினை கட்டியெழுப்புவதனையும் நோக்காகக் கொண்டு, முதனிலை வணிகர்கள் பங்கிலாப வெளிப்படுத்தல்களை 01.01.2009 இற்கும் 31.12.2009 இற்குமிடைப்பட்ட காலத்தில் உழைத்து தேறல் செய்யப்பட்ட இலாபத்தில் உயர்ந்தபட்சம் 50 சதவீதத்திற்கு கட்டுப்படுத்துமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தேறல் செய்யப்பட்ட இலாபம் என்பது மீள் மதிப்பீட்டு இலாபங்களைக் கழித்த பின்னர் பெறப்படுவதாகும்.

வருடாந்த இலாபத்தில் 25 சதவீதத்தினை சிறப்பு இடர்நேர்வு ஒதுக்கிற்கு மாற்றல் செய்ய வேண்டும் என்ற தேவைப்பாட்டினை உள்ளடக்கியிருக்கும் 2005ஆம் ஆண்டின் ஏப்பிறல் 18ஆம் நாள் விடுக்கப்பட்ட பணிப்புரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

இப் பணிப்புரையானது, பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ், நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட 2002 பெப்புருவரி 1ஆம் நாளிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் 12ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்பட்டதாகும்.

இப் பணிப்புரையானது உடனடியாக பிரயோகத்திற்கு வரும்.

தயவுசெய்து கிடைத்தமை பற்றி அறியத் தரவும்.

ஒப்பம்
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**தொடர்பு: 08/25/001/0062/001**

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 ஓகத்து 4

*அனைத்து லங்கா செட்டில் முறைமையின் பங்கேற்பாளர்களுக்கும்*

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - அரச பிணையங்களுடன் தொடர்புபட்ட வாடிக்கையாளர் மீள்நிலைப்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் பரந்த துறை வலையமைப்பினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பம்**

மேலேயுள்ள விடயம் தொடர்பாக 2007 செத்தெம்பர் 28ஆம் நாளிடப்பட்ட எண் எஸ்எஸ்எஸ்எஸ்/05/2007 கொண்ட எமது சுற்றறிக்கை மற்றும் 2008 யூலை 23ஆம் நாளிடப்பட்ட எண் 08/25/001/0062/001 கொண்ட கடிதங்கள் தொடர்பானது.

பி.ப. 2.00 மணிக்கு பதிவேற்றம் செய்யப்படவுள்ள லங்கா செகுயருக்கான மேலதிக பிணைய மாற்றல் தொகுதியும் லங்கா செகுயருக்கு பி.ப. 12.30 மணிக்கு பதிவேற்றம் செய்யப்படுகின்ற நடைமுறையிலுள்ள தொகுதியும் 2008 ஓகத்து 10ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு வேலை நாளன்றும் நண்பகல் 12.00 மணிக்கு முன்கூட்டியே பதிவேற்றம் செய்யப்படும். இதன் காரணமாக, லங்கா செகுயருக்கான பிணைய மாற்றல் தொகுதிகள் ஒவ்வொரு வேலை நாளன்றும் மு.ப. 9.00 மணி, நண்பகல் 12.00 மணி, பி.ப. 2.00 மணி, பி.ப. 3.00 மணி மற்றும் பி.ப. 4.00 மணிக்கு பதிவேற்றும் செய்யப்படும்.

முறைமையினைப் பயன்படுத்துவது தொடர்பாக தங்களுக்கு மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் எவ்வித தயக்கமுமின்றி பின்வரும் அலுவலகங்களில் எவரையேனும் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| திரு எஸ் பி வீரசிங்க | 2477276 | pddspw@cbsl.lk |
| திரு லசித்த பத்பேரிய | 2477271 | lasitha@cbsl.lk |
| திரு டி ஏ எம் ஏ எல் பீ டீகல | 2477489 | arunadeegala@cbsl.lk |

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**தொடர்பு: 08/24/001/0001/009**

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 நவெம்பர் 20

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

**முதனிலை வணிகர்களின் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவது மீதான பணிப்புரை**

இப் பணிப்புரையானது, பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ், நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட 2009 யூன் 24ஆம் நாளிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் 11ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்பட்டிருப்பதுடன் இது 2009 திசெம்பர் 02 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

1. முதனிலை வணிகர்கள் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(அ) திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மற்றும் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் வழங்கப்பட்ட சாதனங்களிலும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் முதலாந்தர ஏலங்களிலான விலைக்கோரல்களிலும் அத்தகைய முதலாந்தரச் சந்தையில் பிணையங்களை கொள்வனவு செய்வதிலும்;

(ஆ) இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் மற்றும் ஏனைய அரச மத்திய வங்கிப் பிணையங்களின் வர்த்தகத்தில் மத்திய வங்கியுடனும் மற்றையவர்களுடனும் ஈடுபடுதல்;

(இ) திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் மற்றும் ஏனைய அரச மற்றும் மத்திய வங்கிப் பிணையங்களில் ஈடுபடுதல், இரண்டாந்தரச் சந்தையினை ஊக்குவித்து அபிவிருத்தி செய்தல்;

(ஈ) வருமானத்தினை உழைப்பதற்காக சொத்துப்பட்டியல் முகாமைத்துவப் பணிகள், செயற்றிட்ட மதிப்பீட்டு பணிகள், கடன் கூட்டுச் சேர்க்கும் பணிகள், இணைப்பு ஈட்டிய மதியுரைப் பணிகள் மற்றும் ஆலோசனைப் பணிகள் போன்ற மூலதனத்தின் மீது மோசமான தாக்கத்தினைக் கொண்டிராத கட்டணத்தினை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளில் ஈடுபடுதல்;

(உ) இலங்கையிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபையினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் தன்மையினைக் கொண்ட வங்கித்தொழில் மற்றும் நிதிக் கம்பனிகளின் சொந்தக் குழுமக் கம்பனிகளின் சாதாரண பங்குகளில் அல்லது தொகுதிக் கடன்களில் கீழேயுள்ள பிரிவு 2 மற்றும் 3இன் நிபந்தனைகளுக்குட்பட்டு முதலீடு செய்தல்; அத்துடன்

(ஊ) மேலேயுள்ள பந்தி (அ) இலிருந்து (இ) வரையானவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட அல்லது தற்செயலாக ஏற்பட்ட எந்தவொரு நடவடிக்கையும்;

2. முதனிலை வணிகர்கள், பொதுப் படுகடன் திணைக்களத்திலிருந்து ஒப்புதலைப் பெற்ற பின்னர் மாத்திரமே நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கப்படுவர். பொதுப் படுகடன் திணைக்களம், முதனிலை வணிகரின் எழுத்து மூலமான கோரிக்கை கிடைக்கப் பெற்றதும் மேற்சொல்லப்பட்ட கோரிக்கையினை மதிப்பீடு செய்வதன் மூலம் பன்முகப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு ஒவ்வொரு விடயமாக ஒழுங்குமுறையில் அனுமதி வழங்கும்.

3. முதனிலை வணிகர்கள், ஏற்கனவேயுள்ள பணிப்புரைகளின் கீழ், குறைந்தபட்சமாக தேவைப்படுத்தப்பட்ட மூலதனத்திற்கு மேலதிகமாகவுள்ள மூலதனத்துடன் மட்டுமே பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதுடன், சொல்லப்பட்ட பன்முகப்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்ற மேற்குறிப்பிட்ட மூலதனம் முதனிலை வணிகர்களினால் மொத்த மூலதனத்தில் 25 சதவீதத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். மொத்த மூலதனம், பிந்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றில் குறிப்பிடப்பட்ட மூலதனமாக இருத்தல் வேண்டும்.

4. மூலதனப் போதுமை நோக்கங்களுக்காக இரண்டு நிறுவனங்களும் மூலதன நிதியத்தின் ஒரே தொகையினை பயன்படுத்துவதனைத் தவிர்க்கும் பொருட்டு சொந்த குழுமக் கம்பனியின் பங்குகளில் செய்யப்படும் முதலீடுகள், மூலதனப் போதுமை விகிதத்தினைக் கணிக்கும் வேளையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலதனத்திலிருந்தும் கழிக்கப்படல் வேண்டும்.

5. முதனிலை வணிகர்கள், அவற்றின் சொந்த குழுமக் கம்பனிகளின் பெரும்பான்மையான பங்குடமைகளில் முதலீடுகளைச் செய்வதன் மூலம் துணைக் கம்பனிகளை ஏற்படுத்தவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6. பங்கு முதலீடுகள், மாதாந்த அடிப்படையில் சந்தைப் பெறுமதிப்படி குறிக்கப்பட வேண்டியதுடன் இலாபம்/ நட்டங்கள் இலாப நட்டக் கணக்கிற்கு கொண்டு செல்லப்படவும் வேண்டும்.

7. மற்றைய ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் குறித்துரைக்கப்பட்ட ஒப்புதல்கள் தேவையாயின், மேலே (1)ஈ மற்றும் (1 (உ) இன் கீழ் விபரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்ந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

8. முதனிலை வணிகர்கள் அவர்களது நடவடிக்கைகளை 1(அ) இலிருந்து 1(உ) வரையானவற்றின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு மட்டுப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். முதனிலை வணிகர்களினால் வேறு ஏதேனும் முதலீடுகள்/ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருமாயின் இப் பணிப்புரையின் நாளிலிருந்து ஆறு மாத காலப்பகுதிக்குள் அவற்றில் ஈடுபடுவதிலிருந்தும் நீங்கிவிட வேண்டும்/ நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

9. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை வணிகர்கள் பிரிவுகள், முதலாந்தர, இரண்டாந்தரச் சந்தையின் அரச பிணையங்கள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் மீது தனித்தனியான கணக்குகளைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. மேலும், பொதுப் படுகடன் திணைக்களம் காலத்திற்குக் காலம் கேட்டுக் கொள்ளும் தகவல்கள் ஏதும் இருப்பின் அவற்றை வழங்குமாறு முதனிலை வணிகர்கள் பிரிவுகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

10. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை வணிகர்கள் பிரிவுகளைப் பொறுத்தவரையில், இப் பணிப்புரைகளுக்கும், திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் மற்றும் வேறு ஏதாவது பணிப்புரைகள், தீர்மானங்கள் அவை தொடர்பாக வழங்கப்பட்ட கட்டளைகள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஏற்புடைத்தான சட்டங்கள் என்பனவற்றிற்கிடையே முரண்பாடுகள் ஏதும் காணப்படுமாயின் அத்தகைய சட்டங்களின் ஏற்பாடுகள் மற்றும் பணிப்புரைகள், தீர்மானங்கள், கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகள் மற்றும் கட்டளைகளே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

11. அனைத்து முதனிலை வணிகர்களும் பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வெவ்வேறு பதிவேடுகளைப் பேணுமாறும் மாதாந்த நிதியியல் கூற்றுக்களுடன் சேர்ந்து பொதுப் படுகடன் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் அறிக்கையானது இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளவாறான தகவல்களை கொண்டிருத்தல் வேண்டும்.

12. மேலே 2இல் தரப்பட்டுள்ளவாறு, பொதுப் படுகடன் திணைக்களம் அனுமதியினை வழங்குகின்ற நேரத்தில் முதனிலை வணிகர்கள் பின்வரும் விகிதங்களைப் பேணுதல் வேண்டும்.

(i) 10 சதவீதம் கொண்ட இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்.

(ii) குறைந்தபட்ச ஆண்டு மொத்தப் புரள்வு திறைசேரி முறிகளின் 10 மடங்காகவும் திறைசேரி உண்டியல்களின் 20 மடங்காகவும் இருத்தல் வேண்டும். ஆண்டு மொத்தப் புரள்வு விகிதமானது கடந்த 12 மாத காலப்பகுதியின்

வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் சராசரி இருப்புக்கான இதே காலப்பகுதியின் இரண்டாந்தரச் சந்தையின் உடனடிக் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவின் விகிதமாக கணிக்கப்பட வேண்டும்.

(iii) சனவரி - யூன் மற்றும் யூன் - திசெம்பர் காலப்பகுதிக்காக அரையாண்டு அடிப்படையில் கண்காணிக்கப்பட்டவாறு திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் ஏலங்களுக்காக தனித்தனியாக குறைந்தபட்சம் 5 சதவீதம் கொண்ட சராசரி தாக்கமுள்ள பங்கேற்பு விகிதம்.

தயவுசெய்து கிடைத்தமை பற்றி அறியத் தரவும்.

ஒப்பம்
சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

இணைப்பு 1

**மூலதனத்தினைப் பயன்படுத்தாத பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மீதான அறிக்கை**

1. நடவடிக்கையின் வகை :
2. ஒவ்வொரு நடவடிக்கையிலிருந்தும் உழைக்கப்பட்ட மொத்த வருமானம் :

(இந் நடவடிக்கையிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் இலாப நட்டக் கணக்கில் “கட்டண வருமானமாக” தனியாகக் காட்டப்படல் வேண்டும்)

மூலதனத்தினைப் பயன்படுத்தும் பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மீதான அறிக்கை

1. முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் பெயர் :
2. முதலீட்டின் பெறுமதி :
3. பங்குகளின் எண்ணிக்கை :
4. முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் மொத்த முதலீட்டின் பங்கின் சதவீதமாக :
5. சந்தைப் பெறுமதிப்படியான மதிப்பீடு :
6. சந்தைப் பெறுமதியினை பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை :
7. அறிக்கையிடும் காலப்பகுதியில் மாற்றல்கள்/ பங்குகளின் விற்பனை தொடர்பான விபரங்கள் :
8. தொகுதிப் பங்குகளில் செய்யப்பட்ட முதலீட்டின் விபரங்கள் :

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 நவெம்பர் 24

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2009 மேயில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்

2009 மேயில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை ஒழுங்குவிதிகளின் வாசகம் 2.0 இன் தொகுதி 3இன் கிளை வாசகம் 5.8 இன் முதலாம் பந்தி பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் 2009 நவெம்பர் 25ஆம் நாளிலிருந்து திருத்தப்படுகிறது என்பது பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தருகின்றோம்.

**எதிர்கால செல்லுபடியாகும் திகதிகள் இடப்பட்ட தீர்ப்பனவிற்கான பிணையங்கள் அறிவுறுத்தல்களை லங்கா செகுயர் ஏற்றுக் கொள்ளவுள்ளதுடன் அத்தகைய அறிவுறுத்தல்கள் அத்தகைய செல்லுபடியாகும் திகதி வரை பேணப்படும். முறைமையானது, நடைமுறைத் திகதிக்கு முன்கூட்டிய 364 கலண்டர் நாட்கள் வரைக்குமான பிணையங்களின் அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளுமென்பதுடன் எதிர்கால செல்லுபடியாகும் திகதிகள் முன்கூட்டிய 364 கலண்டர் நாட்களுக்கும் கூடுதலாக இருக்குமாயின் அதனை நிராகரிக்கும்.**

இதற்கமைய, லங்கா செட்டில் முறைமை ஒழுங்குவிதிகளின் தொகுதி 3இன் கிளை வாசகம் 5.8, 2009 நவெம்பர் 25ஆம் நாளிலிருந்து பின்வருமாறு வாசிக்கப்படும்.

**"5.8 முன்னோக்கிய திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்"**

எதிர்கால செல்லுபடியாகும் திகதிகள் இடப்பட்ட தீர்ப்னவிற்கான பிணையங்கள் அறிவுறுத்தல்களை லங்கா செகுயர் ஏற்றுக் கொள்ளவுள்ளதுடன் அத்தகைய அறிவுறுத்தல்கள் அத்தகைய செல்லுபடியாகும் திகதி வரை பேணப்படும். முறைமையானது, நடைமுறைத் திகதிக்கு முன்கூட்டிய 364 கலண்டர் நாட்கள் வரைக்குமான பிணையங்களின் அறிவுறுத்தல்களை ஏற்றுக் கொள்ளுமென்பதுடன் எதிர்கால செல்லுபடியாகும் திகதிகள் முன்கூட்டிய 364 கலண்டர் நாட்களுக்கும் கூடுதலாக இருக்குமாயின் அதனை நிராகரிக்கும்.

லங்கா செகுயரினால் பெறப்பட்ட பிணைய அறிவுறுத்தலொன்றின் செல்லுபடியாகும் திகதி கடந்துவிட்டதாயின் அது நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு வியாபார நாளின் ஆரம்பத்திலும் லங்கா செகுயர் பேணி வைத்திருக்கப்படும் ஒவ்வொரு அறிவுறுத்தலும் செல்லுபடியாகும் பெறுமதி திகதியைக் கொண்டிருக்கின்றதா என்பது பற்றி பரிசோதித்துக் கொள்ளும். பேணி வைத்திருக்கப்படும் பிணையங்களின் அறிவுறுத்தல்களின் பெறுமதித் திகதி ஏற்கனவே கடந்துவிட்டிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

வியாபார நாள் "இரத்துச் செய்யப்படும்" சந்தர்ப்பத்தில் உதாரணமாக, வழமைக்கு மாறான சூழ்நிலைகளின் காரணமாக நாளொன்று மத்திய வங்கியினால் வியாபாரத்திற்கு திறக்கப்படாதவிடத்து அந்த செல்லுபடியாகும் நாளுக்காக பேணி வைத்திருக்கப்பட்டிருக்கும் பிணையங்களின் அறிவுறுத்தல்களை இரத்துச் செய்வது அல்லது நிராகரிக்கப்படுவதனைத் தொடர்ந்து புதிய செல்லுபடியாகும் திகதிக்காக மீள அனுப்பி வைப்பது பங்கேற்பாளரின் பொறுப்பாகும்.

சி ஜே பி சிறிவர்த்தன
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன்

கே பீ திஸ்ஸகருணா
பணிப்பாளர்/ கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்

பொதுப்படுகடன் திணைக்களம்
2009 திசெம்பர் 17

**சுற்றறிக்கை எண்: எஸ்எஸ்எஸ்எஸ்/04/2009**

*லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்*

## 2009 மேயில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கான திருத்தங்கள்

2009 மேயில் விடுக்கப்பட்ட லங்கா செட்டில் முறைமையின் ஒழுங்குவிதிகளின் தொகுதி 3இல் உள்ள பிரிவு 4.2, உள்நாட்டு தொழிற்பாடுகளின் பிணைய கடன்பாட்டுக் கணக்கினை உட்புகுத்துவதன் மூலம் 2009 திசெம்பர் 17ஆம் நாளிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வரும் விதத்தில் திருத்தப்படுகின்றமை பற்றி தங்களுக்கு இத்தால் அறியத் தரப்படுகின்றது.

> **"உள்நாட்டு தொழிற்பாடுகள் பிணையக் கடன்பாட்டுக் கணக்கு:** அரச பிணையங்கள் கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியினால் கடன்படப்பட்ட பிணையங்களின் உடமைகள் மத்திய வங்கியின் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் பயன்படுத்தப்படவுள்ளதுடன் அவை கடன் வழங்கியவருக்கு எதிர்காலத் திகதியொன்றில் திருப்பி அனுப்பப்படும்."

சி ஜே பி சிறிவர்த்தன
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்**

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2009, மாச்சு 31 ஆம் திகதி

**2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) பணிப்புரை**

1. இப் பணிப்புரை 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் 2009 மாச்சு 15 ஆம் திகதி நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஆகக் குறைந்த திரவச் சொத்தொன்றினைப் பேணிவருதல் வேண்டும். இது எந்தவொரு வேலைநாள் முடிவின் போதும் மொத்தத்தின் பின்வரும் சதவீதத்திற்கு குறையாததாக இருத்தல் வேண்டும்:

   (i) பின்வருவனவற்றில் பத்து சதவீதம்

      (அ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவுறுகையில் நிதிக் கம்பனியினால் பெறப்பட்ட தவணை வைப்புக்களின் வெளிநிற்கும் பெறுமதியில்; அத்துடன்

      (ஆ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவுறுகையில் நிதிக் கம்பனியினியின் கணக்கேட்டில் காணப்படுகின்றவாறு நிதிக்கம்பனியினால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் முகப்புப் பெறுமதியில்; அத்துடன்,

   (ii) அத்தகைய நாளின் வியாபாரம் முடிவுறுகையில், அத்தகைய கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதியில் பதினைந்து சதவீதம்.

3. ஒவ்வொரு நிதிக்கம்பனியும், அந்த மாதத்தின் ஒவ்வொரு வாரத்தினதும் இறுதி வேலைநாளன்று வியாபாரம் முடிவடைந்த நேரத்திலுள்ளவாறான மொத்த வைப்புப் பொறுப்புக்களையும் திரவச் சொத்துக்களையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பணிப்பாளரினால் விபரிக்கப்பட்ட படிவத்தில் மாதாந்தக் கூற்றொன்றினை பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மாதத்தின் இறுதி வேலைநாளும் அத்தகைய மாதத்தின் இறுதி வாரத்தின் இறுதி வேலைநாளும் ஒன்றாக இருக்காதவிடத்து இதனை மாதத்தின் இறுதி வேலைநாளன்று உள்ளவாறு மேற்கொள்ளல் வேண்டும். அத்தகைய கூற்றினை தொடர்ந்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னதாக பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் முற்போர்ந்த நிதியாண்டினது பன்னிரண்டு மாதங்களின் மொத்த வைப்பு பொறுப்புக்களின் மாதாந்த சராசரியில் ஏழரை சதவீதத்திற்கு (7.5) சமனான தொகையினை இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஆகியவற்றின் வடிவில் எல்லா நேரத்திலும் பேண வேண்டும்.

5. மேலேயுள்ள பந்தி 4 இல் குறிப்பிடப்பட்ட இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன மேலேயுள்ள 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட திரவச் சொத்துக்களின் ஒரு பகுதியையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. மேலேயுள்ள பந்தி 4 இன் விதிகளுக்கு இணங்கும் விதத்தில் நிதிக் கம்பனியொன்றின் வசமுள்ள இலங்கை அரச திறைசேரி உண்டியல்களையும், இலங்கை அரச பிணையங்களையும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களையும் வணிக வங்கியொன்றில் அல்லது ஒன்றிற்கு கூடுதலான வங்கிகளில் அல்லது முதன்நிலை வணிகர் கம்பனியொன்றில் அல்லது ஒன்றிற்கு கூடுதலானவற்றின் கட்டுக்காப்பில் வைத்திருக்க முடியும். ஒவ்வொரு நிதிக் கம்பனியும் அத்தகைய உண்டியல்கள்/ பிணையங்கள் தொடர்பாக அத்தகைய வங்கி/ வங்கிகள் அல்லது முதனிலை வணிகர்கள்/ கம்பனி/ கம்பனிகளிடமிருந்து பெற்ற விபரங்களை பணிப்பாளரினால் விபரிக்கப்பட்ட படிவத்தில் வாராந்த கூற்றொன்றாக பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்.

7. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் அதன் முற்போந்த நிதியாண்டின் பன்னிரண்டு மாத காலப்பகுதியின் மாத இறுதியில் காணப்படும் பொறுப்புக்களைக் காட்டுகின்ற கூற்றொன்றினை, அத்தகைய நிதியாண்டு முடிவடைந்ததைத் தொடர்ந்துவரும் மாதத்தின் பதினைந்தாம் (15) நாளன்றோ அல்லது அதற்கு முன்போ பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப் பணிப்புரையில்,

(i) “தவணை வைப்புக்கள்” என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) பனிப்புரையில் உள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

(ii) “மொத்த வைப்புப் பொறுப்புக்கள்” என்பது தவணை வைப்புக்கள் வைப்புச் சாண்றிதழ்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

(iii) “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

(iv) “உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்” என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் வட்டத்தில் குறிப்பிடப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் எனப் பொருள்படும்.

(v) “முதனிலை வணிகர் கம்பனி” என்பது 1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) கட்டளைச் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான பதிவுசெய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 55 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள், இருப்புக்கள் கட்டளை முதனிலை வணிகர்கள் விதிகளின் கருத்துக்குட்பட்ட முதனிலை வணிகர் கம்பனி எனப் பொருள்படும்.

9. 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) பணிப்புரை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2009, மாச்சு 31ஆம் திகதி

## 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை

1. இப் பணிப்பு 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் 2009 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (அ) எந்தவொரு நிதிக் கம்பனியினாலும் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம்:

(i) அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு நான்கு (4) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு ஆறு (6) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சக்கூடாது.

ஆ) நிதிக் கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் முறியொன்றின் அல்லது வேறு ஏதேனும் சாதனத்தின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த சாதனத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்

(i) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு நான்கு (4) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு ஆறு (6) சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சாத வகையில், அத்தகைய முறி சம்பந்தமாக வழங்கப்படக் கூடிய வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3. நிதிக் கம்பனியொன்றினால் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டி வீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முந்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை விஞ்சக்கூடாது.

4. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனியினால், அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. இப் பணிப்பில்,

(i) "தவணை வைப்புக்கள்" என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்; மற்றும்

(ii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2008 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

## 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

எஸ். எஸ். ரத்னாயக்க
பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2009, ஏப்பிறல் 22 ஆம் திகதி

## 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) பணிப்புரை

1. இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுதல் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், நிதிக்குத்தகைக்கு விடல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்ட

பகிரங்க கம்பனியாக இருக்கின்ற ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகைக்கு விடுகின்ற நிறுவனத்துக்கும் (இதனகத்துப் பின்னர் "தொடர்பான நிறுவனம்" எனக் குறிப்பிடப்படும்) ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இச் சட்டத்தின் கீழ் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட எந்தவொரு ஏனைய பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கும் முரண்படாது, நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் *மீளவமைத்தல் காலப்பகுதியில்* பின்வருவனவற்றில் எதையும் மேற்கொள்ளக்கூடாது.

   (i) கடன்கள், கொடுகடன் வசதிகள் அல்லது கொடைகள், நன்கொடைகள் மற்றும் மாற்றல்கள் உள்ளிட்ட எந்த வகையான நிதியியல் கடன் வசதியையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ *தொடர்பான தரப்பினருக்கு* வழங்கல்;

   (ii) பங்குகளிலோ அல்லது வேறு விதத்திலோ எந்தவொரு *தொடர்பான கம்பனியில்* நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முதலீடு செய்தல்;

   (iii) *தொடர்பான தரப்பினரின்* எந்தவொரு பொறுப்புத் தொடர்பாகவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உத்தரவாதமளித்தல், பிணையம் வைத்தல், பண உதவியளிக்க உறுதிமொழி அளித்தல் அல்லது அதே மாதிரியான உறுதிமொழியை மேற்கொள்ளல்;

   (iv) நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் எந்தவொரு அலுவலக உறுப்பினருக்கோ அல்லது எந்தவொரு பணிப்பாளருக்கோ காசாகவோ அல்லது வேறு விதமாகவோ மிகை இலாபக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்;

   (v) நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் எந்தவொரு பங்குதாரருக்கும் காசாகவோ அல்லது வேறு விதமாகவோ பங்குகள் மீது பங்கிலாபங்களைச் செலுத்துதல்.

3. நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அல்லது பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்கு விடும் நிறுவனங்கள் தவிர்ந்த, தொடர்பான கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய தொகையின் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதத்தை (50 சதவீதம்) பணிப்புரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள்ளும் அத்தகைய வர வேண்டிய தொகையின் ஆகக் குறைந்தது எழுபத்தைந்து சதவீதத்தை (75 சதவீதம்) பணிப்புரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களினுள்ளும் அறவிட வேண்டும்.

   எனினும், தொடர்பான நிறுவனம் செலுத்த வேண்டிய மீள்கொடுப்பனவுத் தொகை தொடர்பாக தொடர்பான கம்பனியால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்களைக் கவனத்திற் கொண்டு பணிப்பாளர் அத்தகைய வர வேண்டிய தொகையின் அறவிடும் அளவையும் காலப்பகுதியையும் தீர்மானிக்கலாம்.

4. நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் இப் பணிப்புரை வழங்கிய திகதியிலுள்ளவாறான அதன் தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவை இப் பணிப்புரை வழங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் ஆகக் குறைந்தது இருபது சதவீதத்தால் (20 சதவீதம்) குறைக்க வேண்டும் என்பதுடன் மீளவமைத்தல் காலப்பகுதியில் செலவுக் குறைப்பை தொடர்ந்து மேற்கொள்ளவும் வேண்டும்.

5. நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அலுவலர் பதவிகள் ஒரே நபரால் வகிக்கப்படுமிடத்து அக் கம்பனி தூண்டல் பொதியின் கீழான வசதிக்கு விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் சுதந்திரமான தலைமை நிறைவேற்று அலுவலரை நியமிக்க வேண்டும்.

6. நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் பணிப்பாளரின் ஒப்புதலின்றி மீளவமைத்தல் காலப்பகுதியில் பணிப்பாளர் சபையின் எந்தவொரு உறுப்பினரையோ அல்லது முக்கியமான முகாமைத்துவ அலுவலகப் பணியாளரையோ பதவி நீக்கம் செய்யக்கூடாது அல்லது தற்போதைய பதவியிலிருந்து பணிப்பாளர் சபையின் எந்தவொரு உறுப்பினரையும் அல்லது முக்கிய முகாமைத்துவ அலுவலகப் பணிப்பாளரையும் இராஜினாமாச் செய்வதற்கோ அல்லது பதவியிலிருந்து விலக்குவதற்கோ அனுமதிக்கக்கூடாது.

7. நன்மை பெறும் தொடர்பான நிறுவனம் பணிப்புரை வழங்கப்பட்ட திகதியன்றுள்ளவாறான பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ அலுவலகப் பணியாளரின் சம்பளங்கள்/ ஊதியங்கள்/ வருமானங்களை ஆகக் குறைந்தது 25 சதவீதத்தால் குறைக்க வேண்டுமென்பதுடன் மீளவமைத்தல் காலப்பகுதியில் இக் குறைப்பைப் பேணவும் வேண்டும்.

8. நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் ஊழியராகவுள்ள பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அல்லது அதன் முக்கியமான முகாமைத்துவ அலுவலகப் பணியாளருக்கு வெகுமதி மற்றும் ஏனைய ஓய்வூதிய நன்மைகளைச் செலுத்தும் போது, கம்பனி

   (i) ஓய்வு பெற்ற திகதியன்று பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் வெகுமதிக் கொடுப்பனவைக் கணிக்க வேண்டும்;

   (ii) காசுக் கொடுப்பனவை ரூ.500,000 இற்கு மட்டுப்படுத்த வேண்டும்; அத்துடன்

   (iii) வெகுமதியினதும் ஓய்வூதிய நன்மையினதும் எஞ்சியதை முதிர்ச்சிக்கு முன் மீளப் பெறமுடியாத மூன்று ஆண்டு தவணை வைப்பு வடிவில் செலுத்த வேண்டும்.

9. நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலரும் கம்பனியின் நிலைமைகளை தொடர்ச்சியாக மதிப்பிட்டு பின்வருவன உட்பட முக்கியமான துறைகளை கவனிக்கின்ற பணிப்பாளரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) உள்வரும் புதிய வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது வர்த்தகப் பத்திரங்களின் மீளப் பெறுகை, முதிர்ச்சியடைந்த வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது வர்த்தகப் பத்திரங்களின் மீளப் புதுப்பிக்கப்படுதல்;

(ii) சொத்துக்களை விற்பனை செய்தல்;

(iii) கடன் வசதிகளை அறவிடுதல்;

(iv) திரவச் சொத்துக்களை நிலைப்படுத்துதல்;

(v) அடுத்த 7 நாட்கள், 14 நாட்கள், 21 நாட்கள் மற்றும் 30 நாட்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பொருந்தாத தன்மை மற்றும் எதிர்க்கணிய இடைவெளிகளை நிரப்புவதற்கான செயற்றிட்டம்.

10. இப் பணிப்புரையின் நோக்கத்திற்காக -

(i) “கடன் வசதிகள்” என்பது கடன்கள், தவணைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கையின் கீழான வசதிகள், முறிகள், தொகுதிக் கடன்கள், சொத்துக்களால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு நிதியியல் வசதிகள் போன்ற படுகடன் பிணையங்களினூடான நிதியங்களின் ஏற்பாடுகளைக் குறிக்கும்.

(ii) “சட்டம்” என்பது 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தினைக் குறிக்கும்.

(iii) “நன்மை பெறும் தொடர்பான நிறுவனம்” என்பது நிதி மற்றும் குத்தகைத் தொழில் துறைக்கான தூண்டல் பொதி” 2009 இன் கீழ் எந்தவொரு வசதிக்கும் அல்லது சலுகைக்குமாக நன்மையினைப் பெறும் நிதிக்குத்தகைக்கு விடல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ) இல் குறிப்பிடப்பட்ட பகிரங்க கம்பனியாக இருக்கின்ற ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்கு விடும் நிறுவனத்தினைக் குறிக்கும்.

(iv) “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

(v) “படுகடன் சாதனம்” என்பது தொகுதிக்கடன், முறிகள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஏனைய எந்தவொரு படுகடன் கருவியும் எனப் பொருள்படும்

(vi) “முதன்மை முகாமைத்துவ ஆளணியினர்” என்பது அம் முயற்சியாண்மையின் எந்தவொரு பணிப்பாளரும் (நிறைவேற்று அல்லது வேறுவிதமான) உட்பட முயற்சியாண்மையொன்றின் நடவடிக்கைகளை திட்டமிடுதல், நெறிப்படுத்தல் அத்துடன் அல்லது கட்டுப்படுத்தல் என்பனவற்றிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதிகாரத்தையும் பொறுப்பாண்மையினையும் கொண்டுள்ள அந்த நபர்களைக் குறிக்கும்.

(vii) “மீளவமைத்தல் காலம்” என்பது “நிதி மற்றும் குத்தகைத் தொழில் துறைக்கான தூண்டல் பொதி” 2009 இன் கீழ் எந்தவொரு வசதிக்கும் அல்லது சலுகைக்குமாக நன்மை பெறும் தொடர்புபட்ட நிறுவனத்தினால் செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கும் அவ்வாறு பெறப்பட்ட அனைத்து வசதிகளையும் மீளச் செலுத்தி தீர்ப்பனவு செய்யும் நாளுக்குமிடையிலான காலப்பகுதி எனக் கருதப்படும்.

(viii) *தொடர்புபட்ட கம்பனி* என்பது பின்வருவனவற்றுள் எதனையும் குறிக்கும்:

(அ) அதன் துணைக் கம்பனி;

(ஆ) அதன் இணைக் கம்பனி;

(இ) அதன் உடமைக் கம்பனி;

(ஈ) அதன் உடமைக் கம்பனியின் துணைக்கம்பனி அல்லது இணைக் கம்பனி;

(உ) நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்திற்கு சொந்தமான கம்பனிகளின் அதே குழுமத்திலுள்ள எந்த கம்பனியும்.

(ix) *தொடர்புபட்ட தரப்பினர்* என்பதன் கருத்து பின்வருவனவற்றுள் எதனையும் குறிக்கும்.

(அ) மேலே (vi) விடயத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான தொடர்புபட்ட கம்பனியொன்று;

(ஆ) நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளர்;

(இ) நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் கடந்த அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்;

(ஈ) நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளரின் அல்லது அக் கம்பனியின் கடந்த கால அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் உறவினர்;

(உ) நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்குச் சொந்தமான பங்குடமையாளர்;

(ஊ) நன்மை பெறும் தொடர்பான நிறுவனத்தின் கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளர் அல்லது கடந்த அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளர் அல்லது கடந்த அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது நன்மை பெறும் நிதிக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்குச் சொந்தமான பங்குடமையாளர் விடயத்தில் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்டுள்ள கரிசனையாளர்.

## 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம்

1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2009, ஏப்பிறல் 22 ஆம் திகதி

### 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) பணிப்புரை

1. இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (தூண்டல் பொதி நிபந்தனைகள்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இச் சட்டத்தின் கீழ் நாணயச் சபையால் வழங்கப்பட்ட எந்தவொரு ஏனைய பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கும் முரண்படாது, நன்மை பெறும் நிதிக் கம்பனி மீளவமைப்புக் காலப்பகுதியில் பின்வருவனவற்றில் எதையும் மேற்கொள்ளக்கூடாது.

   (i) கடன்கள், கொடுகடன் வசதிகள் அல்லது கொடைகள், நன்கொடைகள் மற்றும் மாற்றல்கள் உள்ளிட்ட எந்த வகையான நிதியியல் கடன் வசதியையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பான தரப்பினருக்கு வழங்கல்.

   (ii) பங்குகளிலோ அல்லது வேறு விதத்திலோ எந்தவொரு தொடர்பான கம்பனியிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முதலீடு செய்தல்.

   (iii) தொடர்பான தரப்பினரின் எந்தவொரு பொறுப்புத் தொடர்பாகவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உத்தரவாதமளித்தல், பிணையம் வைத்தல், பண உதவியளிக்க உறுதிமொழி அளித்தல் அல்லது அதேமாதிரியான உறுதிமொழியை மேற்கொள்ளல்.

   (iv) நன்மை பெறும் நிதிக் கம்பனியின் எந்தவொரு அலுவலக உறுப்பினருக்கோ அல்லது எந்தவொரு பணிப்பாளருக்கோ காசாகவோ அல்லது வேறு விதமாகவோ மிகை இலாபக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

   (v) நன்மை பெறும் நிதிக் கம்பனியின் எந்தவொரு பங்குதாரருக்கும் காசாகவோ அல்லது வேறு விதமாகவோ பங்குகள் மீது பங்கிலாபங்களைச் செலுத்துதல்.

3. நன்மை பெறும் நிதிக் கம்பனி பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் அல்லது பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்கு விடும் நிறுவனங்கள் தவிர்ந்த, தொடர்பான கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய தொகையின் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதத்தை (50 சதவீதம்) பணிப்புரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள்ளும் அத்தகைய வர வேண்டிய தொகையின் ஆகக் குறைந்தது எழுபத்தைந்து சதவீதத்தை (75 சதவீதம்) பணிப்புரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களினுள்ளும் அறவிட வேண்டும்.

   எனினும், தொடர்பான நிதிக் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய மீள்கொடுப்பனவுத் தொகை தொடர்பாக தொடர்பான கம்பனியால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்களைக் கவனத்திற் கொண்டு பணிப்பாளர் அத்தகைய வர வேண்டிய தொகையின் அறவிடும் அளவையும் காலப்பகுதியையும் தீர்மானிக்கலாம்.

4. நன்மை பெறும் நிதிக் கம்பனி இப் பணிப்புரை வழங்கிய திகதியிலுள்ளவாறான அதன் தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவை இப் பணிப்புரை வழங்கிய திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் ஆகக் குறைந்தது இருபது சதவீதத்தால் (20%) குறைக்க வேண்டும் என்பதுடன் மீளவமைத்தல் காலப்பகுதியில் செலவுக் குறைப்பை தொடர்ந்து மேற்கொள்ளவும் வேண்டும்.

5. நன்மை பெறும் நிதிக் கம்பனியில் பணிப்பாளர் சபைத் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அலுவலர் பதவிகள் ஒரே நபரால் வகிக்கப்படுமிடத்து அக் கம்பனி தூண்டல் பொதியின் கீழான வசதிக்கு விண்ணப்பிக்கும் திகதியிலிருந்து ஒரு மாதத்தினுள் சுதந்திரமான தலைமை நிறைவேற்று அலுவலரை நியமிக்க வேண்டும்.

6. நன்மை பெறும் நிதிக் கம்பனி நாணயச் சபையின் ஒப்புதலின்றி மீளவமைத்தல் காலப்பகுதியில் பணிப்பாளர் சபையின் எந்தவொரு உறுப்பினரையோ அல்லது முக்கியமான முகாமைத்துவ அலுவலகப் பணியாளரையோ பதவி நீக்கம் செய்யக்கூடாது அல்லது தற்போதைய பதவியிலிருந்து பணிப்பாளர் சபையின் எந்தவொரு உறுப்பினரையும் அல்லது முக்கிய முகாமைத்துவ அலுவலகப் பணிப்பாளரையும் இராஜினாமாச் செய்வதற்கோ அல்லது பதவியிலிருந்து விலக்குவதற்கோ அனுமதிக்கக்கூடாது.

7. நன்மை பெறும் நிதிக் கம்பனி பணிப்புரை வழங்கப்பட்ட திகதியன்றுள்ளவாறான பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ அலுவலகப் பணியாளரின் சம்பளங்கள்/ ஊதியங்கள்/ வருமானங்களை ஆகக் குறைந்தது 25 சதவீதத்தால் குறைக்க வேண்டுமென்பதுடன் மீளவமைத்தல் காலப்பகுதியில் இக் குறைப்பைப் பேணவும் வேண்டும்.

8. நன்மை பெறும் நிதிக் கம்பனியின் ஊழியராகவுள்ள பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அல்லது அதன் முக்கியமான முகாமைத்துவ அலுவலகப் பணியாளருக்கு வெகுமதி மற்றும் ஏனைய ஓய்வூதிய நன்மைகளைச் செலுத்தும் போது, கம்பனி

   (i) ஓய்வு பெற்ற திகதியன்று பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் வெகுமதிக் கொடுப்பனவைக் கணிக்க வேண்டும்.

   (ii) காசுக் கொடுப்பனவை ரூ.500,000 இற்கு மட்டுப்படுத்த வேண்டும்: அத்துடன்

   (iii) வெகுமதியினதும் ஓய்வூதிய நன்மையினதும் எஞ்சிய தொகையை முதிர்ச்சிக்கு முன் மீளப் பெறமுடியாத மூன்று ஆண்டு தவணை வைப்பு வடிவில் செலுத்த வேண்டும்.

9. நன்மை பெறும் நிதிக் கம்பனியின் பணிப்பாளர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலரும் கம்பனியின் நிலைமைகளை தொடர்ச்சியாக மதிப்பிட்டு பின்வருவன உட்பட முக்கியமான துறைகளை உள்ளடக்கும் விதத்தில் பணிப்பாளரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

   (i) உள்வரும் புதிய வைப்புக்கள், வைப்புக்களின் மீளப் பெறுகை, முதிர்ச்சியடைந்த வைப்புக்கள் மீளப் புதுப்பிக்கப்படுதல்

   (ii) சொத்துக்களை விற்பனை செய்தல்

   (iii) கடன் வசதிகளை அறவிடுதல்

   (iv) திரவச் சொத்துக்களை நிலைப்படுத்துதல்

   (v) அடுத்த 7 நாட்கள், 14 நாட்கள், 21 நாட்கள் மற்றும் 30 நாட்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பொருந்தாத தன்மை மற்றும் எதிர்க்கணிய இடைவெளிகளை நிரப்புவதற்கான செயற்றிட்டம்

10. இப் பணிப்புரையின் நோக்கத்திற்காக

   (i) "கடன் வசதிகள்" என்பது கடன்கள், தவணைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கையின் கீழான வசதிகள், முறிகள், தொகுதிக் கடன்கள், சொத்துக்களால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வேறு நிதியியல் வசதிகள் போன்ற படுகடன் பிணையங்களினூடான நிதியங்களின் ஏற்பாடுகளைக் குறிக்கும்.

   (ii) "சட்டம்" என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினைக் குறிக்கும்.

   (iii) "சபை" என்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினைக் குறிக்கும்.

   (iv) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

   (v) "முதன்மை முகாமைத்துவ ஆளணியினர்" என்பது அம் முயற்சியாண்மையின் எந்தவொரு பணிப்பாளரும் (நிறைவேற்று அல்லது வேறுவிதமான) உட்பட முயற்சியாண்மையொன்றின் நடவடிக்கைகளை திட்டமிடுதல், நெறிப்படுத்தல் அத்துடன் அல்லது கட்டுப்படுத்தல் என்பனவற்றிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதிகாரத்தையும் பொறுப்பாண்மையினையும் கொண்டுள்ள அந்த நபர்களைக் குறிக்கும்.

   (vi) "மீளவமைத்தல் காலம்" என்பது "நிதி மற்றும் குத்தகைத் தொழில் துறைக்கான தூண்டல் பொதி" 2009 இன் கீழ் எந்தவொரு வசதிக்கும் அல்லது சலுகைக்குமாக நன்மை பெறும் நிதிக் கம்பனியொன்றினால் விண்ணப்பம் செய்யப்பட்ட நாளுக்கும் அவ்வாறு பெறப்பட்ட அனைத்து வசதிகளையும் மீளச் செலுத்தி தீர்ப்பனவு செய்யும் நாளுக்குமிடையிலான காலப்பகுதி எனக் கருதப்படும்.

(vii) "தொடர்புபட்ட கம்பனி" என்பது பின்வருவனவற்றுள் எதனையும் குறிக்கும்:

(அ) அதன் துணைக் கம்பனி;

(ஆ) அதன் இணைக் கம்பனி;

(இ) அதன் உடமைக் கம்பனி;

(ஈ) அதன் உடமைக் கம்பனியின் துணைக்கம்பனி அல்லது இணைக் கம்பனி;

(உ) நன்மை பெறும் நிதிக் கம்பனிக்குச் சொந்தமான கம்பனிகளின் அதே குழுமத்திலுள்ள எந்த கம்பனியும்.

(viii) "தொடர்புபட்ட தரப்பினர்" என்பதன் கருத்து பின்வருவனவற்றுள் எதனையும் குறிக்கும்.

(அ) மேலே (vii) விடயத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான தொடர்புபட்ட கம்பனியொன்று;

(ஆ) நன்மை பெறும் நிதிக் கம்பனியின் கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளர்;

(இ) நன்மை பெறும் நிதிக் கம்பனியின் கடந்த அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்;

(ஈ) நன்மை பெறும் நிதிக் கம்பனியின் கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளரின் அல்லது அக் கம்பனியின் கடந்த கால அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் உறவினர்;

(உ) நன்மை பெறும் நிதிக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்குச் சொந்தமான பங்குடமையாளர்;

(ஊ) நன்மை பெறும் நிதியியல் கம்பனியின் கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளர் அல்லது கடந்த அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது கடந்த அல்லது தற்போதைய பணிப்பாளர் அல்லது கடந்த அல்லது தற்போதைய முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது நன்மை பெறும் நிதிக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்குச் சொந்தமான பங்குடமையாளர் விடயத்தில் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்டுள்ள கரிசனையாளர்.

(ix) "நிதிக் கம்பனி" என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதி கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியினைக் குறிக்கும்.

(x) "நன்மை பெறும் நிதிக் கம்பனி" என்பது "நிதி மற்றும் குத்தகைத் தொழில் துறைக்கான தூண்டல் பொதி" 2009 இன் கீழ் நன்மை வசதியினைப் அனுபவிக்கும் நிதிக் கம்பனியினைக் குறிக்கும்.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2009, செத்தெம்பர் 30 ஆம் திகதி

### 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை

1. இப் பணிப்பு 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் 2009 ஒத்தோபர் 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. அ) எந்தவொரு நிதிக் கம்பனியினாலும் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம்:

(i) அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 3.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்;

(ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்;

விஞ்சக்கூடாது.

ஆ) நிதிக்கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் முறியொன்றின் அல்லது வேறு ஏதேனும் உபகரணத்தின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்:

(i) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 3.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்;

(ii) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 5.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சாத வகையில், அத்தகைய முறி சம்பந்தமாக வழங்கப்படக் கூடிய வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

3. நிதிக் கம்பனியொன்றினால் எந்தவொரு காலாண்டுப் பகுதியிலும் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டி வீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முந்போந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை விஞ்சக் கூடாது.

4. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனியினால், அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பதாக பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

5. இப் பணிப்பில்,

(i) “தவணை வைப்புக்கள்” என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்; மற்றும்

(i) “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

6. 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப்பெறப்படுகின்றது.

## 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

எஸ். எஸ். ரத்னாயக்க
பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2009, ஒத்தோபர் 15ஆம் திகதி

## 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கடன் வழங்கல்) பணிப்புரை

1. இப் பணிப்புரை 2009ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கடன் வழங்கல்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்பட்ட பகிரங்கக் கம்பனியாக இருக்கின்ற பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்கு விடுகின்ற ஒவ்வொரு நிறுவனத்திற்கும் (இதனகத்திற்குப் பின்னர் "தொடர்பான நிறுவனம்" எனக் குறிப்பிடப்படும்) ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. பணிப்பாளரின் எழுத்து மூலமான அனுமதியின்றி எந்தவொரு நிறுவனமும் பின்வருவனவற்றிற்கு எந்தவொரு கடன் வசதியையும் வழங்கக்கூடாது.

   (i) தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளருக்கு அத்துடன்/ அல்லது பணிப்பாளரின் உறவினருக்கு;

   (ii) அதன் உடமைக் கம்பனிக்கு;

   (iii) அதன் சொந்தப் பங்குகளின் பிணையங்களின் மீது அல்லது வேறு எந்தவொரு அதன் துணைக் கம்பனிகளின் பிணையங்களின் மீதும்;

   (iv) அதன் சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக;

   அல்லது

   (v) தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரின், அவரது உறவினரின் அல்லது தொடர்பான நிறுவனத்தின் எந்தவொரு ஊழியரினதும் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதத்தின் மீதும்.

3. இது, குறித்த பந்தி 2இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, தொடர்பான நிறுவனம், அந்நேரத்தில் நடைமுறையிலுள்ள எந்தவொரு திட்டத்திற்கும் அமைவாக, தொடர்பான நிறுவனத்திலுள்ள முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளின் கொள்வனவு செய்வதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது உதவுதொகை செலுத்துவதற்காக அல்லது கம்பனியின் ஊழியர்களினது நன்மைக்காக கடன் வசதிகளை வழங்கமுடியும்.

   எந்தவொரு நேரத்திலும் வெளிநின்ற அத்தகைய கடன் தொகையின் மொத்த முதல் தொகை, தொடர்பான நிறுவனத்தின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட பங்கு முதலீட்டின் மொத்த தொகையில் பத்து சதவீதத்திற்கு சமமான தொகையினை அல்லது இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையின்படி தொடர்பான நிறுவனத்தின் பழுதுறாத சீராக்கப்பட்ட மூலதன நிதியத்தில் 10 சதவீதத்தினை இதில் எது கூடுதலானதோ அதனை விஞ்சக்கூடாது என்ற நியதிக்குட்பட்டதாகும்.

4. தொடர்பான நிறுவனமொன்று அதன் துணைக் கம்பனிகளுக்கு அல்லது இணைக் கம்பனிகளுக்கு 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் (தனியொரு கடன்பாட்டளருக்கான வரையறை) பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்ட விதத்தில் கொடுகடன் வசதிகளை வழங்கலாம் என்பதுடன் அவ்வாறு அவற்றிற்கு வழங்கப்பட்ட கடன் வசதியினை தொடர்பான நிறுவனத்தின் மற்றைய கடன்பாட்டாளர்களுக்கும் ஏற்புடைத்தான நியதிகளிலேயே வழங்கப்பட வேண்டியதுடன் அத்தகைய கடன் வசதி தொடர்பாக கடன்பட்ட கம்பனியின் பெயர், அத்தகைய கடன் வசதி வழங்கப்பட்ட திகதி, வழங்கப்பட்ட தொகை, மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம், பிணை, வட்டி வீதம் என்பனவற்றை உள்ளடக்கிய விபரங்களை அத்தகைய கடன் வசதி வழங்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

5. தொடர்பான நிறுவனம் எதுவும் அதன் கடன் வசதியின் மீது வட்டி தவிர்ந்த வேறு எந்த விபரணத்தினதுமான கட்டணங்களையும் முற்பணமளிக்கப்பட்ட அல்லது நிதி வசதியளிக்கப்பட்ட முதல் தொகையின் 5 சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் அறவிடல் ஆகாது.

6. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஆண்டு இறுதியிலும் அனைத்து வெளிநின்ற கடன் வசதிகளின் விபரங்களை ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் 3 மாதங்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. தொடர்பான நிறுவனத்தின், அத்தகைய கடன் வசதியின் வெளிநின்ற மொத்த முதல் தொகை பணிப்புரை ஆரம்பமாகின்ற அன்று மேலேயுள்ள பந்திகள் 2 மற்றும் 3இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுமிடத்து பணிப்பாளர் இப் பணிப்புரையின் கீழான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு இப் பணிப்புரை நடைமுறைக்கு வந்ததிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினை அத்தகைய தொடர்பான நிறுவனங்களுக்கு வழங்கலாம்.

8. இப் பணிப்புரையின் நோக்கங்களுக்காக

(i) கடன் வசதி என்பதன் கருத்து கடன்கள்; வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகைக்குவிடல் உடன்படிக்கைகளின் கீழான வசதிகள்; முறிகள், தொகுதிக்கடன்கள், பிணையங்களிடப்பட்ட சொத்துக்கள், வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள் போன்ற படுகடன் பிணையங்களின் மூலமான நிதிய ஏற்பாடுகள்; அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான மற்றைய நிதியியல் வசதிகள் எனப் பொருள்படும்.

(ii) “இணைக்கம்பனி” என்பது நிதிக் கம்பனியொன்று 20 சதவீதத்திற்கு சமனான அல்லது அதற்கும் கூடுதலான ஆனால் முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளைக் கொண்டுள்ள கம்பனியினைக் குறிக்கும்.

(iii) “சீராக்கப்பட்ட மூலதன நிதியம்” என்பது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (ஒதுக்கு நிதியம்) பணிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்கு நிதியம் மற்றும் நிரந்தரமான கட்டற்ற ஒதுக்குகள் எனப் பொருள்படும்.

(iv) “உறவினர்” என்பதன் பொருள் வாழ்க்கைத் துணைவர் அத்துடன்/ அல்லது தனிப்பட்டவரிலள் தங்கியிருக்கும் குழந்தை என்பதாகும்.

(v) “துணைக் கம்பனி” என்பது 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 150இன் அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(vi) “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

(vii) “நம்பிக்கைப் பொறுப்பாளர்” என்பதன் கருத்து தொடர்பான நிறுவனத்தின் ஊழியர் பங்குடமைத் திட்டம் தொடர்பாக நம்பிக்கை உறுதியை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் என்பதாகும்.

படிவ எண்
எஸ்என்பீஎவ்ஜ/எவ்எல்/02012009

2000 ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம்
2009 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கடன் வழங்கல்) பணிப்புரை

## மொத்த கடன் வசதிகள்

பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் கம்பனியின் பெயர் ............................................................

கடன் வசதியின் வகை ............................................................

............................................ ஆண்டு முடிவில் உள்ளவாறு

தொகை ரூ.'000 இல்

| தொடர்பு இல. | கடன் பாட்டாளரின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட திகதியும் தீர்ப்பனவு செய்ய வேண்டிய திகதியும் | மீள்கொடுப்பனவு நியதிகள் | நிலுவையிலுள்ள வாடகை | | ஏனைய கட்டணங்கள் | வெளிநின்ற இருப்பு | தொங்கலிலுள்ள வட்டி | தொங்கலிலுள்ள பெறுமதிசேர் வரி | முற்கூட்டி கொடுப்பனவு செய்யப்பட்ட வாடகை | தேறிய வெளிப்படுத்துகை | இறுதிக் கொடுப்பனவுத் தொகையும் திகதியும் | பிணையங்களின் வகையும் பெறுமதியும் | வயது | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மாதங்களின் எண்ணிக்கை | தொகை | | | | | | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | | | | | | |

திகதி

......................................................................................................
முதன்மை நிறைவேற்று அலுவலர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்
பெயர் :
பதவி :

## 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

எஸ். எஸ். ரத்னாயக்க
பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2009, ஒத்தோபர் 15ஆம் திகதி

## 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்) பணிப்புரை

1. இப் பணிப்புரை 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்களுடனான வியாபாரக் கொடுக்கல்வாங்கல்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பிடப்பட்ட பகிரங்கக் கம்பனியாக இருக்கின்ற பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதி குத்தகைக்கு விடுகின்ற நிறுவனத்திற்கும் (இதனகத்திற்குப் பின்னர் "தொடர்பான நிறுவனம்" எனக் குறிப்பிடப்படும்) ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 2009 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கடன் வழங்கல்) பணிப்புரையின் 2ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, தொடர்பான நிறுவனமொன்று, தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளருடன் அல்லது தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரின் உறவினருடனான எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களினதும் மொத்தப் பெறுமதி மாதமொன்றிற்கு ரூ.75,000 இனை அல்லது நிதி ஆண்டொன்றிற்கு ரூ.750,000 இனை விஞ்சுமிடத்து அதனை பணிப்பாளரின் ஒப்புதல் இல்லாமல் மேற்கொள்ளக் கூடாது.

3. 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (படுகடன் சாதனங்கள்) பணிப்புரைக்கு முரண்படாத விதத்தில், தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரிடமிருந்து அல்லது தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரது உறவினர்களிடமிருந்து கடன்பாடுகள் மற்றும் முதலீடுகள் வடிவில் தொடர்பான நிறுவனத்தின் பொறுப்புக்களை உருவாக்குகின்றவிடத்து, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள், தொடர்பான நிறுவனத்தின் உறவினர் அல்லாத மற்றைய தரப்பினர்களுக்கு வழங்கப்படுவதிலும் பார்க்க "கூடுதலான சாதகமான சலுகைகளை" அத்தகை பணிப்பாளருக்கோ அல்லது பணிப்பாளரின் உறவினர்களுக்கோ வழங்காமல் இருக்குமாயின் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு இங்கேயுள்ள 2ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பொருந்தாது.

4. இப் பணிப்புரையின் நோக்கத்திற்காக

(அ) "உறவினர்" என்பது வாழ்க்கைத் துணைவர் அல்லது தனிப்பட்ட ஒருவரில் தங்கியிருக்கும் குழந்தை என்பதாகும்.

(ஆ) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

## 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தின் பிரிவு 34 இன் கீழ் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

எஸ். எஸ். ரத்னாயக்க
பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2009, திசெம்பர் 30ஆம் திகதி

## 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை

1. இப் பணிப்பு 2009 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பகிரங்கக் கம்பனியாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிக்கும் (இதன் பின் “நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனி” எனக் குறிப்பிடப்படும்) ஏற்புடையனவாதலும் 2010 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. **பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள்**

(1) கீழ்வருவனவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதன் மூலம் பணிப்பாளர் சபையானது (இதனகத்துப் பின்னர் சபை எனக் குறிப்பிடப்படும்) தொடர்பான நிறுவனத்தின் பாதுகாப்பையும் செயற்றிறனையும் பலப்படுத்த வேண்டும்.

(அ) தொடர்பான நிறுவனத்தின் உபாய நோக்கங்கள், கம்பனி தகுதிகள் என்பவற்றுக்கு அனுமதியளித்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுடன் இவை தொடர்பான நிறுவனத்தின் அனைத்து பகுதிகளுக்கும் அறிவிக்கப்படுதலை உறுதி செய்தல்;

(ஆ) அளவிடக்கூடிய நோக்கங்களுடனான இடர்நேர்வுக் கொள்கை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் உள்ளடங்கலாக குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கு தொடர்பான நிறுவனத்தின் முழுமையான வர்த்தக உபாயத்தினை அனுமதித்தல்;

(இ) முதன்மையான இடர்நேர்வுகளை இனங்காணுதல் மற்றும் இடர்நேர்வுகளை முன்மதியுடைய விதத்தில் முகாமைத்துவம் செய்ய பொருத்தமான முறைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்;

(ஈ) வைப்பாளர்கள், கடன் கொடுத்தோர், பங்குதாரர்கள், கடன்பட்டோர் என்போரை உள்ளடக்கிய அனைத்து ஆர்வலர்களுடனான தொடர்பூட்டல் கொள்கையை நடைமுறைப்படுத்துவதனை அனுமதித்தல்;

(உ) தொடர்பான நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைகள் என்பனவற்றின் போதுமான தன்மையையும் நம்பிக்கைத் தன்மையையும் மீளாய்வு செய்தல்;

(ஊ) (i) கொள்கையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்தக்கூடிய, (ii) நடவடிக்கைகள் வழிப்படுத்தக்கூடிய, (iii) வர்த்தக நடைமுறைகள், இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றில் கட்டுப்பாடு செலுத்தக்கூடிய, பதவியில் உள்ள, பிரதான முகாமைத்துவ ஆளணியை இனம் காணுதலும், பதவிக்கான மற்றும் சபையினை குறித்தலும்;

(எ) பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கான அதிகாரப்பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் வரைவிலக்கணம் செய்தல்;

(ஏ) சபையின் கொள்கைக்கு அமைவாக, பிரதான முகாமைத்துவ ஆளணியினால் தொடர்பான நிறுவனத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக பொருத்தமான மேற்பார்வை இருத்தலை உறுதிப்படுத்தல்;

(ஐ) (i) பணிப்பாளர்களினதும் பிரதான முகாமைத்துவ ஆளணியினதும் தெரிவு, நியமனம், தேர்தல், (ii) நலன்களின் முரண்பாடுகள் சம்பந்தமான முகாமைத்துவம், (iii) பலவீனங்களைத் தீர்மானித்தல், தேவைப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடங்கலாக காலத்துக்குக் காலம் ஆளுகை நடைமுறைகளின் காத்திரமான தன்மைகளை மதிப்பிடுதல்;

(ஒ) பிரதான முகாமைத்துவ ஆளணி தொடர்பான பொருத்தமான அடுத்த வரிசையினர் பற்றிய திட்டம் நிதிக் கம்பனியிடம் இருப்பதை உறுதிப்படுத்தல்;

(ஓ) கொள்கைகளை மீளாய்வு செய்வதற்காகவும், தேவை அடிப்படையில் பிரதான முகாமைத்துவ ஆளணியுடனான கிரமமான சந்திப்புகள், தகவல் பரிமாற்ற தொடர்புகளை அமைத்தல், கம்பனி நோக்கங்களை நோக்கிய முன்னேற்றத்தினை பரிசீலித்தல்;

(ஔ) ஒழுங்குமுறைப்படுத்தல் சூழ்நிலையை விளங்கிக் கொள்ளுதல்;

(க) வெளிக் கணக்காய்வாளரின் பணியை பெற்றுக் கொள்வதிலும், மேற்பார்வை செய்தலிலும் நுணுக்கமான அவதானத்தை பிரயோகித்தல்;

(2) இப் பணிப்புரையின், 7ஆம் பந்திக்கு இசைவாக சபை தொடர்பான நிறுவனத்தின் தலைவரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் நியமிப்பதுடன் தலைவரதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறுத்து அனுமதித்தல் வேண்டும்.

(3) நியாயமான வேண்டுகோளின் பேரில் பணிப்பாளர்களுக்கு உதவும் முகமாக, பொருத்தமான சந்தர்ப்பங்களில், சுதந்திரமான நிபுணர்களின் ஆலோசனையை தொடர்பான நிறுவனத்தின் செலவில் பெறுவதற்காக சபை ஏற்றுக் கொண்ட நடைமுறை இருத்தல் வேண்டும். தொடர்புபட்ட பணிப்பாளர்களுக்கு அவர்களது தொடர்பான நிறுவனங்களின் கடமைகளை ஆற்றுவதற்கு உதவும் முகமாக, பணிப்பாளர்களுக்கு தனிப்பட்ட, சுதந்திர, நிபுணத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொடுப்பதற்கு சபை தீர்மானம் எடுக்க வேண்டும்.

(4) ஒரு பணிப்பாளர் அவர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர்கள் கணிசமான ஈடுபாடுகளைக் கொண்டுள்ள அல்லது அவர் ஒரு பணிப்பாளராக இருக்கும் தாபனம் தொடர்புபட்ட எந்தவொரு சபையின் தீர்மானத்திலும் வாக்களிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் குறித்த விடயம் சம்பந்தமான சபை கூட்ட நடவடிக்கை நிகழ்ச்சி நிரலில் அவர் கோரம் சம்பந்தமாக கணக்கெடுக்கப்படக்கூடாது.

(5) நிதிக் கம்பனியின் நோக்கு, கட்டுப்பாடு என்பன அதன் உறுதியான அதிகாரத்தின் கீழ் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் சபையானது, தீர்மானம் எடுப்பதற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமான முறையான அட்டவணை ஒன்றை கொண்டிருக்க வேண்டும்.

(6) தொடர்பான நிறுவனம் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனால் அல்லது முடியாமல் போகக்கூடும் என்று கருதினால், அல்லது முறிவடைந்து போனால் அல்லது வைப்பாளர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் கொடுப்பனவுகளை இடைநிறுத்தம் செய்யக்கூடும் எனக் கண்டால் பணிப்பாளர் சபையானது எத்தீர்மானத்தையும் நடவடிக்கையையும் எடுக்க முன்னர் உடனடியாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பாவைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு தொடர்பான நிறுவனத்தின் நிலை பற்றி அறியத் தரவேண்டும்.

(7) இப்பணிப்புரைக்கு கீழ்ப்படிந்து ஒழுகும் வருடாந்த கம்பனி ஆளுகை பற்றிய அறிக்கையை சபை தொடர்பான நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்க வேண்டும்.

(8) ஆண்டுதோறும் ஒவ்வொரு பணிப்பாளராலும் மேற்கொள்ளப்படவிருக்கும் சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றை சபை நடைமுறைப்படுத்தலும், அத்தகைய மதிப்பீடு சம்பந்தமான அறிக்கைகளைப் பேணுதலும் வேண்டும்.

### 3. சபையின் கூட்டங்கள்

(1) சபை தொடர்ச்சியாக சந்திப்பதுடன் சபை கூட்டங்கள் ஏறத்தாழ ஒரு மாத இடைவெளியில், ஒவ்வொரு நிதியாண்டிலும் குறைந்தது 12 தடவைகள் நடத்தப்பட வேண்டும். எழுத்து மூலமான யோசனைகள்/ பத்திரிகைகள் சுற்றறிக்கை செய்யப்படுவதன் மூலமாக சபையின் ஒப்புதலைப் பெறுதலை கூடுமானவரை தவிர்க்க வேண்டும்.

(2) தொடர் கூட்டங்களின் கூட்ட நிகழ்ச்சி நிரலில் அனைத்து பணிப்பாளர்களின் விடயங்களையும் மற்றும் யோசனைகளையும், அத்தகைய விடயங்களும் யோசனைகளும் தொடர்பான நிறுவனங்களின் வர்த்தக முன்னேற்றம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் என்பன சம்பந்தமானதாக இருக்கும் பட்சத்தில், உள்ளடக்க ஏதுவாக தக்க ஒழுங்கு முறைகள் இருப்பதை சபை உறுதிப்படுத்த வேண்டும்.

(3) வழமையான சபைக் கூட்டங்களுக்கு அனைத்து பணிப்பாளர்களும் பிரசன்னமாகவிருக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக, குறைந்தது 7 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். மற்றைய அனைத்து சபை கூட்டங்களுக்கும் நியாயமான முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

(4) ஒரு பணிப்பாளர் மிக கடந்த அண்மைய 12 மாத காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு கூட்டங்களில் பிரசன்னமாகாது இருந்தால் அல்லது மிக அண்மையான மூன்று தொடர்ச்சியான கூட்டங்களில் பிரசன்னமாகாது இருந்தால் அவர் பணிப்பாளர் பதவியிலிருந்து நிறுத்தப்படுவார் என்பதை சபை ஒழுங்கு விதிகள் உறுதி செய்யவேண்டும். எனினும், மாற்று பணிப்பாளர் மூலமாக, பணிப்பாளர் கூட்டங்களில் பங்குபற்றுமிடத்து அது வருகை என ஏற்றுக் கொள்ளப்படும்.

(5) சபை கம்பனி செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும். அவரது பிரதான பொறுப்புக்களானது சபையினதும் பங்குதாரர்களின் கூட்டங்களினதும் செயலாளர் சேவையை கையாளுவதுடன் சட்டத்திலும் மற்றும் ஒழுங்கு விதிகளிலும் குறிப்பிட்ட ஏனைய பணிகளை நிறைவேற்றுவதாகும்.

(6) சபை கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் பணியை தலைவர் கம்பனி செயலாளரிற்கு கையளித்திருந்தால் கம்பனி செயலாளர் அத்தகைய பணியை நிறைவேற்றும் பொறுப்புடையவராவார்.

(7) சபை நடைமுறைகளை மற்றும் ஏற்புடைய சட்டங்கள், பணிப்புக்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஏற்று வழிநடத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரின் ஆலோசனை மற்றும் சேவைகள் என்பனவற்றைப் பெறும் உரித்துடையவர்களாவர்.

(8) கம்பனி செயலாளர், சபை, கூட்டங்களின் குறிப்புக்களை பேணிவருவதுடன், அக் குறிப்புக்களானது எந்தப் பணிப்பாளருடைய நியாயமான முன்னறிவித்தலின் அடிப்படையில் நியாயமான காலத்திற்குள் பரிசோதனைக்காகத் திறந்திருக்கவும் வேண்டும்.

(9) சபை அதன் கடமைகளைச் செய்யும் போது உரிய கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொண்டதா என கூட்டக் குறிப்புகளிலிருந்து பெறக்கூடிய விதமாக தேவையான விபரங்களுடன், சபை கூட்டங்களின் குறிப்புகள் பதியப்பட வேண்டும். சபை கூட்டத்தின் குறிப்புகள், தெளிவாகவும் பின்வருவனவற்றை உள்ளடக்குவனவாகவும் அமைய வேண்டும். (அ) சபை அதன் தீர்மானம் எடுத்தலில் உபயோகப்படுத்தப்பட்ட தரவுகள், தகவல்களின் சுருக்கம் (ஆ) சபையால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் (இ) சபை அதன் கடமைகளை உரிய கவனத்துடனும் முன்மதியுடனும் எடுத்ததென விளக்கும். உண்மையை அறிதலுக்கான கலந்துரையாடல்களும், ஒத்த எதிர்மறையான தொடர்புபட்ட விடயங்களும் (ஈ) சபையின் திட்டங்கள் கொள்கைகள் என்பனவற்றுக்குக் கீழ்ப்படிதலையும், தொடர்புபட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஒழுகுவதையும் குறிக்கும் தொடர்புடைய நிருவாக அதிகாரிகளின் ஒப்புதல்களும் சான்றிதழ்களும் (உ) தொடர்பான கம்பனி எதிர்நோக்கும் இடர்நேர்வு பற்றிய சபையின் அறிவும், விளங்கிக் கொள்ளும் தன்மையும், மேற்கொள்ளும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய பொதுநோக்கு மற்றும் (ஊ) சபையின் முடிவு மற்றும் தீர்மானங்கள்.

**4. சபையின் உள்ளமைப்பு**

(1) இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, சபைப் பணிப்பாளர்களது எண்ணிக்கை 5 இற்கு குறையாமலும் 9 இற்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

(2) இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் மற்றும் இப் பணிப்புரையின் (5) (1) ஆம் பந்தி என்பவற்றுக்கமைய பிரதான நிறைவேற்று அதிகாரப் பொறுப்பை வகிக்கும் பணிப்பாளர் நீங்கலாக, ஒரு பணிப்பாளரது மொத்த சேவைக்காலம் ஒன்பது வருடத்திற்கு மேற்படலாகாது. நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரின் பதவிக் காலமானது இப் பணிப்புரைத் திகதி வரையுள்ள அப்பணிப்பாளரது மொத்த பதவிக் காலத்தை உள்ளடக்குவதாக இருக்கும்.

(3) தொடர்பான நிறுவனத்தின் அலுவலகர், சபை பணிப்பாளராக (இதன் பின்னர் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனக் குறிக்கப்பெறும்) நியமனம் செய்யப்பட, தேர்ந்தெடுக்கப்பட, நியமிக்கப்பட முடியும். அத்தகைய நிறைவேற்றுப் பணிப்பாளர் தொகை சபை பணிப்பாளர்களில் அரை பங்கிற்கு மேற்படாத வகையில் அமைய வேண்டும். அவ்வாறான பட்சத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருக்க வேண்டும்.

(4) மொத்த பணிப்பாளர்களில் சுதந்திரமான நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்களாக குறைந்தது நான்கில் ஒரு பங்கினரை சபை கொண்டிருக்கும். இது, இப் பணிப்புரை நடைமுறைப்படுத்தும் திகதியிலிருந்து மூன்று வருடங்களில் நடைமுறைக்கு ஏற்புடையதாகும்.

ஒரு நிறைவேற்று தரத்திலில்லாத பணிப்பாளர் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பாராயின் அவரை சுதந்திரமானவராகக் கருதல்கூடாது.

(அ) நிதிக் கம்பனியின் வழங்கியிறுத்த மூலதனத்தில் 2 சதவீதத்தை விட அதிகமாக அல்லது வேறு நிதிக் கம்பனியின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீத மேலதிகமாக கொண்டிருந்தால்;

(ஆ) தொடர்பான நிறுவனத்தின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மூலதன நிதியில் குறிப்பிட்ட திகதியில் மொத்த மிகுதிப் பெறுமதி 10 சதவீதத்திற்கு மேற்பட்டதாகவும் இப்பணிப்புரையின் 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறாக நிதிக் கம்பனியின் ஏதாவது ஒரு வர்த்தக நடவடிக்கையை தற்போது அல்லது பணிப்பாளர் நியமிக்கப்பட முன்னரான கடந்த இரு வருட காலத்துக்குள் மேற்கொண்டிருந்தால்;

(இ) பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு உடனடியாக முற்போந்த இரு வருட காலத்துக்குள் தொடர்பான நிறுவனத்தில் பணியாற்றியிருத்தல்;

(ஈ) தொடர்பான நிறுவனத்தின் அல்லது பிறிதொரு தொடர்பான நிறுவனத்தின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீதம் அதிகமாக பங்குகளைக் கொண்டிருந்தால், அல்லது 12.5 சதவீதத்தை விஞ்சும் இறுத்த மூலதனத்தினை கொண்டிருக்கும் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி, முக்கிய முகாமைத்துவ அதிகார உறுப்பினரின் உறவினராக இருத்தல்

(உ) பங்குடமையாளர், கடன்பட்டோர், பங்குதாரரின் பிரதிநிதியாக அல்லது அவ்வகையான தொடர்பான நிறுவனத்தின் வேறு வகையான பங்குதாரராக இருத்தல்

(ஊ) ஒரு கம்பனியின் அல்லது வியாபார நிறுவனத்தின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீதம் அல்லது அதற்கும் அதிகமான பங்குகளைக் கொண்டிருத்தல் அல்லது ஊழியர் அல்லது பணிப்பாளராக இருத்தல்:

(i) பணிப்புரையின் 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தொடர்பான நிறுவனத்தின் கடைசி கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளவாறு மீதியிருந்த மொத்தப் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு மேற்பட்டதாக, தொடர்பான நிறுவனத்தின் ஒரு நடவடிக்கையினைக் கொண்டிருத்தல்; அல்லது

(ii) அதில் ஏதாவது தொடர்பான நிறுவனத்தின் ஏனைய பணிப்பாளர்கள் பணியாற்றினால் அல்லது பணிப்பாளர்களாக அல்லது நிதிக் கம்பனியின் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறு மூலதன நிதியின் 10 சதவீதம் அதிகமான பங்குகளை கொண்ட பங்குதாரர்களாக இருந்தால்; அல்லது

(iii) அதில் தொடர்பான நிறுவனத்தின் ஏதாவது பணிப்பாளர்கள், பணிப்புரை 9 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு நிதிக் கம்பனியின் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மூலதன நிதியில் மீதமிருந்த மொத்தப் பெறுமதியில் குறிப்பிட்ட காலத்திற்கு 10 சதவீதத்திற்கு மேற்பட்டதான நடவடிக்கை யொன்றினை மேற்கொண்டிருந்தால்.

(5) சுதந்திரமான நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளருக்குப் பதிலாக மாற்றுப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் பட்சத்தில், அவ்வாறு நியமிக்கப்பட்டவர் சுதந்திரமான நிறைவேற்றுதரமல்லா பணிப்பாளருக்கு பொருந்தக்கூடிய பிரமாணங்களைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

(6) நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளர்கள் நேர்மையான பின்னணி உடையவராக இருப்பதுடன், உபாயங்கள், செயலாற்றங்கள், வளங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் சுதந்திரமான தீர்ப்புகளை அளிக்கக்கூடிய தேவையான தேர்ச்சியையும், அனுபவத்தினையும் உடையவராக இருக்க வேண்டும்.

(7) 01.01.2013ஆம் திகதியிலிருந்து பிரசன்னமான பணிப்பாளர்களில் மூன்றிலொரு பேர் நிறைவேற்று அதிகார தரத்தில் அல்லாத பணிப்பாளர்களாக இல்லாதவிடத்து, கூட்டத்திற்கு தேவையான குறைந்தளவு (கோரம்) பணிப்பாளர்கள் பிரசன்னமாகி இருந்தாலும், பணிப்பாளர் கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டதாக கொள்ளப்படலாகாது.

(8) தொடர்பான நிறுவனங்கள் பணிப்பாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தும் அனைத்து கம்பனி தகவல் தொடர்புகளிலும் சுதந்திரமான நிறைவேற்றுத் தரத்திலல்லாத பணிப்பாளர்கள் வெளிப்படையாக அடையாளம் காட்டப்பட வேண்டும். தனது வருடாந்த கம்பனி ஆளுகை அறிக்கையில் தொடர்பான கம்பனியின் தலைவர், நிருவாகப் பணிப்பாளர், நிருவாகத் தரமற்ற பணிப்பாளர், சுதந்திரமான நிருவாகத் தரமற்ற பணிப்பாளர் ஆகியோரது பெயர்கள் உள்ளடங்கலாக, பணிப்பாளர் வகைப்படியான சபை கட்டமைப்பை, நிதிக் கம்பனி வெளிப்படுத்த வேண்டும்.

(9) சபையின் புதிய பணிப்பாளர்கள் நியமனங்களில் கவனத்தில் கொள்ளப்பட்ட, ஒழிவுமறைவற்ற வெளிப்படையான முறைசார்ந்த நடைமுறை இருக்க வேண்டும். சபையின் முறையான தொடர்ந்து வரும் நியமனங்கள் சம்பந்தமாக நடைமுறைகள் இருக்க வேண்டும்.

(10) அமைய வெற்றிடம் ஒன்றை நிரப்ப நியமிக்கப்பட்ட அனைத்து பணிப்பாளர்களும் அவர்களது நியமனங்களின் பின்னர், முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் தேர்தலுக்கு உட்பட்டவர்களாயிருப்பர்.

(11) ஒரு பணிப்பாளர் பதவியிலிருந்து இராஜினமா செய்தால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டால், சபையானது பணிப்பாளரின் இராஜினாமா, பதவி நீக்கம், இராஜினாமா அல்லது பதவி நீக்கப்பட்டமைக்கான காரணங்களுடன், தொடர்புபட்ட பணிப்பாளருக்கு சபையுடனான முரண்பாடு ஏதும் இருப்பின் அது உள்ளடங்கலாக மற்றும் அதனுடன் மட்டும் மட்டுப்படாத தகவல்களை பங்குதாரர்களுக்கு அறிவிப்பதுடன், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரின் அவதானத்திற்கும் கொண்டு வரப்பட வேண்டும்.

## 5. பணிப்பாளர்களின் பொருத்தம், தகுதி என்பவற்றை மதிப்பிடுவதற்கான பிரமாணம்

(1) இதனகத்து கூறப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, ஒரு நபர் 70 வயதினைக் கடந்திருந்தால், அவர் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளராக சேவையாற்ற முடியாது.

(2) தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவர் தொடர்பான நிறுவனமொன்றின் துணைக் கம்பனிகள் சகோதர கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள்/ சபைகள்/ தாபனங்களில் பணிப்பாளராக அல்லது அதற்குச் சமமான பதவியினை வகிக்கக்கூடாது. அத்தகைய, பணிப்பாளர் 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு, கணக்காய்வு நியமங்கள் சட்ட விதிகளின்படி விசேடமாகக் குறிப்பிடப்பட்ட வியாபார சபைகளாக குறித்துரைக்கப்பட்ட கம்பனிகளாக இருக்குமிடத்து 10 கம்பனிகளுக்கு மேல் பணிப்பாளராகவோ அல்லது அதற்குச் சமமான பதிவியினையோ வகிக்கக்கூடாது.

## 6. சபையினால் ஒப்படைக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்

(1) சபையானது ஒப்படைக்கப்பட்ட ஒழுங்கு விடயங்கள் சபையின் இயலாற்றலுக்கு முட்டுக்கட்டையாகவோ அல்லது அதனைக் குறைப்பதாகவோ பொதுவாக அதன் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்ற அளவிற்கு சபையானது சபைக் குழுவிற்கோ,

முதன்மை நிறைவேற்று அலுவலருக்கோ, நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கோ அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கோ எந்த ஒரு விடயத்தையும் ஒப்படைக்கக்கூடாது.

(2) தொடர்பான நிறுவனத்தின் தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய விதத்தில் அவை இருப்பதனை உறுதிப்படுத்துவதற்காக, காலாந்தர அடிப்படையில் சபை ஒப்படைப்பு செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் வேண்டும்.

## 7. தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்

(1) இப் பணிப்புரை, 2010 சனவரி 1 இலிருந்து ஆரம்பிக்கும் மூன்று வருடங்களின் பின்னர் தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பணி வெவ்வேறாக இருக்க வேண்டியதுடன் தனிப்பட்ட ஒரே ஆளினால் செயற்படுத்தப்படவும் கூடாது.

(2) தலைவர் நிறைவேற்று அல்லா பணிப்பாளராக இருக்க வேண்டும். தலைவர் சுதந்திரமான நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளராக இல்லாதவிடத்து, பெருமளவு சுதந்திரமான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுதந்திரமான பணிப்பாளர் ஒருவரை மூத்த பணிப்பாளராக பொருத்தமான காலமொன்றிற்கு நியமிக்கலாம். மூத்த பணிப்பாளரின் பதவி தொடர்பான நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

(3) சபையானது அதன் ஆண்டறிக்கையின் மிக முக்கியமானதொரு பகுதியாக இருக்கக்கூடிய கம்பனி ஆளுகை அறிக்கையில், தலைவரினதும் முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் பெயர், மற்றும் தனித்தன்மையினையும் தலைவருக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலருக்குமிடையில் ஏதாவது உறவுமுறை இருப்பின் (நிதியியல், வியாபாரம், குடும்பம் அல்லது தொடர்பான உறவுமுறைகள் உட்பட) அதன் தன்மைகளையும் சபையின் உறுப்பினர்களிடையேயான உறவுமுறைகளையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(4) தலைவர் (அ) சபைக்கு தலைமைத்துவத்தினையும் (ஆ) சபை வேலைகள் காத்திரமான முறையில் நடைபெறுவதனையும் அதன் பொறுப்புக்கள் ஆற்றப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துபவராகவும் அனைத்து முக்கியமானதும் பொருத்தமானதுமான விடயங்கள் சபையினால் சரியான நேரத்தில் கலந்துரையாடப்பட்டமையினை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

(5) தலைவர், ஒவ்வொரு சபைக் கூட்டத்திற்குமான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதில் முக்கிய பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும். தலைவர் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் பொறுப்பினை கம்பனிச் செயலாளருக்கும் வழங்கலாம்.

(6) சபைக் கூட்டங்களில் எழுகின்ற பிரச்சனைகள் பற்றி அனைத்து பணிப்பாளர்களுக்கும் சரியான முறையில் விளக்கமளிக்கப்பட்டமையை தலைவர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் பணிப்பாளர்கள் உரிய நேரத்தில் போதுமான தகவல்கள் பெற்றுக் கொண்டமையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(7) தலைவர் சபை விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் முழுமையானதும் தீவிரமானதுமான பங்களிப்பினை வழங்கும் விதத்தில் அவர்களை ஊக்குவிக்க வேண்டியதுடன் சபையானது தொடர்பான நிறுவனத்தின் மிகச் சிறந்த நலன்களைக் கருத்திற் கொண்டு இயங்குவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் தலைமை தாங்குதலும் வேண்டும்.

(8) தலைவர் குறிப்பாக நிறைவேற்று அல்லா பணிப்பாளர்களின் காத்திரமான பங்களிப்பிற்கு வசதியளிக்கின்ற விதத்தில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்களிடையே இறுக்கமான உறவுமுறையொன்று ஏற்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(9) இதனகத்து உள்ளடக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, தலைவர் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் அல்லது நிறைவேற்றுப் பணிகள் எவற்றினதும் நேரடி மேற்பார்வை தொடர்பான நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது.

(10) தலைவர், பங்குதாரர்களுடன் காத்திரமான தொடர்பூட்டல்களை பேணுவதற்கும் பங்குதாரர்களின் கருத்துக்களை சபைக்கு தெரிவிப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை அவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(11) முதன்மை நிறைவேற்று அலுவலர், தொடர்பான நிறுவனத்தின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரங்களின் நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான உச்ச நிறைவேற்று அலுவலராகத் தொழிற்படலாம்.

## 8. சபையினால் நியமிக்கப்பட்ட குழுக்கள்

(1) இப்பணிப்புரைகளின் 8(2) மற்றும் 8(3) ஆம் பந்திகளில் எடுத்துக் காட்டப்பட்டவாறு, ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும் குறைந்தது இரண்டு சபைக் குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் சபைக்கு நேரடியாக அறிக்கையளிக்க வேண்டும். குழுவினது ஒவ்வொரு குழுவும் தலைவரின் மேற்பார்வையின் கீழ் கூட்டத்தைக் கூட்டவும், கூட்ட நிகழ்ச்சிகளையும் அறிக்கைகள் போன்றவற்றைப் பேணவும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும். சபையானது, ஒவ்வொரு குழுவினதும் கடமைகள், அவற்றின் பங்கு என்பன மீதான செயலாற்ற அறிக்கையினை ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) **கணக்காய்வுக் குழு**

கணக்காய்வு குழு தொடர்பாக பின்வரும் விதிகள் ஏற்புடைத்தனவாக இருக்கும்:

அ) குழுவின் தலைவராக, கணக்காய்வு அத்துடன் அல்லது கணக்கியலில் தகமைகளைக் கொண்டுள்ள சுதந்திரமான நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும்.

ஆ) சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்களாக இருத்தல் வேண்டும்.

இ) குழு (i) தொடர்பான சட்ட நியதிகளுக்கிணங்க கணக்காய்வு பணிகளை வழங்கும் விதத்தில் வெளிக் கணக்காய்வாளர்களை நியமித்தல் (ii) கணக்காய்வாளருக்கு காலத்திற்குக் காலம் வழங்கப்பட்ட மத்திய வங்கியின் வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் (iii) தொடர்பான கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்தல் மற்றும் (iv) கணக்காய்வுப் பங்காளர் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கு கணக்காய்வில் ஈடுபட்டும் குறிப்பிட்ட கணக்காய்வு பங்காளர் முன்னைய காலம் முடிவடையும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னும் கணக்காய்வில் ஈடுபட்டிருக்குமிடத்து பணிக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் கணக்காய்வாளரின் ஏதாவது பதவி விலகல் அல்லது பதவி நீக்கம் என்பன தொடர்பான விடயங்களின் மீது விதந்துரைப்புக்களைச் செய்யலாம்.

ஈ) பிரயோகிக்கத்தக்க நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க குழு வெளிக்கணக்காய்வாளரின் சுதந்திரத்தையும் குறிக்கோளையும் கணக்காய்வு செய்முறையின் காத்திரமான தன்மையினையும் மீளாய்வு செய்து கண்காணித்தல் வேண்டும்.

உ) தொடர்பான சட்ட நியதிகள், ஒழுங்கு விதிகள், தேவைப்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களினால் அனுமதிக்கப்பட்ட கணக்காய்வு அல்லாத பணிகளை வழங்குவதற்காக வெளிக்கணக்காய்வொன்றில் ஈடுபடுவது மீதான கொள்கையொன்றினை குழு உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் போது குழுவினது, கணக்காய்வல்லா பணிகளின் வெளிக்கணக்காய்வாளர் ஒருவரின் ஏற்பாடுகள் கணக்காய்வாளர் சுதந்திரத்திற்கோ அல்லது பாரபட்சமற்ற தன்மைகளுக்கோ சேதமேற்படுத்தாத தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். கணக்காய்வு அல்லாத பணிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் வெளிக் கணக்காய்வாளரின் சுதந்திரமான தன்மை அல்லது பாரபட்சமற்ற தன்மையினை மதிப்பிடும் பொழுது குழுவானது

(i) கணக்காய்வு நிறுவனத்தின் தேர்ச்சியும் அனுபவமும் கணக்காய்வு அல்லாத பணிகளின் பொருத்தமான ஏற்பாட்டாளர் என்ற தன்மையினை வழங்குமா என்பது பற்றியும்;

(ii) வெளிக் கணக்காய்வாளர்களினால் மேற்கொள்ளப்படும் அத்தகைய பணிகளின் ஏற்பாடுகளின் மூலம் கணக்காய்வுகளின் குறிக்கோள்கள் அத்துடன்/ அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பாதுகாப்புக்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது பற்றியும்; அத்துடன்

(iii) கணக்காய்வு அல்லாத பணிகளின் தன்மை, தொடர்பான கட்டண அளவுகள், கணக்காய்வு நிறுவனம் தொடர்பில் தனிப்பட்ட மற்றும் கூட்டுக் கட்டளை அளவுகள் என்பன வெளிக் கணக்காய்வாளரின் குறிக்கோள்கள் அத்துடன்/ அல்லது சுதந்திரமான தன்மைக்கு அச்சுறுத்தல் எதனையும் ஏற்படுத்துமா என்பது பற்றியும்;

கருத்தில் கொள்ள வேண்டும்.

ஊ) குழுவானது, கணக்காய்வு தொடங்குவதற்கு முன்னதாக, வெளிக் கணக்காய்வாளருடன் கணக்காய்வின் தன்மை மற்றும் செயற்பரப்பு பற்றி கலந்துரையாடி பின்வருவனவற்றை இறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். (i) நிதியியல் அறிக்கையிடல் தொடர்பான கம்பனி ஆளுகை மீதான முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்புரைகளுக்கு நிதிக் கம்பனி இணங்கியொழுகுவது பற்றிய மதிப்பீடொன்று (ii) தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் அறிக்கையிடும் கடப்பாடுகள் என்பனவற்றிற்கிணங்க, நிதியியல் கூற்றுகளைத் தயாரித்தல் அத்துடன் (iii) ஒன்றிற்கு கூடுதலான கணக்காய்வு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளவிடத்து நிறுவனங்களிடையே இணைப்புக்களை ஏற்படுத்துதல்.

எ) தொடர்பான நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்களின் முழுமையான தன்மையினைக் கண்காணிக்கும் பொருட்டு, அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்துகைகளுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கைகள் மற்றும் அதில் உள்ளடக்கியுள்ள குறிப்பிடத்தக்க நிதியியல் அறிக்கையிடல் தீர்ப்புக்கள் என்பன தொடர்பாக நிதிக் கம்பனியின் நிதிசார் தகவல்களை குழு மீளாய்வு செய்தல் வேண்டும். சபைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் நிதிக் கம்பனியின் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்கையில் குழுவானது (i) முக்கிய தீர்ப்புக்குரிய துறைகள் (ii) கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதாவது மாற்றங்கள் (iii) கணக்காய்விலிருந்து தோன்றுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கங்கள் (iv) நிகழ்ந்து கொண்டிருக்கும் கரிசனைக்குரிய எடுகோள்கள் (v) கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைப்பாடுகள் என்பனவற்றுடன் இணங்கி ஒழுகுதல் என்பனவற்றில் குறிப்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.

ஏ) இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வுகளிலிருந்து தோன்றுகின்ற விடயங்கள், பிரச்சனைகள் மற்றும் ஒதுக்குகள் என்பனவற்றையும், தேவையானவிடத்து முதன்மையான முகாமைத்துவ ஆளணியினர் சமூகமளிக்காத போது கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் உட்பட கணக்காளர் கலந்துரையாட விரும்புகின்ற விடயங்களையும்

குழு கலந்துரையாடுதல் வேண்டும்.

ஐ) வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தினையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்பினையும் குழு மீளாய்வு செய்தல் வேண்டும்.

ஒ) தொடர்பான நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பாக குழு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

(i) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் செயற்பரப்பு, தொழிற்பாடுகள் மற்றும் மூலவளங்களின் போதுமாந்தன்மையினையும் திணைக்களம் அதன் வேலைகளைச் செய்வதற்கு தேவையான அதிகாரங்கள் கொண்டுள்ளமையினைப் பற்றிய திருப்தியடைவது பற்றியும் மீளாய்வு செய்தல்;

(ii) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தையும் உள்ளகக் கணக்காய்வு செய்முறைகளையும் மீளாய்வு செய்வதுடன், தேவையானவிடத்து, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் விதந்துரைப்புக்களின் மீது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தல்;

(iii) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மூத்த அலுவலர்களின் செயலாற்றத்தின் கணிப்பீடு அல்லது மதிப்பீடு பற்றிய மீளாய்வு;

(iv) தலைவர், மூத்த அலுவலர்கள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு தொழிற்பாடுகளுக்கு வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் தொடர்பான நியமனம் அல்லது முடிவுறுத்தலை விதந்துரைத்தல்;

(v) உள்ளக முதன்மைக் கணக்காய்வாளர் மற்றும் வெளியிலிருந்து பணிகளை வழங்குவோர் யாரும் இருப்பின் அவர்கள் உட்பட உள்ளக கணக்காய்வாளர் புதிய திணைக்களத்தின் மூத்த அலுவலர்களின் பதவி விலகல்களை குழு மதிப்பீடு செய்தது என்பதனையும் பதவி விலகும் மூத்த அலுவலர்களும் வெளியிலிருந்து பதவி விலகுவோரும் தமது பதவி விலகல் தொடர்பான காரணங்களைச் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பத்தினை வழங்குதல்;

(vi) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் அதன் கணக்காய்வு நடவடிக்கைகளில் சுதந்திரமானது என்பதனையும் இது பக்கச் சார்பற்ற முறையில், தேர்ச்சியுடனும், தொழில்சார் நிபுணத்துவத்துடனும் தொழிற்படுவதனை உறுதிப்படுத்தல்.

ஓ) குழு உள்ளக புலனாய்வுகள் தொடர்பாக முக்கியமாகக் கண்டறியப்பட்டவைகளையும் அதற்கான முகாமைத்துவத்தின் பிரதிபலிப்புக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஔ) முதன்மை நிதி அலுவலர், முதன்மை உள்ளக கணக்காய்வாளர் மற்றும் வெளிக் கணக்காய்வாளர்களின் ஒரு பிரதிநிதி கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். குழுவின் அழைப்பின் பேரில் ஏனைய சபை உறுப்பினர்களும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களும் கூட கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். எனினும், குறைந்தது, ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை நிறைவேற்று பணிப்பாளர்களின் பிரசன்னம் இல்லாமலே குழுவானது வெளிக்கணக்காய்வாளர்களைச் சந்திக்க வேண்டும்.

க) குழுவானது (i) தொடர்பான நியதிகளுக்குட்பட்ட எந்தவொரு விடயத்தையும் புலனாய்வு செய்வதற்கான தெளிவான அதிகாரத்தினையும் (ii) அவ்வாறு செய்வதற்கான வளங்களையும் (iii) தகவல்களைப் பெறுவதற்கான முழு வசதிகளையும், தேவையானவிடத்து (iv) அவசியமானவிடத்து; தேவையான அனுபவங்களுடன் வெளிநாட்டிலிருந்து தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனைகளையும் அத்துடன் வெளிநாட்டவர்களை அழைப்பதற்கும் அதிகாரங்களை கொண்டுள்ளது.

ந) கலந்துரையாடப்படவுள்ள விடயங்களை உரிய நேரத்தில் அறிவிப்பதுடன், குழுவானது கிரமமாக கூட வேண்டுமென்பதுடன் அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் பொறுப்புக்களிலும் அதன் முடிவுகளைப் பதிவுசெய்தல் வேண்டும்.

ச) குழுவானது, முறைசாராத வழிகளில் (i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளினது விபரம் (ii) ஆண்டொன்றில் நடத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்ட தனிப்பட்ட பணிப்பாளர் ஒவ்வொருவரினதும் விபரங்கள் என்பனவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

ஞ) குழுவின் செயலாளர் (இவர் கம்பனியின் செயலாளராகவோ அல்லது உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் தலைவராகவோ இருக்கலாம்) குழுக் கூட்டத்தின் நிகழ்ச்சிகளை விபரமாக பதிவு செய்து வைத்திருத்தல் வேண்டும்.

ட) குழுவானது நிதிக் கம்பனியின் அலுவலர்களின் ஒழுங்குகள், நம்பிக்கைகள், நிதியியல் அறிக்கையிடலில் ஏற்படக்கூடிய ஒழுங்கீனங்கள் பற்றி எழுப்பிய கருத்துக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய விடயங்களை பற்றி மீளாய்வு செய்தல் வேண்டும். இதன்படி, அத்தகைய விடயங்கள் தொடர்பான நியாயமானதும்

சுதந்திரமானதுமான புலனாய்வுகளின் பொருட்டு குழு இடம் பெறுகின்ற சரியான ஒழுங்குகளையும் பொருத்தமான பின் தொடர் நடவடிக்கைகளையும், வெளிக் கணக்காய்வாளருடனான தொடர்பான நிறுவனத்தின் உறவு முறையினை மேற்பார்வை செய்கின்ற முக்கிய பிரதிநிதித்துவ சபையாக தொழிற்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(3) **ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு**

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ குழு தொடர்பில் பின்வரும் விதிகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்:

(அ) குழுவானது குறைந்தபட்சம் ஒரு நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளரையும் முதன்மை நிறைவேற்று அலுவலரையும் மற்றும் கொடுகடன், சந்தை, திரவத்தன்மை தொழிற்பாடு மற்றும் உபாய இடர்நேர்வு போன்ற விரிந்த இடர்நேர்வு வகைகளை மேற்பார்வை செய்கின்ற முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குழு முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருடன் மிக நெருக்கமாக பணியாற்ற வேண்டியுள்ளதுடன் அதிகாரசபையின் உட்கட்டமைப்பு மற்றும் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்குட்பட்டு சபையின் சார்பாக தீர்மானங்களையும் எடுத்தல் வேண்டும்.

(ஆ) குழுவானது, நிதிக் கம்பனியில் நேரக்கூடிய அனைத்து இடர்நேர்வுகளையும் அதாவது கொடுகடன் சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் உபாய இடர்நேர்வுகளையும் மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர்நேர்வு குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்களினூடாக மதிப்பீடு செய்தல் வேண்டும். துணைக்கம்பனிகள் மற்றும் இணைக்கம்பனிகளைப் பொறுத்தவரையில், இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பான நிறுவனத்தின் அடிப்படையிலும், குழும அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

(இ) குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்கும் குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு கணியம்சார் மற்றும் தரம் சார்ந்த இடர்நேர்வு வரையறைகளுக்குள் முகாமைப்படுத்துவதற்காக கொடுகடன் குழு மற்றும் சொத்து பொறுப்புக்குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமாந்தன்மையினையும் காத்திரமான தன்மையினையும் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(ஈ) தொடர்பான நிறுவனங்களின் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட முன்மதியுடைய மட்டங்களுக்கு அப்பாலுள்ள மட்டங்களில் அத்தகைய இடர்நேர்வுகள் காணப்படுமிடத்து குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளின் தாக்கத்தினை தணிப்பதற்காக குழு பொருத்தமானதும் சரியானதுமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(உ) புதிய மாற்றங்களை உள்ளடக்கிய வியாபாரத்தினை தொடர்ந்து நடத்துவதற்கான திட்டங்கள் உட்பட, இடர்நேர்வு முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுவதற்காக குழு, குறைந்த பட்சம் காலாண்டு அடிப்படையில் கூடுதல் வேண்டும்.

(ஊ) குறிப்பிட்ட இடர்நேர்வினை அடையாளம் காண தவறிய மற்றும் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட அத்துடன்/ அல்லது இலங்கை மத்திய வங்கிப் பணிப்பாளரினால் பணிக்கப்பட்டவாறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிய அலுவலர்களுக்கெதிராக குழு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(எ) குழுவானது ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்த ஒரு வாரத்திற்கிடையில், சபையின் கருத்து, இணக்கப்பாடு அத்துடன்/ அல்லது குறித்துரைக்கப்பட்ட பணிப்புக்களுக்காக இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையினைச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஏ) வியாபாரத் தொழிற்பாடுகளின் அனைத்துத் துறைகள் தொடர்பான சட்டம், ஒழுங்கு விதிகள், பணிப்புக்கள், விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல், வழிகாட்டல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் என்பனவற்றுடன் நிதிக் கம்பனி இணங்கி ஒழுகுவதனை மதிப்பிடுவதற்காக குழுவானது இணக்க தொழிற்பாடொன்றினை நிறுவுதல் வேண்டும். முக்கிய முகாமைத்துவ ஆளணியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறப்பு இணங்குவிப்பு அலுவலர் இணங்குவிப்பு தொழிற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் காலத்திற்கு காலம் அறிக்கை சமர்ப்பிக்கவும் அவர் கடமைப்பட்டவராக இருப்பார்.

**9. தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

(1) பின்வருவன 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் (கடன் வழங்கல்) பணிப்புரை மற்றும் 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் (பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களுடனான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்) பணிப்புரை அல்லது காலத்திற்கு காலம் நீக்கப்பட்ட அல்லது பதிலீடு செய்யப்பட்ட மேற்கூறப்பட்ட பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமானவையாகும்.

(2) எந்த ஒரு ஆளுடனும் குறிப்பாக, இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "தொடர்புபட்ட தரப்பினர்கள்" எனக் கருதப்படக்கூடிய ஆட்களின் பின்வரும் வகையினருடனான நிதிக் கம்பனியின் எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் எழக்கூடிய நலவுரித்துக்களின் எந்த ஒரு முரண்பாட்டினையும் தவிர்ப்பதற்கு சபை தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(அ) ஒரு தொடர்பான நிறுவனத்தின் துணைக் கம்பனி;

(ஆ) ஏதாவது தொடர்பான நிறுவனத்தின் இணைக் கம்பனி;

(இ) தொடர்பான நிறுவனத்தின் ஒரு பணிப்பாளர்;

(ஈ) ஒரு தொடர்பான நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்;

(உ) ஒரு தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரின் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நெருங்கிய உறவினரொருவர்;

(ஊ) தொடர்பான நிறுவனத்தின் இறுத்த மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமான உரித்துடைய பங்குதாரர்;

(எ) ஏதாவது தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் அல்லது ஏதாவது தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரின் நெருங்கிய உறவினர் அல்லது இறுத்த மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமான உரித்துடைய பங்குதாரர் பற்றியதொரு கரிசனை.

(3) இப்பணிப்புரையினால் உள்ளடக்கப்படக்கூடிய தொடர்பான தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களின் வகை பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

(அ) கடன்வசதிகளை வழங்கல்,

(ஆ) வைப்புக்கள், கடன்பாடுகள் மற்றும் முதலீடுகளின் வடிவில் நிதிக் கம்பனியில் எந்தவொரு பொறுப்புக்களையும் உருவாக்குதல்,

(இ) தொடர்பான நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அல்லது நிதிக் கம்பனியிலிருந்து பெறப்பட்ட நிதிசார் அல்லது நிதிசாரா தன்மைகளைக் கொண்ட எந்தவொரு பணியினதும் வழங்கல் அல்லது அத்தகைய சேவைகளை நிதிக் கம்பனியிலிருந்து பெற்றுக் கொள்ளல்,

(ஈ) தொடர்பான நிறுவனத்திற்கும் எந்தவொரு தொடர்பான தரப்பினர்களுக்குமிடையில் அறிக்கையிடல் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் உருவாக்குதல் அல்லது பேணுதல், அத்தகைய தொடர்புட்ட தரப்பினர்களுக்கு நன்மை தரத்தக்க உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகளை நம்பிக்கைகளை அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கக்கூடும்.

(4) தொடர்பான தரப்பினருடன், இதே வியாபாரத்தினை நிதிக் கம்பனியுடன் மேற்கொள்கின்ற மற்றையவர்களுக்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க "மிகச் சாதகமான வசதியை" வழங்கக்கூடிய விதத்தில் எந்தவிதமான கொடுக்கல் வாங்கல்களிலும் நிதிக் கம்பனி ஈடுபடவில்லை என்பதனை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும். இக்கருத்தில் "மிகச் சாதகமான வசதி" என்பது பின்வருவனவற்றை கருதும்.

(அ) தொடர்பான தரப்பினருக்கு "மொத்த தேறிய கடன் வசதியை" வழங்குகின்றமை சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு தொடர்பான நிறுவனத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் முன்மதியுடைய சதவீதத்தினை விஞ்சும்.

"மொத்த தேறிய கடன்வசதி" மொத்தக்கடன் வசதிகளிலிருந்து நிதிக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் அத்தகைய தொடர்பான தரப்பினர்களினால் செய்யப்பட்ட காசுப் பிணையங்கள் மற்றும் முதலீடுகள் மற்றும் 5 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலான முதிர்ச்சியுடன் கூடிய படுகடன் சாதனங்கள் என்பனவற்றைக் கழிப்பதன் மூலம் கணிக்கப்படலாம்.

(ஆ) தொடர்பற்ற ஒப்பிடத்தக்க இணைக்கிணைத் தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பிடுகையில் தொடர்பான நிறுவனத்தின் மிகச் சிறந்த கடன் வழங்கல் வீதத்திலும் பார்க்க குறைந்த வட்டி வீதத்தினை விதித்தல் அல்லது தொடர்பான நிறுவனத்தின் வைப்புக்களுக்குக் கூடுதலான வட்டி வீதத்தினைச் செலுத்துதல்;

(இ) சாதகமான நியதிகள், வர்த்தக இழப்புக்களை உள்ளடக்குதல் அத்துடன்/ அல்லது கட்டணங்களை/ தரகுகளைத் தளர்த்துதல் போன்ற முன்னுரிமை ரீதியில் நடத்துதல் தொடர்புபடாத தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் வழமையான வியாபார காலத்திற்கு கூடுதலாக காலப்பகுதியை நீடித்தல்;

(ஈ) மதிப்பீட்டு நடைமுறைகள் ஏதுவுமில்லாமல் தொடர்பான தரப்பினருக்கு பணிகளை வழங்குதல் அல்லது அவர்களிடமிருந்து பணிகளைப் பெறுதல்;

(உ) தொடர்பான நிறுவனத்திற்கும் தொடர்புபட்ட கம்பனிக்கும் இடையே அறிக்கையிடும் வழிகளையும் தகவல் பாய்ச்சல்களையும் பேணுதல் சட்ட ரீதியான கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளின் செயலாற்றத்திற்காக தேவைப்படுத்தப்பட்டவை நீங்கலாக தொடர்பான தரப்பினருடன் உள்ளார்ந்த வளம்மிக்க சொத்துரிமைகள் நம்பிக்கைகள் அல்லது வேறுவிதமான உணர்வு பூர்வமான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கு வழிவகுக்கும்.

## 10. வெளிப்படுத்துதல்கள்

(1) கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்புடைத்தான, மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரசபைகளினால் விபரிக்கப்பட்ட படிவங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களையும் காலாண்டு நிதியியல் கூற்றுக்களையும் தயாரித்து பிரசுரிப்பதனையும் சபை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(2) ஆண்டறிக்கையில் பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்துதல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையினை சபை உறுதிப்படுத்தல் வேண்டும்:

(அ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இசைவாக, குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதற்கான கூற்றொன்று.

(ஆ) நிதிசார் அறிக்கையிடல் முறையானது நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை பற்றிய நியாயமான உறுதிகளை வழங்குவதற்காகவும் வெளிநோக்கங்களுக்கான நிதிகள் கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளமையினை நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறியினை உறுதிப்படுத்துவது பற்றிய கூற்றொன்று.

(இ) 2011 சனவரி 1இற்கு பின்னர் தயாரிக்கப்படும் அல்லது வெளியிடப்படும் எந்தவொரு கூற்றுத் தொடர்பாகவும் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயன்பாடு மீதான வெளிக் கணக்காய்வாளரின் சான்றிதழ்.

(ஈ) பெயர்கள், தொடர்பான நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் விபரங்கள்.

(உ) 2011 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து வெளியிடப்படும் வருடாந்த அறிக்கையில் நிதிக் கம்பனியினால் பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணம்/ ஊதியங்களின் விபரம்.

(ஊ) 9(7) ஆம் பந்தியில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட மொத்த தேறிய கடன் வசதி தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட மொத்த தேறிய கடன் வசதி. தொடர்பான தரப்பினரின் ஒவ்வொரு வகைக்கும் வழங்கப்பட்ட தேறிய கடன் வசதியினை நிதிக் கம்பனியின் மூலதன நிதியின் சதவீதமாகவும் வெளிப்படுத்தல் வேண்டும்.

(எ) தொடர்பான நிறுவனத்தினால் அதன் முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கு நிதியாண்டில் செலுத்தப்பட்ட ஊதியங்களின் மொத்தப் பெறுமதி மற்றும் தொடர்பான கம்பனி அதன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி என்பன செலுத்தப்பட்ட ஊதியங்கள், வழங்கப்பட்ட கடன்வசதி, படுகடன் சாதனங்களினூடான கடன்பாடுகள் அல்லது தொடர்பான நிறுவனங்களால் செய்யப்பட்ட முதலீடுகள் போன்ற பரந்த வகைகளில் சபையினால் காட்டப்படுதல் வேண்டும்.

(ஏ) முன்மதியுடைய தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளடன் இணங்கி ஒழுகுவது தொடர்பான விபரங்களையும் இணங்கி ஒழுகாமை பற்றிய விடயங்களைச் சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளையும் குறிப்பிடுகின்ற ஒரு அறிக்கை.

(ஐ) வருடாந்த கம்பனி ஆளுகை அறிக்கையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள், விதிகள் மற்றும் சட்டத்திற்கு இணங்கி ஒழுகியமை தொடர்பான வெளிக் கணக்காய்வாளர் சான்றுபடுத்தலை 2012 சனவரி 1ஆம் நாளுக்கு பின்னர் பிரசுரித்தல்.

## 11. இடைக்கால ஏற்பாடுகள்

(1) இப் பணிப்புரைத் திகதியில், தொடர்பான நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் எண்ணிக்கை ஒன்றில் 5 ஐ விட குறைவாகவோ அல்லது 9 ஐ விட அதிகமாகவோ காணப்படின், அந்த தொடர்பான நிறுவனத்தில் பந்தி 4(1) உடன் இப் பணிப்புரை 02.01.2010 ஆம் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் இணங்கிப் போதல் வேண்டும்.

(2) இப் பணிப்புரைத் திகதியில், தொடர்பான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை பணிப்பாளர் சபையின் அரைவாசிக்கு மேலாக இருந்தால், சபையானது மேலதிகமான நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் பற்றிய விபரத்தை கண்டறிந்து 01.01.2010 ஆம் திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரிற்கு அறிவிக்க வேண்டும். 01.01.2010 ஆம் திகதியன்று தொடங்கி மூன்று ஆண்டுகள் முடிவடைகையில் அத்தகைய மேலதிக நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களாக கருதப்பட மாட்டார்கள்.

(3) இப் பணிப்புரையின் 4(2) ஆம் பந்தியின் கீழ் 9 வருடங்களில் ஓய்வுபெறவேண்டிய தேவைப்பாடு உள்ளவர்களுக்கு பின்வரும் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படலாம்.

2010 சனவரி 1 இல் ஒன்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள அல்லது 2010 திசெம்பர் 31 இல் அந்த தவணையை பூர்த்தி செய்யும் ஒரு பணிப்பாளர் 2010 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் அதிகூடிய எல்லையாக மேலும் 3 வருடங்கள் பதவியில் தொடர்ந்து இருக்கலாம்.

(4) இப் பணிப்புரையின் 5 (1) ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய வயதெல்லை தொடர்பாக பின்வரும் இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்:

2010 சனவரி 1 ஆம் நாள் 70 வயதை அடைந்த அல்லது 2010 திசெம்பர் 31 ஆம் நாள் 70 வயதை அடையும் ஒரு பணிப்பாளர், 2010 சனவரி 1 ஆம் நாளிலிருந்து ஆகக் கூடிய எல்லையாக மேலும் மூன்று வருடங்களுக்கு பதவியைத் தொடரலாம்.

(5) இப் பணிப்புரையின் 5 (2) ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய 20 கம்பனிகளில் பணிப்பாளர் தொடர்பாக பின்வரும் இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்:

நபர் ஒருவர் 5 (2) ஆம் பந்தியில் தரப்பட்ட வரையறைக்கு மேலதிகமான பணிப்பாளர் பதவியை வகிப்பாராயின் அந் நபர் 2010 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் ஆகக் கூடிய மூன்று வருட வரையறைக்கு இணங்கி பதவி வகிக்கலாமென்பதுடன் அது தொடர்பாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அதன்படி அறியத்தரவும் வேண்டும்.

(6) சுகயீனம் போன்ற காரணத்தால் அல்லது சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஏதும் தகுதியீனங்கள் காரணமாக 11(3), 11(4) மற்றும் 11(5) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி விலக்குகள் ஏற்புடையதானது என வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் கருதினால், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் அந்த நபரை விசாரித்ததன் பின்பு அந்த நபருக்கு அறிவித்ததன் பின்னர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் விதிவிலக்கு காலத்தை மட்டுப்படுத்தவும் முடியும்.

**12. வரைவிலக்கணங்கள்:**

(1) “சட்டம்” என்பது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினைக் குறிக்கும்.

(2) “கடன் வசதி” என்பது 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (அறவிடமுடியாக் கடன் மற்றும் அறவிடமுடியா கடன்களுக்கான ஏற்பாடுகள்) பணிப்புரையின் உள்ளடக்கத்தினைக் குறிக்கும்.

(3) “உறவினர்” என்பது வாழ்க்கைத் துணைவர், தனிப்பட்டவரில் தங்கியுள்ள பிள்ளை என்ற பொருளினைக் குறிக்கும்.

(4) “முதன்மை முகாமைத்துவ ஆளணி” என்பது நிறுவனத்தின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்தும், பணிப்புரை வழங்கும் அல்லது திட்டமிடும் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரத்தினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொண்டுள்ள பணிப்பாளர் (நிறைவேற்றுத் தன்மையுடையவராகவோ அல்லது வேறு வகையில்) உட்பட்டோரை குறிக்கும்.

(5) “கணிசமான ஈடுபாடு” என்பது

(i) கம்பனியொன்றினைப் பொறுத்தவரை, இன்னொரு கம்பனியினால் அல்லது தனிப்பட்டவரினால் அல்லது அவரின் உறவினரினால் ஒன்றில் தனியாகவோ அல்லது ஒன்றாகவோ நலன் விளைக்கும் நலவுரித்தினைக் கொண்டிருப்பது. பங்குகளைப் பொறுத்தவரை செலுத்தப்பட்ட பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவினை அல்லது கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் பத்து சதவீதம், இதில் எது குறைந்ததோ, அது, அல்லது, தனிப்பட்டவரினால் அல்லது அவரின் உறவினரினால் அல்லது அத்தகைய கம்பனியின் சார்பில் மற்றொரு கம்பனியினால் வழங்கப்பட்ட தற்போதுள்ள உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதம் என்பதாகும்.

(ii) நிறுவனம் ஒன்றைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட ஒருவர் அல்லது அவரின் உறவினர் தனியாக அல்லது கூட்டாக, நிறுவனத்தின் அனைத்துப் பங்காளர்களினதும் உதவப்பட்ட மொத்த மூலதனத்தில், அல்லது அத்தகைய நிறுவனமொன்றின் சார்பில் தனிப்பட்ட ஒருவரால் அல்லது அவரின் அல்லது அவளின் வாழ்க்கைத் துணைவர் அல்லது பிள்ளையினால் வழங்கப்பட்ட தற்போதுள்ள உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதத்தில் பத்து சதவீதத்திற்கும் கூடுதலான அளவினைக்கொண்டிருத்தல் எனப் பொருள்படும்.

(6) “இணைக் கம்பனி” என்பதன் கருத்து தொடர்பான நிறுவனத்தினைப் பொறுத்தவரை கம்பனியொன்றில் தொடர்பான நிறுவனம் 20 சதவீதத்திற்கு குறையாததும் முதலீடு செய்யப்பட்ட கம்பனியின் செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனத்தில் 50 சதவீதத்திற்கு கூடாததுமான பங்கினைக் கொண்டுள்ள நிறுவனம் என்பதாகும்.

(7) “சபைக் கம்பனி” என்பதன் கருத்து இலங்கை அல்லது வேறு ஏதாவது வெளிநாட்டுக் கம்பனியின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்படுகின்ற ஆளொருவர் என்பதாகும்.

(8) “சங்கம்” என்பது 1891ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம்

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

கொழும்பு
2009, திசெம்பர் 30ஆம் திகதி

### 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை

1. இப் பணிப்பு 2009 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் (அறிக்கையிடல் தேவைப்பாடுகள்) பணிப்புரை என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் நியதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிகளுக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

2. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், ஒவ்வொரு காலாந்தர கூற்றுக்கள் தொடர்பாகவும், கீழே குறித்துரைக்கப்பட்ட திகதியில், மத்திய வங்கியின் நிதியியல் தகவல் முறையின் கீழ் வழங்கப்பட்டுள்ள படிவங்களுக்கிணங்க பணிப்பாளருக்கு தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

| கூற்று | காலப்பகுதி | சமர்ப்பிக்க வேண்டிய திகதி |
|---|---|---|
| என்.பீ.டீ - டபிள்யூ.எப் -15 - எல் ஏ (திரவச் சொத்துக்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் (திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக் கிழமை வரை) இறுதியிலிருந்து அடுத்துவரும் வேலை நாளன்று |
| என்.பீ.டீ - டபிள்யூ.எப் -16 - டீஎல் (வைப்புப் பொறுப்புக்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் (திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக் கிழமை வரை) இறுதியிலிருந்து அடுத்துவரும் வேலை நாளன்று |
| என்.பீ.டீ - டபிள்யூ.எப் -17 - ஏடீ (முற்பணங்கள்) | வாராந்தம் | தொடர்பான வாரத்தின் (திங்கட் கிழமையிலிருந்து வெள்ளிக் கிழமை வரை) இறுதியிலிருந்து அடுத்துவரும் வேலை நாளன்று |
| என்.பீ.டீ - எம்.எப் - 01 - பீஎஸ் (ஐந்தொகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| என்.பீ.டீ - எம்.எப் - 02 - பீஎல் (இலாபம் மற்றும் நட்டம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| என்.பீ.டீ - எம்.எப் - 04 - எல்ஏ (திரவச் சொத்துக்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| வட்டி வீதம் | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 03 - சீஏ (முற்பணங்களின் வகைப்படுத்தல்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 07 - எஸ்எல் (பிணையிடப்பட்ட பெருமளவு வெளிப்படுத்துகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 07 - யூஎல் (பிணையிடப்படாத பெருமளவு வெளிப்படுத்துகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 08 - ஏஆர் (தொடர்பான தரப்பினருக்கான முற்பணங்கள்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 09 - ஐஈ (பங்குகளில் முதலீடு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |

| கூற்று | காலப்பகுதி | சமர்ப்பிக்க வேண்டிய திகதி |
|---|---|---|
| என்.பீ.டீ - கியூ எப் - 10 - ஜீஏ (முதிர்ச்சி இடை வெளிப் பகுப்பாய்வு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 11 - ஐஎஸ் (வட்டி வீத உணர்வுத் தூண்டல்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 12 - சீ1 (சீ1) (மூலதனப் போதுமை விகிதம் ) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 12 - சீ2 (சீ2) (மூலதனப் போதுமை விகிதம் ) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 12 - சீ3 (சீ3) (மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 12 - சீ4 (சீ4) (மூலதனப் போதுமை விகிதம்) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 13 - எஸ்சீ (துறைவாரியான கொடுகடன் வெளிப்படுத்துகை) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| என்.பீ.டீ - கியூ எப் - 14 - ஐஎஸ் (வட்டி வீத வேறுபாடு) | மாதாந்தம் | அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாள் |
| ஐந்தொகை - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |
| இலாப நட்டக் கணக்கு - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |
| மூலதனப் போதுமை விகிதம் - கணக்காய்வு செய்யப்பட்டது | வருடாந்தம் | கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையினைச் சமர்ப்பிப்பதற்கு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறான இறுதித் திகதி (தற்பொழுது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள்) |

3. 2009ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் பந்திகள் 3 மற்றும் 7, 2006ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரையின் பந்திகள் 4(i)மற்றும் 4(ii), 2006ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்கள்) பணிப்புரையின் பந்திகள் 5(i) 5(ii) மற்றும் 5(iii) மற்றும் 2009ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரையின் பந்தி 4 என்பன இத்தால் நீக்கப்படுகின்றன. சட்டம் மற்றும் பணிப்புரைகளின் கீழ் விடுக்கப்பட்ட மற்றைய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்துமிருக்கும்.

4. எந்தவொரு காலாந்தரக் கூற்றுக்களையும் உரிய திகதியில் சமர்ப்பிக்கத் தவறும் சந்தர்ப்பத்தில் தொடர்பான நிதிக் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர், சமர்ப்பிக்க வேண்டிய திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு விளக்கமொன்றினை அளித்தல் வேண்டும்.

5. அறிக்கையிடல் காலப்பகுதியுடன் தொடர்பான இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான கூற்றுக்களை அல்லது தொடர்ந்து இரண்டு காலப்பகுதிக்கான எந்த ஒரு கூற்றுக்களையும் உரிய திகதியில் சமர்ப்பிக்கத்தவறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர் சபை, நாணயச் சபைக்கு அறிக்கையிடுவதற்காக, பணிப்பாளருக்கு விளக்கமொன்றினை அளித்தல் வேண்டும்.

6. பொது ஊடகங்களில், நிதிக் கம்பனிகளின் பட்டியல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகையில், விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகும் அவற்றின் அந்தஸ்திற்கிணங்கவே வகைப்படுத்தப்படும்.

7. பணிப்புரைகள், அத்துடன் அல்லது சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு இணங்கி ஒழுகாத நிதிக் கம்பனிகளுக்கு புதிய கிளைகள்/ அலுவலகங்களைத் திறப்பதற்கும் புதிய வியாபார சாதனங்கள்/ பணிகளை ஏற்படுத்துவதற்குமான ஒப்புதல்கள் வழங்கப்படமாட்டாது.

8. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக

(அ) "சட்டம்" என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தினைக் குறிக்கும்

(ஆ) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்

(இ) "மத்திய வங்கி நிதியியல் தகவல் முறை" என்பது நிதியியல் தகவல்களை வழங்குகின்ற நோக்கத்திற்காக, இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்களுக்காக இதனால் வழங்கப்பட்ட வெப்தள தரவுகளை பரப்புகின்றதொரு முறைமை எனப் பொருள்படும்.

(ஈ) "வாரம்" என்பது திங்கட்கிழமையிலிருந்து ஆரம்பமாகும் ஒரு வார காலப்பகுதியாகும்.